මැතිවරණ කොමිෂන් සභාව

தேர்தல் ஆணைக்குழு

Election Commission

# 2025

# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව
# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
# ANNUAL PERFORMANCE REPORT



# தமிழ்

# உள்ளடக்கம்


**அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய விவரம் / செயற்படுத்தல் பற்றிய பொழிப்பு** 01

1.1. தேர்தல் திணைக்களம் ............................................................... 01

1.2. தேர்தல் ஆணைக்குழு ............................................................... 01

1.3. தேர்தல் ஆணைக்குழுவின் தூரநோக்கு மற்றும் பணிக்கூற்று.................... 02

1.4. ஆணைக்குழுவின் குறிக்கோள், தத்துவங்கள், அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகள் .......................................................................... 03

1.5. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அலுவலக தள அமைப்பு .......................... 04

**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு** .......................... 05

2.1. தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள் .................................................. 05

2.1.1. ஆணைக்குழுவுடன் நடாத்தப்பட்ட விசேட கலந்துரையாடல்கள் ...... 05

2.2. தேருநர்களைப் பதிவு செய்தல் ......................................................... 05

2.2.1. தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்குத் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகள் ................................. 06

2.2.2. தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையீனங்கள். ............................................................ 06

2.2.3. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் .......................................................................... 06

2.2.3.1. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கு (முதன்மைச் சட்டம்) மேற்கொண்ட அடிப்படைத் திருத்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசேட விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. ................. 07

2.2.3.2. குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் சம்பந்தமாக ................... 07

2.2.3.3. தேருநர்களை பதிவு செய்தலுடன் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் ஒப்படைக்கப்படும் சட்ட ரீதியான ஏற்பாடுகள் ........................ 08

2.3. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2025 .................................................. 08

2.3.1. 2025 ஆம் ஆண்டின் தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வு செயற்பாட்டிற்கமைய பிரதான இடாப்பைத் தயாரித்தல் .......... 08

2.3.2. ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்கள் காட்சிப்படுத்தல்: உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல்කිරීම ....... 10

2.3.3. செல்லுபடியாகும் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் ‘‘அ’’ பட்டியல்கள் மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள் 10

2.3.4. உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தாமதக் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல். ........................... 12

2.3.5 2025 தேருநர் இடாப்புடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள் 13

2.3.6. ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கை குறிப்புக்கள் .................. 13

2.3.7. 2023 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல் ...................... 14

2.3.8. 2025 குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல் .................. 14

2.3.9. 2025 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்........................ 15

2.3.10. 2025 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்..................... 15

2.3.11. 2025 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல் ................ 15

2.3.12. 2026 (1), 2026 (2) மற்றும் 2026 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல். ........................................... 15

2.3.13.குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள் ...................................................... 16

2.4. தேருநர் இடாப்பு தொடர்பான செயற்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் அறிமுகஞ் செய்தல் ........................................................................................ 17
2.4.1. மீளாய்வு தொடர்பாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல் ………………………………………………………… 17
2.5.பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல். ……………….. 19
2.6. உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல் - 2025.05.06 ........................................... 20
2.6.1. பின்னணி .................................................................................... 20
2.6.2. உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் .............................................................. 22
2.6.3. உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல் தொடர்பாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் .............................. 22
2.6.4.உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல் தொடர்பாக அரசாங்க அச்சகத்தினால் அச்சிடப்பட்ட ஆவணங்கள் .................................................................. 22
2.6.5. உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள் 22
2.6.6. தபால் மூல வாக்களிப்பு .................................................................. 23
2.6.6.1. தபால் மூல வாக்கினை அடையாளமிடல் .......................... 24
2.6.6.2. தபால் மூல வாக்காளர்களுக்கான இ -சேவைகள் (e-services) 25
2.6.7 தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம் மற்றும் சட்ட அமலாக்கம் ..... 25
2.6.7.1. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடாத்துவதற்காக தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவது தொடர்பாக தேர்தல் பிணக்குகள் தீர்க்கும் பிரிவின் செயற்பாடுகள் .................... 25
2.6.7.2. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ நிலையங்களை நிறுவுதல் 26
2.6.7.3. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல் ..................................................... 27
2.6.7.4. தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் ............................................... 28
2.6.7.5. தேர்தல் காலப்பகுதியில் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது அவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகளிலிருந்து தவிர்ந்திருத்தல் ............................ 29
2.6.7.6 . தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கும், சுயேச்சைக் குழுவிற்கும் மற்றும் வேட்பாளருக்கும் தேர்தலுக்காகச் செலவிடக்கூடிய அதிகப்படியான செலவு வரம்பு அல்லது அனுமதிக்கப்பட்ட தொகை ................................ 30
2.6.8. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் ......................................... 30
2.6.9. தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள் ............................................. 31
2.6.9.1. உள்நாட்டு கண்காணிப்பு அமைப்புகள் ............................ 31
2.6.10. இறுதி முடிவுகளை வெளியிடுவது தொடர்பான படிவங்களைத் தயாரித்தல் 31
2.6.11.மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு 31
2.6.11.1.மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள் ............................ 31

2.6.11.2 உடல் வலிமையிழப்புக்கு உட்பட்ட நபர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல் மற்றும் உடல் வலிமையிழப்புக்கு உட்பட்ட வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டில் அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்கான அனுமதி .................................................... 32
2.6.12.வாக்களிக்கும் முறைமை குறித்து அனைத்து வாக்காளர்களையும் தெளிவுபடுத்துதல் ........................................................................... 32
2.6.13.ஊழியர்கள் தமது வாக்கினை அளிப்பதற்காக விடுமுறை வழங்குதல் 32
2.6.14.வாக்களிக்க வரும்போது வாக்காளர்கள் தமது ஆள் அடையாளத்தை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியம் ........................................... 33
2.6.15.தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்டுள்ள அமைதிக்காலம் ........................................................................... 33
2.6.16.வாக்கு எண்ணுதல், முடிவுகளை அறிவித்தல் மற்றும் பதவிகளுக்காக நியமித்தல் ........................................................................... 33
2.6.17.உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர் பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புதல் ................................................................. 34
2.7. மாகாண சபைத் தேர்தல் ..................................................................... 35
2.8. விசேட கருத்திட்டங்கள் ..................................................................... 35
2.8.1.வருடாநடத ஆய்வு அமர்வு 2025 ........................................................ 35
2.8.2.தோட்டத்துறையிலும் விளிம்புநிலை இனக் குழுமங்களுக்கு விசேட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் ............................ 38
2.8.3.மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் ........................................... 38
2.8.4.பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தலுடன் தொடர்புடைய நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ....................................................... 39
2.8.5.அரசியல் ரீதியாக பெண்களை வலுவூட்டல் .................................. 40
2.9. வருடாந்த செயற்திட்டம் ..................................................................... 40
2.10. 2022- 2025 ஒத்துழைப்பு மூலோபாயத் திட்டம் ...................................... 40
2.11. ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் ..................................................... 40
2.12. ஆவணங்கள் காப்பகம் ........................................................................... 41
2.13. அறிவு முகாமைத்துவ அலகு மற்றும் அரும்பொருட் காட்சியகம் ............ 41
2.14. ஊடக அலகினை பேணி வருதல் .......................................................... 41
2.15. சமூக ஊடக தளத்தை பேணிவருதல் மற்றும் இற்றைப்படுத்தல் ........... 42
2.15.1. தேர்தல் ஆணைக்குழுவின் சமூக ஊடகத் தளத்தின் பங்குதாரத்தரப்பினர்/ பயனரிடையே பிரபல்யம் பெறக் காரணங்கள் ..................................... 42
2.16. 2025 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெளியீடுகள் ............................. 43
2.17. சட்ட அலுவல்கள் ................................................................................ 44
2.17.1. உயர் நீதிமன்றம் ................................................................................ 44
2.17.2. மேன்முறையீட்டு நீதிமன்றம் .......................................................... 45
2.17.3. மேல் நீதிமன்றம் ................................................................................ 47
2.17.4. மாவட்ட நீதிமன்றம் .......................................................................... 47
2.17.5. நீதவான் நீதிமன்றம் .......................................................................... 47
2.17.6. சட்டமா அதிபரின் ஆலோசனைகளைக் கோருதல் .......................... 47
2.17.7. மனித உரிமைகள் ஆணைக்குழு, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவுடன் தொடர்பான விசாரணைகள் ………………………………………………….………. 47

2.17.8. தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்புடைய சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் மற்றும் பிசீ படிவங்களை புறத்தொதுக்குதல். …... 48
2.18. தேர்தல் சட்டங்களில் திருத்தம் மேற்கொள்ளல் ………………………… 48
2.19. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலுக்கான உரிமைச் சட்டத்திற்குரிய நடவடிக்கைகள் ........................................................ 49
2.20. தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல்......... 49
2.20.1.2025 ஆம் ஆண்டிற்கான அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் நடவடிக்கைகள் ...................................................................................... 49
2.20.2. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் .................................................. 50
2.21. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய வெளிப்படுத்தல்களைப் பொறுப்பேற்றல் ........................................................................................ 50
2.22. தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுத் திட்டங்களை நடாத்துதல் ......................................................................... 51
2.23. பொருட்கள் கொள்வனவு, இயந்திர சாதனங்கள் கொள்வனவு / பழுதுபார்த்தல் / பராமரிப்பு ........................................................................ 51
2.23.1. வாக்காளர்களைப் பதிவு செய்தல் ............................................... 51
2.23.2. தேருநர் (வாக்காளர்) இடாப்புக்களை அச்சிடுதல் ....................... 52
2.23.3. இயந்திர சாதனங்கள் கொள்வனவு / பழுதுபார்த்தல் / பராமரிப்பு.... 52
2.23.4. அலுவலகப் பொருட்களைக் கொள்வனவு செய்தல் …….................. 52
2.23.5. பொதுவான விடயங்கள் ..................................................................... 52
2.24.தகவல் தொழில்நுட்ப நடவடிக்கைகளின் முன்னேற்றம் .......................... 53
2.24.1.தகவல் தொழில்நுட்ப தேவைப்பாடுகள் ஆய்வு, மென்பொருள்களை உருவாக்குதல், மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல் ....................... 53
2.24.2.தேர்தல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய தரப்புக்களுக்கு இ-சேவையை வழங்குதல் .............................................................. 56
2.24.3.தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் ....................................................................... 58
2.25. நிதி மற்றும் கணக்காய்வுத் தகவல்கள் ……………………………… 59
2.26. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிகள் ............................................... 60
2.27. எதிர்கால இலக்குகள் ...................................................................... 61

**03. ஆம் அத்தியாயம் - ஆண்டிற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை** ........... 62
3.1. நிதிச் செயலாற்றுகை ........................................................................... 62
3.2. நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள். ........................................................... 66
3.2.1. வருமானங்கள் சேகரிப்பு செயலாற்றுகை ......................................... 66
3.2.2. நிதி ஒதுக்கீடுகள் பயன்படுத்திக் கொள்ளல் செயலாற்றுகை ............ 66
3.2.3. நி.பி. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்.׃.திணைக்களங்களின் ஒரு பிரதிநிதியாக இந்தத் திணைக்களத்திற்கு.׃. மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு...................................... 66
3.2.4. நிதி சாராத சொத்துக்களை அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை................ 67
3.2.5. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை .......................... 68

**அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்** ................................................ 97

**அத்தியாயம் 05 – பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (ஏனுபு) அடைந்துகொள்வதிலான செயலாற்றுகை** ................................ 98
5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும். 100

**அத்தியாயம் 06 – மனித வளம் பற்றிய விவரம்** .................................................... 101

6.1. பணியாட்குழு எண்ணிக்கை முகாமைத்துவம் ............................................ 101
6.2. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவில் பதவிநிலை தர அலுவலர்களின் தாபன அலுவல்கள் ............................................................................. 102
6.2.1. புதிய நியமனங்கள் ...................................................................... 102
6.2.2. விடுவிப்புக்கள் ............................................................................... 104
6.2.3. உள்ளக இடமாற்றம் ........................................................................ 105
6.2.4. பதில் கடமையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் வழங்கப்பட்ட நியமனங்கள் ……................... 106
6.2.5. பதவி உயர்வுகள் ......................................................................... 108
6.3. நிருவாகப் பிரிவின் அலுவல்கள் ......................................................... 109
6.3.1. நிருவாகப் பிரிவு .............................................................................. 109
6.3.1.1. கட்டுமானங்கள் மற்றும் திருத்த வேலைகள் ...................... 109
6.3.1.2. உள்நாட்டுப் பயிற்சிகள் .................................................. 109
6.3.1.3. தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச அமைப்பு (IFES) மூலம் நடாத்தப்பட்ட பயிற்சிகள் ........................................ 113
6.3.1.4. கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (KOICA) மூலம் நடாத்தப்பட்ட பயிற்சிகள் ........................................ 114
6.3.1.5. Factum நிறுவனம் மூலம் நடாத்தப்பட்ட பயிற்சிகள் ........... 115
6.3.2. தாபனப் பிரிவு ................................................................................ 116
6.3.2.1. பணியாட்குழு அலுவல்கள் ............................................ 116
6.3.2.2. முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை ................................ 116
6.3.2.3. அபிவிருத்தி அலுவலர் சேவை .................................. 117
6.3.2.4. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை ........... 117
6.3.2.5. அலுவலக ஊழியர் சேவை ............................................... 117
6.3.2.6. சாரதி சேவை .................................................................... 118
6.3.2.7. புதிய ஆட்சேர்ப்புக்கள் ....................................................... 118
6.3.2.7.1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் ............................................ 118
6.3.2.7.2. மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல் ............................................ 118
6.3.2.8. சேவையை விட்டு விலகல் அறிவித்தல்களை வெளியிடுதல் 118
6.3.2.9. மரணங்கள் ........................................................................... 119
6.3.2.10. ஓய்வுபெறல்கள் ................................................................ 119
6.3.2.11. பதவியிலிருந்து விடுவித்தல் ............................................ 120
6.3.2.12. புதிய நியமனங்கள் .......................................................... 120
6.3.2.13. உள்நாட்டு∴வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறைகளை அங்கீகரித்தல் .................................................................… 121
6.3.2.14. விடுமுறை முகாமைத்துவ முறைமையைப் பராமரித்தல் .... 121
6.3.2.15. வருடாந்த சம்பள அதிகரிப்பு வழங்கல் ........................... 121
6.3.2.16. விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தில் பதிவு செய்தல் ................................................................ 123
6.3.2.17. துப்புரவுப் பணிகள் ....................................................................... 123

6.3.2.18. பாதுகாப்புச் சேவைகள் ..................................................... 124
6.3.2.19. செயிரி வாரம் நடைமுறைப்படுத்தல் .................................. 124
6.3.2.20.வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களும் ................................. 124
6.3.2.21. வெளிநாட்டுப் பயிற்சிகள் ................................................... 124
6.3.2.22 வெளிநாட்டு கருத்தரங்குகளும் உத்தியோகபூர்வ விஜயங்களும் 124
6.3.3. போக்குவரத்துப் பிரிவு ...................................................................... 125
6.3.3.1. வாகனங்களின் கட்டுப்பாடு ................................................. 125
6.3.3.2. தேர்தல் காலப் பகுதியினுள் நிர்வாக நடவடிக்கைகள் ........ 126
6.3.3.2.1. உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் தொடர்பாக 126
6.3.3.2.2. தேர்தல் ஆணைக்குழுவின் வாகனம் பற்றிய தகவல்கள் ........................................................... 126

**அத்தியாயம் 07 – இணக்கப்பாட்டு அறிக்கை** ................................................ 127

**அத்தியாயம் 08 நிறைவு** ........................................................................ 135

# குறிப்புக்கள்


குறிப்பு 01 - நிறுவனக் கட்டமைப்பு ........................................................................ 139

குறிப்பு 02 - தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்பாக ("அ" பெயர்களின்) எண்ணிக்கை மற்றும் உட்சேர்க்கப்படும் ("ஆ" பெயர்களின்) எண்ணிக்கை ........................................................................ 140

குறிப்பு 03 - 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுச் செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கை மற்றும் ஆட்சேபனை தெரிவித்தல் ........................................................ 141

குறிப்பு 04 - ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தில் பன்மைப் பதிவு உள்ளதென தெரியவந்தமையினால் பதிவு செய்யப்படாத பெயர்களின் எண்ணிக்கை 142

குறிப்பு 05 - 2025 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்புக்கமைய பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் எண்ணிக்கை ................................................................ 143

குறிப்பு 06 - அரசியலமைப்புச் சட்டத்தின் 98(8) உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கெடுத்தல் - 2025 பிரதான தேருநர் இடாப்பை ........................................................ 144

குறிப்பு 07 - 2025 பிரதான தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்திய உதவி பதிவு அலுவலர்களின் விபரம் ........................................................................ 145

குறிப்பு 08 - தேசிய அடையாள அட்டை விபரங்களை சமர்ப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை ........................................................................................ 146

குறிப்பு 09 - வாக்கெடுப்பு பிரிவுகளுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான குறிப்பு 2014 - 2025......... 147

குறிப்பு 10 - 2014 - 2025 வரையான ஆண்டுகளில் தேருநர் இடாப்பு மீளாய்வுகளின்போது தேசிய அடையாள அட்டை விபரங்களை சமர்பித்த ஆட்களின் எண்ணிக்கையின் சதவீதம் பற்றிய ஒப்பீட்டு ரீதியிலான கூற்று.............. 155

குறிப்பு 11 - 2001 - 2025 தேருநர் இடாப்பு மீளாய்வுகளின்போது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாக்காளர்களின் அதிகரிப்பு மற்றும் அதிகரிப்பு சதவீதம் 156

குறிப்பு 12 - அரசியலமைப்புச் சட்டத்தின் 98(8) உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்பான ஒப்பீட்டுப் பதிவு 2014 – 2025 157

குறிப்பு 13 - 2021 முதல் 2025 வரை செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் வாக்காளர் களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய விபரங்கள் ........................................................................................ 158

குறிப்பு 14 - தேர்தல் மாவட்டத்திற்கமைய பதிவுசெய்யப்பட்டுள்ள தேருநர்களின் எண்ணிக்கை தொடர்பான சமப்படுத்தப்பட்ட குறிப்புக்கள் 2024 – 2025 159

குறிப்பு 15 - 2025 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள தேருநர்களின் எண்ணிக்கை ................................................................ 160

குறிப்பு 16 - அரசியலமைப்பின் 98(8) உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவுசெய்துகொள்வதற்கு உரித்துடைய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கிடல் (2025.02.01 ஆம் திகதி 2024(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர்) …………………………………… 161

குறிப்பு 17 - 2025 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ........................................................ 162

குறிப்பு 18 - அரசியலமைப்புச் சட்டத்தின் 98(8) உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்ய வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கெடுத்தல் (2025.10.15 ஆம் திகதி 2025(1) ஆம் ஆண்டின் முதலாம் குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய பின்னர்) ....................... 163

குறிப்பு 19 - 2025 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ......................................................... 164

குறிப்பு 20 - அரசியலமைப்பின் 98(8) உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவுசெய்துகொள்வதற்கு உரித்துடைய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கிடல் (2025.10.22 ஆம் திகதி 2025 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர்) ...................................................... 165

குறிப்பு 21 - 2025 உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் பற்றிய தகவல்கள் ................................. 166

குறிப்பு 22 - 2025 உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல்கள் தொடர்பாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளுக்கு வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் ....... 171

குறிப்பு 23 - 2025 உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல்கள் தொடர்பாக அச்சிடுவதற்காக அரசாங்க அச்சகத்திற்கு வழங்கப்பட்ட ஆவணங்கள், படிவங்கள், கடித உறைகள், சஞ்சிகைகள், அறிவுறுத்தல் புத்தகங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ................................................................................... 189

குறிப்பு 24 - உள்ளூராட்சி நிறுவனங்களின் வெற்றிடங்களை நிரப்புதல் - 2025 ....... 196

குறிப்பு 25 - 2025 வருடாந்த ஆய்வு அமர்வின் சமர்ப்பிப்புகள் ................................ 207

குறிப்பு 26 - 2025 வருடாந்த ஆய்வு அமர்வின் கலந்துரையாடல் குழு உறுப்பினர்கள் 209

குறிப்பு 27 - தோட்டச் சமூகம், விளிம்புநிலை மக்கள் மற்றும் உள்நாட்டுத் தேர்தல் (கண்காணிப்பாளர்கள்) தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்களின் சுருக்கம் 210

குறிப்பு 28 - சமூகத் தலைவர்கள் / பயிற்சியாளர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் தேர்தல் பங்குதாரர்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டங்களை நடாத்துதல் ..................................................................................... 214

குறிப்பு 29 - 2025 ஆம் ஆண்டில் மகளிர் விவகாரங்கள் தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல் ................................................................................... 215

குறிப்பு 30 - 2025 உள்ளூராட்சி நிறுவனத் தேர்தல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட ஊடக அறிக்கைகள் ..................................................................... 217

குறிப்பு 31 - 2025 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் 222

குறிப்பு 32 - 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பயிற்சிகளில் கலந்துகொண்ட உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்கள்…………………………… 224

# இணைப்புக்கள்


இணைப்பு 01 -தேருநர்களைக் கணக்கெடுக்கும் வழிமுறைகள் பற்றிய 2025.01.01 ஆம் திகதிய 2417/28 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் ............. 231

இணைப்பு 02 - தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரையான எதிர்கால செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய காலப் பகுதிகள் பற்றிய திட்டம் .................................................................................................... 234

இணைப்பு 03 - களக் கணக்கெடுப்பு காலப்பகுதியில் கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை நிறுத்திவைத்தல் மற்றும் அக்காலப்பகுதியில் அலுவலக நாட்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் அனைத்து மாவட்ட செயலாளர்கள் மற்றும் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட HA/3/7/29-2 இலக்க மற்றும் 2025.01.17 திகதிய கடிதம் ........................................................ 247

இணைப்பு 04- 2025 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கு புதிதாக பெயர்களை உட்சேர்ப்பதற்கு தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள ‘ஆ’ பட்டியல்கள் காட்சிப்படுத்தல் தொடர்பான 2025.04.09 ஆம் திகதிய 2379/16 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் .................................................................................. 249

## அத்தியாயம் 01 - நிறுவனம் பற்றிய விவரம் / செயற்படுத்தல் பற்றிய பொழிப்பு

### 1.1. தேர்தலகள் திணைக்களம்.

நாட்டின் ஆட்சி நடவடிக்கைகளில் உள்நாட்டு மக்களுக்கு பங்குபற்றுவதற்கான அதிக வாய்ப்பை வழங்க வேண்டுமென 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் எழுந்த பாரிய எதிர்ப்புக்களுக்கு பதில் அளிக்கும் வகையில் பிரித்தானிய காலனித்துவ அரசு புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்காக 1944 ஆம் ஆண்டில் சோல்பரி ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. சோல்பரி ஆணைக்குழு வாக்காளர்களை பதிவு செய்வதற்கும், பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்குமான சட்டங்களை உருவாக்கியதுடன் 1946 செப்தெம்பர் 26 ஆம் திகதி பாராளுமன்றத் தேர்தலுக்கான அரச கட்டளை பிறப்பிக்கப்பட்டது. உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலை நடாத்துவதற்காக 1946 இல் உள்ளூராட்சி கட்டளைச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. 1946 தொடக்கம் 1955 வரையான காலப் பகுதியினுள் வாக்காளர்களை பதிவு செய்வதற்கும் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவதற்கும் ஒரு ஆணையாளரின் கீழ் பாராளுமன்றத் தேர்தல் திணைக்களமும் உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலை நடாத்துவதற்காக மற்றுமொரு ஆணையாளருக்கு கீழ் உள்ளூராட்சி தேர்தல் திணைக்களமும் செயற்பட்டது.இவ்வாறு தனித் தனியாக நிலவி பாராளுமன்றத் தேர்தல் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி தேர்தல் திணைக்களம் என்பவற்றை இணைத்து 1955 ஒக்தோபர் 01 ஆம் திகதி தேர்தல்கள் திணைக்களம் தாபிக்கப்பட்டது. அவ்வாறு தாபிக்கப்பட்ட தேர்தல்கள் திணைக்களம் 60 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் தனது பணிப்பொறுப்புக்களை ஆற்றியுள்ளது.

### 1.2. தேர்தல் ஆணைக்குழு

2001 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 03 ஆம் திகதி அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது. அத்திருத்தத்திற்கு அமைய அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் சனாதிபதியினால் தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டியிருந்தது. எனினும், நியமனங்கள் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக எதிர்பார்த்தவாறு தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. அரசியலமைப்பிற்கான 17 ஆவது திருத்தத்திற்கு அமைய தேர்தல் ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படும் வரை அப்பதவிகளை வகித்த ஐந்தாவது தேர்தல்கள் ஆணையாளருக்கு தேர்தல் ஆணைக்குழுவின் கடமை அலுவல்களை நிறைவேற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. 2010.09.09 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழுவின் இணைப்பாக்கம் ஐந்து (05) உறுப்பினர்கள் வரை அதிகரிக்கப்பட்டது. அதேபோல், தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படும் வரை ஆணைக்குழுவின் தத்துவங்களையும் கடமைகளையும் அமுலாக்கும் பொறுப்பு, தேர்தல்கள் ஆணையாளரினால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், அதுவரையிலும் தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்படவில்லை.

2015 ஆம் ஆண்டின் பத்தொன்பதாவது அரசியலமைப்புத் திருத்தத்திற்கமைய சுயாதீன ஆணைக்குழுக்களை தாபிப்பதற்கு அரசாங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்கமைய அதுவரை நிலவிய தேர்தல்கள் திணைக்களம் இரத்துச் செய்யப்பட்டு அரசியலமைப்பு சபையின் பரிந்துரையின் அடிப்படையில் அதிமேதகு ஜனாதிபதியவர்களினால் தவிசாளர் உட்பட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட தேர்தல் ஆணைக்குழு 2015.11.13 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் 2025.11.17 ஆம் திகதி புதிய ஆணைக்குழுவின் கடமைகளை ஆரம்பித்தனர். திரு. மஹிந்த தேசப்பிரிய தவிசாளராகவும், ஜனாதிபதி சட்டத்தரணி திரு.என்.ஜே.அபேசேக்கர மற்றும் பேராசிரியர் திரு. எஸ்.ரத்னஜீவன் எச்.ஹூல் ஆகியோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர். தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளராக இலங்கை நிருவாக

சேவையின் விசேட தரத்தின் ஓய்வு நிலை அலுவலர் சட்டரத்தணி எச்.எம்.ரீ.டீ ஹேரத் அவர்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் நியமனம் செய்யப்பட்டார்

2020 அக்டோபர் மாதம் 29 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பிற்கான இருபதாவது திருத்தத்தின் மூலம் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்து (05) வரை அதிகரிக்கப்பட்டது. அதற்கமைய 2020.12.10 ஆம் திகதி பாராளுமன்றச் சபையின் பரிந்துரையின் பேரில் இரண்டாவது தேர்தல் ஆணைக்குழு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டது. அது, தவிசாளர் உட்பட ஐந்து(5) உறுப்பினர்களைக் கொண்டதாகும். சட்டத்தரணி நிமல் ஜீ. புஞ்சிஹேவா அவர்கள் தவிசாளராகவும், பொதுத் திறைசேரியின் முன்னாள் பிரதிச் செயலாளரான திரு. எஸ்.பி.திவாரத்ன அவர்கள், முன்னாள் தேர்தல்கள் ஆணையாளரான திரு. எம்.எம்.மொஹமட் அவர்கள், முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரான திரு. கே.பீ.பீ.பத்திரண அவர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளரான திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள் ஆகியோர் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். திரு. ஜீவன் தியாகராஜா அவர்கள் வடமாகாண ஆளுநராக 2021.10.10 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அவருக்குப் பதிலாக சிரேட்ட நிர்வாக அலுவலரான முன்னாள் வடமாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சார்ள்ஸ் அவர்கள் 2021.10.28 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அந்த ஆணைக்குழுவின் கூட்ட நடப்பெண் மூன்று (3) உறுப்பினர்களாகும்.முதலாவது ஆணைக்குழுவின் செயலாளராக நியமனம் செய்யப்பட்ட சட்டரத்தணி எச்.எம்.ரீ.டீ ஹேரத் அவர்கள் இரண்டாவது தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளராக கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டார்

2022.10.31 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசியலமைப்பிற்கான 21 ஆவது திருத்தத்திற்கமைய அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரையின் பேரில் மூன்றாவது தேர்தல் ஆணைக்குழு அதிமேதகு சனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்டது. அந்த ஆணைக்குழுவுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் நாயகமான ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க அவர்கள் தவிசாளராகவும், முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் நாயகமான திரு.எம்.ஏ.பீ.சி.பெரேரா, சட்டத்தரணி அமீர் பாயிஸ் ஆகியோர் நியமிக்கப்பட்டனர். அவர்கள் 2023.07.05 ஆம் திகதி தமது கடமை அலுவல்களை ஆரம்பித்தனர். சட்டத்தரணி (செல்வி) ஏ. சண்முகநாதன் அவர்கள் உறுப்பினர் ஒருவராக நியமிக்கப்பட்டதுடன் 2023.09.11 ஆம் திகதி தமது கடமை அலுவல்களை ஆரம்பித்தார். மூன்றாவது தேர்தல் ஆணைக்குழுவின் 05 ஆவது உறுப்பினராக பேராசிரியர் டீ.எம்.எஸ். ல்க்ஷ்மன் திசாநாயக்க அவர்கள் 2024.01.02 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். அதன் படி பேராசிரியர் லக்ச்மன் திசாநாயக்க அவர்கள் 2024.01.02 ஆம் திகதி நியமிக்கப்பட்டதுடன் 2024.01.10 ஆம் திகதி தனது கடமைகளை ஆரம்பித்தார். ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்தாக பூர்த்தியடைந்தது. மூன்றாவது ஆணைக்குழுவின் செயலாளராக தொடர்ந்தும் பணியாற்றுவதற்காக இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தின் ஓய்வு நிலை அலுவலரான சட்டரத்தணி எச்.எம்.ரீ.டீ. ஹேரத் அவர்களின் பதவிக்காலம் காலநீடிப்புச் செய்யப்பட்டது.

### 1.3. தேர்தல் ஆணைக்குழுவின் தூர நோக்கு மற்றும் பணிக்கூற்று

"சர்வசன வாக்குரிமையைப் பாதுகாக்கின்ற ஜனநாயக நாடு" என்பது ஆணைக்குழுவின் தூர நோக்காகும்.

அந்தத் தூரநோக்கை அடைந்துகொள்வதற்காக "மக்கள் இறைமை, சர்வஜன வாக்குரிமை மற்றும் அதனோடு தொடர்புடைய சனநாயகக் கோட்பாடுகள் என்பவற்றைப் பாதுகாத்து, பிரசைகளின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் ஏற்புடையவாறு அனைத்துத் தரப்புக்களையும் அறிவுறுத்துகின்ற சுதந்திரமான, நீதியான மற்றும் நம்பத்தகுந்த தேர்தல்

செயற்பாடுகளை வினைத்திறனும் விளைத்திறனும் கொண்டதாக மேற்கொள்ளுதல்" என்பது பணிக்கூற்றாகும்.

## 1.4. ஆணைக்குழுவின் குறிக்கோள், தத்துவங்கள், அதிகாரங்கள், அலுவல்கள் மற்றும் கடமைகள்

அரசியலமைப்பின் 103 (2) உறுப்புரைக்கமைய சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடாத்துதல் ஆணைக்குழுவின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும். அத்தோடு செயல்வலுப்பெறும் தேர்தல் சட்டங்களுக்கமைய உரிய தேர்தல்களை நடாத்துவதற்கும், வருடாந்த தேருநர் இடாப்பை தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்வதற்கும் ஆணைக்குழுவுக்கு அத்தியாயம் இருப்பதுடன், ஆணைக்குழுவின் அலுவல்கள் அந்த அத்தியாயம் மற்றும் கடமைகளுக்கு வரையறுக்கப்படவில்லையென அரசியலமைப்பின் 104 ஆ (1) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கமைய ஏற்புடைய சட்ட ஒழுங்குவிதிகளுக்கமைய தேர்தலை நடாத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள தேர்தல்கள் திணைக்களத்தினைப் பார்க்கிலும் விசேட பொறுப்பொன்று தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனுடன் தொடர்புடைய வகையில் 19 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக அடிப்படைச் சட்டத்திற்கு விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளமையினால் தேர்தல் ஆணைக்குழுவின் அத்தியாயம் மற்றும் பலம் மேலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கும்போது ஆணைக்குழுவுக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அரசியலமைப்பின் 104 அ உறுப்புரையின் கீழ் நீதிமன்ற அதிகாரத்தின் கீழ்,

I. ஆணைக்குழுவின் தீர்மானங்கள், ஏற்பாடுகள் அல்லது செயற்பாடுகள் இறுதியானதும் தீர்க்கமானதுமாக இருத்தல் மற்றும்

II. தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர் அல்லது அலுவலர் ஒருவர் தேர்தலொன்றை நடாத்துதலுடன் தொடர்புடைய ஏதேனும் சட்டமொன்றின் கீழ் சற்குணத்துடன் மேற்கொண்ட ஏதேனும் நடவடிக்கை சம்பந்தமாக சிவில் வழக்கொன்றை அல்லது வழக்கு நடவடிக்கையொன்றை தாக்கல் செய்ய முடியாதிருத்தல்.

போன்ற விசேட எதிர்க்கும் ஆற்றல் வழங்கப்பட்டுள்ளன. இந்த எதிர்க்கும் ஆற்றல்கள் 126 ஆவது உறுப்புரையின் கீழ் அடிப்படை உரிமைகள் மீறல் சம்பந்தமான மேன்முறையீட்டு நீதிமன்ற அத்தியாயம், 130 ஆவது உறுப்புரையின் கீழ் சனாதிபதித் தேர்தல், தேர்தல் மனு ஆகியன சம்பந்தமாக காணப்படும் மேன்முறையீட்டு நீதிமன்ற அத்தியாயம், 144 ஆவது உறுப்புரையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்தலுடன் தொடர்புடைய மனுக்களை விசாரிக்கும் மேன்முறையீட்டு நீதிமன்ற அதிகாரத்தின் கீழேயே வழங்கப்பட்டுள்ளன. மேலும், தேர்தல் செயற்பாட்டை செயற்படுத்தும்போது சட்டங்களை செயல்வலுப்பெறச் செய்தல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் தனது அலுவல்கள் சம்பந்தமாக ஆண்டறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் என்பவற்றைத் தவிர ஏனைய பொறுப்புக்கு தேர்தல் ஆணைக்குழு கடப்பாட்டைக் கொண்டிருக்கவில்லையென்பது விசேட விடயமொன்றாகும்.இது தவிர அரச சொத்துக்களின் முறைகேடான பயன்பாட்டை தடுத்தல் சம்பந்தமாக விசேட அதிகாரமொன்று 104 ஆ (4) (அ ) உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ளதுடன் 104 (5) (அ) உறுப்புரைக்கமைய தேர்தல் காலத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றை நடாத்துவதனை உறுதிப்படுத்துவதற்காக ஊடக நிறுவனங்களுக்கு ஊடக வழிகாட்டு நெறிகளை விதிப்பதற்கு மற்றும் அதனுடன் தொடர்பான ஏற்பாடுகளை விதிப்பதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 104 இ உறுப்புரையின் கீழ் பொலீஸாரை ஈடுபடுத்திக்கொள்வதற்கும், 104 ஈ உறுப்புரையின் கீழ் ஆயுதப் படையை ஈடுபடுத்திக்கொள்வதற்கும் ஆணைக்குழுவுக்கு விசேட அத்தியாயம் வழங்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுச் செயலகத்தினூடாக கீழ் குறிப்பிடப்படும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- ஆணைக்குழுவின் நிருவாக அலுவல்கள்.
- சட்ட ரீதியான அலுவல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் வழிநடாத்தல்.
- ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் தொடர்பான தாபனம் சார் அலுவல்கள்.
- தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழு அங்கத்தவர்களின் ஆட்சேர்ப்பு, இடமாற்றல்கள் மற்றும் விடுவிப்புக்கள், தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் பணியாற்றும் நாடளாவிய சேவைகள் மற்றும் பதவிநிலை அலுவலர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றல்கள் மற்றும் ஓய்வுறுத்தல்களுடன் தொடர்பான அலுவல்கள்.
- ஆணைக்குழுவின் கூட்டங்கள் மற்றும் அறிக்கைகளைத் தயாரித்தல்.
- பதவிநிலை அலுவலர்களின் தாபன அலுவல்கள் உள்ளிட்ட மனித வளங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள்.
- பாராளுமன்றம், சனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் போன்ற நிறுவனங்களுடான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
- ஏனைய சுயாதீன ஆணைக்குழுக்கள், அமைச்சுக்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களுடனான ஒருங்கிணைப்பு அலுவல்கள்.
- பதவிநிலை அலுவலர்களின் வருடாந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான அலுவல்கள்.
- ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படும் தேர்தல்களை சுதந்திரமானதும் நீதியானதுமான முறையில் நடாத்துவதற்குத் தேவையான கொள்கை ரீதியிலான தீர்மானங்களை எடுத்தல், அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் அதற்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

## 1.5. நிறுவனக் கட்டமைப்பு மற்றும் அலுவலகத் தள அமைப்பு

தேர்தல் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல்கள் செயலகத்தின் ஒவ்வொரு பிரிவுகள் மற்றும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் உள்ளிட்ட நிறுவனக் கட்டமைப்பு குறிப்பு 01 என உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனக் கட்டமைப்புக்கமைய தேர்தல் ஆணைக்குழுவுக்குரிய தேர்தல்கள் செயலகத்தில் தேசியத் தேர்தல்கள், உள்ளூராட்சித் தேர்தல்கள், கணக்கு, நிருவாகம், சட்டம் விசாரணை மற்றும் திட்டமிடல், உள்ளகக் கணக்காய்வு எனப் பிரிவுகள் மற்றும் தாபனம், போக்குவரத்து, பெறுகைகள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் எனக் கிளைகளும் தாபிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து நிருவாக மாவட்டங்களிலும் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களும் ஒன்றோடொன்று தொடர்புபடும் விதம் குறிப்பிடப்பட்டு, அந்தந்த அலகுகள் உள்ளடக்கப்படும் விதத்தில் அலுவலகத் தள அமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

**அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு**

## 2.1 தேர்தல் ஆணைக்குழுக் கூட்டங்கள்

தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவல்கள் மற்றும் பணிகளுடன் தொடர்பாக சமர்ப்பிக்கப்படும் ஆணைக்குழுப் பத்திரங்கள் தொடர்பாக கலந்துரையாடல் மற்றும் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் ஏனைய பரிந்துரைகளுக்கமைய ஆணைக்குழுக் கூட்டங்கள் தேவைப்பாட்டிற்கமைய நடாத்தப்படும். இதற்கமைய, 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் 12 கூட்டங்களும் இரண்டாம் காலாண்டில் 11 கூட்டங்களும் மூன்றாம் காலாண்டில் 12 கூட்டங்களும் நான்காம் காலாண்டில் 12 கூட்டங்களும் என 2025 ஆம் ஆண்டில் 47 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 2.1.1. ஆணைக்குழுவுடன் நடாத்தப்பட்ட விசேட கலந்துரையாடல்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்காக புதிய சட்டத் திருத்தங்களை மேற்கொண்டு, அதற்கான சட்ட மூலங்களைத் தயாரித்தல் தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் கலந்துரையாடியதன் பின்னர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவினால் விசேட கூட்டங்களும் கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டன. இதன்போது அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்கு மேலதிகமாக, வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வது உள்ளிட்ட தேர்தல் செயன்முறையை முறையாக பேணிச் செல்வதற்குத் தேவையான பங்குதாரத்தரப்பினருடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதோடு அது தொடர்பான ஆணைக்குழுவின் விசேட கூட்டங்களை நடத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## 2.2. தேருநர்களைப் பதிவு செய்தல்

தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அனைத்துப் பிரஜைகளுக்கும் இனம், மதம், மொழி, சாதி, குலம், கல்வி, சொத்துரிமை, பிறப்பு, பிறந்த இடம், சொத்து செல்வம், பாலினம் போன்ற எந்தவொரு விசேட சிறப்புக்களுமின்றி நாட்டின் ஆட்சி அதிகாரத்தில் பங்குகொள்ளும் உரிமை மற்றும் அதற்காக பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்வதற்கான உரிமையை வாக்குரிமை ஊடாகவே பெற்றுக்கொள்ள முடியும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூன்றாவது உறுப்புரைப் பிரகாரம் சர்வஜன வாக்குரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ‘‘இறைமை மக்களுக்குரியதாகவும், பராதீனப்படுத்த முடியாததாகவும், இறைமை என்பது ஆட்சித் தத்துவங்கள், அடிப்படை உரிமைகள், வாக்குரிமை ஆகியவற்றை உள்ளடக்கும்’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நாட்டின் பிரஜைகளுக்கு சனாதிபதித் தேர்தலின்போது, பாராளுமன்றத் தேர்தலின்போது, மக்கள் தீர்ப்பொன்றின்போது, மாகாண சபை தேர்தலின்போது மற்றும் உள்ளூர் அதிகார சபை தேர்தலின்போது தமது வாக்குரிமையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்களின்போது வாக்களிப்பதற்காக பிரஜைகள் குறித்த தேர்தலின்போது செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்ளல் கட்டாயமாகும்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பில் மற்றும் 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களை பதிவு செய்தல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமையவே இந்த அலுவல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 2.2.1. தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்குத் தேவைப்படும் அடிப்படைத் தகைமைகள்

- இலங்கைப் பிரஜையாக இருத்தல்.
- தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் திகதியான **பெப்ருவரி 01 ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல். (அதற்கமைய 2025 ஆண்டிற்கான பிரதான தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையை 2007.01.31 அல்லது அந்தத் திகதிக்கு முன்னர் பிறந்தவர்கள் மாத்திரமே பெற்றுக்கொள்கின்றனர்)**
- தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக கோரும் முகவரியில் சாதாரணமாக வதிவைக் கொணடிருத்தல்.

### 2.2.2. தேருநர் ஒருவராக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான தகைமையீனங்கள்.

- செயல்வலுப்பெறும் சட்டமொன்றின் கீழ் சித்த சுவாதீனமற்றவரென நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்டிருத்தல்.
- குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தினால் 02 வருட காலம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு 06 மாதங்கள் அல்லது அதனிலும் அதிக காலம் சிறைப்படுத்தப்பட்டு தண்டனை அனுபவித்துக்கொண்டிருப்பின் அல்லது கடந்த ஏழு (07) வருட காலத்தினுள் அந்தத் தண்டனையை பூரணமாக அனுபவித்தல் அல்லது மரண தண்டனை வழங்கப்பட்டவராக இருத்தல்.
- இலஞ்ச ஊழலொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்டு 07 வருடங்கள் கழிந்திருக்காமை.
- தேர்தல் சட்டத்தை மீறியதன் காரணமாக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.
- பொது நிறுவனங்கள் (ஊழல் தடுப்பு) கட்டளைச் சட்டத்தின் கீழ் குற்றவாளியாக்கப்பட்டிருத்தல்.

**மேற்குறிப்பிடப்பட்ட தகைமையீனங்கள் உட்பட அரசியலமைப்பின் 89 ஆவது உறுப்புரையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வாக்குரிமையை இழப்பதற்கான தகைமையீனங்களுக்கு ஆளாகாத நபர் ஒருவராகவிருத்தல் வேண்டும்.**

### 2.2.3. 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம்

இந்த திருத்தச் சட்டத்தின் பிரதானமான நோக்கம், 18 வயதை எய்தியவுடன் குறைநிரப்பு தேருநர் இடாப்பு ஊடாக வாக்குரிமையைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் திகதியை திருத்தியமைப்பதாகும். 2022 ஆம் ஆண்டில் முதல் தடவையாக நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த திருத்தச் சட்டத்திற்கமைய 2025 ஆம் ஆண்டில் நான்காவது தடவையாகவும் தேருநர் இடாப்பு மீளாய்வு அஇலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன.

### 2.2.3.1. 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்திற்கு (முதன்மைச் சட்டம்) மேற்கொண்ட அடிப்படைத் திருத்தங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விசேட விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

- இந்த திருத்தச் சட்டம் 2021 ஒக்தோபர் மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.
- இந்த திருத்தச் சட்டம் 2022 பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற விடயம்.
- வாக்காளர் ஒருவராக பதிவு செய்துகொள்வதற்கான அலுவலுக்குப் பொருந்தும் வகையில் எவரேனுமொரு நபரின் 18 வயது பூர்த்தியடைய வேண்டிய திகதி யூன் மாதம் முதலாம் திகதிக்குப் பதிலாக பெப்ருவரி மாதம் முதலாம் திகதி என திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- ஏதேனுமொரு தேர்தல் மாவட்டத்திற்கான தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் அல்லது வைத்திருப்பதற்கும், சாதாரணமாக வசிக்கும் தகைமை பெறுவதற்கான முகவரிக்கும், அவற்றுடன் தொடர்புடைய ஏனைய தீர்மானங்களுக்குமான திகதியாக இருந்த யூன் மாதம் முதலாம் திகதிக்குப் பதிலாக பெப்ருவரி மாதம் முதலாம் திகதி எனத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு ஆண்டின் யூன் மாதம் முதலாம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மீளாய்வு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குப் பதிலாக பெப்ருவரி மாதம் முதலாம் திகதியில் அல்லது அத்தகிகதிக் முன்னர் எனத் திருத்தியமைக்கப்பட்டது.
- ‘அ’ மற்றும் ‘ஆ’ பட்டியல்களை பூரணப்படுத்துவதனை அடுத்து வருகின்ற ஆண்டின் ஜனவரி 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்த வேண்டும் என்பதற்குப் பதிலாக செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி எனத் திருத்தியமைக்கடல் வேண்டும்.

### 2.2.3.2. குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் சம்பந்தமாக

- ஆண்டொன்றின் பெப்ருவரி மாதம் முதலாம் திகதி முதல் அந்த ஆண்டின் மே மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள்;
- ஆண்டொன்றின் யூன் மாதம் முதலாம் திகதி முதல் அந்த ஆண்டின் செப்தெம்பர் மாதம் 30 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள் ;
- ஆண்டொன்றின் ஒக்தோபர் மாதம் முதலாம் திகதி முதல் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதம் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் காலப்பகுதிக்குள் ; 18 வயதைப் பூர்த்தி செய்யும் ஒருவர் வாக்காளர் ஒருவராக தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதுடன், அதற்காக பிறப்புச் சான்றிதழின் அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியுடன் பதிவு அலுவலரிடம் கோரிக்கையை முன்வைக்க முடியுமெனவும் திருத்தப்பட்ட சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது.

- அத்தோடு பதிவு அலுவலர் குறைநிரப்புப் பட்டியல்களைத் தயாரித்தல் வேண்டுமெனவும், அந்த குறைநிரப்பு பட்டியல்களை காட்சிப்படுத்த வேண்டுமெனவும், இது சம்பந்தமாக வர்த்தமானியில் மற்றும் மும்மொழிகளிலும் செய்திப் பத்திரிகைகளில் அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட வேண்டுமெனவும், அந்த அறிவித்தல்கள் பிரசுரிக்கப்பட்ட திகதி முதல் 10 தினங்களுக்குள் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைக்க முடியுமெனவும், திருத்தப்பட்ட சட்டத்தில் உட்சேர்க்கப்பட்டுள்ளது. அத்தோடு, உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அந்த விசாரணைகளின் இறுதியில் குறைநிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தும் திகதி வரையான அலுவல்களுடன் தொடர்பான ஏற்பாடுகள் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

- குறைநிரப்பு தேருநர் இடாப்பு செயல்வலுப்பெறல் மற்றும் நிராகரிக்கப்படல் சம்பந்தமாக திருத்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

#### 2.2.3.3. தேருநர்களை பதிவு செய்தலுடன் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு அத்தியாயம் ஒப்படைக்கப்படும் சட்ட ரீதியான ஏற்பாடுகள்

தேருநர்களைப் பதிவு செய்தல் தொடர்பாக ஏற்படும் சிக்கல்கள் மற்றும் ஏற்கனவே எதிர்பார்க்காத விடயங்கள் சம்பந்தமாக தீர்மானித்தல் அல்லது பொருத்தமான பிரகாரம் மாற்றியமைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளை வெளியிடுவதற்கான அதிகாரங்கள் ஆணைக்குழுவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## 2.3. தேருநர் இடாப்பு மீளாய்வு - 2025

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைய 2025 பெப்ருவரி முதலாம் திகதி அல்லது அதற்கு முன்னர் 2025 ஆம் ஆண்டின் பிரதான இடாப்புக்காக தேருநர்களை கணக்கெடுக்கும் பணிகளை ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்தது.

### 2.3.1. 2025 ஆம் ஆண்டின் தேருநர் (வாக்காளர்) இடாப்பு மீளாய்வு செயற்பாட்டிற்கமைய பிரதான இடாப்பைத் தயாரித்தல்

இந்த அலுவல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கமைய மாவட்டத்தின் பதிவு அலுவலரின் மற்றும் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களின் வழிநடாத்தலின் கீழ் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களினால் மேற்கொள்ளப்படுவதுடன் வீடு வீடாகச் சென்று களத்தில் வாக்காளர்களை கணக்கெடுக்கும் பணியை கணக்கெடுப்பு அலுவலர்களாக கிராம அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்கள்.

கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று தேருநர்களைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்ளவில்லை. ஆனாலும் 2023 ஆம் ஆண்டைப் போன்றே 2024 ஆம் ஆண்டிலும் வீடு வீடாகச் சென்று தேருநர்களைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொளளப்பட்டதோடு மீண்டும் 2025 ஆம் ஆண்டிலும் வீடு வீடாகச் சென்று தேருநர்களைக் கணக்கெடுக்கும் பணி மேற்கொளளப்பட்டது.

சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவுக்கமைய இடாப்பு மீளாய்வு ஆரம்பிக்கப்படுவதாக, தேருநர்களைக் கணக்கெடுக்கம் முறை பற்றிய அறிவித்தல் இலக்கம்: 2417/28 மற்றும் 2025.01.01 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக அது சம்பந்தமாக தினமின, தினகரன் மற்றும் டெய்லிநிவ்ஸ் பத்திரிகைகளிலும் மும்மொழிகளில் பிரசுரிக்கப்பட்டது. (இணைப்பு 01)

தேருநர் இடாப்பு மீளாய்வுக்கான அறிவுறுத்தல்கள் சுற்றறிக்கை அனைத்து மாவட்டப் பதிவு அலுவலர்களான மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உதவிப் பதிவு அலுவலர்களுக்கு மற்றும் உதவிப் பதிவு அலுவலர்களான மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையார்களுக்கு 2024.12.17 ஆம் திகதி வெளியிடப்பட்டது. வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்கான சட்ட மற்றும் நடைமுறை விடங்கள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன், வாக்காளர் இடாப்பை அத்தாட்சிப்படுத்தல் வரை மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகளுக்கான திகததைகள் பற்றிய திட்டமும் வழங்கப்பட்டது. (இணைப்பு 02)

2024(3) குறைநிரப்பு இடாப்பு 2025.02.01 திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது. ஆனாலும் 2024(3) குறைநிரப்பு இடாப்பை தயாரிக்கும் பணிகளை 2024 திசெம்பர் மாதத்தில் நிறைவு செய்ததமையினால், 2024 பிரதான இடாப்புக்கு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024(1), 2024(2) மற்றும் 2024(3) குறைநிரப்பு இடாப்புக்களுக்காக பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை ஒன்றிணைத்து வாக்காளர் கணக்கெடுப்புக்கான தரவுகள் அச்சிடப்பட்ட ஒன்றிணைந்த பட்டியல்களைத் தயாரித்தலும் அதனை அடிப்படையாகக் கொண்டு 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களைக் கணக்கெடுப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

2025 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல்∴ தேருநர் இடாப்புத் திருத்தத்தின் போது, கணக்கெடுப்பு உத்தியோகத்தர் ஒவ்வொரு வீட்டிற்கும் வராத காரணத்தினால், 2024 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த பட்டியலில் திருத்தம் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம், அதாவது; 2024 பட்டியலிலுள்ள பெயர்கள் நீக்கப்படும் போதோ அல்லது புதிய பெயர்கள் சேர்க்கப்படும் போதோ மாத்திரம் கிராம உத்தியோகத்தர்கள் வீடுகளுக்குச் சென்று கணக்கெடுப்பை நடாத்தினர். கணக்கெடுப்பு உத்தியோகத்தர் வீட்டுக்கு வராத போதிலும், தனது வீட்டின் கீழ் பெயர்கள் சேர்க்கப்படவோ அல்லது நீக்கப்படவோ வேண்டியிருந்தால், அல்லது தற்போதைய வாக்காளர் பட்டியலில் உள்ள பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது வீட்டு இலக்கம் ஆகியவற்றில் திருத்தம் தேவைப்பட்டால், கணக்கெடுப்பு உத்தியோகத்தரைச் சந்தித்து அத்தகவல்களை வழங்குவது வீட்டுத் தலைவரின் பொறுப்பாகும். எவ்வித திருத்தங்களும் இல்லாத பட்சத்தில், 2024 ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ள முகவரியிலேயே அவர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்யப்பட்டனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் வீட்டுத் தலைவர் எவ்வித படிவங்களையும் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

2024 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள வாக்காளர் ஒருவர் மரணமடைந்தாலோ, வதிவிடம் மாறினாலோ அல்லது வேறு காரணங்களினால் 2025 ஆம் ஆண்டு பதிவுக்குத் தகுதியற்றவராகும் போது, கணக்கெடுப்பு உத்தியோகத்தர் அத்தகையோரை ‘அ’ (A) பட்டியலில் உள்ளடக்கிக் தற்போதைய வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கினார்.

ஒருவரது பெயர் 2024 ஒருங்கிணைந்த பட்டியலில் இல்லாவிட்டால் அல்லது 18 வயது பூர்த்தியடைந்ததன் அடிப்படையில் முதன்முறையாக வாக்காளராகப் பதிவு செய்ய வேண்டுமாயின், அல்லது வசிப்பிடம் மாறுதல் போன்ற காரணங்களினால் 2025 ஆம் ஆண்டில் வாக்காளராகப் பதிவு செய்யத் தகுதி பெறுவார்களாயின், அவர்கள் 2025/ER படிவத்தைப் பூர்த்தி செய்து கணக்கெடுப்பு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்க வேண்டும். தற்போதைய வாக்காளர் பட்டியலில் இல்லாதிருப்பினும் தகுதியுள்ள முகவரியின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டியவர்கள் ‘ஆ’ (B) பட்டியலில் உள்ளடக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

களக் கணக்கெடுப்பு காலப்பகுதியில் கிராம உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களை நிறுத்தி வைப்பதற்கும், அக் காலப்பகுதியில் அவர்களது அலுவலக தினங்களை மட்டுப்படுத்துவதற்கும் தேர்தல் ஆணைக்குழு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் அனைத்து மாவட்டச் செயலாளர்களுக்கும் பிரதேச செயலாளர்களுக்கும் 2025.01.17 திகதிய எழுத்துமூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன (இணைப்பு 03).

களக் கணக்கெடுப்புப் பணிகள் 2025.01.01 தொடக்கம் 2025.02.28 வரை நடாத்தவும், கணக்கெடுப்பு உத்தியோகத்தர்களிடமிருந்து படிவங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் பொறுப்பேற்கும் பணிகளை 2025.03.03 தொடக்கம் 2025.03.28 வரை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவித்தல் 2025.03.03 ஆம் திகதி வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, திருத்தப்பட்ட ஆவணங்களை மாவட்டத் தேர்தல் அலுவலகங்களில் பொறுப்பேற்கும் பணிகள் 2025.05.19 தொடக்கம் 2025.06.20 வரை மேற்கொள்ளப்பட்டன.

### 2.3.2. “அ” மற்றும் “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தல்: உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல்

2024 ஒன்றிணைக்கப்பட்ட தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடங்கியுள்ளவர்களில் இறப்பெய்தியுள்ள அல்லது வதிவிடத்தை விட்டுச் சென்றுள்ள அல்லது வேறு காரணமொன்றின் அடிப்படையில் தகைமை பெறாத ஆட்களின் அதாவது 2025 ஆம் ஆண்டில் நீக்குவதற்குப் பரிந்துரைக்கப்படுகின்ற ஆட்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘அ’’ பட்டியல் மற்றும் 2024 ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த தேருநர் இடாப்பில் பெயர்கள் உட்சேர்க்கப்படாத ஆனாலும் 18 வயதைப் பூர்த்தி செய்தல் அல்லது வதிவதற்கு வருகைதருதல் அல்லது வேறு காரணத்தின் அடிப்படையில் அல்லது 2025 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்புக்கு புதிதாக பெயர்களை உட்சேர்ப்பதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் நபர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘ஆ’’ பட்டியல்கள் காட்சிப்படுத்தல் 2025.05.02 ஆம் திகதி தொடக்கம் 2025.05.29 ஆம் திகதிவரை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் காரணமாக 2025.07.11 ஆம் திகதி தொடக்கம் 2025.08.07 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்டது. இது சம்பந்தமாக 2379/16 இலக்க மற்றும் 2025.07.11 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டன. (இணைப்பு 04).

### 2.3.3. செல்லுபடியாகும் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் “அ” பட்டியல்கள் மற்றும் “ஆ” பட்டியல்கள் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்

| காட்சிப்படுத்தப்படும் இடம் | காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பு மற்றும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| ஒவ்வொரு மாவட்டச் செயலகம் /மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் | குறித்த தேர்தல் மாவட்டத்தின் (மாவட்டத்தின்) செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் மொத்தப் பிரதி மற்றும் அதனுடன் தொடர்புடைய ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்களின் பிரதிகள் |
| ஒவ்வொரு பிரதேச செயலகம் | குறித்த பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள 2023 ஆம் ஆண்டின் செல்லுபடியாகும் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனுடன் தொடர்புடைய ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்களின் பிரதிகள் |
| ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம் | குறித்த உள்ளூர் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதி மற்றும் அதனுடன் ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்களின் பிரதிகள் |
| ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம் | குறித்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்புப் பகுதியின் பிரதி மற்றும் அதனுடன் தொடர்புடைய ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்களின் பிரதிகள் |

- **அதற்கு மேலதிகமாக, தேர்தல் ஆணைக்குழுவின் இ-சேவை (e-services) இணையத்தளத்திற்குச் சென்று, எவரேனும் ஒருவர் தனது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளீடு செய்வதன் மூலம், 2025 ஆம் ஆண்டிற்காக தனது பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதா என்பதைப் பரீசிப்பதற்கான வசதிகளும் அளிக்கப்பட்டிருந்தன.**

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது பிறிதொரு நபரின் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொண்டுள்ள ஆனாலும் தனது பெயர் தேருநர் இடாப்பிலிருந்து மற்றும் ''ஆ'' பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு அல்லது ''அ'' பட்டியலில் உட்சேர்க்கப்பட்டுள்ள அல்லது எவரேனுமொருவர் தனது பெயரை அல்லது பிறிதொருவரின் பெயரை இடாப்பில் உட்சேர்த்துக்கொள்வதற்காக சந்தர்ப்பத்திற்கேற்ப தான் அல்லது தான் சார்பாக வேறொருவர் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பாராயின் அவ்வாறு உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவரால் அது பற்றி மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள ''அ'' மற்றும் ''ஆ'' படிவத்திற்கமைவான அறிவித்தல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் 2025 யூலை 11 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டதுடன் அன்றைய திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2025.08.07 ஆம் திகதிக்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் பதிவு அலுவலருக்கு கிடைத்தல் வேண்டுமென பிரசித்தப்படுத்தப்பட்டது.

தேர்தல் மாவட்டத்திற்குரிய தேருநர் இடாப்பில் அல்லது ''ஆ'' பட்டியலில் தனது பெயர் உட்சேர்க்கப்பட்டுள்ள ஒருவருக்கு தனது பெயர் அல்லது அந்த இடாப்பில் அல்லது ''ஆ'' பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பிறிதொருவரின் பெயர் அல்லது அந்த இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருத்தல் சம்பந்தமாக அல்லது அந்த இடாப்பில் பெயரை உட்சேர்த்துக்கொள்வதற்காக அல்லது வைத்துக்கொள்வதற்காக ஆட்சேபனையைத் தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கும் ஆட்சேபனையை மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ள பிரகாரம் ''இ'' படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இடாப்பில் பெயரை உட்சேர்த்தல் பற்றி முன்வைக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளையும் குறித்த அறிவித்தலானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அதாவது 2025 யூன் மாதம் 11 ஆம் திகதி முதல் 4 வாரங்களுக்குள் அதாவது 2025.08.07 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டுமென பகிரங்கப்படுத்தப்பட்டது.

உரிமைக் கோரிக்கையை முன்வைக்கும் ஒருவரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் சம்பந்தமாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப் பட்டியல் அடங்கிய அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ''ஈ'' படிவத்திற்கமைய இரண்டு பிரதிகளில் தேர்தல்கள் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2025 யூன் மாதம் 25 ஆம் திகதி மற்றும் 2025 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி பிரசித்தப்படுத்தப்பட்டது.

உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவைப்படும் ''அ'' ''ஆ'' படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான ''இ'' ''ஈ'' படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக தேவையான ஒருவருக்கு தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளத்தின் ஊடாகவும் படிவங்களைப் பதிவிறக்கம் செய்து அச்சிட்டுக் கொள்வதற்கான வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

### 2.3.4. உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகளை நடாத்துதல் மற்றும் தாமதக் கோரிக்கைகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

“அ” “ஆ” பட்டியல்படுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை மற்றும் உரிமைக் கோரிக்கைகளை பொறுப்பேற்பதற்கான காலப் பகுதியின் இறுதியில் கிடைக்கப்பெற்றுள்ள உரிமைக் கோரிக்கைகளின் எண்ணிக்கை சம்பந்தமாக கவனத்தை செலுத்திய தேர்தல் ஆணைக்குழு தேருநர்களைக் கணக்கெடுக்கும்போது ஏற்பட முடியுமான பிழைகளை சரி செய்வதற்காக ஏதேனுமொரு விதத்தில் விடுபட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள வாக்காளர்களை தாமதக் கோரிக்கைகளாகக் கருதி இடாப்பில் உட்சேர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

பிரதான இடாப்பு மற்றும் குறைநிரப்பு இடாப்பு தயாரிப்பின்போது கண்டறியப்பட்ட பிந்திய பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தொடர்பாக, வாக்காளர் பதிவுச் சட்டத்தின் 12(7) உப பிரிவிற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி, வாக்காளர்கள் பதிவு செய்ய விரும்பும் முகவரி முதலில் கேட்கப்பட்டது. கிடைத்த பதில்களின்படி, வாக்காளர்கள் ஒரு முகவரியில் இருந்து நீக்கப்பட்டு, அவர்களுக்கு விருப்பமான முகவரியில் பதிவு செய்யப்பட்டனர். அதற்குக் கிடைக்கப்பெற்ற தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் ஒரு விருப்பமான முகவரியில் மாத்திரம் குறித்த பெயர்கள் பதிவு செய்யப்பட்டன. தேர்தல் மாவட்டத்தில் பன்மைப் பதிவுகள் தொடர்பான விடயங்களை வினவுவதற்காக பதில் கிடைக்காத நிலையில், பதிவு அலுவலர்களின் விருப்பப்படி குறித்த பெயர்களை ஒரு முகவரியில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது. இரண்டு தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்புடைய பன்மைப் பதிவுகள் தொடர்புடைய முகவரிகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட தீர்மானங்கள் பதிவு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களுடன் வழங்கப்பட்டன. தேசிய அடையாள அட்டை இலக்கங்களுக்கமைய பன்மைப் பதிவு என வெளிப்படுத்தப்பட்டாலும் இரண்டு நபர்கள் என அவதானிக்கப்படும் சந்தர்ப்பத்தில் மற்றும் ஒரு நபரா? என சந்தேகிக்கும் சந்தர்ப்பங்களில் தொடர்ந்தும் இரண்டு முகவரிகளிலும் வைத்துக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டிற்கான பிரதான வாக்காளர் பெயர்ப் பட்டியலை 2025.09.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் மற்றும் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களைக் கருத்திற்கொண்டும்; 2026 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வுப் பணிகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்காகவும், இப்பட்டியலை 2025.10.31 மே திகதி அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 ஆம் ஆண்டிற்கான பிரதான வாக்காளர் பெயர்ப் பட்டியலைத் தயாரிக்கும் பணிகள் மாவட்ட மட்டத்தில் நிறைவு செய்யப்பட்டு, 2025 ஒக்தோபர் 31 ஆம் திகதியன்று நாட்டின் அனைத்து தேர்தல் தொகுதிகளினதும் உதவிப் பதிவு உத்தியோகத்தர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டன.

இது தொடர்பான விபரங்களை 2025.10.31 திகதிய 2460/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், மும்மொழிகளிலும் பத்திரிகை விளம்பரங்களை வெளியிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன், தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இதனைப் காட்சிப்படுத்தியதுடன், அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களிலும் நாட்டின் அனைத்து கிராம அலுவலர்கள் அலுவலகங்களிலும் பொதுமக்களின் பார்வைக்காக வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.3.5. 2025 தேருநர் இடாப்புடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள்

- ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களினதும் நடப்பு இடாப்பிலிருந்து (2024) நீக்கப்படவிருக்கும் பெயர்கள் ("அ" பட்டியலிடப்பட்ட பெயர்கள்) மற்றும் 2025 உட்சேர்க்கப்படவிருக்கும் பெயர்கள் ("ஆ" பட்டியலிடப்பட்ட பெயர்கள்) எண்ணிக்கை (குறிப்பு 02)
- தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை சமர்ப்பித்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் (குறிப்பு 03)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பன்மைப் பதிவுகள் வெளிப்படுத்தப்படல் அடிப்படையில் ஒரு முகவரியிலிருந்து நீக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (குறிப்பு 04)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்ட மட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (குறிப்பு 05)
- அரசியலமைப்பின் 98(8) ஆம் உறுப்புரைக்கு இணங்க, ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வருடாந்தம் கணக்கிடும் பணி, 2025.10.31 ஆம் திகதி 2025 ஆம் ஆண்டிற்கான பிரதான வாக்காளர் பெயர்ப் பட்டியல் அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் (2025 பிரதான வாக்காளர் பட்டியல் மற்றும் 2025 (1), 2025 (2) ஆகிய குறைநிரப்பி வாக்காளர் பட்டியல்களில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு) மேற்கொள்ளப்பட்டது. (குறிப்பு 06)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய 2025 ஆம் ஆண்டின் பிரதான தேருநர் இடாப்புக்களை அத்தாட்சிப்படுத்தியுள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் பற்றிய விபரம் (குறிப்பு 07)
- ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமுரிய தேசிய அடையாள அட்டை சம்பந்தமான தகவல்களை சமர்ப்பித்த நபர்களின் எண்ணிக்கையின் சதவீதம் (குறிப்பு 08)

### 2.3.6. ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கை குறிப்புக்கள்

கடந்த சில வருடங்களின் வாக்காளர் பதிவு தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் தொடர்பான ஒப்பீட்டு ரீதியிலான எண்ணிக்கைக் குறிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- வாக்கெடுப்புப் பிரிவுகளுக்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை பற்றிய ஒப்பீட்டுக் குறிப்பு 2014 - 2025 (குறிப்பு 09)
- தேருநர் இடாப்பு மீளாய்வின்போது தேசிய அடையாள அட்டையின் தகவல்களைச் சமர்ப்பித்துள்ள வாக்காளர்களின் சதவீதம் பற்றிய ஒப்பீட்டுக் குறிப்பு 2014 - 2025 (குறிப்பு 10)
- ஒவ்வொரு ஆண்டிலும் பிரதான தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரிப்பு மற்றும் அதிகரித்தல் சதவீதம் தொடர்பான ஒப்பீடு 2001 - 2025 (குறிப்பு 11)
- அரசியலமைப்பின் 98(8) உப உறுப்புரையின் கீழ் பிராதான தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு

செய்யப்பட வேண்டிய பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய ஒப்பீட்டுக் குறிப்பு 2014 - 2025 (குறிப்பு 12)

- செல்லுபடியாகும் தேருநர் இடாப்புக்களின் வாக்காளர்களின் எண்ணிக்கையின் மாற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விபரங்கள் (குறிப்பு 13)
- 2024 - 2025 தேர்தல் மாவட்ட மட்டத்தில் தேருநர்களின் பதிவை ஒப்பீடு செய்தல் (குறிப்பு 14)

### 2.3.7. 2024 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

தேருநர்களை கணக்கெடுக்கும் திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய 2024 ஒக்தோபர் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2025 ஜனவரி மாதம் 31 திகதி வரையான காலப்பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் ஆட்களை உள்ளடக்கிய குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் வேண்டும். இந்தக் குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான கணக்கெடுப்பு நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டின் பிரதான இடாப்பு கணக்கெடுப்புடன் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டது.

குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் சம்பந்தமாக் 2381/41 இலக்க மற்றும் 2024.04.26 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

பல சந்தர்ப்பங்களின் போது ஆட்பதிவுத் திணைக்களத்தின் மூலம் இந்தக் காலப் பகுதியினுள் 18 வயதைப் பூர்த்தி செய்யும் ஆட்களின் விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் அந்த விபரங்கள் மாவட்டப் பிரதி / உதவி ஆணையாளர்கள் ஊடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு ஆட்களுக்கும் பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதங்கள் ஊடாக அறிவிக்கப்பட்டது.

உரிமைக் கோரிக்கைக்கான விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் குறைநிரப்பு தேருநர் இடப்பை ஆரம்பத்திலேயே திட்டமிட்ட பிரகாரம் 2025.02.01 அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பாக 2421/55 ஆம் இலக்க மற்றும் 2025.02.01 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் பத்திரிகை விளம்பரம் ஊடாக அறிவிக்கப்பட்டது. இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 77, 075 ஆகும்.

### 2.3.8. 2025 குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

தேருநர்களை பதிவு செய்தல் திருத்தப்பட்ட சட்டத்திற்கமைய 2025 பெப்ரவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2025 மே மாதம் 31 திகதி வரையான காலப்பகுதியினுள், 2025.யூன் மாதம் 01 முதல் 2025 செப்தெம்பர் 30 வரையான காலப்பகுதியினுள் மற்றும் 2025 ஒக்தோபர் 01 முதல் 2026 சனவரி 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் ஏதேனுமொரு திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களை உள்ளடக்கிய குறைநிரப்பு இடாப்பை தயாரித்தல் வேண்டும்.

இந்தக் குறைநிரப்பு இடாப்புடன் தொடர்பான ஆரம்ப தகவல்களை பெற்றுக்கொள்ளல் 2024 ஆம் ஆண்டின் வாக்காளர் கணக்கெடுப்புடன் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட்டது. தகைமைகளைப் பெற்றுக்கொண்ட ஏனையோரைக் கணக்கெடுக்கும் பணிகள் 2025 ஆம் ஆண்டின் பிரதான இடாப்புக்கான கணக்கெடுப்புடன் இணையான வகையில் மேற்கொள்ளப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் ஆட்பதிவு திணைக்களத்தினூடாக இக்காலப்பகுதியினுள் 18 வயதை பூர்த்தி செய்துள்ள ஆட்கள் தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுன் அந்த விபரங்கள் மாவட்ட பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்களூடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அது தவிர அந்த ஒவ்வொரு ஆட்களின் தனிப்பட்ட முகவரிக்கு பதிவு செய்துகொள்ளுமாறு கடிதங்கள் மூலமாகவும் அறிவிக்கப்பட்டது.

குறைநிரப்பு இடாப்பை காட்சிப்படுத்தல், உரிமை கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் சம்பந்தமாக 2447∴15 ஆம் இலக்க மற்றும் 2025.07.29 ஆம் திகதிய வர்த்தமானியில் மற்றும் செய்திப் பத்திரிகைகளில் மும்மொழிகளிலும் அறிவித்தல் வெளியிடப்பட்டது.

### 2.3.9. 2025 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்.

உரிமைக் கோரிக்கைகள் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு இந்த குறைநிரப்பு இடாப்பு 2025.10.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்துகொள்ளப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 68,667 ஆகும்.

### 2.3.10. 2025 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்.

உரிமைக் கோரிக்கைகள் விசாரணைகள் நிறைவு செய்யப்பட்டு இந்த குறைநிரப்பு இடாப்பு 2025.10.22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

இந்தக் குறைநிரப்பு இடாப்பில் பதிவு செய்துகொள்ளப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை 68,109 ஆகும்.

### 2.3.11. 2025 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பை தயாரித்தல்

2025.12.31 ஆம் திகதியாகும் போது இந்த குறைநிரப்பு இடாப்பு தொடர்பான அநேகமான நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டன. முன்னர் திட்டமிட்டபடி, 2025.02.02 ஆம் திகதியன்று இந்தக் குறைநிரப்பு இடாப்பை அத்தாட்சிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2025.12.31 ஆம் திகதியாகும் போது இந்த குறைநிரப்பு தேருநர் இடாப்பில் பதிவு செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட தேருநர்களின் எண்ணிக்கை 68,267 ஆகும்.

### 2.3.12. 2026 (1), 2026 (2) மற்றும் 2026 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களைத் தயாரித்தல்.

2025.02.01 முதல் 2025.05.31 வரை தயாரிக்க வேண்டிய 2026 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு, 2026.06.01 முதல் 2026.09.30 வரை தயாரிக்க வேண்டிய 2026 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு மற்றும் 2026.10.01 முதல் 2027.01.31 வரை தயாரிக்க வேண்டிய 2026 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்காக தகைமை பெறும் ஆட்கள் பற்றிய விபரங்களை 2025 தேருநர் இடாப்பு மீளாய்வுடன் சமாந்தரமாக சேகரிப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய 2025.12.31 ஆம் திகதியன்று 2026 ஆம் ஆண்டிற்கான குறைநிரப்பு இடாப்புக்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

.

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | பரிந்துரைக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை |
|---|---|
| (1)2026 | 14525 |
| (2)2026 | 14115 |
| (3)2026 | 12807 |

**2.3.13. குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுடன் தொடர்புடைய எண்ணிக்கை குறிப்புக்கள்**

- 2025.02.01 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2024 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்புடன் தொடர்புடையதாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (குறிப்பு 15)
- 2025.02.01 ஆம் திகதி 2024(3) குறைநிரப்பு தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் அரசியலமைப்பின் 98 (8) உப உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ( 2024பிரதான தேருநர் இடாப்பு,2024 (1), 2024 (2) மற்றும் 2024 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ) (குறிப்பு 16)
- 2025.10.15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025(1) குறைநிரப்பு தேருநர் இடாப்புடன் தொடர்புடையதாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (குறிப்பு 17)
- 2025.10.15 ஆம் திகதி 2025(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் அரசியலமைப்பின் 98 (8) உப உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ( 2024 பிரதான தேருநர் இடாப்பு,2024 (1), 2024 (2) , 2024 (3) மற்றும் 2025(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ) (குறிப்பு 18)
- 2025.10.22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2025(2) குறைநிரப்பு தேருநர் இடாப்புடன் தொடர்புடையதாக ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்கள் / மாவட்டங்களுக்கமைய பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (குறிப்பு 19)
- 2025.10.15 ஆம் திகதி 2025(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் அரசியலமைப்பின் 98 (8) உப உறுப்புரைக்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்யப்பட முடியுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை (2024 பிரதான தேருநர் இடாப்பு,2024 (1), 2024 (2) , 2024 (3) 2025(1) மற்றும் 2025(2) குறைநிரப்பு தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அடிப்படையில் ) (குறிப்பு 20)

## 2.4. தேருநர் இடாப்பு தொடர்பான செயற்பாட்டிற்கு தகவல் தொழில்நுட்பத்தைப் அறிமுகம் செய்தல்

தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்காக கிராம அலுவலர் அலுவலகம், தேர்தல் அலுவலகங்களுக்கு செல்வதற்குப் பதிலாக தேர்தல்கள் இ - சேவை ஊடாக தேருநர் இடாப்பில் பதிவு செய்துகொள்வதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்கு பொது மக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

அவ்வாறே 2021 ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட அனைத்துப் பிரஜைகளுக்கும் தேருநர் இடாப்பு தகவல்களை உள்ளடக்கிய வெளிப்படுத்துகையை தமது கையடக்கத் தொலைபேசி/ கணனி ஊடாக பெற்றுக்கொள்வதற்கான வசதியும் இந்த ஆண்டிலும் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்பட்டது.

முதலாம் தரத்திற்காக பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதித்துக்கொள்ளும் செயற்பாட்டிற்கு வலய / கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு இலவசமாக மற்றும் விண்ணப்பிக்கும் பாடசாலைகளுக்கு உரிய கட்டணத்தை அறவிட்டு இ - சேவை ஊடாக வதிவிடம் பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான சேவையொன்று செயற்படுத்தப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் இ - சேவை முறைமையை மேம்படுத்துவதன் மூலம், பொதுமக்கள் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் தரப்புக்களுக்கு இலகுவாக தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டது.

கிராம அலுவலர்களின் தேர்தல் ஆணைக்குழுவுடன் சம்பந்தப்பட்ட விடயங்கள் தேர்தல் இ - சேவை மூலம் நிகழ்நிலையில் மேற்கொள்வதற்கான வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.

2025 ஆம் ஆண்டில் 1152 கிராம அலுவலர்கள் தமது தனிப்பட்டஉபகரணங்கள் மற்றும் தரவுகளைப் பயன்படுத்தி தேருநர் இடாப்பு மீளாய்வுடன் தொடர்புடைய தரவுகள் உட்சேர்க்கப்பட்டன.

வலிமையிழப்புக்குட்பட்ட பிரஜைகளுக்கு வசதிகளை வழங்குவதற்காக விசேட வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக தேர்தல்கள் இ-சேவைகள் மூலம் நபர்களின் வலிமையிழப்புத் தொடர்பான தரவுகளை சேகரிக்கும் பணியை ஆரம்பிப்பித்தல். (இதனூடாக தேர்தலின்போது அவர்களுக்கு தேவையான விசேட வசதிகளை வழங்கப்படுவதற்கான வாய்ப்புக் கிடைகின்றது)

### 2.4.1. மீளாய்வு தொடர்பாக குறுஞ் செய்தி (SMS) ஊடாக பொது மக்களுக்கு அறிவுறுத்தல்

2025 தேருநர் இடாப்புக்கு பரிந்துரைக்கப்படாத அல்லது பதிவு முகவரியை மாற்றம் செய்வதற்குத் தேவையான இது வரை பரிந்துரைக்கப்படாத பிரசைகளை அறிவுறுத்துவதற்காக டயலொக், மொபிடெல், எயார்டெல் மற்றும் ஹடிசன் போன்ற கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு "Elections" எனும் தலைப்பில் கீழ் குறிப்பிடப்படும் குறுஞ் செய்தி பணம் அறவிடப்படாமல் 2025.02.14 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- <u>සිංහල</u>

  මෙවර ග්‍රාම නිලධාරී ගෙයින්ගෙට නොපැමිණෙන බැවින්, 2025 ඡන්දහිමි නාමලේඛන කෙටුම්පතට සංශෝධන ඇත්නම් පමණක් ඔහු විමසන්න. ec.lk/vrd

- **සිංග්ලිෂ්**

Mewara Grama Niladhari Geingeta nopaminena bavin, 2025 Chandahimi Namalekana ketumpathata sanshodana athnam pamanak ohu vimasanna. ec.lk/vrd

- **தமிழ்**

இம்முறை கிராம அலுவலர் வீடு வீடாக வருகை தருவதில்லையென்பதால், 2025 வாக்காளர் இடாப்பு வரைவுக்கு திருத்தங்கள் இருப்பின் மாத்திரம் அவரிடம் வினவவும். நஉ.டம/எசன

- **ටැංග්ලිෂ්**

Immurai Kirama Aluvalar Veeduhalukku Varuvathillai enbathal, 2025 Vaakkalar Idappu varaivukku Thiruththangal Iruppin Maaththiram Avaridam Vinavavum. ec.lk/vrd

- **English**

Since the Grama Niladhari will not be visiting houses this time, please contact him only if there are amendments to the 2025 draft electoral register.ec.lk/vrd

2025 தேருநர் இடாப்பு வரைவில் உள்ளடக்கப்படாத அல்லது பதிவு முகவரியை மாற்றம் செய்வதற்குத் தேவையான பிரசைகளை அறிவுறுத்துவதற்காக டயலொக், மொபிடெல், மற்றும் ஹட்சன் ஆகிய கையடக்கத் தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு "Elections" எனும் தலைப்பில் கீழ் குறிப்பிடப்படும் குறுஞ் செய்தி பணம் அறவிடப்படாமல் 2025.05.09 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

- **සිංහල**

2025 ඡන්ද ලැයිස්තුවට නිර්දේශ වී නැති; ලිපිනයේ, නමේ / හැඳුනුම්පතේ සංශෝධන ඇති; 2009.02.01ට පෙර උපන් අය ග්‍රාම නිලධාරී විමසන්න. ec.lk/vrd

- **සිංග්ලිෂ්**

2025 Chanda laisthuwata nirdesha vi nathi; lipinaye, name/ hadunumpathe sanshodana athi; 2009.02.01ta pera upan aya Grama Niladhari Vimasanna. ec.lk/vrd

- **தமிழ்**

இம்முறை கிராம அலுவலர் வீடு வீடாக வருகை தருவதில்லையென்பதால், 2025 வாக்காளர் இடாப்பு வரைவுக்கு திருத்தங்கள் இருப்பின் மாத்திரம் அவரிடம் வினவவும். ec.lk/vrd

- **ටැංග්ලිෂ්**

2025 vakkalar idappukku parinthuraikkapadatha@ mugawariyil, peyaril/ adaiyala attayil thiruththangal ulla; 2009.02.01 itku munnar piranthawargal kirama aluvalaridam vinavawum.ec.lk/vrd

- **English**

  Those not recommended for 2025 electoral register / have changes in your address, name or NIC, born before 01.02.2009 enquire the Grama Niladhari. ec.lk/vrd

2025 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பாகப் பொதுமக்களைத் தெளிவுபடுத்துவதற்காக, டயலொக், மொபிடெல் மற்றும் ஹட்சன் ஆகிய கையடக்க தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு “Elections” என்ற தலைப்பின் கீழ் பின்வரும் குறுஞ்செய்தியை 2025.07.15 ஆம் திகதி அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன்போது, இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் உத்தரவுகளுக்கு இணங்க, மொபிடெல் தொலைபேசி நிறுவனத்திற்கு உரிய கட்டணங்கள் மற்றும் வரிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், டயலொக் மற்றும் ஹட்சன் தொலைபேசி நிறுவனங்கள் இம்முறையும் அக்குறும் செய்தியை இலவசமாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தன.

- **සිංහල**

  2025 ඡන්ද ලැයිස්තුවට නිර්දේශ නොවූ; පදිංචිය, නමේ, හැඳුනුම්පතේ සංශෝධන ඇති 2008.02.01ට පෙර උපන් අය ග්‍රාම නිලධාරී විමසන්න. ec.lk/vrd

- **සිංග්ලිෂ්**

  2025 Chanda laisthuwata nirdesha novu; padinchiya, name/ hedunumpathe sanshodhana ethi 2008.02.01 ta pera upan aya Grama Niladhari vimasanna. ec.lk/vrd

- **தமிழ்**

  2025 தேருநர் இடாப்புக்கு பரிந்துரைக்கப்படாத வதிவிடம்; பெயர்/அடையாள அட்டை திருத்தப்பட்ட 2008.02.01 இற்கு முன்னர் பிறந்தவர்கள் கிராம அலுவலரை வினவவும். ec.lk/vrd

- **ටැංග්ලිෂ්**

  2025therunar idappukku parinthuraikapadatha; vathividam,peyar/adayalaattai thiruththapatta2008.02.01 kku mun piranthavargal kiramaaluvalarai vinavawum.ec.lk/vrd

- **English**

  Contact Grama Niladhari if not recommended for the 2025 electoral register; with address, name, ID changes and born before 01.02.2008. ec.lk/vrd

### 2.5. பாராளுமன்ற உறுப்பினர் பதவி வெற்றிடங்களை நிரப்புதல்.

இலக்கம் 22 கேகாலை தேர்தல் மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த திரு.ஹப்பு ஆரச்சிகே கோசல நுவன் ஜயவீர அவர்கள் இறப்பெய்தியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, திரு. ரத்நாயக்க முதியன்சேலாகே சமந்த ரணசிங்க

அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அது தொடர்பான விபரங்கள் 2025.04.08 திகதிய 2431/11 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் வேட்புமனுச் செய்யப்பட்டு, பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த திரு.முஹம்மது சாலி நலீம் அவர்கள் கேட்டு விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, திரு.முஹம்மது சரிபு அப்துல் வாஹித் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அது தொடர்பான விபரங்கள் 2025.07.03 திகதிய 2443/50 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான தேசிய மக்கள் சக்தியினால் வேட்புமனுச் செய்யப்பட்டு , பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த திரு. ஹர்ஷண சூரியப்பெரும அவர்கள் கேட்டு விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, திரு. உஸ்ஹெட்டிகே தொன் நிஷாந்த ஜயவீர அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அது தொடர்பான விபரங்கள் 2025.07.07 திகதிய 2444/07 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

அரசியலமைப்பின் 99அ உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினால் வேட்புமனுச் செய்யப்பட்டு , பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்த திரு. முஹம்மது இஸ்மாயில் முத்து முஹம்மது அவர்கள் கேட்டு விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்திற்கு, திரு. நெய்னா தம்பி மரிக்கார் மொஹமட் தாஹிர் அவர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன், அது தொடர்பான விபரங்கள் 2025.12.02 திகதிய 2465/09 இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது.

### 2.6. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் 2025.05.06

#### 2.6.1. பின்னணி

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம், 2023.01.30 ஆம் திகதிய 2317/02 தொடக்கம் 26 வரையான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம், அந்தந்த நிருவாக மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் உரிய மாவட்டங்களின் உளளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 2023.03.09 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தேர்தல் ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட, எதிர்பாராத மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களினால், தேர்தல் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், உரிய நிருவாக மாவட்டங்களின் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் 2023.03.08 ஆம் திகதியிடப்பட்ட 2322/28 தோடக்கம் 52 வரையான வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் புதிய தேர்தல் திகதியாக 2023.04.25 அறிவிக்கப்பட்டது.

தேர்தல்களை நடத்துவதற்குத் தேவையான நிதியை திறைசேரியினால் வழங்க முடியாது என்ற பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாத நிலையில், அத்தேர்தல்களை நடத்த முடியாத சூழல் உருவானது. இதன் காரணமாக, முன்னர் தீர்மானிக்கப்பட்ட 2023.04.25 ஆம் திகதிக்கு பதிலாக, பிறிதொரு திகதி தேர்தல் திகதியாக பெயரிடப்படும் என அந்தந்த மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் 2023.04.11 ஆம் திகதியிடப்பட்ட 2327/08 முதல் 32 வரையான வர்த்தமானி அறிவித்தல்கள் மூலம் மேலதிகமாக அறிவிக்கப்பட்டது.

அவ்வாறு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை, 2024 ஆம் ஆண்டின் வாக்காளர் பேரட்டைப் பட்டியலை அடிப்படையாகக் கொண்டு விரைவாக

மீண்டும் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு அத்தியாயம் வழங்கும் பொருட்டு, 2023 ஆம் ஆண்டில் கோரப்பட்ட வேட்புமனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு அறிவுறுத்தல் வழங்குவது தொடர்பாக, பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் PA/PCLA-31/99/2024 மற்றும் 2024.12.01 திகதியிடப்பட்ட அமைச்சரவைப் பத்திரிகை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி, அதுவரை தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்டிருந்த சில உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் புதிய வேட்புமனுக்களைக் கோருவதற்கும், அந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யும் பொருட்டு, அதனுடன் தொடர்புடைய அல்லது அதன் இடைநேர் விளைவான விடயங்களுக்காக விதந்துரைக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் 2025.02.17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.

அதற்கமைய, திருத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலகள் கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம், உரிய வேட்புமனு அறிவித்தல்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்டம் நடைமுறைக்கு வந்த 2025.02.17 ஆம் திகதி தொடக்கம் மூன்று மாத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவொன்று போட்டியிடும் ஒவ்வோர் உள்ளூராட்சி மன்றம் சார்பாகவும், முதலாவது வேட்புமனுப் பத்திரத்திலும் இரண்டாவது வேட்புமனுப் பத்திரத்திலும் பெயரிடப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை, அதில் உள்வாங்கப்பட வேண்டிய குறைந்தபட்ச இளைஞர் மற்றும் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் வைப்பிலிடப்பட வேண்டிய பிணைப் பணம் குறித்த விபரங்கள் 2425/70 மற்றும் 2025.03.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டன.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக, அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை மற்றும் தெஹியத்தக்கண்டிய பிரதேச சபை, மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேச சபை, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச சபை மற்றும் 2024.10.26 ஆம் திகதி தேர்தல் நடத்தி முடிக்கப்பட்ட எல்பிட்டிய பிரதேச சபை ஆகியன தவிர்ந்த, நாடளாவிய ரீதியிலுள்ள 28 மாநகர சபைகள், 36 நகர சபைகள் மற்றும் 272 பிரதேச சபைகள் என மொத்தமாக 336 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களைப் கையேற்கும் அறிவித்தல் 2025.03.03 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அதன்படி, 2025.03.17 தொடக்கம் 2025.03.19 நண்பகல் 12.00 மணி வரை அந்தந்த மாவட்ட செயலகங்களில் வேட்புமனுக்கள் பொறுப்பேற்கப்பட்டன.

மேற்கூறிய முதற்கட்டத்தில் வேட்புமனு கோரப்படாத தெஹியத்தக்கண்டிய பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை மற்றும் பூநகரி பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனு அறிவித்தல் 2025.03.10 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன், 2025.03.24 முதல் 2025.03.27 நண்பகல் 12.00 மணி வரை அந்தந்த மாவட்ட செயலகங்களில் வேட்புமனுக்கள் பொறுப்பேற்கப்பட்டன.

இதன்படி, மேற்கூறிய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் திகதி 2025.05.06 என தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டது.

இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக தீவின் 339 உள்ளூராட்சி மன்றங்கள் சார்பாக 55 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 360 சுயேச்சைக் குழுக்களும் பிணைப் பணம்

வைப்பிலிட்டிருந்தன. அதற்கமைய, கட்சிகள் மற்றும் குழுக்களினால் வைப்பிலிடப்பட்ட மொத்த பிணைகளின் எண்ணிக்கை 2806 ஆகும்.

2025.05.06 ஆம் திகதி நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் 49 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 257 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டதுடன், களமிறங்கிய மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 75,589 ஆகும். 2024 ஆம் ஆண்டில் சான்றுரைக்கப்பட்ட வாக்காளர் பட்டியலுடன் 1, 2 மற்றும் 3 ஆம் அனுபந்தங்கள் உள்ளடங்கிய ஒருமைப்படுத்தப்பட்ட வாக்காளர் பட்டியலின் 4,877 வட்டாரங்களுக்கு (னுளைளைழைளெ) அமைவாக, 13,759 வாக்களிப்பு நிலையங்கள் இத்தேர்தல் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டன. நாட்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 17,156,338 ஆகும்.

தமது வதிவிடமானது “சாய்ந்தமருது நகர சபை“ என அழைக்கப்படும் உள்ளூராட்சி மன்றத்திற்கு உட்பட்டது எனக் கூறிக்கொண்ட போதிலும், அது கல்முனை மாநகர சபையின் ஒரு பகுதியாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, பிரதேசவாசிகள் இருவரால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ளுஊ∴குசு∴7/23 இலக்க அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் பிறப்பிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவு காரணமாக, 2025.09.30 வரை திகதி வரையிலும் கல்முனை மாநகர சபைத் தேர்தலுக்கான வேட்புமனு அறிவித்தலை வெளியிட முடியாமல் போயுள்ளது.

### 2.6.2. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள் குறித்த விபரங்கள் அட்டவணை 21 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.6.3. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகள்

2025 ஆம் ஆண்டில் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விடுக்கப்பட்ட சுற்றறிக்கைகள் குறித்த விபரங்கள் அட்டவணை 22 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.6.4. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக அரச அச்சகத்தினால் அச்சிடப்பட்ட ஆவணங்கள்

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக அச்சிடுவதற்கென அரச அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்ட கடித ஆவணங்கள், படிவங்கள், கடித உறைகள், இதழ்கள் (துழரசயெடள), அறிவுறுத்தல் புத்தகங்கள் மற்றும் ஏனைய ஆவணங்கள் குறித்த விபரங்கள் அட்டவணை 23 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.6.5. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான வழக்கு நடவடிக்கைகள்

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சம்பந்தமாக பல்வேறு தரப்பினரால் தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 68 ஆகும். அவை பின்வருமாறு அமைந்திருந்தன:

| வழக்கின் வகை | வழக்கின் எண்ணிக்கை |
|---|---|
| அடிப்படை உரிமைகள் மீறப்படுதல் | 11 |
| ரீட் மனுக்கள் | 49 |
| உள்ளூர் அதிகார திருத்தச் சட்டம் தொடர்பாக | 4 |
| வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை காரணமாக தொடுக்கப்பட்ட வழக்குகள் | 4 |

மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 214 வழக்குகளும், மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு வழக்கும், நீதவான் நீதிமன்றத்தில் ஒரு வழக்கும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

2025.09.30 ஆம் திகதி நிலவரப்படி, உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 68 வழக்குகளில் 66 வழக்குகளுக்கு இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்குகளில் 205 வழக்குகள் நிறைவடைந்துள்ளன. உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 2 வழக்குகளும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 9 வழக்குகளும், மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்றங்களில் தலா ஒரு வழக்கும் இன்னும் விசாரணையில் உள்ளன.

### 2.6.6. அஞ்ஞல் மூல வாக்களிப்பு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான அஞ்ஞல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 2025.03.17 திகதி நள்ளிரவுடன் முடிவடைந்தது. எனினும், பின்னர் வேட்புமனுக்கள் கோரப்பட்ட தெஹியத்தக்கண்டிய பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை மற்றும் பூநகரி பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய அஞ்ஞல் மூல விண்ணப்பங்கள் மாத்திரம் 2025.03.19 ஆம் திகதி நள்ளிரவு வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இத்தேர்தலின் வேட்புமனுக்கள் தொடர்பாக வெளித்தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் காரணமாக, 2025.04.11, 2025.04.15, 2025.04.17 மற்றும் 2025.04.21 ஆகிய நான்கு வெவ்வேறு திகதிகளில் அஞ்ஞல் மூல வாக்குச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டன. அதன்படி விநியோகிக்கப்பட்ட மொத்த அஞ்ஞல் மூல வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை 648,495 ஆகும்.

### 2.6.6.1. அஞ்சல் மூல வாக்குகளை அடையாளமிடுதல்

அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் மூல வாக்குகளை அடையாளமிடுவதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் 3 நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. அதன்படி மாவட்ட செயலகங்கள், மாவட்ட தேர்தல் அலுவலகங்கள், தேர்தல் செயலகம், பொலிஸ், பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் முக்கிய பிரமுகர் பாதுகாப்புப் பிரிவுகளில் அஞ்சல் மூல வாக்களிப்பு 2025.04.22 ஆம் திகதியும், ஏனைய அனைத்து அரச அலுவலகங்கள், அனைத்து இராணுவ முகாம்கள், கூட்டுத்தாபனங்கள்.்.சட்டரீதியான சபைகள் மற்றும் அனைத்துப் பாடசாலைகளிலும் 2025.04.23 மற்றும் 24 ஆகிய திகதிகளிலும் நடைபெறவிருந்தது. அந்தத் திகதிகளில் வாக்களிக்க முடியாதவர்களுக்காக 2025.04.28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

எனினும், நீதிமன்ற நடவடிக்கைகள் காரணமாக அஞ்சல் மூல வாக்குச்சீட்டுகளை விநியோகிப்பதில் ஏற்பட்ட தாமதத்தினால், வாக்களிக்கும் திகதிகளை திருத்தியமைக்க 2025.04.17 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தது. அதன்படி அனைத்து அரச நிறுவனங்கள், இராணுவ முகாம்கள், பொலிஸ் நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களில் 2025.04.24, 25, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் அந்தந்த அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களின் அலுவலகங்களில் அஞ்சல் மூல வாக்களிப்பு நடைபெற்றது. 2025.04.28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் அடையாளமிடப்பட்ட வாக்குகளைக் கொண்ட “A“ உறைகள் அஞ்சல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, 2025.05.01 ஆம் திகதி இராஜகிரிய, சரண மாவத்தையில் அமைந்துள்ள நிதி ஆணைக்குழு அலுவலகத்தில் மாவட்டங்களுக்கு இடையே “A“ உறைகளை பரிமாறிக்கொள்ளும் விசேட வேலைத்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. வழக்கம்போல, அனைத்து அரச மற்றும் சட்டரீதியான நிறுவனங்களையும் உள்ளடக்கும் வகையில் வாக்களிப்பு நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகள் இம்முறையும் செய்யப்பட்டிருந்தன.

இக்காலப்பகுதியில் கண்டியில் நடைபெற்ற “தலதா கண்காட்சி“ விசேட கடமைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த சுமார் பத்தாயிரம் (10,000) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குக் கண்டியிலேயே அஞ்சல் மூல வாக்களிக்க வசதி செய்து தருமாறு பொலிஸ் திணைக்களம் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்திருந்தது. அதற்கமைய, குறித்த உத்தியோகத்தர்களின் அந்தந்த பொலிஸ் நிலையங்களுக்குக் கிடைத்திருந்த அஞ்சல் மூல வாக்குச்சீட்டுகளை உள்ளடக்கிய 'D“ உறைகள், அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு வரவழைக்கப்பட்டு, விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் 2025.04.20 ஆம் திகதி கண்டி மாவட்ட செயலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டன. குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான வாக்களிப்பு 2025.04.24, 25, 28 மற்றும் 29 ஆகிய திகதிகளில் கண்டி உயர்தர மகளிர் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்ட விசேட மையத்தில் நடைபெற்றது.

அதேபோன்று, தலதா கண்காட்சி விசேட கடமைகளில் ஈடுபட்டிருந்த முப்படை அதிகாரிகளின் பெயரில் அவர்களின் நிரந்தர முகாம்களுக்குக் கிடைத்திருந்த "D" உறைகளை, உரிய மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு அறிவித்து பாதுகாப்பாக கண்டிக்குக் கொண்டு வந்து, அவர்கள் தங்கியிருந்த முகாம்களிலேயே வாக்களிக்கத் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த வேலைத்திட்டத்தைக் கண்காணிப்பதற்காக கண்டி மாவட்ட தேர்தல் அலுவலகத்தினால் உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன், கண்காணிப்புப் பணிகளுக்காக தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) மற்றும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) ஆகியனவும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

#### 2.6.6.2. அஞ்ஞல் மூல வாக்காளர்களுக்கான இ-சேவைகள்

அஞ்ஞல் மூல வாக்காளர்கள் QR குறியீடு ஒன்றைப் ஸ்கேன் செய்வதன் மூலம் தமது வாக்கிற்குரிய அத்தாட்சிப்படுத்தும் அலுவலர் மற்றும் வாக்களிக்க வேண்டிய அஞ்ஞல் மூல வாக்களிப்பு நிலையம் ஆகியவற்றை இலகுவாக அறிந்துகொள்வதற்காக மின்-சேவையொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அத்துடன், இந்தச் சேவையில் உள்ளடக்கப்படடிருந்த "உமது வேட்பாளரை அடையாளம் காணுங்கள்" (ஐனநவெகைல லழரச உயனெனையவந) எனும் செயலி மூலம் தேர்தலில் போட்டியிட்ட கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் பற்றிய தகவல்களை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

### 2.6.7. தேர்தல் பிணக்கு முகாமைத்துவமும் சட்ட அமுலாக்கலும்

#### 2.6.7.1. சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்காக தேர்தல் சட்டத்தை அமுல்படுத்துவதில் தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பிரிவின் செயற்பாடு

அரசியலமைப்பின் 104ஆ(4)(அ) மற்றும் 104ஆ(5)(அ) உறுப்புரைகளின் பிரகாரம், அரச சொத்துக்கள் மற்றும் அரச ஊடகங்களைத் தேர்தல் பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் கட்டளைகளும் ஊடக வழிகாட்டல்களும் உருவாக்கப்பட்டன. அச்சு மற்றும் மின் ஊடக நிறுவனங்கள், இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்கள் இத்தேர்தல் குறித்த செய்திகளை வெளியிடும்போது நடுநிலையாகவும் பக்கச்சார்பற்ற முறையிலும் செயற்படுவதை உறுதிப்படுத்துவதும், போட்டியிடும் எந்தவொரு அரசியல் கட்சிக்கோ, குழுவிற்கோ அல்லது வேட்பாளருக்கோ பாதிப்பு ஏற்படாத அல்லது சாதகமாக அமையாத வகையில் ஊடக இட ஒதுக்கீட்டை வழங்குவதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. இது தொடர்பான வழிகாட்டல்கள் இலங்கைச் சனநாயகச் சமதர்மக் குடியரசின் 2426/07 மற்றும் 2025.03.03 திகதிய அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டன.

மேலும், தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கக்கோவைகளை வெளியிடுதல், தேர்தல் சட்டங்களினால் தடைசெய்யப்பட்டுள்ள குற்றங்கள், ஊழல்கள் மற்றும் சட்டவிரோதச் செயல்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்குத் தேவையான கட்டளைகள் மற்றும் பரிந்துரைகளை இலங்கை பொலிஸாருக்கு வழங்குதல் மற்றும் அவற்றை ஒருங்கிணைத்தல், சமூக ஊடகங்கள் ஊடாகப் பரப்பப்படும் போலிப் பிரசாரங்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுகள் பரவுவதைத் தடுத்தல் மற்றும் முறைப்பாடுகளைக் கையாள்வதற்கு தகவல் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி உடனடித் தீர்வுகளை வழங்கக்கூடிய பொறிமுறையைத்

தயாரித்தல் ஆகியன இத்தேர்தலுக்காக நிறுவப்பட்ட தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பிரிவின் நோக்கங்களாக அமைந்தன.

அதன்படி, இத்தேர்தல் அறிவிக்கப்பட்ட 2025.03.03 முதல் தேசிய முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையம் தீவிரமாகச் செயற்பட்டதுடன், மாவட்ட ரீதியாக 25 உப அலுவலகங்கள் நிறுவப்பட்டன. தேசிய முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்திற்குப் பொறுப்பான ஒரு பிரதான அதிகாரியின் கீழ், முறைப்பாடுகளைக் கண்காணித்தல், களப்பரிசீலனைகள், திடீர் சோதனைகள் மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அனுபவம் வாய்ந்த, சமூக ஊடக அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்படக்கூடிய போதிய திறன்களும் தொழில்நுட்ப அறிவும் கொண்ட உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இங்கு தேசிய முறைப்பாட்டு முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் 4 படிவங்களின் ஊடாக முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அவை சட்ட மீறல்கள் மற்றும் வன்முறைச் செயல்கள் என வகைப்படுத்தப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, பொலிஸ் நிலையங்களில் தேர்தல் கடமைகளுக்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல், முறைப்பாட்டு முகாமைத்துவத்திற்காக ஈடுபடுத்தப்பட்ட அரச அதிகாரிகளுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் அச்சு மற்றும் மின் ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உரிமையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவற்றில் இப்பிரிவு தொடர்ந்தும் தீவிர பங்களிப்பை வழங்கியது.

ஊடக வழிகாட்டல்கள் தொடர்பான நிரந்தரப் பிரதிநிதிகள் குழுவை நிறுவுதல் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகங்கள் உள்ளடங்கலாகத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, வெகுசன ஊடக அமைச்சு மற்றும் அரசாங்கத் தகவல் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுடன் தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவம் தொடர்பாக ஒருங்கிணைப்பைப் பேணி, தினசரி முறைப்பாட்டு புள்ளிவிபரங்களின் அடிப்படையில் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறைப்பாடுகள் குறித்த இறுதி அறிக்கையைத் தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பிரிவு தயாரித்தது.

இத்தேர்தலின் போது தேர்தல் சட்ட மீறல்கள் மற்றும் வன்முறைச் செயல்களை உடனுக்குடன் முறைப்பாடு செய்யவும், அவற்றின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், தீர்வுகளை உறுதிப்படுத்தும் செயல்முறையை வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்வதன் மூலம் குடிமக்களை வலுப்படுத்தவும், சான்றுகளுடன் முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கக்கூடிய வசதிகளைக் கொண்ட "நுஊ-நுனுசு" எனும் கைபேசிச் செயலி (ஆழடிடைந யுீ) முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது.

### 2.6.7.2. தேர்தல் பிணக்குகள் முகாமைத்துவ மத்திய நிலையங்களை நிறுவுதல்

2025.05.06 ஆம் திகதி நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக, 2025.03.17 முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டு ஒரு வாரம் கழியும் வரை செயற்படும் வகையில், தேசிய தேர்தல் பிணக்கு முகாமைத்துவ மத்திய நிலையமும், மாவட்ட செயலக வளாகங்களுக்குள் மாவட்ட தேர்தல் பிணக்கு முகாமைத்துவ மத்திய நிலையங்களும் நிறுவப்பட்டன.பல்வேறு தரப்பினரால் தேர்தல் சட்ட மீறல்கள் அல்லது தேர்தல் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து விரைவாகச் செயற்படுதல், சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கு ஏற்படும் தடைகளைத் தடுத்தல், தேர்தல் சட்ட ரீதியாக நடைபெறுவதை உறுதிப்படுத்துதல், முறைப்பாடுகளுடன் தொடர்புடைய சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் வழங்குதல் மற்றும் போட்டியிடும் தரப்பினருக்கு சம வாய்ப்புகளை வழங்குதல் ஆகியன இதன் பிரதான நோக்கங்களாக அமைந்தன.

இதற்கு இணையாக:

- உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக அனைத்து மாவட்டங்களிலும் நிறுவப்படவுள்ள தேர்தல் பிணக்குத் தீர்த்தல் மத்திய நிலையங்களின் பணிகளை இலகுபடுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட EDR மென்பொருள் மற்றும் முறைப்பாட்டு முகாமைத்துவம் குறித்து மாவட்ட தேர்தல் பிணக்குத் தீர்த்தல் மத்திய நிலையங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தெளிவுபடுத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் 2025.03.07 ஆம் திகதி வெள்ளவத்தை விலாசிதா இல்லத்தின் கணினி பயிற்சி மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

- மேலும், தேர்தல் பிணக்கு முகாமைத்துவ மென்பொருளைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் ஆரம்ப நிகழ்வு 2025.03.22 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் மண்டபத்தில் நடைபெற்றதுடன், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான விழிப்புணர்வுத் திட்டம் 2025.03.27 ஆம் திகதி இணைய வழியாக (Online) நடத்தப்பட்டது. இதன் மூலம் பொதுமக்கள் தேர்தல் சட்ட மீறல்கள் இடம்பெறும் போதே அது குறித்து முறைப்பாடு செய்யவும், முறைப்பாடுகளின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டது.

- இதற்கு மேலதிகமாக சமூக ஊடகங்கள் மற்றும் இணையத்தளங்களில் பரப்பப்படும் போலித் தகவல்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களைக் கொண்ட பொய் செய்திகளைக் கண்காணிப்பதற்காக ஒரு பிரிவை நிறுவுவதற்கும், அதற்காகத் தகுதியுள்ள உத்தியோகத்தர் குழாமொன்றை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதன் மூலம் சமூக ஊடகங்கள் வாயிலாகத் தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தடுக்கப்பட்டன.

### 2.6.7.3. தேர்தல் பிணக்கு முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்

தேர்தல் பிணக்கு முகாமைத்துவம் தொடர்பாக உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குத் தெளிவுபடுத்தும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், அனைத்து மாவட்டங்கள் மற்றும் பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் 2025.03.24 முதல் 2025.04.28 வரையான காலப்பகுதிக்குள் நடத்தப்பட்டன.

2025.03.24 - கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை

2025.03.24 - அனுராதபுரம், பொலன்னறுவை, கெப்பிதிக்கொல்லாவ

2025.04.01 - கண்டி, மாத்தளை, தெல்தெனிய, கம்பளை

2025.04.02 - அம்பாறை, மட்டக்களப்பு

2025.04.03 - பண்டாரவளை, பதுளை, நுவரெலியா, ஹட்டன், மொனராகலை

2025.04.04 - இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய, கேகாலை, சீதாவகாபுர

2025.04.09 - குருணாகல், புத்தளம், சிலாபம், நிகவெரட்டிய, குளியாப்பிட்டிய

2025.04.10 - கொழும்பு வடக்கு, கொழும்பு மத்தியம், கொழும்பு தெற்கு, நுகேகொடை, கம்பஹா, களனி, நீர்கொழும்பு

2025.04.26 - காலி, மாத்தறை, எல்பிட்டிய, தங்கயடடந

2025.04.26 - களுத்துறை, பாணந்துறை, கல்கிஸ்சை

2025.04.28 - கந்தளாய், திருகோணமலை

**2.6.7.4. தேர்தல் சட்டங்களை அமுல்படுத்துவதற்காக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள்**

2025.01.12 - 2025.01.12 ஆம் திகதிய 2418∴50 ஆம் இலக்க கட்டளை வர்த்தமானி மூலம், 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான கட்டளை வர்த்தமானி அறிவித்தலை அடுத்த 03 மாதங்களுக்கு அமுல்படுத்துவதற்கான வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.01.16 – 2025.01.16 ஆம் திகதிய 2419∴25 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4)(ஆ) பிரிவின் கீழ் தேர்தல் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாகக் கருதப்பட உரிமையுள்ள கட்சிகளின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.01.16 - 2025.01.16 ஆம் திகதிய 2419∴26 ஆம் இலக்க ஊடக வழிகாட்டல் வர்த்தமானி மூலம், 2023 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான ஊடக வழிகாட்டல்களை அடுத்த 03 மாதங்களுக்கு அமுல்படுத்துதல்.

2025.02.13: - 2025.02.13 ஆம் திகதிய 2423∴15 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 6(3) பிரிவின் கீழான கட்டளையை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.03 – 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.03 ஆம் திகதிய 2426∴06 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், தேர்தல் காலத்தில் அரசுக்கு, அரச கூட்டுத்தாபனங்களுக்கு அல்லது சட்டரீதியான சபைகளுக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையாச் சொத்துக்களைக் கட்சிகள், குழுக்கள் அல்லது வேட்பாளர்களின் விளம்பரத்திற்கோ அல்லது பாதிப்பிற்கோ ஏதுவாக அல்லது சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்குத் தடையாக அமையும் வகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பயன்படுத்துவதைத் தடுப்பதற்கான கட்டளை வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.03: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.3 ஆம் திகதிய 2426∴07 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், அரசியலமைப்பின் 104ஆ.(5)(அ) உறுப்புரையின் கீழான ஊடக வழிகாட்டல் வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.03: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.03 ஆம் திகதிய 2426∴08 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், தேர்தல்களில் போட்டியிடும் அரசியல் கட்சிகள்∴சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கக்கோவைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.03: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.03 ஆம் திகதிய 2426⁚.10 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7 ஆம் பிரிவின்படி தேர்தல் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பெயர்களை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.03: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.03 ஆம் திகதிய 2426⁚.11 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 27அ பிரிவின்படி மாகாண ரீதியாக தேர்தல் பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சின்னங்களை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.17: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.17 ஆம் திகதிய 2428⁚.02 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 262) 76அ பிரிவின் பிரகாரம், அனைத்து அரசியல் கட்சிகளின் செயலாளர்கள்⁚.அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்கள் தேர்தல் பிரசாரங்களின் போது பின்பற்ற வேண்டிய பிரசாரக் கட்டுப்பாடுகளை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.23: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.23 ஆம் திகதிய 2428⁚.72 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்தினதும் ஒவ்வொரு வட்டாரத்திலும் தேர்தல் பிரசாரங்களுக்காகச் செலவிடக்கூடிய செலவு எல்லைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.03.28: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.03.28 ஆம் திகதிய 2429⁚.47 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், பூநகரி, மன்னார் மற்றும் தெஹியத்தக்கண்டிய பிரதேச சபைகளுக்காகப் போட்டியிடும் வேட்பாளர்கள் செலவிடக்கூடிய செலவு எல்லைகளை உள்ளடக்கிய வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.04.07: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.04..07 ஆம் திகதிய 2428⁚.72 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தின் நீர்கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட 13 ஆம் இலக்க “வெல்லவீதிய - வடக்கு“ வட்டாரத்தின் பெயரை “வெல்லவீதிய - கிழக்கு“ எனத் திருத்துவது தொடர்பான வர்த்தமானி அச்சிடப்பட்டது.

2025.04.09: 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் தொடர்பான 2025.04.09 ஆம் திகதிய 2431⁚.02 ஆம் இலக்க வர்த்தமானி மூலம், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழான கட்டளை.

**2.6.7.5. தேர்தல் காலத்தில் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது பாதிக்கும் வகையிலான செயல்களைத் தவிர்த்தல் வேண்டுமென.**

அரசியலமைப்பின் 21 ஆம் திருத்தத்தின் 104(ஆ)4(அ) உறுப்புரையின்படி, தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் (அதாவது வேட்புமனு கோரப்பட்டது முதல் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் வரை), அரசுக்குச் சொந்தமான அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ தமது வெற்றி அல்லது விளம்பரத்திற்காகப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துமாறு 2426⁚.06 மற்றும் 2025.03.03 திகதிய வர்த்தமானி மற்றும் திணைக்களச் சுற்றறிக்கை இலக்கம் 06 மூலம் அமைச்சின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து அரச அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தப்பட்டது.

### 2.6.7.6. தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு மற்றும் வேட்பாளர் செலவிடக்கூடிய அதிகபட்ச செலவு எல்லை அல்லது அனுமதிக்கப்பட்ட தொகை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான போட்டித் தளத்தை உருவாக்குவதற்கும், செலவு முறைகளை வெளிப்படைத்தன்மையுடன் கண்காணிப்பதற்கும், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் ஏற்பாடுகள் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக அமுல்படுத்தப்பட்டன.

இத்தேர்தலில் போட்டியிடும் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர், ஒவ்வொரு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி, சுயேச்சைக் குழு மற்றும் வேட்பாளருக்கான அதிகபட்ச செலவு எல்லைகள், மேற்சொன்ன சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி தேர்தல் ஆணைக்குழுவினால் விஞ்ஞான பூர்வமான முறையில் கணக்கிடப்பட்டு 2428/72 மற்றும் 2025.03.28 திகதிய வர்த்தமானியில் வெளியிடப்பட்டன. அதன்படி, தேர்தல் பணிகளுக்காக ஒரு வாக்காளருக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 74 முதல் ரூபா 160 வரையான வரம்பில் அமைந்திருந்தது. வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகள் தொடர்பான வருமானம் மற்றும் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதை இலகுபடுத்துவதற்காக, அரசியல் கட்சிச் செயலாளர்கள் மற்றும் சுயேச்சைக் குழுத் தலைவர்களுக்கென ஒரு இணைய இணைப்பு (ருநடி டமைெ) தேர்தல் ஆணைக்குழுவினால் இதன்போது அறிமுகப்படுத்தப்பட்டது.

### 2.6.8. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள்

தேர்தல் நடைபெறவிருந்த 339 உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த அனைத்து வாக்காளர்களுக்கும் விநியோகிப்பதற்காக, உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் 2025.04.16 ஆம் திகதி அஞ்சலில் ஒப்படைக்கப்பட்டன. குறித்த அட்டைகளை விநியோகிப்பதற்கான விசேட தினங்களாக 2025.04.20 மற்றும் 2025.04.27 ஆகிய திகதிகள் பெயரிடப்பட்டதுடன், 2025.04.29 ஆம் திகதி இறுதி விநியோகம் நடைபெற்றது. அதன்படி, அனைத்து உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளும் 2025.04.29 ஆம் திகதியளவில் திட்டமிட்டபடி உரிய வீடுகளுக்குக் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது.

ஏதேனும் ஒரு வாக்காளருக்கு அன்றைய தினத்திலும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைக்காவிடின், தேர்தல்கள் மின்-சேவையின் (நு-ளநசஎiஉந) ஊடாகத் தனது வீட்டிற்குரிய உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையைப் தரவிறக்கம் (னுழறடெழயன) செய்துகொள்ளும் வசதியைத் தேர்தல் ஆணைக்குழு வாக்காளர்களுக்கு வழங்கியிருந்தது.

எவ்வாறாயினும், வாக்களிப்பதற்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை ஒரு கட்டாயத் தேவையல்ல எனவும், உரிய வாக்காளர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருக்கும் மற்றும் செல்லுபடியாகும் அடையாள அட்டையைக் கொண்டுள்ள எந்தவொரு வாக்காளரும் உரிய வாக்களிப்பு நிலையத்திற்குச் சென்று தனது அடையாளத்தை உறுதிப்படுத்தி வாக்களிக்க முடியும் எனவும் ஆணைக்குழு மேலும் வலியுறுத்தியிருந்தது.

### 2.6.9. தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகள்

#### 2.6.9.1. உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புகள்

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக 07 உள்நாட்டுக் கண்காணிப்பு அமைப்புகள் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டன:

- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL)
- தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV)
- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு (CaFFE)
- தேர்தல் கண்காணிப்புக்கான தன்னார்வ முயற்சி (VIEW)
- இலங்கையின் அன்னையரும் புதல்வியரும் அமைப்பு (MDL)
- தேசிய தேர்தல் கண்காணிப்பு மத்திய நிலையம் (NPOC)
- சனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனம் (IRES)

### 2.6.10. இறுதி முடிவுகளை வெளியிடுவது தொடர்பான படிவங்களைத் தயாரித்தல்

2025.05.06 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் வாக்கு எண்ணும் பணிகளின் பின்னர் முடிவுகள் பதிவு செய்யப்பட வேண்டிய படிவங்கள்; அதாவது வாக்களிப்பு நிலைய மட்டத்திலான முடிவுகள், அஞ்சல் மூல தேர்தல் முடிவுகள், வட்டார மட்டத்திலான முடிவுகள், முடிவு அறிவிப்பு மையங்களில் பயன்படுத்தப்படும் சுருக்கத் தாள்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றத்தின் ஒட்டுமொத்த முடிவுகளைக் காட்டும் படிவங்கள் தயாரிக்கப்பட்டு, அச்சிடப்பட்டு உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

### 2.6.11. மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு.

#### 2.6.11.1. மாற்றுத்திறனாளிகளின் வாக்குரிமையைப் பாதுகாப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்கள்.

தேர்தல் ஆணைக்குழுவின் பங்களிப்பு மூலோபாயத் திட்டம் 2022-2025 இன் படி, விழிப்புணர்வு மற்றும் உயிரோட்டமான ஈடுபாட்டின் கீழ், பிரஜைகள் மற்றும் வாக்காளர்கள் ஆகிய இரு தரப்பினரும் வாக்களிப்பதன் சக்தி மற்றும் ஜனநாயக உரிமை குறித்துப் போதுமான அளவு விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடைவதற்காகப் பின்வரும் திட்டங்களை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது:

**(I) மாற்றுத்திறனாளிகள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்காக விழிப்புணர்வுத் திட்டங்களை நடத்தி, அவர்களைத் தேர்தல் செயல்பாட்டில் தீவிரமாக ஈடுபடுத்தல்.**

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் இணையவழி (ழுடெைநெ) முறைகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

உள்ளூராட்சித் தேர்தல் செயல்முறை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

வாக்குச்சீட்டை அடையாளம் காண்பதற்கான தொடுகைச் சட்டத்தைப் (வுயஉவடைந டீயடடழவ புரனைந) பயன்படுத்துவது குறித்து விழிப்புணர்வு.்.பயிற்சி அளித்தல்.

**(II) 2025 ஆம் ஆண்டில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் விளிம்புநிலை பிரிவினர் தேர்தல் செயல்பாட்டில் தீவிரமாகப் பங்கேற்பதைத் தடுக்கும் அனைத்துப் பிரதான தடைகளையும் நீக்குதல்.**

உள்ளூராட்சித் தேர்தலின் போது 441 வாக்களிப்பு நிலையங்களுக்கு அணுகல் வசதிகளை வழங்கல்.

உள்ளூராட்சித் தேர்தலின் போது, பார்வை குறைபாடுள்ள வாக்காளர்களுக்காக வாக்குச்சீட்டு வழிகாட்டும் தொடுகைச் சட்டத்தையும், செவிப்புலன் குறைபாடுள்ள வாக்காளர்களுக்காகச் சைகை மொழியிலான வாக்குச்சாவடி அறிவித்தல்களையும் காட்சிப்படுத்தல்.

வாக்களிப்பஜ நிலையங்களுக்குள் தனியார் போக்குவரத்து வசதிகளை அனுமதித்தல் மற்றும் நுழைவாயிலிலிருந்து வாக்குச்சாவடிக்கு 100 மீட்டருக்கும் மேற்பட்ட தூரம் கொண்ட இடங்களில் முச்சக்கர வண்டிகள் மூலம் போக்குவரத்து வசதிகளை வழங்கல்.

### 2.6.11.2. உடல் வலிமையிழப்புக்கு உட்பட்ட நபர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பித்தல் மற்றும் இயலாமையுடைய வாக்காளர் ஒருவர் வாக்குச்சீட்டைக் அடையாளமிடுவதற்கு உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்ல அனுமதித்தல்.

2002 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் (திருத்தச்) சட்டத்தின் 82உ (4)(ஈ) பிரிவின்படி, மாற்றுத்திறனாளி வாக்காளர்களைத் தேர்தல் செயல்பாட்டில் உள்வாங்குவதை உறுதி செய்வதற்காக, உடல் வலிமையிழப்புக்கு உட்பட்ட நபர்கள் விசேட போக்குவரத்து வசதிகளுக்காக விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்படி, மருத்துவச் சான்றிதழ் மூலம் விண்ணபத்தை உறுதிப்படுத்துவதன் மூலம் அல்லது தேர்தல் ஆணைக்குழுவினால் மாற்றுத்திறனாளிகளுக்காக வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டையைப் பயன்படுத்தி விசேட போக்குவரத்து வசதிகளை விண்ணப்பிக்க முடிந்தது.

மேலும், 2011 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தப்பட்ட முதன்மைச் சட்டத்தின் 54(2) பிரிவின்படி, ஏதேனும் உடல் இயலாமையுடைய வாக்காளர் ஒருவர் வாக்களிப்பு நிலையத்தில் தனது வாக்குச்சீட்டை அடையாளமிடுவதற்காக உதவியாளர் ஒருவரை உடனழைத்துச் செல்வதற்காவுன்ன சட்டப்பூர்வ ஏற்பாடுகள் இந்தத் தேர்தலுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 2.6.12. வாக்களிக்கும் முறை குறித்து அனைத்து வாக்காளர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

இந்தத் தேர்தலின் போது வாக்களிக்கும் முறை குறித்து மாதிரி வாக்குச்சீட்டு மூலம் வாக்களிக்கத் தகுதியுள்ள அனைத்து வாக்காளர்களுக்கும் மற்றும் அஞ்சல் மூல வாக்காளர்களுக்கும் மும்மொழிகளிலும் போதுமான விழிப்புணர்வு வழங்கப்பட்டது.

### 2.6.13. ஊழியர்கள் தமது வாக்குகளை அளிப்பதற்காக விடுமுறை வழங்கல்.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 84அ(1) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி, ஏதேனும் ஒரு வாக்காளர் கோரிக்கை விடுத்தால், அந்த வாக்காளர் வாக்களிப்பதற்காகத் தலா இரண்டு மணித்தியாலங்களுக்குக் குறையாத தொடர்ச்சியான காலப்பகுதியை தொழில்வழங்குநர் வழங்க வேண்டும் என்பதும், இதற்காக வழங்கப்பட வேண்டிய விடுமுறைக்காலம் பணிபுரியும் இடத்திற்கும் வாக்குச்சாவடிக்கும் இடையிலான தூரத்திற்கு ஏற்ப தொழில்வழங்குநரால் தீர்மானிக்கப்பட வேண்டும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் தொழில்வழங்குநர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

### 2.6.14. வாக்களிக்க வரும்போது வாக்காளர்கள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த வேண்டிய தேவைப்பாடு.

இந்தத் தேர்தலுக்காக வாக்களிப்பதற்கு வாக்காளர்கள் பின்வரும் 10 அடையாள ஆவணங்களில் ஒன்றைக் கட்டாயமாக வாக்களிப்பு நிலைய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்று அனைத்து வாக்காளர்களுக்கும் அறிவிக்கப்பட்டது:

- ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பழைய அல்லது புதிய அடையாள அட்டை.

- செல்லுபடியாகும் வெளிநாட்டு கடவுச்சீட்டு

- செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

- ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அரச சேவை ஓய்வூதிய அடையாள அட்டை (பழைய அல்லது புதிய இ-அடையாள அட்டை).

- பிரதேச செயலகங்களினால் வழங்கப்பட்ட முதியோர் அடையாள அட்டை.

- ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பழைய அல்லது புதிய மதகுருமார் அடையாள அட்டை.

- தேசிய அடையாள அட்டை தகவல்களை உறுதிப்படுத்தும் கடிதம் (ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்டது).
- தேர்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை.

- தேர்தல் ஆணைக்குழுவினால் முழுமையான மாற்றுத்திறனாளிகளுக்காக வழங்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை.

- மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினால் வழங்கப்படும் புகைப்படத்துடன் கூடிய தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம்.

### 2.6.15. தேர்தல் தொடர்பான பிரசார நடவடிக்கைகள் தடைசெய்யப்பட்ட அமைதிக் காலம்.

2025.05.03 ஆம் திகதி நள்ளிரவுக்குப் பிறகு, உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் அனைத்துக் கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் தேர்தல் தொடர்பான அனைத்துப் பிரசார நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும் என்று தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவிக்கப்பட்டது.

மேலும், 2025.05.05 மற்றும் 06 ஆகிய திகதிகளில் செய்தித்தாள் தலைப்புகளை முன்வைக்கும் போதோ அல்லது வேறு விதமாகவோ ஏதேனும் அரசியல் கட்சி, குழு அல்லது வேட்பாளரை ஊக்குவிக்கும் அல்லது பாதிக்கும் வகையிலான செய்திகள், கருத்துகள் அல்லது ஆலோசனைகளை முன்வைப்பதிலிருந்து அனைத்து மின்னணு மற்றும் அச்சு ஊடகத் தலைவர்களும் சமூக ஊடக நிர்வாகிகளும் முற்றிலும் விலகியிருக்க வேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழு மேலதிகமாக அறிவித்தது.

### 2.6.16. வாக்கு எண்ணுதல், முடிவுகளை அறிவித்தல் மற்றும் பதவிகளுக்காக நியமித்தல்.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் 59அ பிரிவின்படி, தேர்தல் ஆணைக்குழுவின் விதிகளுக்கு உட்பட்டு, மாவட்டத் தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் வாக்கு எண்ணுவதற்காகப் பிரதான வாக்கு எண்ணும் அதிகாரிகள், வாக்கு எண்ணும் அதிகாரிகள் மற்றும் வாக்கு எண்ணும் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இந்தத் தேர்தலின் போது அந்தந்த மாவட்டங்களுக்குச் சொந்தமான சிரேஷ்ட வாக்குச்சாவடி அதிகாரிகளிடமிருந்து வாக்குப்பெட்டிகள், வாக்குச்சீட்டுகள் உள்ளிட்ட பொருட்களை விநியோகிப்பதற்கும் திரும்பப் பெறுவதற்கும் நாடு முழுவதும் 32 விநியோக மற்றும் பொறுப்பேற்பு நிலையங்கள் இருந்தன. நிறுவப்பட்ட வாக்கு எண்ணும் மையங்களின் எண்ணிக்கை 5,783 ஆகும்.

வாக்கெடுப்பு முடிந்த பிறகு, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் (ஙுயசன) உரிய வாக்குச்சாவடிகளின் முடிவுகள் அந்தந்த வாக்குச்சாவடிகளிலேயே அல்லது அடையாளம் காணப்பட்ட வேறு வாக்கு எண்ணும் மையங்களில் எண்ணப்பட்டு, அங்கு வட்டார முடிவுகள் வெளியிடப்பட்டன. ஒவ்வொரு உள்ளூராட்சி அதிகார சபைக்கும் தனித்தனியாக அமைக்கப்பட்ட முடிவு தயாரிப்பு நிலையங்களில் அந்தந்த உள்ளூராட்சி சபையின் முடிவுகள் தயாரிக்கப்பட்டன.அதன்படி, உள்ளூராட்சித் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 262) 65 ஆம் பிரிவின்படி, வட்டாரத்தில் அதிக வாக்குகளைப் பெற்ற அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழுவின் வேட்பாளர், (பல்-அங்கத்தவர் வட்டாரங்கள் உட்பட) 65(1) பிரிவின்படி பிரதான வாக்கு எண்ணும் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டார்கள்.

ஏதேனும் உள்ளூராட்சி சபையில் 25% பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதற்காக, அந்தச் சபைக்காக ஒவ்வொரு கட்சியும் அல்லது குழுவும் வழங்க வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்ட பிறகு, சட்டத்தின் 66(2) பிரிவின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டனர்.

அங்கு ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேச்சைக் குழு மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் அரைவாசிக்கும் மேலாகப் பெற்றிருந்தால், அந்தச் சபையின் முதல்வர்/தலைவர் மற்றும் பிரதி முதல்வர்.்.உப தலைவர் ஆகியோர் 66ஆ(1) பிரிவின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்டனர். அவ்வாறு அரைவாசிக்கும் மேலான உறுப்பினர்களைப் பெறாத சந்தர்ப்பங்களில், 66(இ)1 மற்றும் 66(இ)2 பிரிவுகளின் கீழ் அந்த மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரால் முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் பதவிகள் வர்த்தமானியில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 2.6.17. உள்ளூராட்சி அதிகார சபைகளில் உறுப்பினர் பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புதல்.

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 262) படி, மரணம், கேட்டுவிலகல்.்.ராஜினாமா, குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய அல்லது உரிய எண்ணிக்கைக்குரிய அனுமதி பெறாமல் சபை அமர்வுகளில் பங்கேற்காமை, அரசியலமைப்பின் 4 மற்றும் 7 ஆவது அட்டவணைகளின்படி உறுப்பினர் பதவிக்கான சத்தியப்பிரமாணம் செய்யாமை, மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படுதல், பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்படுதல், கட்சி உறுப்புரிமை ரத்தாகுதல், பதவியிலிருந்து நீக்கப்படுதல் மற்றும் அதே சபையில் வேறொரு பதவிக்குத் தெரிவு செய்யப்படுதல் போன்ற காரணங்களால் உள்ளூராட்சி அதிகார சபைகளில் பதவி வெற்றிடங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. அந்தப் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காகப் பின்பற்ற வேண்டிய சட்டபூர்வமான நடைமுறைகளை தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளூராட்சித் தேர்தல் பிரிவு, மாவட்ட அலுவலகங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துகின்றது.

இது தொடர்பாக, உள்ளூராட்சித் தேர்தல் பிரிவினால் விரிவான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களைக் கொண்ட 4 சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி, தற்போதைய உள்ளூராட்சி அதிகார சபைகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் 58 பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு முடிவடைந்துள்ளன. அந்தந்த உள்ளூராட்சி சபைகளின் தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் வெளியிடப்பட்ட இது தொடர்பான அறிவித்தல்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மேலும் 22 உறுப்பினர் பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன.

2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள உறுப்பினர் பதவி வெற்றிடங்களின் சுருக்கம் அட்டவணை 24 இல் காட்டப்பட்டுள்ளது.

### 2.7. மாகாண சபைத் தேர்தல்.

தற்போது அனைத்து மாகாண சபைகளினதும் பதவிக் காலம் முடிவடைந்துள்ளதோடு, இறுதியாக நடாத்தப்பட்ட ஊவா மாகாண சபையின் பதவிக் காலம் 2019ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதத்துடன் நிறைவடைந்துள்ளது. 1988ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கான 2017ஆம் ஆண்டின் 17ஆம் இலக்க திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போதிலும், மாகாண சபைத் தொகுதி முறையின் கீழ் தேர்தலை நடாத்துவதற்காக மாகாண சபை எல்லைகளை நிர்ணயம் செய்து தயாரிக்கப்பட்ட எல்லை நிர்ணய அறிக்கை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமை காரணமாக, மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதற்குத் தேவையான தெளிவான மற்றும் நடைமுறைப்படுத்தக்கூடிய சட்டக் கட்டமைப்பொன்று தாபிக்கப்படவில்லை. இது தொடர்பாக கடந்த கால அரசாங்கங்களும் மற்றும் பாராளுமன்றமும் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்ட போதிலும், பின்பற்ற வேண்டிய தேர்தலகள் முறைமை தொடர்பான உடன்பாடொன்றுக்கு வருவதற்கு முடியாமல் போயுள்ளது. ஆதலால், தேவையான சட்ட விதிகளையும் மற்றும் இறுதி தேர்தல் கட்டமைப்பையும் பாராளுமன்றம் நிறைவேற்றும் வரை, மாகாண சபைத் தேர்தல்களை நடாத்துவதற்கான சாத்தியப்பாடு தமக்கு இல்லையெனத் தேர்தல் ஆணைக்குழு கட்சி செயலாளர்களின் கூட்டங்களிலும் மற்றும் ஊடகங்கள் வாயிலாகவும் தெரிவித்துள்ளது.

பதவிக் காலம் நிறைவடைந்துள்ள அனைத்து மாகாண சபைகளும் அந்தந்த ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றன.

### 2.8. விசேட திட்டங்கள்.

#### 2.8.1. வருடாந்த ஆய்வு அமர்வு - 2025.

தேர்தல் ஆணைக்குழுவானது நாட்டின் தேர்தல் செயல்பாட்டின் தொடர்ச்சி, சுதந்திரமான மற்றும் நியாயமான தன்மையை உறுதிப்படுத்தும் முதன்மையான அரச நிறுவனமாகும். வெளிப்படைத்தன்மை, பக்கச்சார்பின்மை மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் ஈடு இணையற்ற அர்ப்பணிப்புடன், இந்த ஆணைக்குழு ஜனநாயகச் செயல்பாட்டில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் குடிமக்கள் பங்கேற்பதற்கான உரிமைகளைப் பாதுகாப்பதற்குப் பொருத்தமான களத்தைத் தயாரித்துள்ளது.

அதன்படி, தேர்தல் ஆணைக்குழுவின் வருடாந்தச் செயல்திட்டத்தின் பங்களிப்பு மூலோபாய இலக்கு இலக்கம் 1.4.4.3 இன் படி, பொதுமக்களிடையே தேர்தல் பணிகள் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கில், தேர்தல் மற்றும் வாக்கெடுப்பு நடைமுறைகள் குறித்து அறிஞர்களை ஊக்குவிக்கும் ஒரு முயற்சியாக உள்ளூராட்சித் தேர்தல் பிரிவினால் வருடாந்த ஆய்வு அமர்வுகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

இந்த ஆய்வு அமர்வு தேர்தல் முகாமைத்துத் துறையில் சட்ட ரீதியான ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்ல உதவுவதுடன், ஆய்வாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஒன்றிணைந்து புரிந்துணர்வைப் பகிர்ந்து கொள்ளவும், புதிய சிந்தனைகளை உருவாக்கவும், தேர்தல் செயல்பாட்டில் புதுமையான வழிகளை ஆராயவும் ஒரு தளத்தை உருவாக்கியுள்ளது.

அதன்படி, 2024 ஆம் ஆண்டுக்கான ஆய்வு அமர்வு இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், அந்த ஆண்டில் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்ற காரணத்தினால் அதன் பணிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

எனவே, அந்தச் சந்தர்ப்பத்தில் கிடைக்கப்பெற்ற 34 ஆய்வு அறிக்கைகளையும் உள்ளடக்கி, மூன்றாவது முறையாக 2025 ஆம் ஆண்டிற்கான ஆய்வு அமர்வை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டது. உரிய ஆய்வு அறிக்கைகளைப் பெறுவதற்காக மும்மொழிகளிலும் பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டதுடன், தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ

இணையத்தளம் மற்றும் உத்தியோகபூர்வ முகநூல் பக்கம் ஊடாகத் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பரந்த விளம்பரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் ஆய்வு அறிக்கைகள் தொடர்பாகப் பொதுமக்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்திடமிருந்து பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. ஜனநாயகச் செயல்பாடுகளை வலுப்படுத்துதல்: இலங்கையில் வாக்காளர் பங்களிப்பு மற்றும் தேர்தல் நேர்மையை மேம்படுத்துவதற்கான உத்திகள்" என்ற பிரதான கருப்பொருளின் கீழ், பின்வரும் 10 உப-தலைப்புகளில் பல்வேறு நாடுகளின் தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள், அரச நிறுவனங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், பட்டதாரிகள் மற்றும் பல்வேறு துறைசார் நிபுணர்களினால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் 256 ஆய்வுச் சுருக்க அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:

1. வாக்காளர் கல்வி, விழிப்புணர்வு மற்றும் பங்களிப்பு.
2. தேர்தல் தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்.
3. தேர்தல் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தல்.
4. உள்ளிணைப்பு மற்றும் அணுகல் வசதி
5. தேர்தல்கள் மீதான நம்பிக்கையை வளர்த்தல்.
6. சிவில் சமூகம் மற்றும் ஊடகங்களின் பங்கு.
7. சட்ட மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்புகள்.
8. தேர்தல்களில் ஆண் பெண் பாலின சமத்துவத்தை ஊக்குவித்தல்.
9. சனநாயகச் செயல்பாடுகளில் இளைஞர்களை ஈடுபடுத்துதல்
10. தேர்தல் கட்டமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளுக்காகக் குரல் கொடுத்தல்.

ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்யும் பணிகள், தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக் கொண்ட ஒரு அறிஞர்கள் குழுவினால் மேற்கொள்ளப்பட்டதுடன், அனைத்து ஆய்வுக் கட்டுரைகளில் இருந்து 157 சிறந்த ஆய்வு அறிக்கைகள் தெரிவு செய்யப்பட்டன.

**ஆய்வுக் கட்டுரைகளை மதிப்பீடு செய்த அறிஞர் குழு:**

கலாநிதி திரு.அஜந்த அத்துகோரள அவர்கள், பணிப்பாளர், கணினி கற்கைகள் நிறுவனம், கொழும்பு பல்கலைக்கழகம்.

கலாநிதி ரமேஷ் ராமசாமி அவர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

கலாநிதி அத்துல விதானவசம் அவர்கள், அரச அறிவியல் பேராசிரியர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

தேர்தல் மற்றும் வாக்கெடுப்பு நடைமுறைகள் குறித்து அறிஞர்களை ஊக்குவிக்கும் நோக்கில், அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்கள், பல்கலைக்கழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் கலாநிதிகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆய்வாளர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பிரதானிகள், தெரிவு செய்யப்பட்ட ஆய்வு அறிக்கைகளைச் சமர்ப்பித்த ஆய்வாளர்கள் உட்பட சுமார் 300 பேர் பங்கேற்ற ஆய்வு அமர்வு 2025 நவம்பர் மாதம் 05 ஆம் திகதி கொழும்பு மொனாச் இம்பீரியல் ஹோட்டல் வளாகத்தில் நடைபெற்றது.

அதன்படி, அன்றைய தினம் சிறந்த ஆய்வு அறிக்கைகளை உள்ளடக்கிய நூல் ஒன்று வெளியிடப்பட்டதுடன், பயனர்களின் வசதிக்காக தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஊடாகப் பார்வையிடக்கூடிய வகையில் அதன் மின்-பதிப்பும் (e-Version) வெளியிடப்பட்டது. மேலும், ஆய்வுச் சுருக்கங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 7 ஆய்வுகள் ஆய்வாளர்களினால் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன், தெரிவு செய்யப்பட்ட ஆய்வு அறிக்கைகளில் ரஷ்யா மற்றும் மாலைதீவு தேர்தல் ஆணைக்குழுக்களின் உறுப்பினர்களின் ஆய்வு அறிக்கைகள் அவர்களினால் இணையவழியில் (Online) சமர்ப்பிக்கப்பட்டன. இது **2025** ஆய்வு அமர்வில் சர்வதேசப் பங்கேற்பைப் பிரதிபலிக்கும் ஒரு சிறப்பான நிகழ்வாக அமைந்தது.

**2025** ஆய்வு அமர்வின் சமர்ப்பிப்புகள் குறித்த தகவல்கள் அட்டவணை 25 இல் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

மேலும், அன்றைய தினத்தின் சிறப்பு விரிவுரையைப் பேராதனைப் பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடங்களின் பீடாதிபதியாகப் பணியாற்றிய கலாநிதி நெலும் தீபிகா உடகம அவர்கள் நிகழ்த்தினார்.

புதிய சிந்தனைகளை உருவாக்குவதற்கும் தேர்தல் செயல்முறை குறித்த புதுமையான வழிகளை ஆராய்வதற்குமான ஒரு தளமாக அமைந்த இந்தத் திட்டத்தின் மற்றொரு கட்டமாக, இரண்டு வித்துவான் குழுக்கள் தேர்தல் செயல்பாட்டின் புதிய பரிமாணங்கள் குறித்து விரிவான கலந்துரையாடல்களை நடத்தின. அவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் புதிய கருத்துக்களை முன்வைப்பதற்கும் பார்வையாளர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டது. இதன் மூலம் தேர்தல் செயல்முறைக்கான பல புதிய கருத்துக்களும் பரிமாணங்களும் உருவாயின.

**கலந்துரையாடல் குழு உறுப்பினர்களின் விபரங்கள் (Fireside Chat Panelists details):**

இந்தக் கலந்துரையாடல் குழுவை தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் லக்ஷ்மன் திஸாநாயக்க அவர்கள் வழிநடத்தியதுடன், குழு உறுப்பினர்களின் விபரங்கள் அட்டவணை 26 இல் உட்சேர்க்கப்பட்டுள்ளன.

"செயற்பாட்டுத் திட்டமிடல் மற்றும் இடர் முகாமைத்துவத்தின் மூலம் தேர்தல் தயார்நிலையை வலுப்படுத்துதல்" (Operational Planning and Risk Management in Strengthening Electoral Readiness) என்ற கருப்பொருளின் கீழ், தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றத்தின் (IFES) திட்ட அதிகாரி திருமதி ரமோனா ஸ்டீவன் அவர்களின் வழிகாட்டலில் பின்வரும் அறிஞர்களின் பங்கேற்புடன் இரண்டாவது அறிஞர்கள் குழு கலந்துரையாடல் நடைபெற்றது:

1. திருமதி சில்ஜா பாசிலின்னா, சிரேஷ்ட உள்நாட்டுப் பணிப்பாளர், தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றம் (IFES).

2. திரு. லக்ஷித பண்டார, உதவித் தேர்தலகள் ஆணையாளர், மாவட்டத் தேர்தல் அலுவலகம், புத்தளம்.

3. திரு. புலஸ்தி பத்திரண, உதவித் தேர்தல் ஆணையாளர், மாவட்டத் தேர்தல் அலுவலகம், மாத்தறை.

இதன்படி, தேர்தல் செயல்முறை குறித்து முழுச் சமூகத்தின் கவனத்தையும் ஈர்க்கும் வகையில், 2025 ஆய்வு அமர்வில் பங்கேற்ற அறிஞர்களுக்கு மேலதிகமாக, இது குறித்து ஆர்வமுள்ள அனைத்துத் தரப்பினரின் பயன்பாட்டிற்காக அன்றைய நிகழ்ச்சித் திட்டம் சமூக ஊடகங்கள் வாயிலாகவும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது.

தேர்தல் பணிகள் குறித்த ஆர்வத்தை ஏற்படுத்துவதற்காக, தரவுகள் மற்றும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டு அறிவியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 157 சிறந்த ஆய்வு அறிக்கைகளின் உரிமையாளர்களான அனைத்து ஆய்வாளர்களுக்கும் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

### 2.8.2. தோட்டத் துறை மற்றும் விளிம்புநிலை மக்களுக்கான விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

2025 ஆம் ஆண்டிற்கான தேர்தல் ஆணைக்குழுவின் செயல்திட்டத்தில் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளின்படி, ஓரங்கட்டப்பட்ட மற்றும் விசேட மக்கள் பிரிவினரைத் தேர்தல் மற்றும் வாக்கெடுப்புச் செயல்பாடுகளில் தீவிரமாகப் பங்கேற்கச் செய்வதற்கும், அவர்களை வாக்காளர் பெயர்ப்பட்டியலில் பதிவு செய்வதற்கும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் அவர்களின் விழிப்புணர்வு நிலை குறித்து முன்கூட்டியே கண்டறியும் பணி, 2022-2025 %லோபாயத் திட்டத்தின் "விழிப்புணர்வு மற்றும் உயிரோட்டமான ஈடுபாடு" (Awareness and Animation) என குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது முன்னுரிமைப் பகுதியின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதன்படி, "பிரஜைகள் மற்றும் வாக்காளர்கள் ஆகிய இரு தரப்பினரும் வாக்களிப்பதன் சக்தி மற்றும் ஜனநாயக உரிமைகள் குறித்துப் போதுமான அளவு விழிப்புணர்வுடன் இருத்தல் வேண்டும்" என்ற நோக்கத்தை முன்னிறுத்தி, 2025 ஆம் ஆண்டின் முதல் நான்கு காலாண்டுகளுக்குள் நடத்தப்பட்ட திட்டங்கள் குறித்த தகவல்கள் அட்டவணை 27 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.8.3. மாணவர் பாராளுமன்றம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்துதல்.

தேர்தல் ஆணைக்குழுவின் 2022-2025 பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட நடவடிக்கை இலக்கங்கள் 1.2.1.3 மற்றும் 1.2.1.4 இன் படி, மக்கள் இறைமையின் அத்தியாயம், ஜனநாயகம், சர்வஜன வாக்குரிமை போன்ற கோட்பாடுகள் மற்றும் அரசியல் அறிவை மேம்படுத்துதல், நிலவுகின்ற தேர்தல் மற்றும் வாக்கெடுப்பு முறைகள் குறித்து முதன்மையான இலக்குக் குழுவினராகப் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர் சமூகத்தினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும் ஒரு ஜனநாயகத் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான அடிப்படையாக, மாணவர் பாராளுமன்றத் திட்டங்களை ஏற்பாடு செய்வதற்கு ஆதரவளித்தல், பாடசாலைகளுக்குள் தேர்தல் அறிவு சார்ந்த சங்கங்களை (நுடநஉவழசயட டுவைநசயஉல ஊடரடிள) நிறுவுதல் மற்றும் பாடசாலை மட்டத்தில் பேச்சு, கட்டுரை, சித்திரப் போட்டிகள் போன்றவற்றை நடத்துதல் என்பன எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்காக மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள், வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளை ஒருங்கிணைப்பதன் மூலம் இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அதன்படி, 2025 ஆம் ஆண்டில் மாணவர் பாராளுமன்றம் தொடர்பாகப் பின்வருமாறு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

| 2025 ஆம் ஆண்டுக்கான மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித் திட்ட விபரங்கள் (மாணவ,மாணவிகள்) | | |
|---|---|---|
| மாவட்டம் | நிகழ்ச்சித்திட்டத் திகதி | நடைபெற்ற இடம் |
| கொழும்பு - நகரம் | 2025-02-11 | வேலுவன கல்லூரி, கொழும்பு 09 |
| | 2025-05-28 | ஆனந்தா கல்லூரி |
| கொழும்பு - மாவட்டம் | 2025-10-22 | ஜய மாதிரி ஆண்கள் வித்தியாலயம், மாலபே |
| களுத்துறை | 2025-07-07 | ஞானேஸ்வர மகா வித்தியாலயம தர்கா நகர் |
| | 2025-07-14 | பரகஸ்தோட்டை வித்யாலோக்க மகா வித்தியாலயம் |
| நுவரெலியா | 2025-09-29 | 29ராவணாகொட மகா வித்தியாலயம |
| ஹம்பாந்தோட்டை | 2025-10-17 | மிரிஜ்ஜவில மகா வித்தியாலயம், ஹம்பாந்தோட்டை |
| | 2025-10-27 | உடமலல மகா வித்தியாலயம், ஹம்பாந்தோட்டை |
| மட்டக்களப்பு | 2025-08-20 | தாலங்குடா தொழிநுட்பக் கல்லூரி |
| அனுராதபுரம் | 2025-08-04 | ஸாஹிரா கல்லூரி, அனுராதபுரம் |
| பதுளை | 2025-05-30 | ப∴ பாரதி மகா வித்தியாலயம் |

| 2025 ஆம் ஆண்டுக்கான மாணவர் பாராளுமன்ற நிகழ்ச்சித் திட்ட விபரங்கள் (ஆசிரியர்கள்) | | |
|---|---|---|
| **மாவட்டம்** | **நிகழ்ச்சித்திட்டத் திகதி** | **நடைபெற்ற இடம்** |
| மாத்தளை | 2025-12-16 | மாத்தளை மாவட்ட செயலகம் |
| நுவரெலியா | 2025-12-22 | ஹங்குராங்கெத்த வலயக் கல்வி அலுவலகம் |
| காலி | 2025-12-08 | மாவட்ட தேர்தல் அலுவலகம் - இணைய வழியாக (Online) |
| அம்பாறை | 2025-12-17 | மாவட்ட செயலக கேட்போர் கூடம் |
| பொலன்னறுவை | 2025-12-10 | திம்புலாகல வலயக் கல்வி அலுவலகம் |
| பதுளை | 2025-12-09 | மகியங்கனை தேசிய பாடசாலை * |
| | 2025-12-11 | பண்டாரவளை தர்மபால வித்தியாலயம் * |
| * மோசமான வானிலை காரணமாக இவை எதிர்வரும் நாட்களில் நடத்தப்படும். இதற்கான செலவுகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. | | |

### 2.8.4. பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்

2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் சமூகத் தலைவர்கள் / சிவில் அமைப்புகள் மற்றும் கிராமிய மக்கள் அமைப்புகளுக்காக, "வாக்குரிமை என்பது பாராதீணப்படுத்த முடியாத ஓர் உரிமையாகும்" எனும் தொனிப்பொருளின் கீழ் பயிற்றுவிப்பாளர் குழுவை உருவாக்குதல், அவர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் தலைவர்களைத் தெளிவுபடுத்தும் விழிப்புணர்வுத் திட்டங்கள் பல மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் முன்னெடுக்கப்பட்டன. இதில் மொத்தமாக சுமார் 6480 பேர் கலந்துகொண்டனர். இது தொடர்பான விபரங்கள் அட்டவணை 28 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.8.5. அரசியலில் பெண்களை வலுவூட்டல்

தேர்தல் செயல்முறை குறித்து பெண்களை வலுவூட்டுவது தொடர்பாக, அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் 3936 பேரின் பங்கேற்புடன் 51 பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன. இது தொடர்பான விபரங்கள் அட்டவணை 29 இல் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2.9. வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டம்

தேர்தல் ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவினாலும் நடைமுறைப்படுத்தப்படும் செயற்பாடுகளை உள்ளடக்கிய வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்தல், வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தின் காலாண்டு முன்னேற்றத்தை மீளாய்வு செய்து முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அந்த அறிக்கைகளை நிதியமைச்சுக்கு சமர்ப்பித்தல் ஆகிய பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இவ்வருடத்திலும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தி, செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளின் முன்னேற்றத்தை ஆராய்வதற்கும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 2.10. 2022 - 2025 பங்களிப்பு மூலோபாயத் திட்டம்

தேர்தல் ஆணைக்குழுவினால் 2022-2025 காலப்பகுதிக்காகத் தயாரிக்கப்பட்ட பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள், வருடாந்தச் செயற்பாட்டுத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

அத்துடன், தேர்தல்கள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகள் குறித்து அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. இக்கலந்துரையாடல்கள் தேர்தல் ஆணைக்குழுவிலும், அரசாங்க தகவல் திணைக்களத்திலும் இடம்பெற்றன.

அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், முதன்மை ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய வட்ஸ்அப் குழுவொன்றின் ஊடாக அனைத்துத் தகவல்களையும் வழங்கும் முறைமையொன்றும் நிறுவப்பட்டுச் செயற்படுத்தப்பட்டது.

### 2.11. ஊடக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான நியதிச்சட்ட மற்றும் அத்தியாவசியத் தகவல்கள் குறித்துப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக மும்மொழிகளிலும் 03 பகிரங்க அறிவித்தல்கள் தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டன.

மேலும், மேற்கூறிய பத்திரிகை விளம்பரங்களுக்கு மேலதிகமாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய 103 ஊடக அறிக்கைகளும்

வெளியிடப்பட்டுள்ளன. இந்த ஊடக அறிக்கைகளும் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டதுடன், அனைத்து இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடக நிறுவனங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. அந்த நிறுவனங்கள் ஊடாக அறிக்கையில் உள்ள விடயங்கள் குறித்துப் பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதேபோல், இந்த ஊடக அறிக்கைகள் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலும் (www.elections.gov.lk) வெளியிடப்பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் (2025.05.06) தொடர்பாக வெளியிடப்பட்ட ஊடக அறிக்கைகள் குறித்த சுருக்கம் அட்டவணை 30 இல் தரப்பட்டுள்ளது.

அத்துடன், தேர்தல் நடவடிக்கைகள் குறித்து அனைத்து ஊடகப் பிரதானிகள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதுடன், இக்கலந்துரையாடல்கள் தேர்தல் ஆணைக்குழுவிலும் அரசாங்கத் தகவல் திணைக்களத்திலும் இடம்பெற்றன.

அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், பிரதம ஆசிரியர்கள், செய்தி ஆசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை உள்ளடக்கிய வாட்ஸ்அப் (WhatsApp) குழுவொன்றின் ஊடாகத் தேவையான அனைத்துத் தகவல்களையும் வழங்கும் முறைமையொன்றும் தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

### 2.12. ஆவணக்காப்பகம்

தேர்தல் ஆணைக்குழுவின் ஆவணக்காப்பகப் பணிகளை மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அங்குள்ள ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும், தேவைப்படும் போது எந்தவொரு தரப்பினரும் இலகுவாகப் பார்வையிடும் வகையில் அவற்றை முறையாகக் களஞ்சியப்படுத்துவதற்குமான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

### 2.13. அறிவு முகாமைத்துவப் பிரிவு மற்றும் அருங்காட்சியகம்

தேர்தல் ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் கடமைகள் குறித்த தகவல்களைப் பெறுவதற்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இத்துறையில் ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இவர்களுள் பிரதானமானவர்களாவர். எனவே, இவ்வாறான தகவல் தேடுபவர்களின் பணிகளை மிகவும் வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் முன்னெடுப்பதற்காக தேர்தல் ஆணைக்குழுவினால் அறிவு முகாமைத்துவப் பிரிவொன்று நிறுவப்பட்டது. இதற்காக நிலவும் தேர்தல் சட்டங்கள், விதிகள், சட்டமூலங்கள், அறிக்கைகள் மற்றும் ஆவணங்களைக் களஞ்சியப்படுத்துவதற்கும் அவற்றை இலகுவாகப் பயன்படுத்துவதற்கும் முறையான பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, தேர்தல் செயல்முறை தொடர்பான அனைத்துத் தகவல்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. வருங்காலத்தில் இப்பணிகளை மேலும் இலகுவாக்கும் பொருட்டு, இங்கு வருகை தரும் பயனாளர்களுக்கான காத்திருப்பு இடங்கள், கணினிகள், மல்டிமீடியா வசதிகள் மற்றும் ஈ-தகவல் வசதிகளை வழங்குவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

### 2.14. ஊடகப் பிரிவைப் பேணி வருதல்

ஆணைக்குழுவின் விசேட நிகழ்வுகளைப் புகைப்படம் எடுத்தல், காணொளிப்பதிவு செய்தல், காணொளித் தொகுப்பு (ஏனைநழ நுனவைைபெ), வரைகலை வடிவமைப்பு (புசயிாைஉ னுநளபைெ) மற்றும் அவற்றை ஆவணப்படுத்துதல் போன்ற பணிகள் ஊடகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் ஆணைக்குழுவின் வெளியீடுகளைத் தொகுத்தல் மற்றும் அவற்றின் கணினிப் பக்க வடிவமைப்புகளையும் இப்பிரிவு மேற்கொள்கின்றது.

## 2.15. சமூக ஊடகத் தளங்களைப் பராமரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ சமூக ஊடகத் தளங்கள் (Facebook> YouTube> TikTok, Instagram, WhatsApp) அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு, பொதுமக்களைக் கவரும் வகையில் மிகவும் கவர்ச்சிகரமான முறையில் பராமரிக்கப்படுகின்றன. உத்தியோகபூர்வ சமூக ஊடகத் தளங்கள் ஊடாகப் பங்குதாரர்களைத் தெளிவுபடுத்துவதற்காக ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவித்தல்கள் மற்றும் புள்ளிவிபரங்களைத் தயாரித்தல், வடிவமைத்தல் மற்றும் பதிவேற்றுதல் போன்ற பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இதன் மூலம் பெருமளவிலான பயனாளர்களைச் சென்றடைய முடிந்தது.

இச்சமூக ஊடகத் தளங்களுள், YouTube தளம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்களின் நேரம் விரிவடைந்துள்ளதுடன், அது வருமானம் ஈட்டக்கூடிய ஒரு தளமாக (Monetization) மாற்றமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ சமூக ஊடகத் தளங்களைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. எனினும், மேற்கூறிய வேலைத்திட்டத்தின் மூலம் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் அதனைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அதன் விபரங்கள் வருமாறு:

| தொ.இல | சமூக ஊடகம் | ஊடக பிரிவை ஆரம்பிக்க முன்னர் பயனர் எண்ணிக்கை | 2025.12.31 ஆம் திகதியில் உள்வாறு பயனர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | YouTube | 900 | 6029 |
| 02 | Facebook | 38000 | 77026 |
| 03 | WhatsApp | - | 4166 |

### 2.15.1. தேர்தல் ஆணைக்குழுவின் சமூக ஊடகத் தளங்கள் பங்குதாரர்கள்∴ பயனாளர்கள் மத்தியில் பிரபலமடைவதற்கான காரணங்கள்:

- தேர்தல் தொடர்பான தகவல்கள் மற்றும் தரவுகளை மிகவும் எளிமையான முறையில் புகைப்படங்கள் மற்றும் வரைபடங்களுடன் முன்வைத்தமை.
- உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான முடிவுகள் மற்றும் வாக்காளர் புள்ளிவிபரங்களை முன்வைத்தமை.
- பொதுமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் உடனடி உத்தியோகபூர்வ தகவல்கள் மற்றும் அறிவித்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக உத்தியோகபூர்வ WhatsApp அலைவரிசையை ஆரம்பித்தமை.
- ஆணைக்குழுவினால் சமூக ஊடகத் தளங்கள் ஊடாக முன்வைக்கப்படும் தகவல்கள், தரவுகள், புகைப்படங்கள் போன்றவற்றை எவ்வளவு வாசகர்கள் பார்வையிட்டுள்ளனர் என்பதை ஆய்வு செய்தமை.
- மும்மொழித் தொடர்பாடல் - ஒவ்வொரு அறிவித்தலையும்∴ தகவலையும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் ஒரே நேரத்தில் வெளியிடும் திறனை மேலும் வலுப்படுத்தியமை.

## 2.16. 2025 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட வெளியீடுகள்

தேர்தல் ஆணைக்குழுவின் 2017-2020 நான்கு வருடப் பங்களிப்பு மூலோபாயத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட முக்கிய துறைகளின் கீழ், ஆணைக்குழுவின் பணிகள் மற்றும் கடமைகளை உள்ளடக்கி காலாண்டு அடிப்படையில் ”கதிரயே பலய” (புள்ளடியின் பலம்) எனும் செய்தி சஞ்சிகை வெளியிடப்பட்டது. அதன் ஒன்பதாவது தொகுதியின் முதலாம் இதழ் (சனவரி - ஏப்ரல் 2025) மற்றும் ஒன்பதாவது தொகுதியின் இரண்டாம் இதழ் (மே - ஆகஸ்ட் 2025) ஆகியவை அச்சிடப்பட்டுள்ளன.





2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டக் குழுநிலை விவாதத்தின் போது சமர்ப்பிப்பதற்காக, தேர்தல் ஆணைக்குழுவினால் 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.09.30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கிய 2025 ஆம் ஆண்டுக்கான முன்னேற்ற அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.



## 2.17. சட்ட அலுவல்கள்

2025 ஆம் ஆண்டில், தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு புதிதாகத் தாக்கல் செய்யப்பட்ட 296 வழக்குகள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிக்கையிடப்பட்டுள்ளன.

### 2.17.1. உயர் நீதிமன்றம்

தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக அடிப்படை உரிமைகள் மீறல் தொடர்பாக 11 மனுக்களும், ரிட் மனுக்கள் 50 உம், உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்டமூலங்கள் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட 4 மனுக்களும், வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை தொடர்பாக கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்து தாக்கல் செய்யப்பட்ட 4 விசேட வழக்குகளும், கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 4 விசேட வழக்குகளுமாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மொத்த வழக்குகளின் எண்ணிக்கை 73 ஆகும்.

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு SC/FRA/59/2025 ,SC/FRA/60/2025> SC/FRA/63/2025 , SC/FRA/65/2025 , SC/FRA/68/2025 , SC/FRA/69/2025 மற்றும் SC/FRA/72/2025 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வழக்குகளும், வாக்களிப்பதற்காக விடுமுறை வழங்காமை மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக SC/FRA/15/2025 இலக்க வழக்கும், ஜனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மதுபான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக SC/FRA/30/2025 வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலும், அரசியல் கட்சிகளைப் பதிவு செய்யாமல் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதாகக் கோரி தாக்கல் செய்யப்பட்ட SC/FRA/87/2025 இலக்க வழக்கும், பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்காகத் தெரிவு செய்யப்பட்ட திரு. தொலவத்தகே தொன் சிரந்த பத்மலால் அவர்களுக்கு 2025.06.13 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளிக்காததன் மூலம் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகத் தாக்கல் செய்யப்பட்ட SC/FRA/135/2025 இலக்க வழக்கும் உட்பட 11 அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதேபோன்று, 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து 46 ரிட் மனுக்களும், கெஸ்பேவ நகர சபைக்கான தேசிய மக்கள் சக்தி கட்சியின் வேட்புமனுவில் அந்த நகர சபையின் ஊழியர் ஒருவரின் பெயர் உள்வாங்கப்பட்டமை தொடர்பாக 1 வழக்கும் (SC/WRIT/65/2025), சாவகச்சேரி நகர சபைக்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் திருமதி யசோகுமார் துஷ்யா அவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 262) 8 ஆம் பிரிவின்படி உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவர் எனக் குறிப்பிட்டு 1 வழக்கும் (SC/WRIT/68/2025) தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது சாவகச்சேரி பிரதேச சபைக்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் யோகநாதன் கல்யாணி அவர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கட்டளைச் சட்டத்தின்

(அத்தியாயம் 262) 8வது பிரிவின்படி உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவர் எனக் குறிப்பிட்டு SC/WRIT/69/2025 வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளுக்கிடையே 2024 பாராளுமன்றத் தேர்தலின் போது ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட கூட்டணி குறித்து தேர்தல் ஆணைக்குழுவினால் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படாமை தொடர்பாக திரு.ரவூப் ஹக்கீம் மற்றும் திரு. நிஸாம் காரியப்பர் ஆகியோரால் SC/WRIT/70/2025 எனும் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பாக கௌரவ உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்வது குறித்து SC/SD/1/2025> SC/SD/2/2025> SC/SD/3/2025> SC/SD/4/2025 என 4 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து கௌரவ உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் SC/SPL/LA/105/2025, SC/SPL/LA/107/2025, SC/SPL/LA/108/2025, SC/SPL/LA/110/2025 ஆகிய இலக்கங்களைக் கொண்ட வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அதேபோல், வவுனியா மாநகர சபையின் முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் நியமனத்திற்கு எதிராக கந்தையா விஜயகுமார் மற்றும் சிவசுப்ரமணியம் பிரேமதாஸ் ஆகியோரால் CA/WRIT/708/2025 எனும் வழக்கு இலக்கத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு தொடர்பாக, கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் 2025.10.21 ஆம் திகதி வழங்கப்பட்ட இடைக்காலத் தடை உத்தரவு குறித்து கௌரவ உயர் நீதிமன்றத்தின் முன்னிலையில் SC/SPL/LA/356/2025 மற்றும் SC/SPL/LA/357/2025 ஆகிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் CA/WRIT/607/25 மற்றும் CA/WRIT/586/25 ஆகிய வழக்குகள் தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்புகளுக்கு எதிராக SC/SPL/LA/386/2025 மற்றும் SC/SPL/LA/387/2025 ஆகிய மேன்முறையீட்டு மனுக்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### 2.17.2. மேன்முறையீட்டு நீதிமன்றம்

கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தேர்தல் ஆணைக்குழுவிற்கு எதிராக 219 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அந்த வழக்குகளுள் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமை குறித்து 203 வழக்குகளும், 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கண்டி மாநகர சபைக்காக சுயேச்சைக் குழு 2 இன் கீழ் போட்டியிட்ட ஆர்.எம். யாசின் என்பவரது உறுப்பினர் பதவி தொடர்பாக 1 வழக்கும் (CA/Writ/576/2025), கெக்கிறாவ பிரதேச சபையின் பெண் பிரதிநிதித்துவம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினால் தாக்கல் செய்யப்பட்ட 1 வழக்கும் (CA/Writ/586/2025), கல்நேவ பிரதேச சபையில் ஐக்கிய மக்கள் சக்தியில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்காகப் பெண்களைப் பெயரிடுவதற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 1 வழக்கும் (CA/Writ/607/2025) அடங்குகின்றன. மேலும், 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபைக்காக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் போட்டியிட்ட முஹம்மட் தம்பி

முஹம்மட் அன்வர் அவர்கள் உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவர் எனக் குறிப்பிட்டு CA/Writ/611/2025 எனும் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல், 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் முறையான நடைமுறையின்றி பேருவளை நகர சபையின் முதலாவது கூட்டத்தை நடத்துவதற்கு எதிராக CA/Writ/661/2025 எனும் வழக்கும், 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வானாத்தவில்லு பிரதேச சபை உறுப்பினர்களுக்காகப் பெண்களை நியமிப்பதற்கு எதிராக 1 வழக்கும் (CA/Writ/672/2025), 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது சீதாவக்க பிரதேச சபைக்காகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுள் தவிசாளர் மற்றும் உப தவிசாளரை நியமிப்பது தொடர்பாக நடாத்தப்பட்ட வாக்கெடுப்பு குறித்து 1 வழக்கும் (CA/Writ/700/2025) மற்றும் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக வவுனியா மாநகர சபையின் முதல்வர் மற்றும் பிரதி முதல்வர் நியமனத்திற்கு எதிராக CA/Writ/708/2025 எனும் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது கற்பிட்டி பிரதேச சபைக்காகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுள் தவிசாளர் மற்றும் உப தவிசாளரை நியமிப்பது தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பு குறித்து CA/Writ/714/2025 எனும் வழக்கும், பாத்தஹேவாஹெட்ட பிரதேச சபைக்காகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுள் தவிசாளர் மற்றும் உப தவிசாளரை நியமிப்பது தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பு குறித்து 1 வழக்கும் (CA/Writ/735/2025) மற்றும் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது ஹோரணை நகர சபைக்காக ஐக்கிய தேசியக் கட்சியில் தெரிவு செய்யப்பட்ட சந்தனம் ஜோன்சன் போல் அவர்களின் இராஜினாமா காரணமாக ஏற்பட்ட உறுப்பினர் வெற்றிடத்திற்கு வேறொருவரை நியமிப்பதற்கு எதிராக CA/Writ/833/2025 எனும் வழக்கு உட்பட பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக ஆதம் பாவா அஸ்பர் என்பவரால் CA/WRIT/981/25 எனும் வழக்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக முஹம்மது ஹனீபா முஹம்மது பைரூஸ் என்பவரால் CA/WRIT/982/25 எனும் வழக்கும், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக தர்மரத்தினம் சுதாகரன் என்பவரால் CA/WRIT/985/25 எனும் வழக்கும் என மூன்று வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, சர்வஜன அதிகாரம் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக மொஹம்மது ஜென்னத் பீவி என்பவராலும், சர்வஜன சக்தி கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி கற்பிட்டி பிரதேச சபைக்காகத் தெரிவு செய்யப்பட்ட அபூபக்கர் முஹம்மது இன்பாஸ் என்பவரை கட்சி அங்கத்துவத்திலிருந்து நீக்கியமை தொடர்பாகவும் முறையே CA/INJ/3/2025 மற்றும் CA/INJ/5/2025 ஆகிய வழக்குகள் கௌரவ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### 2.17.3. மேல் நீதிமன்றம்

2025 ஆம் ஆண்டில் தேர்தல் ஆணைக்குழுவைத் ஒருதரப்பினராகக் குறிப்பிட்டு மேல் நீதிமன்றத்தில் எந்தவொரு வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை.

### 2.17.4. மாவட்ட நீதிமன்றம்

மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 3 ஆகும். 2023 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் தனது வசிப்பிட முகவரியில் ஒரு வாக்காளராகத் தனது பெயரை உள்வாங்காமை தொடர்பாக அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது (மாத்தறை மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் MC/20383/மாத்தறை). மேலும், ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக சேனநாயக்ககே அநுருத்திகா சேனநாயக்க என்பவரால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DSP 335/2025 எனும் வழக்கும், இலங்கை தொழிலாளர் கட்சியின் அங்கத்துவத்திலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பாக சேவியர் ஜோன்ஸ் பொலிங்டன் என்பவரால் மன்னார் மாவட்ட நீதிமன்றத்தில் SP 166/2025 எனும் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### 2.17.5. நீதவான் நீதிமன்றம்

2015 பாராளுமன்றத் தேர்தலின் போது மட்டக்களப்பு உதவித் தேர்தல் ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. ஆர். சசீலன் மற்றும் மற்றொரு அதிகாரி காத்தான்குடிப் பகுதியில் தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்தபோது, கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பாக மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் PC/6653/25-மட்டக்களப்பு எனும் இலக்கத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுள் 76 வழக்குகள் கௌரவ நீதிமன்றத்தினால் இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டதாலும் மற்றும் மனுதாரர்களால் மீளப் பெறப்பட்டதாலும் நிறைவடைந்துள்ளன. மேலும் 06 வழக்குகள் தற்போது நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட 219 வழக்குகளில் 211 வழக்குகள் இதுவரை நிறைவடைந்துள்ளதோடு, 08 வழக்குகள் மாத்திரமே விசாரணையில் உள்ளன. மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 3 வழக்குகளும், நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கும் தொடர்ந்து கௌரவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகின்றன.

### 2.17.6. சட்டமா அதிபரின் ஆலோசனைகளைக் கோருதல்

சட்ட நிலைமைகள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரி 06 விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டன. அந்த விண்ணப்பங்கள் அனைத்திற்கும் கௌரவ சட்டமா அதிபரால் ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த ஆலோசனைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2.17.7. மனித உரிமைகள் ஆணைக்குழு தொடர்பான முறைப்பாடுகள் மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தொடர்பான விசாரணைகள்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெற்ற 03 முறைப்பாடுகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் தகவல்களைக் கோருதல் மற்றும் தேவையான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு

தொடர்பான 09 விசாரணைகளுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல் மற்றும் பிற தரப்பினரை ஒருங்கிணைக்கும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 2.17.8. தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் தேருநர் கணக்கெடுப்பு தொடர்பான ஆவணங்களைத் தவறாகப் பயன்படுத்துதல்

தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பாக 2025 உரியதாக சிறைத்தண்டனை அனுபவித்து வரும் 71 நபர்களை கரைநிரல் / கறுப்புப் பட்டியலில் சேர்ப்பதற்கான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 2025 தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பாக முன்வைக்கப்பட்ட உரிமைக்கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகள் குறித்து 42 ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.18. தேர்தல் சட்டத் திருத்தங்கள்

தேர்தல்/வாக்கெடுப்புகளுக்கான கட்டுப்பணத்தை விதிமுறைப்படுத்துவதற்கான சட்டத் திருத்தம், விசேட வாக்களிப்பு நிலையங்களைத் தாபித்தல் மற்றும் நடமாடும் வாக்களிப்பு நிலையங்களை தாபித்தல், முன்கூட்டியே வாக்களிப்பது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் மற்றும் ஊடக வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுக்க நெறிக் கோவை ஆகியவற்றை உள்ளடக்கிய தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் மற்றும் துடைத்தழிக்க முடியாத மையினைப் பயன்படுத்தி வாக்காளர்களை " தோதான குறியீட்டால்" அடையாளப்படுத்தும் தேவையை அனைத்துத் தேர்தல் சட்டங்களிலிருந்தும் நீக்குவதற்கான சட்டத் திருத்த முன்மொழிவுகளைக் கொண்ட சட்டமூலங்களை நிறைவேற்றுவது தொடர்பாக, நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் கௌரவ அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வதற்காக 2025.08.20 மற்றும் 2025.09.15 ஆகிய திகதிகளில் ஜனாதிபதிச் செயலாளருக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தேர்தல் சட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசியத் திருத்தங்கள் குறித்த முன்மொழிவுகள் தொடர்பாக (1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்) தேர்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் 2025.08.04, 2025.08.06, 2025.08.13, 2025.09.02 மற்றும் 2025.09.10 ஆகிய திகதிகளில் ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262) தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்த முன்மொழிவுகள் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் சட்டத் திருத்தக் குழுவின் அதிகாரிகளுடன் 2025.12.17 ஆம் திகதி கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல்/பதிவு செய்தல் தொடர்பான சட்டத் திருத்தத்திற்காகத் தயாரிக்கப்படவுள்ள வர்த்தமானி அறிவித்தல் குறித்து தேர்தல் ஆணைக்குழுவின் சட்டத் திருத்தக் குழுவின் அதிகாரிகளுடன் 2025.09.10 மற்றும் 2025.10.17 ஆகிய திகதிகளில் ஆரம்பக் கட்டக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் வாக்களிக்கக்கூடிய வகையில் சட்டங்களைத் தயாரிப்பதன் அவசியம் குறித்து அமைச்சரவைக்கு அறிவித்தல் எனும் தலைப்பின் கீழ், 2025.09.23 திகதிய மற்றும் அமப/25/1692/816/073 இலக்க அமைச்சரவைத் தீர்மானம் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள் மற்றும் உத்தரவுகளுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கமைய, அது தொடர்பான முன்னேற்றம் பின்வருமாறு:

- 2025.10.08 ஆம் திகதி வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக சட்டமூலங்களைத் தயாரிப்பதன் அவசியம் குறித்து, தவிசாளர் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பிரிவுத் தலைவர்களுடன் தவிசாளரின் உத்தியோகபூர்வ அறையில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

- 2025.10.30 ஆம் திகதி வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக சட்டமூலங்களைத் தயாரிப்பது குறித்து, தேர்தல் ஆணைக்குழுவின் சட்டத் திருத்தக் குழுவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

- 2025.11.06 ஆம் திகதி வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவாக சட்டமூலங்களைத் தயாரிப்பது குறித்து, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் பிரதி அமைச்சர் உள்ளிட்ட அந்த அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

- வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் வாக்களிப்பதற்கு ஏதுவான ஏற்பாடுகளைச் செய்வதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்காக, அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மேலதிக தேர்தல் ஆணையாளர் (சட்டம் மற்றும் விசாரணை) திரு. பி.பீ.சி. குலரத்ன அவர்களின் தலைமையில் ஒரு குழு 2025.12.15 ஆம் திகதி நியமிக்கப்பட்டது.

## 2.19. 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான நடவடிக்கைகள்

2025 ஆம் ஆண்டிற்கு அமைவாக, 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 170 கோரிக்கைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அந்த அனைத்துக் கோரிக்கைகள் தொடர்பிலும் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவிற்கு விண்ணப்பதாரர்களால் 7 மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு இணங்க அந்தத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

## 2.20. தேர்தல் பணிகளுக்காக அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல்

### 2.20.1. 2025 ஆம் ஆண்டிற்கான அரசியல் கட்சிகளை அங்கீகரிக்கும் நடவடிக்கைகள்

2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4) ஆம் பிரிவின் கீழும், 2263/23 ஆம் இலக்க மற்றும் 2022.01.21 திகதிய வர்த்தமானிப் பத்திரிகையின் படியும், 2025 ஆம் ஆண்டிற்கான அரசியல் கட்சியாக அங்கீகரிப்பதற்கான பத்திரிகை விளம்பரங்கள் (மும்மொழிகளிலும்) மற்றும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடுதல் என்பன மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டுள்ளன:

**விண்ணப்பங்கள் கோரல்:**

i. 2009 இன் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருச்ச சட்டத்தின் ) சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட சட்டத்தின் 7(4)(அ) பிரிவின் படி, தேர்தல் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகக் கருதப்படுவதற்கான விண்ணப்பங்கள் 2025.02.28 ஆம் திகதி தொடக்கம் 2025.03.28 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன.

ii. 83 அரசியல் கட்சிகளால் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**ஆரம்பப் பரிசீலனை**

I. 2025.06.26 ஆம் திகதி ஆரம்பப் பரிசீலனை நடத்தப்பட்டது. அதில் முதலாம் கட்டத்திற்கு 47 அரசியல் கட்சிகள் தெரிவு செய்யப்பட்டதுடன், 36 அரசியல் கட்சிகள் நிராகரிக்கப்பட்டன.

**முதலாம் நேர்முகத் தேர்வு**:

2025 அரசியல் கட்சிகளைப் அங்கீகரிப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட 47 அரசியல் கட்சிகளுக்கான முதலாம் நேர்முகத்தேர்வு 2025.08.12,14,15,16,17,22,25,27,28 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

**இரண்டாம் நேர்முகத் தேர்வு**:

I. முதலாம் நேர்முகத்தேர்வில் கலந்துகொண்ட 47 கட்சிகளில் 14 கட்சிகள் இரண்டாம் நேர்முகத்தேர்விற்குத் தெரிவு செய்யப்பட்டன. 33 கட்சிகள் நிராகரிக்கப்பட்டன.

II. இரண்டாம் பரிசீலணைக்காக தெரிவு செய்யப்பட்ட 14 கட்சிகளுக்கான களப் பரிசீலனையைத் (Field Inspection) தொடர்ந்து, இரண்டாம் நேர்முகத்தேர்வு 2025.10.08, 09, 16 ஆகிய திகதிகளில் ஆணைக்குழுவின் பிரதான கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

III. இரண்டாம் நேர்முகத்தேர்வின் மூலம் 5 கட்சிகள் 2025 ஆம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

### 2.20.2. ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள அரசியல் கட்சிகள் தொடர்பான நடவடிக்கைகள்

ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் விபரங்களைப் புதுப்பித்தல், தேர்தல் காலங்களில் அரசியல் கட்சிக் கூட்டங்களை அழைத்தல், குறிப்புகளைப் பேணுதல் மற்றும் அவை தொடர்பான அனைத்து ஒருங்கிணைப்புப் பணிகளையும் முன்னெடுத்தல்.

ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுள் 3 கட்சிகள் குறித்த திகதிக்குள் கணக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கத் தவறியமையினால், அந்தக் கட்சிகளின் அங்கீகாரம் இரத்து செய்யப்பட்டுள்ளது.

### 2.21. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை ஏற்றுக்கொள்த்தல்

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 80(1)(ப) உப பிரிவின் படி, 1981 இன் 15 ஆம் இலக்க சனாதிபதித் தேர்தல்கள் சட்டம், 1981 இன் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேரர்தல்கள் சட்டம், 1988 இன் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் சட்டத்தின் (262 ஆம் அத்தியாயம்) அல்லது தொழிற்சங்க கட்டளைச்சட்டத்தின் (138 ஆம் அத்தியாயத்தின்) நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பதவிகளை வகிப்பவர்களால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு, அந்த ஆவணங்களை இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

## 2.22. தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் தேர்தல் சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.

அனைத்து வேட்பாளர்களுக்கும் சமமான களத்தை உருவாக்குவதற்கும் மற்றும் வெளிப்படையான தேர்தல் செலவு முறைமையை ஏற்படுத்துவதற்கும், 2023 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது. இதற்கமைய, கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் பிரச்சார செலவு எல்லையைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்பட்ட, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர் திரு. லக்ஷ்மன் திஸாநாயக்க அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட விஞ்ஞானப்பூர்வமான முறைமை இதற்காகவும் பயன்படுத்தப்பட்டது.

அத்துடன், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தேர்தல் பிரச்சார வருமான மற்றும் செலவுகளுக்காக ஒரு பொதுவான படிவம் ஒன்று இந்தத் தேர்தலின் போது அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், வேட்பாளர்கள் மற்றும் கட்சிச் செயலாளர்களின் வசதிக்காகதேர்தல் ஆணைக்குழுவினால் https://cf.elections.gov.lk எனும் இணைய இணைப்பும் அறிமுகப்படுத்தப்பட்டது.

2024.11.14 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது சுமார் 10% வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்களின் தலைவலர்கள் தமது செலவு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவில்லை. அதற்கமைய 2023 இன் 03 ஆம் இலக்க தேர்தல்கள் செலவுகளை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் பணிகள் தொடர்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, பிரதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்குத் தேவையான பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் தொடர் திட்டங்கள் தேர்தல் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி, நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் 09 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டதோடு அந்த பயிற்றுவிப்பாளர்கள் மூலம் முழுநாடும் உள்ளடங்கும் வகையில் உள்ளூர் அதிகார சபைகள்அடிப்படையில் 2025உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆர்வம் காட்டும் தரப்பினர் அறிவுறுத்தப்பட்டனர்

மேலும், இந்தப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணையாக, பங்குதார நிறுவனங்கள் மற்றும் 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக வேட்புமனுத் தாக்கல் செய்த அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் விளைவாக, 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட 75,775 வேட்பாளர்களுள் 74,275 வேட்பாளர்களும், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட 2,650 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களுள் 2,579 தரப்பினரும் தமது தேர்தல் பிரசார வருமான மற்றும் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர்.

## 2.23. பொருட்கள் கொள்வனவு, இயந்திர உபகரணங்கள் கொள்வனவு / பழுதுபார்த்தல் / பராமரித்தல்

### 2.23.1. வாக்காளர்களைப் பதிவு செய்தல்

வருடாந்தம் மேற்கொள்ளப்படும் வாக்காளர் பதிவு நடவடிக்கைகளுக்காக, "BC" படிவங்களுக்குப் பதிலாக "அ" மற்றும் "ஆ" தகவல்களை மாத்திரம் சேகரிப்பதற்குரிய ER படிவங்களை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சுமார் 20 இலட்சம் ER படிவங்கள் அரச அச்சகத்திலிருந்து அச்சிடப்பட்டதன் பின்னர், அவை மாவட்ட அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்ட குறைநிரப்பு வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்காக சுமார் 10 இலட்சம் YC படிவங்கள் அச்சிடப்பட்டு மாவட்ட அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. அத்துடன் உரிமைக்கோரிக்கை மற்றும் ஆட்சேபனை படிவங்களும் அறிவித்தல்களும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டன. இதற்காக சுமார் 4.78 மில்லியன் ரூபா தொகை செலவிடப்பட்டுள்ளது.

### 2.23.2. தேருநர் இடாப்பு.்வாக்காளர் பட்டியலை அச்சிடுதல்

2025 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை இம்முறை தனியார் நிறுவனங்கள் ஊடாக அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், அச்சிடுதல் பணிகள் நிறைவடைந்த பின்னர் அவை அந்தந்த மாவட்ட அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன. இதற்கான செலவாக சுமார் 18.08 மில்லியன் ரூபா பணம் செலுத்தப்பட்டுள்ளது.

### 2.23.3. இயந்திர உபகரணங்கள் கொள்வனவு ∴ பழுதுபார்த்தல் ∴ பராமரித்தல்

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்காக கணினிகள், மடிக்கணினிகள் மற்றும் யூபிஎஸ் (UPS) போன்ற இயந்திரப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதற்காக 29.64 மில்லியன் ரூபா தொகை செலவிடப்பட்டது.

அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் கணினி அச்சுப்பொறிகள் மற்றும் நிழற்படப் பிரதி இயந்திரங்களுக்குத் தேவையான டோனர்கள் மற்றும் ட்ரம் யூனிட்கள் அத்துடன் பிரதி எடுக்கும் இயந்திரங்களுக்குத் தேவையான மை மற்றும் மாஸ்டர் ரோல்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக 21.52 மில்லியன் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது. இந்தச் செலவீனமானது தேர்தல் தொடர்பான பணிகள் மற்றும் ஏனைய அலுவலகப் பணிகளுக்காக இப்பொருட்களைக் கொள்வனவு செய்தமையால் ஏற்பட்ட செலவாகும்.

### 2.23.4. தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்குத் தேவையான தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு சுமார் 8 மில்லியன் ரூபா வரையான நிதி ஒதுக்கீடு மாத்திரமே கிடைத்திருந்தது. எனவே, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் முன்வைக்கப்பட்டிருந்த தேவைப்பாட்டின் அடிப்படையில், மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு இயன்றவரை நிதி ஒதுக்கீடுகளைப் பகிர்ந்து வழங்கி தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டன. இதற்கமைய 7.54 மில்லியன் ரூபா செலவில் அலுவலகப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

### 2.23.5. பொதுவானவை

வாக்காளர் பட்டியல்களை அச்சிடுதல், வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் மற்றும் அலுவலகத்தின் ஏனைய எழுதுபொருள் தேவைகளுக்காகவும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பான கடித உறைகள் மற்றும் அழியாத மை பேனாக்கள் உள்ளிட்ட எழுதுபொருட்களைக் கொள்வனவு செய்யவும் வேண்டியிருந்தது. இதற்காக சுமார் 97.62 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகத்தின் நீர் தேவைக்காக 813,870.40 ரூபா தொகை செலவிடப்பட்டதோடு, தொலைபேசி, இணையம் மற்றும் விபிஎன் (VPN) தொடர்புகளுக்காக ஸ்ரீலங்கா டெலிகொம் நிறுவனத்திற்கு சுமார் 23.03 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

மாவட்ட தேர்தல் அலுவலக வாகனங்களுக்குத் தேவையான டயர்களைக் கொள்வனவு செய்யும் பணிகளை பிரதேச மட்டத்தில் முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததோடு அதற்கமைய அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட ரீதியாகக் கொள்வனவு செய்ய முடியாத அலுவலகங்களுக்கும், தேர்தல் செயலகத்தின் வாகனங்களுக்கும் தேவைக்கேற்ப டயர்கள் கொள்வனவு செய்து வழங்கப்பட்டன. அத்துடன் அந்த வாகனங்களுக்குத் தேவையான மின்கலங்களும் (Battery) கொள்வனவு செய்யப்பட்டன. இதற்காக பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றி சுமார் 2.83 மில்லியன் ரூபாத் தொகை செலவிடப்பட்டது.

தேர்தல் தொடர்பான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை மூன்று தனியார் நிறுவனங்கள் ஊடாக அச்சிட வேண்டியிருந்ததுடன், அதனுடன் தொடர்புடைய ஆவணங்கள் உள்ளிட்ட அச்சிடல் பணிகளுக்காக சுமார் 84.64 மில்லியன் ரூபா பணம் செலவிடப்பட்டுள்ளது.

தேர்தல் கடமைகளுக்காக மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் நிலவிய இயந்திரப் பற்றாக்குறையினால் கணினிகள், மடிக்கணினிகள், அச்சுப்பொறிகள் மற்றும் நிழற்படப் பிரதி இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் பெறப்பட்டன. இதற்காக 5.65 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

தலைமை அலுவலகத்தின் தீயணைப்புத் தொகுதியை நவீனமயமாக்கும் பணிகள் இவ்வருடத்தில் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கான பெறுகைப் பணிகள் நிறைவடைந்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இப்பணிகளுக்காக சுமார் 9.6 மில்லியன் ரூபா நிதி சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், பணிகள் நிறைவடைந்த பின்னர் அதற்கான செலவாக 8.06 மில்லியன் ரூபா பணம் கட்டிடத் திணைக்களம் அறவிட்டுள்ளது. (இதற்காக 2024 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியையும் சேர்த்து மொத்தச் செலவு 17.42 மில்லியன் ரூபா ஆகும்).

### 2.24. தகவல் தொழில்நுட்பச் செயல்பாடுகளின் முன்னேற்றம்

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தேர்தல் ஆணைக்குழுவின் பணிகளை நவீனமயமாக்குவதன் மூலம், அலுவலக அதிகாரிகளுக்கு வினைத்திறனான தகவல் தொழில்நுட்பச் செயலிகளை (Apps) உருவாக்கி வழங்குவதும், பங்குதாரர்களுக்குத் தேவையான தகவல் தொழில்நுட்பச் சேவைகளைப் பாதுகாப்பான முறையில் வழங்குவதும் இப்பிரிவின் பிரதான கடமையாகும். புதிய தகவல் தொழில்நுட்பத் தேவைகளை ஆய்வு செய்தல் மற்றும் திட்டமிடல், திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அங்கீகாரம் பெறுதல், திட்டப் பரிசீலனை, நிறுவுதல் மற்றும் அதிகாரிகளுக்கான பயிற்சி அளித்தல் போன்றவற்றுடன் தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்துத் தகவல் பாதுகாப்பு நடவடிக்கைகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன.

#### 2.24.1. தகவல் தொழில்நுட்பத் தேவைப்பாடுகளை ஆய்வு செய்தல், மென்பொருள் உருவாக்கம், மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்

2025 மே மாதம் 06 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் முடிவுகளை அட்டவணைப்படுத்தவும் ஊடகங்களுக்கு வெளியிடவும் ஈ-முடிவு (e-Result) தயாரிப்பு முறைமையொன்று உருவாக்கப்பட்டது. அதற்கமைய, தேர்தல் ஆணைக்குழுவினாலேயே உருவாக்கப்பட்ட ஒரு முறைமையின் ஊடாக முடிவுகளை வெளியிட முடிந்தது. இம்முறைமையானது உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் செயற்படும் முடிவு அட்டவணைப்படுத்தும் முறைமை, முடிவுகளை உடனுக்குடன் ஊடகங்களுக்கு வழங்கும் முறைமை மற்றும் மேலதிக முடிவு முறைமை ஆகியவற்றைக் கொண்டிருந்தது. மேலும், பொதுமக்கள் இலகுவாக முடிவுகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு இணைய தளத்தையும் இது கொண்டிருந்ததுடன் தொடர்ச்சியாக பேணிச்செல்ல முடியுமான பெறுபேறுகள் இணையத் தளமாகவும் காணப்பட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் வேட்புமனுக்களை முகாமைத்துவம் செய்வதற்காக வேட்புமனு முகாமைத்துவ முறைமை மேம்படுத்தப்பட்டதுடன், தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் விபரங்களை ஈ-சேவை ஊடாகப் பார்வையிடும் வசதியும் வழங்கப்பட்டது. தேர்தலின் அடுத்தகட்டப் பணிகளான அச்சிடுதல், அறிக்கைகளைப்

பெறுதல், புள்ளிவிபரங்களைப் பெறுதல் மற்றும் வேட்புமனுக்களைப் பரிசோதித்தல் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடிய வகையில் இம்முறைமை மேம்படுத்தப்பட்டது.

அலுவலர் கணக்கெடுப்பிற்காக அச்சிடப்பட்ட படிவங்களுக்குப் பதிலாக முழுமையாக ஈ-சேவையைப் பயன்படுத்தும் வகையில், இணையவழி அலுவலர் கணக்கெடுப்பு முறைமை மேம்படுத்தப்பட்டது. அதற்கமைய 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது 09 மாவட்டங்களுக்கான அலுவலர் கணக்கெடுப்பு முழுமையாக ஈ-சேவை ஊடாக அலுவலர் கணக்கெடுப்பு முழுமையாக முன்னெடுக்கப்பட்டது.

தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அலுவலர்களுக்குப் பயிற்சி வகுப்புகள் பற்றிய விபரங்கள், நியமன விபரங்கள் மற்றும் வீதி வரைபடங்கள் உள்ளிட்ட அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஈ-தேர்தல் கடமை (My eDuty) எனும் ஈ-சேவையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

நிகழ்நிலை மூலம் அஞ்சல் மூல வாக்களிப்பிற்கு விண்ணப்பிக்கும் திட்டம் மேம்படுத்தப்பட்டதுடன் இதில் சுய-இணையவழி விண்ணப்பம் (Self-Online Applying) நிறுவன ரீதியான இணையவழி விண்ணப்பம் (Certifying Officer Online Applying) மற்றும் தரவுகளை அச்சிட்டுப் பெற்றுக்கொள்ளும் முறை (Semi Online Data Printing Applying) ஆகிய மூன்று முறைகள் மூலம் அஞ்சல் வாக்கு விண்ணப்பித்தல் வசதிகள்வழங்கப்பட்டன. அதேபோன்று அஞ்சல் வாக்கு முகாமைத்துவ அமைப்பு மேம்படுத்தப்பட்டதன் மூலம் அஞ்சல் மூல வாக்குச் செயல்முறை மிகவும் எளிதாக்கப்பட்டது.

நவீன வாக்களிப்பு முறைமையின் (Smart Voting) முதற்கட்டமாக, ஒரு முன்னோடித் திட்டமாக ஈ-வாக்குப் புத்தகம் (E-Poll Book) அறிமுகப்படுத்தப்பட்டது.

அரசியல் கட்சிகளைப் பதிவு செய்தல் மற்றும் கட்சிகளின் விபரங்களைக் கணினிமயப்படுத்தி கட்சி விபரக் கோப்புகளை உருவாக்குவதற்கான கணினி வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டது.

தேர்தல் பிணக்குத் தீர்வு முகாமைத்துவ முறைமை (Electoral Dispute Resolution Management System - EDRMS) மேம்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அதனைப் பயன்படுத்துவது தொடர்பான அனைத்துத் தொழில்நுட்ப அறிவுறுத்தல்களும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்பட்டன. இம்முறைமையை மிகவும் இலகுவாகப் பயன்படுத்துவதற்காக, கையடக்கத் தொலைபேசிச் செயலியாக EDR App அறிமுகப்படுத்தப்பட்டதுடன், அது 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டது.

நாட்டின் முன்னணி தகவல் தொழில்நுட்ப விருது விழாவான பிரித்தானிய கணினிச் சங்கத்தின் (BCS) இலங்கை கிளையினால் 26 வது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய தகவல் தொழில்நுட்ப விருதுகள் - 2024 (National ICT Awards – NBQSA 2024) நிகழ்வில், பொதுமக்களுக்காக விருத்தி செய்யப்பட்ட அரச சேவை வழங்குதல் அல்லது பொதுமக்கள் சேவையை விருத்தி செய்வதற்காக டிஜிட்டல் மயமாக்கல் ஊடாக பொதுச் சேவைகளை வழங்குவதற்கான தகவல் தொழில்நுட்ப புத்தாகத்திற்கான Digital Government in Public Sector and Government பிரிவின் கீழ் வெள்ளி விருது, தேர்தல் ஆணைக்குழுவினால் அறிமுகம் செய்யப்பட்ட இந்த EDR முறைமைக்கு வழங்கப்பட்டது.

அதேபோல், அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்காக ஒரு முறைமை தயாரிக்கப்பட்டு, 2025 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பயன்படுத்தப்பட்டது.

கடந்த ஆண்டுகளைப் போலவே, 2025 ஆம் ஆண்டிலும் சாதாரண தேருநர் இடாப்பு மீளாய்வு மற்றும் குறைநிரப்பி மேலதிக வாக்காளர் பட்டியல்கள் தொடர்பான மென்பொருட்கள் அறிமுகப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்பட்டன. மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் தேர்தல் பிரிவு பொறுப்பதிகாரிகளின் பணிகளை எளிதாக்குவதற்காக கணினி நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன.

பிரதான தேருநர் இடாப்பு.'. வாக்காளர் பட்டியல் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட குறைநிரப்பி தேருநர் இடாப்பு.'. வாக்காளர் பட்டியல்களைப் பயன்படுத்தி, எதிர்காலத் மீளாய்வுப் பணிகள் மற்றும் தேர்தல்களின் போது ஒருங்கிணைந்த தேருநர் இடாப்பு.'. வாக்காளர் பட்டியல்களைத் தயாரிப்பதற்கான கணினி நிகழ்ச்சித்திட்டம் புதுப்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டது.

மீளாய்வு பணிகளுக்காக ஒருங்கிணைந்த வாக்காளர் பெயர்ப் பட்டியல்களைப் பயன்படுத்தி புதிய தரவு அச்சிடப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் மற்றும் பன்மைப் பதிவுப் பட்டியல்களை அச்சிடுவதற்கான கணனி நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட்டு பேணிவரப்பட்டது.

மாவட்ட தேர்தல் அலுவலக அதிகாரிகளுக்கு கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தேருநர் இடாப்பு.'. வாக்காளர் பட்டியல் மீளாய்வுப் பணிகள் மேற்கொள்ளத் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்கள் வழங்குதல், தேருநர் இடாப்பின் பிரித்தெடுப்புக்களைப் பெற்றுக்கொள்ளும் போது தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளக நிர்வாகப் பணிகளை எளிதாக்குவதற்காக பின்வரும் கணினி நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டில் மேம்படுத்தப்பட்டு பேணிவரப்ப்பட்டன:

- ❖ தலைமை அலுவலகத்தின் அலுவலர்கள் இணையவழியில் விடுமுறை விண்ணப்பிப்பதற்காக விடுமுறை முகாமைத்துவ முறைமையைப் (Leave Management System) பேணிவருதல். 2026 ஆம் ஆண்டில் விடுமுறை முகாமைத்துவ முறைமையை அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் மேம்படுத்தப்பட்டுள்ளது.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் வாகன முகாமைத்துவ முறைமை (Vehicle Management System) அபிவிருத்தி செய்யப்பட்டு பேணிவருதல்.

- ❖ கணக்குப் பணிகளை மேற்கொள்வதற்கான செலவு முகாமைத்துவ முறைமை (Expenditure Management System) அபிவிருத்தி செய்யப்பட்டு பேணிவருதல்.

- ❖ மூலோபாயக் கண்காணிப்பு முறைமை (Strategic Plan Monitoring System) அபிவிருத்தி செய்யப்பட்டு பேணிவருதல்.

- ❖ பெறுகைத் திட்டக் கண்காணிப்பு முறைமை (Procurement Plan Monitoring System) தயாரிக்கப்பட்டுள்ளது.

- ❖ தனிப்பட்ட தரவுக் களஞ்சியப்படுத்தல் நிகழச்சித்திட்டம். (HRIM) அபிவிருத்தி செய்யப்பட்டு பேணிவருதல்.

- ❖ உள்ளக முறைமைகளைத் தயாரிப்பதையும் மற்றும் பராமரிப்பதையும் எளிதாக்குவதற்காக EC System Development Framework உருவாக்கப்பட்டுள்ளது.

- ❖ ஏனைய அனைத்து உள்ளக முறைமைகளின் பயனாளர்களை முகாமைத்துவம் செய்யத் தேவையான உள்ளக அமைப்பு நிர்வாக முகாமைத்துவ முறைமை தயாரிக்கப்பட்டது.

- ❖ ஆணைக்குழுவினால் செய்யப்படுகின்ற ஒப்பந்தப் பணிகளைக் கண்காணிப்பதற்காக ஒப்பந்தக் கண்காணிப்பு முறைமை (Contract Program Monitoring System) அபிவிருத்தி செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- ❖ சொத்துக்கள் முகாமைத்துவ முறைமை (Assets Management System) இதன் முதற்கட்டம் அபிவிருத்தி செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் கூட்ட முகாமைத்துவ முறைமை (Meeting Management System) அறிமுகப்படுத்தப்பட்டது.

- ❖ நிறுவனத்தில் உள்ள வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கான முறைமை (Resource Booking System) அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

- ❖ அலுவலர்களுக்குக் கடமைகளை ஒப்படைப்பதற்கான (Task Assign System) அபிவிருத்தி செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- ❖ நிறுவனத்தின் பதவி நிலை அலுவலர்களுக்கான (Diary Management System) அபிவிருத்தி செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவிற்கான கற்றல் முகாமைத்துவ முறைமை (Learn Management System - Moodle LMS) தாபிக்கப்பட்டது.

- ❖ கணினி மற்றும் கணனி உபகரணங்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதனை இலகுபடுத்துவதற்கான (Issue Tracking Management System) முறைமை உருவாக்கப்பட்டுள்ளது.

- ❖ அரசியல் கட்சி முகாமைத்துவ முறைமை: இதன் முதற்கட்டப்பணிகள் அபிவிருத்தி செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளது..

### 2.24.2. தேர்தல்கள் செயன்முறையுடன் தொடர்புடைய பங்குதாரர்களுக்கு ஈ-சேவைகளை வழங்குதல்

கிராம உத்தியோகத்தர் ஈ-சேவை மேம்படுத்தப்பட்டதுடன் அதன் பயன்பாடும் அதிகரிக்கப்பட்டது. இதில் ஒரு மாவட்டத்தின் (யாழ்ப்பாண மாவட்டம்) தேருநர் இடாப்பு/ வாக்காளர் பட்டியல் மீளாய்வுப் பணிகள் முழுமையாக (100%) கிராம உத்தியோகத்தர் ஈ-சேவை ஊடாக முன்னெடுக்கப்பட்டதுடன், ஏனைய மாவட்டங்களில் இச்சேவையைப் பயன்படுத்தும் கிராம உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் இணையவழியில் பதிவு செய்யப்படுவதற்காக, பாடசாலை ஒருங்கிணைப்பு ஆசிரியர்களுக்காக “இளம் பிரசைகள் ஆசிரியர் சேவை நுழைவாயில்”

எனும் ஈ-சேவை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மாணவர்களை இளம் பிரசைகளாகப் பதிவு செய்யும் கணினி நிகழ்ச்சித்திட்டம் மேம்படுத்தப்பட்டது.

ஈ-சேவைகளைப் பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பத் திறன் குறைந்த சமூகத்தினருக்கு உதவுவதற்காக, ஈ-சேவை விழிப்புணர்வூட்டுநர்கள் (e-Services Awaker) எனும் பயிற்றுவிப்பாளர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

விளிம்புநிலைச் சமூகங்கள் (வேடர் சமூகம், மலையகத் தமிழ் சமூகம், தீவுப்பகுதி வாழ் மக்கள்) தேர்தல் ஈ-சேவைகளைப் பயன்படுத்துவதற்கு உதவும் வகையில், அந்தச் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இளைஞர் யுவதிகள் "ஈ-சேவை விழிப்புணர்வூட்டுநர்களாக" (e-Services Awaker) பயிற்றுவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்கள் தேர்தல் ஈ-சேவை ஊடாக இளம் பிரசைகளாகப் பதிவு செய்வதற்காக பாடசாலை மட்டத்தில் விசேட நிகழச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன.

இளம் பிரசைகளாக தேர்தல் ஈ-சேவை ஊடாக தேருநர்களாக பதிவு செய்வதற்காக விண்ணப்பம் செய்வதற்காக பாடசாலை மாணவர்களுக்கு உதவும் வகையில் பயிற்றுவிப்பாளர்களை உருவாக்கும் நிகழ்ச்சித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

செவிப்புலன் குறைபாடுள்ள∴ செவிப்புலனற்ற நபர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழுவின் மூலம் வழங்கப்படும் சேவைகளை சைகை மொழிமூலம் வழங்குவதற்காக எண்ணியல் (Digital) சைகை மொழி உதவிச் சேவை அறிமுகப்படுத்தப்பட்டது.

தேருநர் இடாப்பில் பதிவு செய்துள்ள பிரசைகள் தமது வதிவை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிப்பதற்கு 2015 தொடக்கம் இன்று வரை அத்தாட்சிப்படுத்தப்பட்ட வாக்காளர் பதிவுத் விபரங்கள் அடங்கிய வாக்காளர் பதிவுப் பிரகடனத்தை இணைய வசதியுள்ள ஸ்மார்ட் கையக்கத் தொலைபேசி , கணினி அல்லது வேறு அவ்வாறான உபகரணங்கள் ஊடாக எந்த நேரத்திலும் கட்டணமின்றிப் பெற்றுக்கொள்வதற்கான வசதி செய்யப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் மும்மொழிகளிலும் புதுப்பிக்கப்பட்டுத் தொடர்ச்சியாகப் பராமரிக்கப்பட்டது. குறிப்பாக அரசியல் கட்சிகள் பதிவு, கட்சிகளின் பட்டியல், ஊடக அறிக்கைகள், ஊடக வழிகாட்டல்கள், வர்த்தமானிகள் மற்றும் சுற்றறிக்கைகள் போன்ற தகவல்கள் மும்மொழிகளிலும் உடனுக்குடன் பதிவேற்றப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் நிகழ்நிலைப்படுத்தப்பட்டது.

அதேபோன்று சமூகத்தில் பரவலாகக் காணப்படும் சமூக ஊடக வலையமைப்புகளைப் பயன்படுத்தி, பொதுமக்களுக்குத் தகவல்களை விரைவாக வழங்குவதன் மூலம் தேர்தல் செயன்முறை வினைத்திறன் மிக்கதாக மேற்கொள்வதற்காகதகவல் தொழில்நுட்ப பயன்பாடு மிகவும் உதவியாக அமைந்தது.

தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையதளம் மற்றும் சமூக ஊடகத் வலைத் தளங்களை மாற்றுத்திறனாளிகளும் இலகுவாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் தேவையான அபிவிருத்தி அலுவல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச பாடசாலைகளுக்கு முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிக்கும்போது தேவைப்படும் தேருநர் இடாப்பு/ வாக்காளர் பட்டியல் விபரங்கள், ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விலைகளின் கீழ் இணையவழியில் பாதுகாப்பான முறையில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டன. அதேபோன்று இச்சேவை கோட்டக் கல்வி அலுவலகங்கள் மற்றும் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், இலங்கை பொலிஸ் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், தேசிய கல்வியியல் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு போன்ற

நிறுவனங்களுக்கு வாக்காளர் பதிவு விபரங்களை இணையவழியில் வழங்குவதற்கான தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் அனைத்து பங்குதாரத்தரப்பினர்களுக்கும் தேர்தல்கள் செயன்முறை தொடர்பான கல்வி மற்றும் அறிவைப் பங்குதாரர்களுக்கு வழங்குவதற்காக கல்வி மற்றும் தேர்தல் பங்களிப்புக்கான முறைமை (VEEE) பராமரிக்கப்பட்டு மேலும் மேம்படுத்தப்பட்டது.

இணையவழிப் பதிவு உள்ளிட்ட ஈ-சேவைகளைப் பயன்படுத்தும்போது மக்களுக்கு ஏற்படும் சிக்கல்களைத் தீர்ப்பதற்காக அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளக்கூடிய வாட்ஸ்அப் (WhatsApp) மற்றும் மின்னஞ்சல் கணக்குகள் தயாரிக்கப்பட்டு 2025 ஆம் ஆண்டிலும் பேணிவரப்பட்டன.

இணையதளம் மற்றும் சமூக ஊடகங்கள் ஊடாகக் கிடைக்கப்பெறும் பொதுமக்களின் முறைப்பாடுகள் உரிய தரப்பினருக்கு அனுப்பப்பட்டு, அவற்றுக்கான பதில்களை வழங்கும் பணிகள் ஆண்டு முழுவதும் முன்னெடுக்கப்பட்டன.

ஈ-சேவை பயனாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்காக தொடர்பாடல் மென்பொருட்கள் பயன்பாட்டின் ஊடாக மிகவும் வினைத்திறன் கொண்ட அடிப்படையில் வழங்கப்பட்டன.

பொதுமக்களுக்குச் சிறந்த சேவையை வழங்குவதற்காக தேர்தல் ஈ-சேவைகள் குறித்த புதிய நவீன (Smart) துண்டுப்பிரசுரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக தலைமை அலுவலகம் மற்றும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் உத்தியோகபூர்வ மின்னஞ்சல் சேவைகள் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு உட்பட்டுப் பராமரிக்கப்பட்டன.

### 2.24.3. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் பராமரித்தல்

தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் உள்ள தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்ற பணிகள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. இதில் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள தரவு நிலையத்தின் சேவைகளைப் பராமரித்தல், காப்பு பிரதிகளை எடுத்தல் போன்ற பணிகள் உரிய நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகப் பிரிவுகள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் உள்ள கணினிகள், கணினி உதிரிபாகங்கள், கணினி வலையமைப்புகள், VPN வலையமைப்பு, /பயர்வால் (Firewall) மற்றும் ADSL இணைய அமைப்புத் தொகுதிகளைப் பாதுகாப்பாகப் பேணிவருதல் மற்றும் அவற்றுக்கான உரியவாறு பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது.

இணையவழி முறைகளைப் பயன்படுத்தி தலைமை அலுவலகம், அனைத்து மாவட்ட தேர்தலகள் அலுவலகங்கள் மற்றும் வெளித் தரப்பினருடன் கூட்டங்களை நடத்துவதற்காக Video Conferencing) தொழில்நுட்ப உதவி வழங்கப்பட்டது.

தலைமை அலுவலகத்தின் பாதுகாப்பு கெமரா தொகுதி (CCTV) விஸ்தரித்தல் மற்றும் அது தொடர்பான பணிகள் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன.

## 2.25. நிதி மற்றும் கணக்காய்வு தகவல்கள்

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி, 020 ஆம் இலக்க செலவுத் தலைப்பின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு 21,487 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததோடு உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களுக்காக 7-1409 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் 20,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், மாகாண சபைத் தேர்தல் நடைபெறாத காரணத்தினால் 9,000 மில்லியன் ரூபா நிதி EH/F9/மு.நைப.(பொது)/2025 இலக்க மற்றும் 2025.12.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்திடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது.

அதற்கமைய, 020 செலவுத் தலைப்பின் கீழ் செலவினங்களை மேற்கொள்வதற்காக தேர்தல் ஆணைக்குழுவிற்கு 12,487 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டது. இதில் 12,278 மில்லியன் ரூபா மீண்டெழும் செலவினங்களுக்காகவும், 209 மில்லியன் ரூபா மூலதனச் செலவினங்களுக்காகவும் ஒதுக்கப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவு 10,452 மில்லியன் ரூபாவாகவும், மூலதனச் செலவு 125 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது. இது சதவீத அடிப்படையில் மீண்டெழும் செலவு 85.12% ஆகவும், மூலதனச் செலவு 60% ஆகவும் காணப்பட்டது. 2025 ஆம் ஆண்டில் 7-1409 செலவு விடயத்தின் கீழ் தேர்தல்களை நடத்துவதற்காக ஒதுக்கப்பட்ட 11,000 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டிலிருந்து, 2024 இல் நடைபெற்ற சனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் ஆகியவற்றின் செலவுகளுக்காகவும், 2025 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காகவும் 9,297 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது சதவீத அடிப்படையில் 84.5% ஆகும். 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டில் மீண்டெழும் செலவு 14,338 மில்லியன் ரூபாவாகவும், மூலதனச் செலவு 89.6 மில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பு/ வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல் மற்றும் மீளாய்வு செய்தல் தொடர்பான பணிகளுக்காக 198.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதோடு மேலும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய சுமார் 812,000 ரூபாவையும் சேர்த்தால் மொத்தச் செலவு சுமார் 199.2 மில்லியன் ரூபாவாகும். 2024 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்புத் தயாரிப்பதற்காகச் செலவிடப்பட்ட 236.2 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடும் போது, 2025 இல் செய்யப்பட்ட செலவு ஒப்பீட்டளவில் குறைவான பெறுமதியொன்றைக் காட்டுகின்றது. குறைந்த செலவிலான புதிய முறைகளைப் பயன்படுத்தி தேருநர் இடாப்பு/ வாக்காளர் பட்டியல் தயாரிப்பு மற்றும் மீளாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் செலவைக் குறைத்துக் கொள்வதற்கு முடிந்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் அனர்த்த கடன் / விசேட முற்பணம் / விழா முற்பணம் ஆகியவற்றைக் கோரிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக சுமார் 31.7 மில்லியன் ரூபா கடன் முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2025 இல் அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் அதிகபட்ச செலவு எல்லை 32 மில்லியன் ரூபா ஆகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025 இல் வழங்கப்பட்ட கடன் முற்பணத் தொகை 14 மில்லியன் ரூபா அதிகரிப்பைக் காட்டுகிறது. 2024 இல் அதிகபட்ச செலவு எல்லை 18 மில்லியன் ரூபா ஆகும்.

2025 ஆம் ஆண்டில் தேருநர் இடாப்பின் பிரித்தெடுப்புகளை விநியோகிப்பதன் மூலம் கிடைத்த வருமானம் 6.65 மில்லியன் ரூபா ஆகும். 2024 இல் இவ்வருமானம் 6.21

மில்லியன் ரூபாவாக இருந்ததோடு, 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2025 இல் 0.44 மில்லியன் ரூபாவினால் இந்த வருமானம் அதிகரித்துள்ளது.

தேருநர் இடாப்புகளைப் புத்தகங்களாக வழங்குவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அவை குறுஇவட்டுகளாக (CD) தயாரிக்கப்படுவதோடு அவற்றை விற்பனை செய்ததன் மூலம் 2025 ஆம் ஆண்டில் 4.28 மில்லியன் ரூபாய் வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025 இல் வருமானம் 2.28 மில்லியன் ரூபாவினால் அதிகரித்துள்ளது.

2025 ஆம் ஆண்டில் பல்வேறு விடயங்களின் கீழ் 10 கணக்காய்வு விசாரணைகள்/வினவல்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்டன. அந்த 10 கணக்காய்வு வினவல்களுக்கும் பதில்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 2.26. உள்ளக கணக்காய்வுப் பிரிவின் பணிகள்

தேர்தல் ஆணைக்குழுவின் மேற்பார்வையின் கீழ் உள்ள தேர்தல்கள் செயலகம் மற்றும் மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களின் உள்ளக கணக்காய்வுப் பணிகளை மேற்கொள்ளும் போது தேசிய கணக்காய்வுச் சட்டம், நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய, உள்ளக கணக்காய்வுப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நியதிச்சட்டரீதியான கடமைகள் 2025 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டன.
அதற்கமைய, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41(2) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய, 2025 ஆம் ஆண்டில் 3 முகாமைத்துவ கணக்காய்வுக் குழுக்கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவிற்குள் வினைத்திறனான செயலாற்றுகையை உறுதிப்படுத்துவதற்காக, அந்தந்த கணக்காய்வுத் துறைகளுக்குரிய அதிக அவதானம் மிக்க செயல்பாடுகளைப் பரிசீலிப்பதற்காக கவனம் செலுத்தப்பட்டது.

2025 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பாக, தேர்தலுக்குப் பின்னரான கணக்காய்வு வினவல்களைக் குறைக்கும் நோக்கில், பல கணக்காய்வுத் துறைகளை உள்ளடக்கிய சுற்றறிக்கை ஒன்று உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் வெளியிடப்பட்டது. மேலும், தேர்தல் பணிகளுக்கு நேரடிப் பங்களிப்பை வழங்கும் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவினால் நிதி ஒதுக்கீடுகள் குறித்தொதுக்கி வழங்கப்படும் அரச நிறுவனங்களான அஞ்சல் திணைக்களம் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றிற்குச் செலவு முகாமைத்துவம் மற்றும் முறையான ஆவணப்படுத்துதல் குறித்த முன்னெச்சரிக்கைகள் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அதற்கமைய, முறையான கட்டுப்பாட்டுடன் தேர்தல் செலவுகளை மேற்கொள்வதற்கான அடிப்படை வழிகாட்டல்களை இப்பிரிவினால் வழங்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் முதலாம் மற்றும் இரண்டாம் காலாண்டுகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பூர்வாங்க ஒழுங்கமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தேர்தலுக்குப் பிந்திய கடமைகள் காணப்பட்டதுடன், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான தேர்தல் பிணக்குத் தீர்த்தல் பிரிவின் கடமைகளுடன் சேர்த்து 90% செயல்பாட்டு முன்னேற்றத்தை அடைந்து கொள்வதற்கு இப்பிரிவினால் முடிந்துள்ளது.

தேர்தல் செயலகத்தின் ஒவ்வொரு பிரிவு தொடர்பாகவும் 01 கணக்காய்வுப் பரிசீலனையும், 2024 இல் நடைபெற்ற இரண்டு தேசிய தேர்தல்கள் தொடர்பாக மாவட்ட தேர்தல்

அலுவலகங்கள் தொடர்பான 19 இடைக்கால கணக்காய்வுப் பரிசீலனைகளும் நடத்தப்பட்டன. 2024 இன் இறுதிக் காலாண்டில் நடத்தப்பட்ட 6 இடைக்கால கணக்காய்வுப் பரிசீலனைகளுடன் சேர்த்து, 25 இடைக்கால கணக்காய்வு அறிக்கைகள் 2025 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டன. அதேபோன்று, அந்த இரண்டு தேசிய தேர்தல்கள் தொடர்பாக 11 மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் முழுமையான கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டதோடு 02 அறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக 2025 ஆம் ஆண்டில் 09 விசாரணைகள் தொடர்பாக அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அவற்றுள் 02 விசாரணைகள் 2024 இன் இறுதிக் காலாண்டில் நடாத்தப்பட்ட விசாரணைகள் என்ற போதிலும் அவற்றின் அறிக்கைகள் 2025 இலேயே சமர்ப்பிக்கப்பட்டன. 2025 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட மொத்த விசாரணை அறிக்கைகளின் எண்ணிக்கை 08 ஆகும். வெளியிடப்பட்ட அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பிலும் தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(4)(3) உப பிரிவின் கீழ் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய கணக்காய்வு அவதானிப்புகளின் அடிப்படையில், எதிர்காலத் தேர்தல்கள் தொடர்பாக எழக்கூடிய கணக்காய்வு விசாரணைகளை/வினவல்களைக் குறைக்கும் நோக்குடன், புதிய உள்ளக கட்டுப்பாட்டு உத்திகள் மற்றும் தேர்தல் செயன்முறையின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்தும் முன்னெச்சரிக்கை தொடர்பான முன்மொழிவுகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.27. எதிர்கால இலக்குகள்

எதிர்காலத்தில், நியதிச்சட்ட ரீதியாக ஒப்படைக்கப்பட்டுள்ள தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான பணிகளை மேற்கொள்வது போன்றே, தகைமையுள்ள எவரொருவரும் விடுபடாத வகையில் அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல்களை நடாத்துதல்.

**ரசிக்க பீரிஸ்**
**தேர்தல் ஆணையாளர் நாயகம்**

ரசிக்க பீரிஸ்
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்
தேர்தல் ஆணைக்குழு
சரண மாவத்தை, இராஜகிரிய

# 03 ஆம் அத்தியாயம் - ஆண்டிற்கான மொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றுகை

ஏசீஏ- எப்

2025 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

| திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2025 | | குறிப்பு | உண்மை நிலை | | |
|---|---|---|---|---|---|
| | | | 2025 | 2024 | |
| ரூ. | | | ரூ. | ரூ. | |
| - | **வருமானப் பெறுகைகள்** | | - | - | |
| - | வருமான வரி | 1 | - | - | ஏசீஏ-1 |
| - | உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி | 2 | - | - | ஏசீஏ-1 |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள் | 3 | - | - | ஏசீஏ-1 |
| - | வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும் | 4 | - | - | ஏசீஏ-1 |
| - | **மொத்த வருமானப் பெறுகைகள் (அ)** | | - | - | |
| - | **வருமானமற்ற பெறுகைகள்** | | - | - | |
| - | திறைசேரி பணிமுற்பணங்கள் | | 6,437,099,867 | 7,800,394,000 | ஏசீஏ-3 |
| - | வைப்புகள் | | 177,363,564 | 19,375,496 | ஏசீஏ-4 |
| - | முற்பணக் கணக்குகள் | | 36,830,411 | 35,094,414 | ஏசீஏ-5 |
| | ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள் | | - | - | |
| - | **மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)** | | **6,651,293,842** | **7,854,863,910** | |
| - | **மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)** | | **6,651,293,842** | **7,854,863,910** | |
| | **திறைசேரிக்கு அனுப்புதல் (ஈ)** | | - | - | |
| | **தேறிய வருமானக் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ) - (ஈ)** | | **6,651,293,842** | **7,854,863,910** | |
| | **கழிக்க : செலவினம்** | | | | |
| - | **மீண்டுவரும் செலவினம்** | | | | |
| 718,250,000 | சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள் | 5 | 710,961,736 | 593,328,155 | ஏசீஏ-2(ii) |
| 11,556,750,000 | ஏனைய பொருட்கள் சேவைகள் | 6 | 9,739,052,211 | 13,742,335,691 | ஏசீஏ-2(ii) |
| 3,000,000 | மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள் | 7 | 2,818,625 | 2,892,376 | ஏசீஏ-2(ii) |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மீண்டுவரும் செலவினம் | 9 | | | ஏசீஏ-2(ii) |
| **12,278,000,000** | **மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)** | | 10,452,832,572 | **14,338,556,222** | |
| | **மூலதனச் செலவினம்** | | | | |
| 99,000,000 | முலதனச் சொத்துக்களின் புனரமைப்பும், மேம்படுத்தலும் | 10 | 33,700,430 | 29,742,803 | ஏசீஏ-2(ii) |
| 108,000,000 | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 89,944,955 | 58,577,962 | ஏசீஏ-2(ii) |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | | | ஏசீஏ-2(ii) |
| - | நிதிச் சொத்துக்களின் கொள்வனவு | 13 | | | ஏசீஏ-2(ii) |
| 2,000,000 | திறன் விருத்தி | 14 | 1,765,400 | 1,300,337 | ஏசீஏ-2(ii) |
| - | ஏனைய மூலதனச் செலவினங்கள் | 15 | | | ஏசீஏ-2(ii) |
| **209,000,000** | **மொத்த மூலதனம் செலவினம் (எ)** | | **125,410,785** | **89,621,102** | |
| | **வைப்புக் கொடுப்பனவுகள்** | | 292,189,730 | 9,210,475 | ஏசீஏ-4 |
| | **முற்பணக் கொடுப்பனவுகள்** | | 39,351,316 | 27,091,269 | ஏசீஏ-5 |
| | **ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்** | | | - | |
| | **பிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)** | | **331,541,046** | **36,301,744** | |
| | **மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)** | | 10,909,784,403 | 14,464,479,068 | |
| | **டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)** | | (4,258,490,561) | (6,609,615,158) | |
| | **பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி** | | (4,258,490,561) | (6,609,615,158) | ஏசீஏ-7 |
| | **டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி** | | | | ஏசீஏ-3 |
| | | | (0) | - | |

## 2025.12.31ல் உள்ளவாறான
## நிதி நிலைமைக் கூற்று

| | குறிப்பு | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|---|
| **நிதி அல்லாத சொத்துக்கள்** | | | |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம் | ஏசீஏ-6 | 2,665,346,947 | 2,463,295,691 |
| **நிதி சொத்துக்கள்** | | | |
| முற்பணக் கணக்குகள் | ஏசீஏ-5/5ஏ | 92,057,327 | 89,536,422 |
| காசு மற்றும் காசுக்குச் சமனானவை | ஏசீஏ-3 | | |
| மொத்த சொத்துக்கள் | | **2,757,404,274** | **2,552,832,113** |
| **தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு** | | | |
| திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள் | | 32,649,639 | (84,697,432) |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம் | | 2,665,346,947 | 2,463,295,691 |
| வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம் | ஏசீஏ-5பி | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வைப்புக் கணக்குகள் | ஏசீஏ-4 | 59,407,688 | 174,233,854 |
| பணிமுற்பண மீதி | ஏசீஏ-3 | - | - |
| மொத்த பொறுப்புக்கள் | | **2,757,404,274** | **2,552,832,113** |

பக்க இலக்கம் 07 முதல் 22 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் / பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 23 முதல் 31 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2025 **ஆம் ஆண்டின் 17.12.2025 ஆம் திகதியிடப்பட்ட இல 02/2025 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலைமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.** அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் எண் தேசிய கணக்காய்வு சட்டத்தின பிரிவு 38(1)(அ) இன் படி நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

..............................

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ரசிக்க பீரிஸ், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய
பதவி :
திகதி : 2026. 02. 23

..............................

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ரசிக்க பீரிஸ், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய
பதவி:
திகதி : 2026. 02. 23.

..............................

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் / பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : K.S.P. PERERA, Chief Financial Officer, Election Commission, Sarana Mawatha, Rajagiriya.
திகதி : 26/2/26

# 2025 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
# காசுப் பாய்ச்சல் கூற்று

| | உண்மை நிலை 2025 ரூபா | 2024 ரூபா |
|---|---|---|
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| மொத்த வரிப் பெறுகைகள் | | |
| கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் | | |
| இலாபம் | | |
| வருமானம் அல்லாத பெறுகைகள் | 120,381,492 | 80,621,056 |
| ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் | | |
| கிடைக்கப்பெற்ற கட்டுநிதி | 6,437,099,867 | 7,800,394,000 |
| முற்பணங்களை அறவிடல் | 37,033,590 | 39,960,375 |
| வைப்புக்களின் பெறுகை | 177,363,564 | 19,375,496 |
| **செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)** | **6,771,878,513** | **7,940,350,927** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள் | 6,368,247,338 | 7,826,547,036 |
| மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும் | 2,818,625 | 2,892,376 |
| ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம் | 1,470,434 | 1,226,479 |
| திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம் | - | - |
| முற்பணக் கொடுப்பனவு | 38,021,008 | 26,737,839 |
| வைப்புக் கொடுப்பனவு | 292,189,730 | 9,210,475 |
| **தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)** | **6,702,747,135** | **7,866,614,205** |
| **தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)** | **69,131,378** | **73,736,722** |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| வட்டி | | |
| பங்கு இலாபம் | | |
| உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை | 678,631 | 375,031 |
| உப கடன்கள் மீதான அறவீடுகள் | | |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)** | **678,631** | **375,031** |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| மூலதன செலவினம் | 69,810,009 | 74,111,754 |
| **முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)** | **69,810,009** | **74,111,754** |
| **முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)** | **(69,131,378)** | **(73,736,723)** |
| **தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)** | **-** | **(0)** |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்** | | |
| உள்ளூர்க் கடன்கள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் | - | - |
| பெற்ற நன்கொடைகள் | - | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)** | - | - |
| **கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு** | | |
| உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள் | - | - |
| **நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)** | - | - |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)** | - | - |
| **காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)** | - | - |
| **ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி** | - | - |
| **டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி** | - | - |

ஏசீஏ-7

**பணி முற்பண இணக்க கூற்று**

| | | |
|---|---|---|
| அறிக்கையிடும் நிறுவனம் சார்பாக பிற நிறுவனங்களால் சேகரிக்கப்படும் வருமானம் | - | |
| ஏனைய செலவின தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் | 1,470,434 | |
| ஏனைய செலவின தலைப்புக்களுக்காக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பணம் ”பி” கணக்கிற்கான மேற்கொள்ளப்பட்ட வரவு | 4,549,673 | |
| பிற நிறுவனங்களினால் அறிக்கையிடும் நிறுவனத்தின் முற்பணம் ”பி” கணக்கிற்கான மேற்கொள்ளப்பட்ட செலவுகள் | 1,330,308 | 7,350,415 |
| **கழிக்க:-** | | |
| ஏனைய நிறுவனங்கள் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தினால் சேகரிக்கப்படும் வருமானம் | 121,060,123 | |
| அறிக்கையிடும் நிறுவனம் சார்பாக ஏனைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் செலவுகள் | 4,137,367,385 | |
| ஏனைய நிறுவனங்கள் சார்பாக அறிக்கையிடும் நிறுவனத்தினால் முற்பண ”பி” கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவுகள் | 6,083,160 | |
| ஏனைய நிறுவனங்களினால் முற்பண ”பி” கணக்கிற்கு மேற்கொள்ளப்பட்ட வரவுகள் | 1,330,308 | 4,265,840,976 |
| **2025 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பணி முற்பண இணக்கக் கூற்று** | | **(4,258,490,561)** |

* மேற்குறிப்பிடப்பட்டவற்றுக்கு மேலதிகமாக ஏதேனும் தேவையெனில் சேர்க்கலாம்.

**3.2 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்.**

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | வருமான மதிப்பீடு | | சேகரிக்கப்பட்ட வருமானம் | |
|---|---|---|---|---|---|
| | | ஆரம்ப மதிப்பீடு (ரூ.மி) | இறுதி மதிப்பீடு(ரூ.மி) | சேகரிக்கப் பட்ட அளவு (ரூ.மி) | இறுதி வருமான மதிப்பீட்டின் % ஆக |
| 20.02.02.99 | வட்டி - ஏனையவை | 4.50 | 4.50 | 3.97 | 88 |
| 20.03.02.99 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - நிர்வாகம் சார்ந்த கட்டணங்கள் மற்றும் கொடுப்பனவுகள் | 0.04 | 0.04 | 0.04 | 100 |
| 20.03.99.00 | விற்பனை மற்றும் கட்டணங்கள் - ஏனைய பெறுவனவுகள் | 14.00 | 14.00 | 77.18 | 551 |
| 20.02.01.01 | உத்தியோகபூர்வ இல்லங்களின் வாடகை | 1.44 | 1.44 | 2.13 | 147 |
| 20.04.01.00 | விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் | 20.15 | 26.22 | 32.18 | 122 |
| 20.06.02.02 | மூலதன விற்பனை (ஏனையவை) | 1.00 | 1.00 | 0.65 | 65 |

### 3.2.1. வருமானங்கள் சேகரித்தல் செயலாற்றுகை

ஏற்புடையதாகமாட்டாது

### 3.2.2. குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பயன்படுத்திக் கொள்ளல் செயலாற்றுகை

ரூபா. ,000

| நிதி ஏற்பாட்டு வகை | ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு | | உண்மையான செலவு(ரூ.) | பயன்படுத்திக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடானது நிறைவு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் % ஆக. |
|---|---|---|---|---|
| | ஆரம்ப நிதி ஏற்பாடு (ரூ.) | இறுதி நிதி ஏற்பாடு (ரூ.) | | |
| (1) மீண்டெழும் | 12,278,000,000 | 12,278,000,000 | 10,450,832,572 | 85 |
| | | | | |
| (2) மூலதனம் | 209,000,000 | 209,000,000 | 125,410,785 | 60 |

**3.2.3. நி.பி. 208 இன் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள்.'.திணைக்களங்களின் ஒரு பிரதிநிதியாக இந்தத் திணைக்களத்திற்கு.'. மாவட்ட செயலகத்திற்கு.'. மாகாண சபைக்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு**

ரூப.000

| தொ. இல. | நிதி ஏற்பாடு கிடைக்கப்பெற்ற அமைச்சு/ திணைக்களம் | நிதி ஏற்பாட்டின் நோக்கம் | நிதி ஏற்பாடு | | உண்மையான செலவினம் | பயன்படுத்திக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாடானது நிறைவு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டின் % ஆக. |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆரம்ப நிதி ஏற்பாடு | ஆரம்ப நிதி ஏற்பாடு | | |
| 1 | ஓய்வூதியத் திணைக்களம | | 1140 | 1140 | 1140 | 100 |

3.2.4. நிதியல்லாத சொத்துக்களை அறிக்கைப்படுத்தல் செயலாற்றுகை

| வருமானக் குறியீடு | வருமானக் குறியீட்டின் விபரம் | 2025.12.31 ஆம் திகதியன்று பொருட்கள் கணக்கெடுப்புக்கமைய மீதி | 2025.12.31 ஆம் திகதியன்று நிதி நிலைமை அறிக்கைக்கமைய மீதி | எதிர்காலத்தில் கணக்கீட்டுக்குரிய | முன்னேற்றத்தை மூ ஆக அறிக்கைகப்படுத்தல் |
|---|---|---|---|---|---|
| 9151 | கட்டிடங்கள் மற்றும் அமைப்புக்கள் | 288,660,133 | 288,660,133 | | 100% |
| 9152 | இயந்திர சாதனங்கள் | 928,409,587 | 928,409,587 | | 100% |
| 9153 | காணிகள் | 1,338,539,612 | 1,338,539,612 | | 100% |
| 9154 | அருவச் சொத்துக்கள் | - | - | | |
| 9155 | உயிரியல் சொத்துக்கள் | - | - | | |
| 9160 | நடைபெற்றுவரும் வேலைகள் | 109,737,614 | 109,737,614 | | 100% |
| 9180 | குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் | - | - | | |

3.2.5. கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

# தேசிய கணக்காய்வு அலுவலகம்

**எனது இல:** PIC/B/EC/2/25/5 **திகதி:** 2026 மே 27

**தலைமை கணக்கீட்டு அலுவலர்,**
**தேர்தல் ஆணைக்குழு.**

**தலைப்பு 020 – தேர்தல் ஆணைக்குழுவின் 2025 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக, 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் சுருக்க அறிக்கை.**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள கருத்துரை

**தலைப்பு 020 –** தேர்தல் ஆணைக்குழுவின் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றைய திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் என்பவற்றை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களைக் கொண்ட 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(1) உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது கட்டளைப் பிரகாரம் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் கண்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமான எனது கருத்துரைகளைத் தெரிவித்தல் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆவது பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு வருடாந்த விரிவான முகமைத்துவ கணக்காய்வு அறிக்கை எதிர்காலத்தில் அனுப்பிவைக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) உறுப்புரையுடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் சமரப்பிக்கப்பட

வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படுகின்ற தாக்கங்கள் தவிர்த்து,தேர்தல் ஆணைக்குழுவின் 2025 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களினால், நிதி நிலைமை மற்றும் நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றுக்கள், நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றக்களைத் தயாரிக்கின்ற அடிப்படைகளுக்கு இணங்கியதாக அனைத்துப் பொருண்மைகளும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள கருத்துரைக்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்கள் முனைப்பழியுள்ள எனது கருத்துரைக்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கமைய என்னால் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த கணக்காய்வுத் தரத்தின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கை அறிக்கையில் நிதிக்கூற்று தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு எனும் பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது கருத்துரைக்கான அடிப்படையை வழங்குவதன் நிமித்தம் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுக்கான சாட்சிகள் போதுமானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 விடயத்தை வலியுறுத்துதல் – நிதிநிலைமைஅறிக்கைகளைத் தயாரிக்கும் அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்ற அடிப்படை விபரிக்கப்படுகின்ற நிதிக்கூற்றுக்களுக்காக குறிப்புக்கள் 1 தொடர்பில் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். நிதிநிலமை அறிக்கைகள், அரசாங்க நிதி ஒழுங்குவிதி 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் ஆம் 17 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இல. 02/2025 இற்கு அமைவாக, தேர்தல் ஆணைக்குழு, பொதுத் திறைசேரி மற்றும் பாராளுமன்றத்தின் தேவைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த நிதிக்கூற்றுக்கள் பிற நோக்கங்களுக்குப் பொருத்தமற்றதாக இருக்கலாம். எனது அறிக்கை தேர்தல் ஆணைக்குழுவின், பொதுத் திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் பயன்பாட்டிற்காக மாத்திரம் நோக்கமாக கொள்ளப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் எனது அபிப்பிராயம் மாற்றம் செய்யப்படமாட்டாது

## 1.4 நிதிக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள்

அரச நிதி ஒழுங்கு விதி 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இல. 02/2025 இற்கு அமைவாக ஏற்பாடுகளுக்கமைய அனைத்து பொருண்மைகள் தொடர்பில் உண்மை மற்றும் நியாயமான நிலைமையை வெளிப்படுத்தும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களின்றி நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) ஆவது பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவினால் வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடியவாறு தமது வருமானம்,செலவுகள்,சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பொருத்தமானவாறு ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணிவரப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 (1)(இ) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவின் நிதி நிர்வாகத்திற்காக விளைதிறன்மிக்க உள்ளக நிர்வாக முறைமையைத் தயாரித்துப் பேணிவருவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுப்படுத்தல் வேண்டுமென்பதோடு அந்த முறைமையின் விளைதிறன் சம்பந்தமாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்றை மேற்கொண்டு அதற்கமைய முறைமையை விளைதிறன்மிக்க வகையில் நடாத்திச் செல்வதற்குத் தேவையான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 1.5. நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்று, மோசடிகள் மற்றும் தவறுகளால் ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராததவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் எனது கருத்துரை உள்ளடங்கிய கணக்காய்வு அறிக்கையை வெளியிடுவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்பாடாக இருந்தாலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வை மேற்கொள்ளும்போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான உத்தரவாதமாக இருக்க மாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதோடு,அதன் பொருண்மையான தன்மை இந்த நிதிக் கூற்றை அடிப்படையாகக்கொண்டு ஆய்வாளர்களால் எடுக்கப்படும் பொருளாதாரம் சார்ந்த தீர்மானங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்த முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

என்னால் தொழில்சார் வெளிப்டைத்தன்மை மற்றும் தொழில் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு கருத்துரைக்கான அடிப்படையைப் பெற்றுக்கொள்ளும் போது, மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட முடியுமான பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் ஏற்படும் ஆபத்தை இனங்கண்டு கொள்ளல் மற்றும் மதிப்பிடுவதற்காக சந்தரப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. பொருண்மையான பொய் கூற்றுக்களினால் ஏற்படும் தாக்கத்தினைப் பார்க்கிலும் மோசடிகள் காரணமாக ஏற்படும் தாக்கம் பலமானதாக இருப்பதுடன் கெட்ட கூட்டணி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் என்பன மோசடிகள் இடம்பெறுவதற்கான காரணங்களாகும்.
- உள்ளக நிர்வாகத்தின் பயன்தருதன்மை சம்பந்தமாக கருத்துத் தெரிவிப்பதற்கு எதிர்பார்க்கப்படவில்லை என்றபோதிலும், சந்தர்ப்பத்திற்கேற்ப பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிட்டுக்கொள்வதற்காக உள்ளக நிர்வாகம் தொடர்பான புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருத்தலை மதிப்பீடு செய்யப்பட்டது.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் பொருத்தமான மற்றும் நியாயமான விதத்தில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதென மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மொத்த முன்வைத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின்போது இனங்கண்டுகொள்ளப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டறிதல்கள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரை அறிவுறுத்தினேன்.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்தல்

### 1.6.1 நிதியல்லாச் சொத்துக்கள்:

**(அ)** மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா. 20,648,362 ஆன 245 அச்சிடல் பொறிகளின் பெறுமதி இருமுறை கணிப்பீடு செய்யப்பட்ட காரணத்தால் நிதியல்லாத சொத்துக்களின்பெறுமதி அந்த தொகையினால் அதிகமாக காட்டப்பட்டிருந்து.

**(ஆ)** 2025 திசெம்பர் 17 ஆம் திகதிய 02/2025 ஆம் இலக்க அரச கணக்காய்வு வழிகாட்டல் சுற்றறிக்கை 8.2 பந்திக்கு அமைய தொடர்ந்தும் அறிக்கையிடப்பட வேண்டிய , நிதியல்லாச் சொத்துக்கள் இருப்பின் அவை உரியவாறு இனங்காணப்பட்டு கிரயத்தில் அல்லது கிரயம் இனங்காணப்பட முடியாத சந்தர்ப்பங்களின் போது மதிப்பீடு செய்யப்பட்டபெறுமதிக்கு கணக்கில் பதிதல் வேண்டும் என்றபோதிலும் சொத்துக்கள் உருப்படி 09 இற்குரிய 317 சொத்து அலகின் பெறுமதி சரியாக இனங்காணப்பட்டு கணக்கில் பதியத் தவறியதன் மூலம் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

**(இ)** 2024 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பண்டக் கணக்கெடுப்பின் போது, அகற்றப்படல் வேண்டுமென இனங்காணப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் 57 உருப்படிகளை நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டிற்குரிய நிதியல்லாச் சொத்துக்களைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றின் கீழ் அரச நிதி ஒழுங்குவிதி 208 இன் மூலம் அமைச்சு/திணைக்களத்தினால் செய்யப்பட்ட செலவான ரூபா. 15,770,423 பெறுமதி மூலதனக் கிரயமாக்கப்பட்டுள்ளது.

**(உ)** காசுப்பாய்ச்சல் கூற்றுக்கமைய உரித்து நீங்கல் ஏற்பாடு மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனையின் கீழ் ரூபா. 678,631 மீதி காட்டப்பட்ட போதிலும், அந்தச்அகற்றப்பட்ட சொத்துக்களின் கிரயம் நிதியல்லாச் சொத்துக்களிலிருந்து நீக்காமையால் நிதியல்லாச் சொத்துக்களின் பெறுமதி அந்தத் தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.

**(ஊ)** மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டின் பண்டக் கணக்கெடுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மீதிகள் Boss Report -இல் உள்ள மீதியுடன் ஒப்பிடும்போது 07 பண்ட உருப்படிகளில் 5,009 பொருட்களின் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது.

**1.6.2 கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை.**

மூலதனச் சொத்துக்களைப் புதுப்பித்தல், அதிகரித்தல் மற்றும் மூலதனச் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான விடயங்களின் கீழ் அரச நிதி ஒழுங்கு விதி 208 இன் கீழ், அமைச்சு/திணைக்களத்தினால் செலவிடப்பட்ட ரூபா. 55,600,776 கணக்கில் பதியப்பட்டிருந்த போதிலும், அந்தச் செலவை உறுதிப்படுத்துவதற்கான எந்தவொரு ஆவணமும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.6.3 ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணப்படாமை**

**(அ)** 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் படி, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் போக்குவரத்து கொடுப்பனவைப் பெறும் உத்தியோகத்தர்களுக்கு அனுமதிக்கப்பட்ட மேலதிக எரிபொருள் அளவு குறித்த ஆவணம் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் PRE/2024/16 மற்றும் PE/2024/35 ஆம் இலக்க சுற்றறிக்கைகளின்படி, குருநாகல் மாவட்டத்திற்குரிய எரிபொருள் வழங்கல் தொடர்பான ஆவணமொன்று பேணிவரப்பட வேண்டியிருந்த போதிலும், 2024 சனாதிபதித் தேர்தலுக்காக ரூபா. 11,939,999 மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்காக ரூபா. 11,246,845 எரிபொருட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், போக்குவரத்து குழுவினால் வழங்கப்பட்ட எரிபொருட்கள் தொடர்பாக பேணிவரப்பட்ட அத்தகைய ஆவணமொன்று கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**(இ)** தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் 2024 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய PRE/2024/40 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரமும், 2024 ஒக்தோபர் 13 ஆம் திகதிய PRE/2024/40 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரமும், குருநாகல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வாகனங்களுக்காக, 2024 சனாதிபதித் தேர்தலுக்காக ரூபா. 12,601,106 மற்றும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலுக்காக ரூபா.12,836,903 செலவிடப்பட்டிருந்த போதிலும், வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய ஆவணமொன்று பேணப்படவில்லை.

**(ஈ)** தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் 2024 ஒக்தோபர் 13 ஆம் திகதிய PRE/2024/38 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், குருநாகல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தினால் பாராளுமன்றத் தேர்தலுக்காக வாடகை அடிப்படையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்காக ரூபா. 12,836,903 செலவிடப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் போக்குவரத்து குழுவினால் ஆவணமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, சுற்றறிக்கையின் 12 ஆம் பிரிவின் படி அந்த ஆவணம் உதவி/பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் பொறுப்பில் வைத்திருக்கப்பட வேண்டுமென்ற போதிலும், அத்தகைய ஆவணம் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

**2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் குறித்த அறிக்கை**

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ)பிரிவின் பிரகாரம்,பின்வரும் விடயங்களை நான் வெ ளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் இணங்கியுள்ளதென்பது.

(ஆ) கடந்த வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3. நிதி மீளாய்வு**

**3.1 செலவு முகாமைத்துவம்:**

**(அ)** அரச நிதி ஒழுங்கு விதி 50 இன் பிரகாரம், செலவு மதிப்பீடுகள் முறையாகத் தயாரிக்கப்படாமையினால், செலவுத் தலைப்பு 21 இன் நூற்றுக்கு 05 முதல் நூற்றுக்கு 70 சதவீதம் வரையிலான இடைவெளியில் ஒதுக்கீடுகள் பரிசீலனைக்கு உட்பட்ட ஆண்டில் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** அரச நிதி ஒழுங்கு விதி 66 இன் கீழ் ஒரு செலவுத் தலைப்பிலிருந்து மற்றொன்றிற்கு மாற்றப்பட்ட ரூபா. 1,000,000 ஒதுக்கீடு, ஆண்டு முடிவடைந்த நிலையிலும் செலவிடப்படாமல் இருந்தது.

### 3.2 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளுக்கு வருதல்

**(அ)** அரச நிதி ஒழுங்கு விதி 94(1)இன் பிரகாரம், வருடாந்த மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கீடு இருந்தாலன்றி, வேலை, சேவை அல்லது வழங்களுக்கான எந்தவொரு செலவுக்காக அல்லது கடப்பாட்டுக்காக இணங்கக் கூடாதென்ற நிலையில், 03 செலவுத் தலைப்புகளுக்காக ரூபா. 3,109,944 ஒதுக்கீட்டை விஞ்சிய கடப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஆ)** அரச நிதி ஒழுங்கு விதி 94(2) இன் பிரகாரம், உயர்ந்தபட்ச கடப்பாட்டு எல்லையாக 15 செலவுத் தலைப்புகளின் கூட்டுத்தொகையான ரூபா. 360,549,500 நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டிருந்த போதிலும், அது ரூபா. 354,396,167 எனத் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்ததோடு இதன் படி, ரூபா. 6,153,333 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

**(இ)** மென்பொருள் பராமரிப்புச் செலவின் கீழ் ரூபா. 1,706,314 பொறுப்பு நிதி அறிக்கையின் இணைப்பு (iv) இன் கீழ் காட்டப்பட்டிருந்ததோடு, 2026 ஆம் ஆண்டில் அந்தச் செலவு வாகனக் காப்புறுதிச் செலவுத் தலைப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**(ஈ)** பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்ட மீளாய்வு ஆண்டிற்குரிய ரூபா. 12,677,717 பெறுமதியான பொறுப்பு, நிதி அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்ட இணைப்பு (iv) பொறுப்புக்கள் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை

| சட்ட விதிகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கான தொடர்பு | இணங்கப்படாமை |
|---|---|
| 2008 யூன் 26 ஆம் திகதிய 13/2008 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 4 ஆம் பிரிவு | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு மேலதிக எரிபொருளுக்கான ஒதுக்கீட்டை வழங்கக் கூடாது எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், எரிபொருள் கொடுப்பனவு உரித்துடைய 08 உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 1,941,853 பெறுமதியான 7,501 லீட்டர் எரிபொருள் மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. |
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | ஆணைக்குழுவிற்குச் சொந்தமான 49 வாகனங்களுக்கான எரிபொருள் பயன்பாட்டுப் (எரிதல்) பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

### 3.4 வங்கிக் கணக்குகளைச் செயற்படுத்தல்.

2025 ஆம் ஆண்டிற்கான வங்கிகணக்கு ஒப்பீடுகளுகளுக்கு அமைய கொழும்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தினால் ஏப்ரல் மாதத்திற்குரிய செலவு பரிந்துரைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா. 307,573 பெறுமதியான 28 பண உறுதிச்சீட்டுக்கள் (வவுச்சர்) காசேட்டில் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்கான காசோலைகள் எழுதப்பட்டிருக்கவில்லை. அந்த வேறுபாடு வங்கி கணக்கிணக்க கூற்றில் ஏப்ரல் மாதம் தொடக்கம் ஒக்தோபர் மாதம் வரை தொடர்ந்து காணப்பட்டதோடு, ஒக்தோபர் மாதத்தில் நினைவுச்சின்ன பணஉறுதிச் சீட்டு ஒன்றின் மூலம் அந்தத் தொகை கிடைப்பனவாக கணக்கிடப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 தேர்தல்கள் செலவுகள்

**(அ)** 2024 செப்தெம்பர் 21, நவம்பர் 14 மற்றும் 2025 மே 06 ஆகிய திகதிகளில் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களுக்கான செலவுகள் முறையே ரூபா. 7,447 மில்லியன், ரூபா. 7,667 மில்லியன் மற்றும் ரூபா. 7,393 மில்லியன் ஆகும். இதில் 60 சதவீதச் செலவுகள் தேர்தல் ஆணைக்குழுவினாலும், 12 சதவீதச் செலவுகள் அஞ்சல் திணைக்களத்தினாலும், 14 சதவீதச் செலவுகள் பொலிஸ் திணைக்களத்தினாலும், எஞ்சிய 14 சதவீதச் செலவுகள் அச்சகத் திணைக்களத்தினாலும் செய்யப்பட்டிருந்தது.

**(ஆ)** தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் 2024 ஒக்தோபர் 09 ஆம் திகதிய IADV/A&MC/2024 ஆம் இலக்க கடிதத்தின் படி, 2024 ஒக்தோபர் 14 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலுக்காக ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் குறித்த அறிக்கையை, தேர்தல்கள் முடிவடைந்து மூன்று மாத காலத்திற்குள் தொடர்புடைய திணைக்களங்களின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டு ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொண்ட எந்தவொரு திணைக்களமும் அவ்வாறான கணக்காய்வு செய்யப்பட்ட அறிக்கையை மூன்று (03) மாதங்களுக்குள் சமர்ப்பிக்கவில்லை என்பதோடு, இது தொடர்பாகச்

சுற்றறிக்கை வெளியிட்ட தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் அவர்களும் உரிய கவனத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**(இ)** ஆணைக்குழுவினால் சனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளில் முறையே 59 சதவீதம், 62 சதவீதம் மற்றும் 66 சதவீதங்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள், அமய ஊழியர்கள், ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச அலுவலர்களின் ஊதியம், கொடுப்பனவுகள், விடுமுறைதினச் சம்பளம், பயணச் செலவுகள் மற்றும் நலனோம்பல் நடவடிக்கைகளுக்காகச் செலவிடப்பட்ட செலவுகளாகும்.

**(ஈ)** சனாதிபதித் தேர்தலுக்காக அச்சகத் திணைக்களத்திற்கு தேர்தல் நடவடிக்கைகளுக்காக வழங்குவதற்கு மதிப்பிடப்பட்டிருந்த தொகையாக ரூபா. 753,560,472 ஆக இருந்தபோதிலும், வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு ரூபா. 933,473,160 ஆக இருந்தமையினால், மதிப்பிடப்பட்டிருந்த தொகையை விஞ்சியதாக ரூபா. 179,912,688 மேலதிகமாக ஒதுக்கீடு வழங்கப்பட்டிருந்தது.

**(உ)** அஞ்சல் திணைக்களத்தினால் தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட உண்மையான செலவுகள் மற்றும் தபால் திணைக்களத்திலுள்ள புள்ளிவிபர பதிவேடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட உண்மையான செலவுகளுக்கு இடையே, சனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல்களுக்காக முறையே ரூபா. 538,953,620 மற்றும் ரூபா. 549,621,248 என வேறுபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதில், ரூபா. 1,090,364,358 எனும் தொகை அஞ்சல் திணைக்களத்தின் வருமானமாக கருதி கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய தேர்தல்களுக்காகச் செய்யப்பட்ட உண்மைச் செலவுகள் மிகைக்கணிப்புச் செய்யப்பட்டிருந்த து

**(ஊ)** தேர்தல் பணிகளுக்காக அரச நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளப்படுவதோடு, அதற்காக அந்த நிறுவனங்கள் வழங்கும் மதிப்பீடுகளுக்காகத் தேர்தல்கள் ஆணைக்குழு நிதி ஒதுக்கீட்டை வழங்குகிறது. எனினும், ஏனைய நிறுவனங்களினால் தேர்தல் நடவடிக்கைகளுக்காக மாத்திரம்செய்யப்பட்டசெலவுகளை தனித்தனியாக அடையாளம் கண்டு, அந்தப் பெறுமதியை மாத்திரம் உரிய செலவுத் தலைப்பின் கீழ் கணக்கில் பதிவதற்குத் தேவையான வழிகாட்டல்களைப் திறைசேரியின் அறிவுறுத்தல்களுக்மைய தயாரித்து குறித்த நிறுவனங்களுக்கு வழ்ஙகுதல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கமைய தேர்தல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட உண்மையாகச் செய்யப்பட்ட செலவுகளைச் சரியாகக் கண்டறிதல் கணக்காய்வின் போது விவாதத்திற்குரிய காரணியாகக் காணப்பட்டது.

**(எ)** வாக்களிப்புக்காகத் தேர்தல் ஆணைக்குழுவிற்கு பொது திறைசேரியின் தேர்தல் நடாத்துவதற்கான செலவுத் தலைப்பின் கீழ் திறக்கப்படுவது வாக்கெடுப்பு பிரகடனம் செய்யப்பட்ட பின்னராகும் என்பதோடு அந்தச் செலவுத் தலைப்பை முடிவுக்குக் கொண்டுவரும் காலம் குறித்துத் தெளிவாகக் குறிப்பிடப்படாத காரணத்தினால், 2024 செப்தெம்பர் 21 திகதி நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தல், 2024 நவம்பர் பொதுத் தேர்தல் மற்றும் 2025 மே 06 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல் ஆகியன நடாந்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு செய்யப்பட்ட நாளான 2026 மார்ச் மாதம் வரையிலும் இந்தச் செலவுத் தலைப்பை செலுத்தி சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ)** 2015 ஆம் ஆண்டு தேர்தல் ஆணைக்குழு தாபிக்கப்பட்டதன் பின்னர், 03 சனாதிபதித் தேர்தல்கள், 03 பொதுத் தேர்தல்கள் மற்றும் 02 உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் என 08 தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளதோடு, அதற்கமைய கடந்த கால அனுபவங்களைப் பயன்படுத்தி தேர்தல் செலவுகளை மேலும் குறைப்பதற்குத் தேவையான வழிமுறைகளைக் கண்டறிதல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழு மேலும் கவனம் செலுத்துதல் வேண்டுமென அவதானிக்கப்பட்டது.

**(ஐ)** வாக்களிப்புச் செயற்பாட்டில் இலத்திரணியல் முறையில் வாக்களிக்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவது தொடர்பான முன்மொழிவு 2000 ஆம் ஆண்டுகளின் மத்திய பகுதியில் இருந்து கலந்துரையாடப்பட்டு வருகின்ற போதிலும், அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் ஆணைக்குழு போதுமானளவு கவனத்தைச் செலுத்தியிருக்கவில்லை.

**(ஒ)** தேர்தல் பணிகளுக்காகச் செலவுகளை மேற்கொள்ளும் போது, முறையான முகாமைத்துவம் மற்றும் சிக்கனமான முறையில் உரிய திட்டமிடலுடன் கவனமாகச் செயற்படும் நோக்கில், தேர்தல்கள் ஆணைக்குழுவினால் சனாதிபதித் தேர்தலுக்காக 74 சுற்றறிக்கைகளும், பொதுத் தேர்தலுக்காக 72 சுற்றறிக்கைகளும் வெளியிடப்பட்டிருந்தன. எனினும், அந்தச் சுற்றறிக்கைகளைப் பின்பற்றுதல் அல்லது அவற்றுக்கு இயைந்து செயற்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதோடு அந்த சுற்றறிக்கைகளிலுள்ள ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த தவறியமை/பின்பற்றியொழுகாமை தொடர்பில் சரியான பின்தொடர்தல் நடைமுறைகள் இல்லாத காரணத்தினால், அந்த சுற்றறிக்கைகளுக்கு இணங்காத நிலைமைகள் பெருமளவில் அவதானிக்கப்பட்டன. இதனால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சுற்றறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**(ஓ)** மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது மாவட்ட ரீதியாகச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, தேசிய ரீதியில் மாவட்டத் தேவைப்பாடுகளை கவனத்தில் கொண்டு, அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விபரக்குறிப்புக்கு அமைய குறித்த தேவைகளைப் பெற்றுக்கொள்ளும் பொதுவான நடைமுறையொன்றைப் பின்பற்றுதல் தொடர்பாக கவனம் செலுத்துவதன் மூலம் மேலும் செலவுகளைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கான சாத்தியப்பாடு உள்ளதென்பது அவதானிக்கப்பட்டது.

**(ஔ)** 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின்படி, வரவு மற்றும் வெளியேறுதலை உறுதிப்படுத்துவதற்கு கைவிரல் அடையாளம் பதிக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்பதுடன், அந்தச் சுற்றறிக்கையின் 02 (IV) பிரிவின் படியும் மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் 2024 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய PRE/2024/35 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04 ஆம் பிரிவின் படியும் வரவு மற்றும் வெளியேறல் கைவிரல் அடையாளம் பதிக்கும் இயந்திரத்திற்கு அமைய உறுதிசெய்யப்படல் வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணான அடிப்படையில் 2024 சனாதிபதித் தேர்தலுக்கான கடமைகளை ஆற்றுவதற்காக இரத்தினபுரி மாவட்டத் தேர்தல் அலுவலக உத்தியோகத்தர்களால் 2024 ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் மாத்திரம் ரூபா. 1,303,956 மேலதிக கொடுப்பனவு மற்றும் விடுமுறைதினச் சம்பளம் பெற்றுள்ளனர்.

### 4.2. பெறுகைகள்

**(அ)** 2025 உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்காக அஞ்சல் வாக்கு A கடித உறைகள் 750,000 மற்றும் D கடித உறைகள் 500,000 கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டிருந்தது. பின்னர், அவை A கடித உறைகள் 600,000 மற்றும் D கடித உறைகள் 400,000 எனத் திருத்தப்பட்டு வழங்குநருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பொருட்கள் விநியோகிக்கப்பட வேண்டிய திகதியான 2025 மார்ச் 24 ஆம் திகதிக்குப் பின்னரே இந்த அறிவித்தல் வழங்கப்பட்டதால், A கடித உறைகள் 650,000 மற்றும் D கடித உறைகள் 470,000 க்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக, கடித உறைகளின் தேவையைச் சரியாக மதிப்பிடத் தவறியதன் காரணமாக, A கடித உறைகள் 50,000 க்கு ரூபா. 553,000 மற்றும் D கடித உறைகள் 70,000 க்கு ரூபா. 903,000 என மொத்தம் ரூபா. 1,456,000 மேலதிகமாகச் செலவிடப்பட்டுள்ளது.

**(ஆ)** இந்தக் கொள்வனவு தொடர்பான கடித உறைகள் 2025 மார்ச் 24 ஆம் திகதிக்கு முன்பே வழங்கப்பட்டிருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், வழங்குநர்கள் குறித்த திகதிக்குள் கடித உறைகளை வழங்கவில்லை என்பதோடு கேள்விமனுக்கோரல் பத்திரத்தின் 20.2 பிரிவில் குறிப்பிட்டுள்ளவாறு, ஒரு வார கால தாமதித்தல் காலப்பகுதிக்காக ஒப்பந்தப் பெறுமதியிலிருந்து 1 சதவீதத்தை அபராதமாக அறவிடப்பட வேண்டியிருந்தும், இந்தப் பெறுகையின் D கடித உறைகள் தொடர்பான வழங்குநரிடமிருந்து ரூபா. 76,110 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(இ)** சனாதிபதித் தேர்தலுக்காக ரூபா. 34,817,758 பெறுமதியான 14,250 காட்போட் வாக்குச் சீட்டுப்பெட்டிகளைக் கொள்வனவு செய்தல் தொடர்பான அவதானிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

**(i)** பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் 5.3.11 பிரிவின் படி, விதிக்கப்படவேண்டிய, விலைமனுப் பிணை மதிப்பீட்டுத் தொகையில் 01 சதவீதம் முதல் 02 சதவீதம் வரையான தொகைக்கு சமனானதாக இருத்தல் வேண்டும். ஆனால், இந்த பெறுகைக்கான விலைமனு பிணைத் தொகை 0.95 சதவீதம் ரூபா. 200,000 என விலை மனுக்கோரல் ஆவணங்களில் பதிவு செய்யப்பட்டிருந்ததோடு அதற்கு முரணாக காசாளரிடம் பிணை தொகையை மதிப்பீட்டுத் தொகையில் 0.47 சதவீதமாக ரூபா. 100,000 என குறைத்து செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

**(ii)** பெறுகைக்காக ஒரு வழங்குநர் மாத்திரம் விலைத் தொகையை/கூறு விலையை சமர்ப்பத்திருந்தார். அந்த நிறுவனம் சமர்ப்பித்திருந்த விலைமனுக்கோரல் ஆவணங்களில் விவரக்குறிப்பில் காட்டப்பட்டுள்ள "Thickness" மற்றும் "Material" தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அந்த வழங்குநர் விவரக்குறிப்பு குறிப்பிடாமையால், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் விபரக் குறிப்புக்கான இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கும், சமர்ப்பிக்கப்பட்ட விலைத்தொகைகளை மீண்டும் மீளாய்வு செய்வதற்குள்ள சாத்தியப்பாடு அந்தந்த அளவுகளின் 03 மாதிரிகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது. வழங்குநரால் 2024 ஆகஸ்ட் 23 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் இணக்கம் தெரிவித்திருந்தார். எனினும், அந்த மாதிரிகள் பெறப்பட்டதா அல்லது பரிசோதிக்கப்பட்டதா என்பது தொடர்பான தகவல்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

**(iii)** குறித்த கட்டளைக்கு உரிய ரூபா. 2,848,860 பெறுமதியான செயலாற்றுகைப் பிணைமுறி 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், வழங்குநர் செயலாற்றுகைப் பிணை முறியை 2024 செப்தெம்பர் 19 ஆம் திகதி முதல் 2024 ஒக்தோபர் 18 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் வழங்கியிருந்ததோடு இந்தக் கட்டளை வழங்கப்பட்ட பின்னரே விலைமனுப் பிணையைச் சமர்ப்பித்திருந்தார்.

**(ஈ)** 2021 ஆம் ஆண்டின் பெறுகைத் திட்டத்தின்படி, தீயணைப்பு முறையை தாபிப்பதற்காக ரூபா. 5,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்தப் பணி நிறைவடையாத காரணத்தினால் 2024 ஆம் ஆண்டில் ரூபா. 25,000,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டிடத் திணைக்களத்துடன் ரூபா. 17,739,130 VAT இன்றி மதிப்பீட்டில் 2024 செப்தெம்பர் 30 ஆம் திகதிக்குள் பணிகளை முடிப்பதற்காக 2024 யூன் 07 ஆம் திகதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஆண்டில், நடைமுறையல்லாச் சொத்துக்கள் மாற்றம் செய்தலின் கீழ் நி ஒ.விதி 208 இன் மூலம் ரூபா. 17,430,085 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்தச் செலவை உறுதிப்படுத்துவதற்கான ஆற்றப்பட்ட வேலைகளுக்குரிய பட்டியல்கள்/ பற்றுச்சீட்டுக்கள் அல்லது இதர அறிக்கைகள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இந்த வேலை 2026 ஏப்ரல் 30 வரையில் முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை என்பதோடு, தாமதக் காலம் 19 மாத காலமாகுமென்பதோடு அந்த தாம காலத்திற்குரிய தாமதக் கட்டணங்களை அறவிடக்கூடிய வகையில் உரிய ஏற்பாடுகள் ஒப்பந்தங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(உ)** தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் 2024 யூலை 28 ஆம் திகதிய PRE/2024/12 ஆம் இலக்க ற்றறிக்கையின் 3 ஆம் பிரிவின் படி, சனாதிபதித் தேர்தலுக்காக " சந்தை விலை ஒப்பீட்டு முறை"யைப் பயன்படுத்தி குறைந்தபட்சம் 05 விலைத் தொகைகளையாவது பெற்றிருத்தல் வேண்டும். அவ்வாறு தேவையான விலைத் தொகைகளை பெறுவது கடினம் எனில், அதற்கான காரணங்கள் பெறுகைக் குழுவின் தீர்மானத்தில் உள்ளடக்கப்படல் வேண்டுமெனினும், குருநாகல் மாவட்டத்திற்குரியதாக சனாதிபதித் தேர்தலுக்கான கொள்வனவின் போது, குறைந்தபட்சம் 05 விலைத்தொகைகள் பெறப்படாமைக்குரிய காரணங்கள் பெறுகைக் குழுவின் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

**(ஊ)** கண்டி மாவட்டத்தில் சனாதிபதித் தேர்தலுக்கான பழ வகைகளை வாங்குவதற்காக ஒரு வழங்குநர் மாத்திரம் விலைத் தொகைகளை சமர்ப்பித்திருந்தார். விலைதொகை கோரல் அனுப்பப்பட்ட ஏனைய நிறுவனங்களில் ஒரு நிறுவனம் இந்த விலைத்தொகைகோரல் தொடர்பாக அறிந்திருக்கவில்லை எனவும் சில காலமாக அந்த இடத்தில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லையெனவும் மற்றுமொரு நிறுவனம் குறித்த போதுமான தகவல்களை வெளிப்படுத்திக்கொள்ள முடியவில்லை. எனவும், வேறொரு வழங்குநர் கொழும்புப் பகுதியில் வணிக நடவடிக்கைகளை மேற்கொள்பவர் என்பதும் அவதானிக்கப்பட்டது. இதன்படி, இந்த பெறுகைச் செயற்பாட்டின் ஆவணங்கள் மற்றும் அந்த அலுவலகத்தின் வெளிப்படைத்தன்மை குறித்து கணக்காய்வினால் திருப்தியடைய முடியவில்லை. பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் 1.2.1 பிரிவின் படி, கொள்வனவின் அடிப்படை நோக்கமான குறைந்தபட்ச செலவு மற்றும் பதிலளிக்க ஆர்வம் மற்றும் ஆற்றலுள்ள நிறுவனங்களுக்குக் பெறுகை செயற்பாட்டில் இணைந்து கொள்வதற்கான நியாயமான வாய்ப்புகளை வழங்குதல் இதன் மூலம் நிறைவேற்றப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

**(எ)** தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் 2024 ஆகஸ்ட் 05 ஆம் திகதிய PRE/2024/32 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.6.6 பிரிவின்படி, புத்தளம் மாவட்டத்திற்குரிய உணவு விநியோகித்தல் பெறுகை தொடர்பாக தெரிவுசெய்யப்பட்ட வழங்குநர்களுடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால், சனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்கான உணவு பெறுகை தொடர்பாக வழங்குநர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஏ)** அரசாங்க பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் 3.6 பிரிவின் படி, மீள் கட்டளையிடல் ஏற்பாடு காணப்படுவது ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதியில் 50 சதவீதம் வரை என்றபோதிலும், இரத்தினபுரி மாவட்டத்தில் 2024 சனாதிபதித் தேர்தலுக்கான கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட 1050 காலை உணவுப் பொதிகள் மற்றும் 5500 மதிய மற்றும் இரவு உணவுப் பொதிகளுக்கான கொள்வனவுகளுக்குரிய 03 சந்தர்ப்பங்களில் இந்த எல்லையை மீறி நூற்றுக்கு 74 சதவீதம் முதல் நூற்றுக்கு 233 சதவீதம் வரை மீள் கட்டளை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

(ஐ) பெறுகை வழிகாட்டித் தொகுப்பின் 8.9.1(அ) பிரிவின்படி, ரூபா. 250,000 க்கும் அதிகமான ஒப்பந்தப் பணிகள் தொடர்பில் முறையான ஒப்பந்தம் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால், ரூபா. 12 மில்லியனுக்கும் அதிகமான மின்சார விநியோகப் பணிகளுக்காக இலங்கை மின்சார சபைக்கும் தேர்தல்கள் அலுவலகத்திற்கும் இடையே முறையான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, ஒப்பந்தம் செய்யப்படாத நிலையில்,

தேர்தல்கள் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் நட்டமான அல்லது தேவையற்ற சிக்கல் நிலைமைகளுக்கு முகம்கொடுக்கவேண்டிய ஆபத்தொன்று காணப்படுவதாகவும் சட்ட ரீதியான பணிகளின்போது நட்டமான பாதிப்புகளையும் ஏற்படுத்தக்கூடும் என்பது அவதானிக்கப்பட்டது.

**(ஒ)** காலி பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தினால் சனாதிபதித் தேர்தலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டின்படி, பொருட்கள், தொழிலாளர் கூலி, இதர செலவுகள், போக்குவரத்து செலவுகள் மற்றும் மின்பிறப்பாக்கி (Generator) விநியோகம் என்பனவற்றுக்காக முறையே ரூபா. 7,058,783, ரூபா. 5,569,920, ரூபா. 200,000, ரூபா. 300,000 மற்றும் ரூபா. 3,003,207 எனத் தனித்தனியாகச் செலவுகள் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததோடு, குறித்த உண்மைச்செலவு இனங்காணப்படாமல் குறித்த மதிப்பிடப்பட்ட நிதி செலுத்தப்பட்டிருந்தது. இந்த மின்சார விநியோகத்துடன் தொடர்புடைய நிச்சயமற்ற கொடுப்பனவுகளை உண்மையாக அடையாளம் காணாமல் நூற்றுக்கு 5 சதவீதம் என்றவாறு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா. 656,435 எனும் தொகை நிச்சயயமற்ற செலவாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(ஓ)** மின்பிறப்பாக்கி (ஜெனரேட்டர்) விநியோகத்திற்காக ரூபா. 3,003,207 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இலங்கை மின்சார சபையின் கொலன்னாவ கிளையினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலின் படி, வரி உட்பட அதற்கான அறவீடு ரூபா. 1,130,772 என்பதனால், காலி பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்திற்கு இதற்காக ரூபா. 1,872,435 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**(ஔ)** காலி பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தினால் தற்காலிகமாக லெகோ நிறுவனத்திடமிருந்து மின்சார வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா. 2,834,870 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக ரூபா. 986,396 மாத்திரமே செலவாகியிருந்தது. இது நூற்றுக்கு 65 சதவீத மிகை மதிப்பீடாகும் என்பதால் மதிப்பீட்டுத் தொகையை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்ட பொருட்களுக்காக ரூபா. 7,058,783, தொழிலாளர்களுக்காக ரூபா. 5,569,920, போக்குவரத்துச் செலவுகளுக்காக ரூபா. 300,000, இதர செலவுகளுக்காக ரூபா. 200,000, நிச்சயயமற்ற செலவுகளுக்காக ரூபா. 656,435 மற்றும் மின்பிறப்பாக்கி பெறுவதற்காக ( ஜெனரேட்டர்) ரூபா. 3,003,207 என மொத்தம் செலுத்தப்பட்ட ரூபா. 16,788,385 பெறுமதி மிகைமதிப்பீடு செய்யப்பட்டுள்ளதென்பதை கணக்காய்வின் போது நிராகரிக்க முடியவில்லை.

**(க)** சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட்டு ஒன்றரை (01 ½) மாதங்களுக்குப் பின்னர் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின் போது, மீளப் பயன்படுத்தக்கூடிய பொருட்களுக்காக முறையே ரூபா. 3,677,450 மற்றும் பொருட்களுக்காக ரூபா. 337,461 என மொத்தம் ரூபா. 4,014,911 செலுத்தப்பட்டிருந்தது. இதன்படி, இரண்டு தேர்தல்களுக்கும் சேர்த்து ரூபா. 11,073,694 பெறுமதியான பொருட்கள் காலி பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தினால் காலி தேர்தல்கள் அலுவலகத்திற்குக் கையளிக்கப்படவில்லை. மீண்டும் உள்ளூர் அதிகார சபைத் தேர்தலுக்காகப் பொருட்களுக்காக ரூபா. 3,660,000 கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமை மூலம், சிக்கனத்தன்மை, வினைத்திறன் மற்றும் விளைதிறனை உச்சப்படுத்துவதில் கவனம் செலுத்தி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ங)** காலி பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தினால் பாராளுமன்றத் தேர்தலுக்காகச் சமர்ப்பித்த மதிப்பீட்டின்படி, பொருட்கள், தொழிலாளர் கூலி, இதர செலவுகள், போக்குவரத்துச் செலவுகள் மற்றும் மின்பிறப்பாக்கி (ஜெனரேட்டர் ) விநியோகத்திற்காக முறையே ரூபா. 4,014,911, ரூபா. 4,177,440, ரூபா. 300,000, ரூபா. 300,000 மற்றும் ரூபா. 2,092,602 எனத் தனித்தனியாக ஒதுக்கப்பட்டிருந்ததோடு உண்மையான செலவுகள் இனங்காணப்படாமல், மதிப்பீட்டுத் தொகை அப்படியே செலுத்தப்பட்டிருந்தது.

**(ச)** இந்த மின்சார விநியோகத்துடன் தொடர்புடைய நிச்சயமற்ற கொடுப்பனவுகளுக்காக நூற்றுக்கு 5 சதவீதம் என்றவாறு ரூபா. 527,541 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஆனால், அந்தச் செலவு உண்மையானதா என்பது இனங்காணப்படாமல், அந்த ரூபா. 527,541 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**(ஞ)** காலி பிராந்திய மின் பொறியியலாளர் அலுவலகத்தினால் லெகோ நிறுவனத்திடமிருந்து தற்காலிகமாக மின்சார வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா. 2,368,638 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக ரூபா. 939,172 மாத்திரமே செலவாகியிருந்ததோடு இது நூற்றுக்கு 60 சதவீத மிகைமதிப்பீடாகும். மதிப்பீட்டுத் தொகையை அடிப்படையாகக் கொண்டு பொருட்கள், தொழிலாளர் கூலி, போக்குவரத்து மற்றும் இதர செலவுகள், நிச்சயமற்ற செலவுகள், மின்பிறப்பாக்கி விநியோகம் என மொத்தமாக செலுத்தப்பட்ட ரூபா. 11,412,494 தொகை மிகை மதிப்பிடப்பட்டுள்ளது என்பதை கணக்காய்வின் போது புறக்கணிப்பதற்கு முடியவில்லை.

**(ட)** சனாதிபதித் தேர்தலுக்காக மின்சார வசதியைப் பெற்றுக்கொள்ள கண்டி மாவட்டத்தின் கடுகஸ்தோட்டை மின் பொறியியலாளர் அலுவலகம் சமர்ப்பித்த ரூபா. 25,811,315 மதிப்பீட்டின் பிரகாரம், 800 கொன்கிரீட் ஆணி (தலா ரூபா. 1,200) ரூபா. 960,000 என காட்டப்பட்டிருந்து பின்னர், ஒரு ஆணி ரூபா 3.00 எனத் திருத்தம் செய்யப்பட்டமையால் ஆரம்ப மதிப்பீடு ரூபா. 987,600 வினால் மிகைமதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய மின்சார சபையின் பிராந்திய மின் பொறியியலாளர் ஒருவர் பரிந்துரைத்து சமர்ப்பித்த இந்த ஆரம்ப மதிப்பீட்டை, தேர்தல் அலுவலகத்தினால் அனுமதிக்கும்போது முறையானவாறு பரிசீலித்து பரிந்துரைத்து மற்றும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை மேலும்,ரூபா 24,631,887 திருத்தப்பட்ட மதிப்பீடும் இலங்கை மின்சார சபையினால் பரிசீலிக்கவோ அல்லது பரிந்துரைக்கவோ செய்யப்பட்டிருக்கவில்லை என்பதோடு தேர்தல் அலுவலகத்தினாலும் அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

**(ண)** வாக்கு எண்ணும் நிலையங்களின் மின்சாரத் தேவைக்காக ரூபா. 316,521 மதிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்துமாறு கோரப்பட்டிருந்ததோடு, கண்டி தேர்தல்கள் அலுவலகம் அங்கு உண்மையாகப் பயன்படுத்தப்பட்ட மின்சார நுகர்வு குறித்து உறுதிப்படுத்தாமல் அதற்காக இந்தத் தொகையைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(த)** மின்சார சபையினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டில், மொத்த மதிப்பீட்டுத் தொகையில் நூற்றுக்கு 5 சதவீதம் என ரூபா. 427,423 தொகையை நிச்சயமற்ற செலவுகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இந்த மின்சார விநியோகத்துடன் தொடர்புடைய நிச்சயமற்ற கொடுப்பனவுகளை உண்மையாகவே அடையாளம் காணாமல் பணம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**(ந)** புத்தளம் மாவட்டத்தின் தேர்தல் இறுதி முடிவுகளை வெளியிடும் நிலையம், வாகனங்கள் நிறுத்துமிடம் மற்றும் சாரதிகளுக்கான தங்குமிட வசதிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட நிலையம் மற்றும் வாக்கு எண்ணும் நிலையங்களுக்குத் தற்காலிகமாக மின்சாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக, இலங்கை மின்சார சபைக்கு ரூபா. 13,838,085 வழங்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டினுள் 5 விடயங்களுக்கான மொத்த செலவு மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், இதற்கான விரிவான செலவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், புத்தளம் ஏண்ட்று வித்தியாலயத்திற்கான தற்காலிக மின்சார வழங்கல் செலவு, சனாதிபதித் தேர்தலை விட 20 சதவீதம் அதிகரித்துக் காணப்பட்டது.

**(ப)** தலைமை அலுவலகத்தினால் தேர்தல் கடமைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட 09 அரச வாகனங்களைப் பராமரிப்பதற்கு (சேர்விஸ்), ரூபா. 432,182 மற்றும் கொழும்பு மாவட்டத் தேர்தல் அலுவலகத்திற்குச் சொந்தமான 34 வாகனங்களைப் பராமரிப்பதற்கும் ரூபா. 1,860,743 செலவிடப்பட்டிருந்தது.

**(ம)** கம்பஹா மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் 2024 செப்தெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்காக 15 வாகனங்களுக்கு ரூபா. 322,080 பெறுமதியான 915 லீட்டர் சூப்பர் டீசல் எரிபொருளும், 2024 நவம்பர் 14 ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலுக்காக 17 வாகனங்களுக்கு ரூபா. 313,610 பெறுமதியான 970 லீட்டர் சூப்பர் டீசல் எரிபொருளும் வழங்கப்பட்டிருந்தது. வாகனங்களுக்கு சூப்பர் டீசல் பயன்படுத்துவதற்காகப் பெறப்பட்ட உரிய அதிகாரிகளின் அனுமதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதோடு தேசிய தேர்தல் பணிகளின் போது, அரச செலவுகளைக் குறைப்பதற்காக சுப்பர் எரிபொருள் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களைக் குறைந்தளவில் பயன்படுத்தல் தொடர்பில் அலுவலர்களின் கவனம் செலுத்தப்படல் வேண்டும் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**(ய)** 2024 நவம்பர் 14 ஆம் திகதி நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலின் போது, எரிபொருள் கட்டளைகள் மூலம் எரிபொருள் பெற்றுக்கொள்வது தொடர்பாக, தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் 2024 ஒக்தோபர் 17 ஆம் திகதி வெளியிடப்பட்ட PF/2024/35 ஆம் இலக்க சுற்றறிக்கையின் VIII ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புக்களுக்கு அமைய எரிபொருள் வழங்கல் தொடர்பில் கம்பஹா மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் பராமரிக்கப்பட்ட எரிபொருள் பதிவேட்டில், 2024 நவம்பர் 02 முதல் 2024 நவம்பர் 16 வரையான காலப்பகுதிக்கு 14 வாகனங்களுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட 560 லீட்டர் எரிபொருளுக்காகப் பொறுப்பான பதவிநிலை உத்தியோகத்தர்களின் கையொப்பங்கள் எருபொருள் கட்டளைகளில் பெறப்படவில்லை. மேலும், 2024 ஒக்தோபர் 05 முதல் 2024 நவம்பர் 21 வரையான காலப்பகுதிக்காக சாரதிகளால் 116 வாகனங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் 4,480 லீட்டர் தொடர்பில் அந்த எரிபொருள் பெற்றுக் கொள்ளப்பட்டமைக்காக குறித்த வாகனப் பொறுப்புச் சாரதிகளின் கையொப்பங்கள் பெறப்பட்டிருக்கவில்லை. இதன்படி, சுற்றறிக்கையின் பணிப்புக்களுக்கு முரணாக சாரதிகளினால் பெறப்பட்டிருந்த 5,040 லீட்டர் எரிபொருள் உண்மையாகவே தேர்தல் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களுக்குத்தான் வழங்கப்பட்டதா என்பதை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியவில்லை.

**(ர)** எரிபொருள் கட்டளைகளை வழங்குவது தொடர்பான சுற்றறிக்கைகளின்படி, பேணப்படவேண்டிய எரிபொருள் கட்டளை விநியோகித்தல் பதிவேட்டில், எரிபொருள் கட்டளையைப் பெற்றுக்கொள்ளும் சாரதிகளின் கையொப்பம் பெறப்படல் வேண்டும் எனினும், குருநாகல் மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் தேர்தல்கள் பணிகளுக்காக பேணிவரப்பட்டிருந்த எரிபொருள் வழங்கல் பதிவேட்டில், சாரதிகளின் கையொப்பம் இன்றி 918 லீட்டர் எரிபொருளுக்கான கட்டளைகள் வழங்கப்பட்டிருந்தன.

**(ல)** 2024 ஒக்தோபர் 17 ஆம் திகதிய PE/2024/39 ஆம் இலக்க தேர்தல் சுற்றறிக்கையின் படி, வாக்கெடுப்பு நிலைய பணியாட்குழு, வாக்குப்பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களைக் கொண்டு செல்வதற்காக இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளைப் பயன்படுத்துவது தொடர்பான பரிசீலனையில், 40 க்கும் மேற்பட்ட ஆசனங்களைக் கொண்ட சாதாரண பஸ்வண்டி ஒன்றிற்கு ஒரு நாளைக்குக் குறைந்தபட்சக் கட்டணமாக ரூபா. 30,000 எனவும், குறைந்த கட்டணத்தின் கீழ் ஓட்டக்கூடிய அதிகபட்ச தூரம் 100 கி.மீ எனவும் வழங்க கூடிய அதிக பட்டசமான காலம் 12 மணித்தியாலம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. காலி மாவட்டத் தேர்தல் அலுவலகம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட எழுமாறான சோதனையின் போது காலி டிப்போவுக்கு சொந்தமான பஸ் வண்டிகளைப் பயன்படுத்துதல் கிரயம் சிக்கனமான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதோடு. அதற்கமைவாக, 32 கி.மீ முதல் 75 கி.மீ வரையிலான தூரத்திற்கு, ரூபா1,140,000 அதாவது நூற்றுக்கு 57.9 சதவீதம் பயணிக்காத தூரத்திற்காகவும் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

**(வ)** இரத்தினபுரி மாவட்டத்தின் 2024 செப்தெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்காக ரூபா. 8,983,235 செலவிடப்பட்டு 256 வாகனங்கள் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**(i)** கொடுப்பனவு வவுச்சருடன் சமர்ப்பிக்கப்படுகின்ற வாகன ஓட்டக் குறிப்புப் பதிவேடுகளில், சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலரினால் பயணத்தில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களின் கையொப்பம் நிரலில், திகதிகள், வருகை தந்தநேரம் மற்றும் புறப்பட்ட நேரம், பயணித்த இடங்கள் மற்றும் தூரம் ஆகியவை குறிப்பிடப்பட்டு அதன் எதிரில் கையொப்பம் இடப்படல் வேண்டுமெனினும், இவை இல்லாத 39 பண உறுதிச் சீட்டுகளுக்காக மொத்தம் ரூபா. 1,267,880 செலுத்தப்பட்டிருந்தது.

**(ii)** வவுச்சருடன் சமர்ப்பிக்கப்படுகின்ற வாகன ஓட்டக் குறுப்புப் பதிவேடுகளில், குறித்த வாகனப் போக்குவரத்து நிலையத்திற்கு வந்தடைந்த மைலேஜ் (Mileage) மற்றும் வெளியேறும் போது மைலேஜ் ஆகியன சரியாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களும் மற்றும் மைலேஜ் மீட்டர் எண்கள் எதுவும் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

**(iii)** 2024 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய PRE/2024/40 ஆம் இலக்க சுற்றறிக்கையின்படி, நலனோம்பல் அலுவல்கள் போன்ற ஏனைய அத்தியாவசியத் தேவைகளுக்கு வாடகை வாகனங்களைப் பயன்படுத்தக் கூடாதென்றபோதிலும் அதற்கு முரணாக 93 சந்தர்ப்பங்களில் வாடகை வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு, ரூபா. 288,290 செலுத்தப்பட்டிருந்தது.

**(iv)** இரத்தினபுரி மாவட்டத் தேர்தல் அலுவலகத்திலிருந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு கணிக்கப்பட்டுள்ள தூர அளவு மற்றும் வாடகை வாகனங்களின் ஓட்டக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தூர அளவுகளை பரிசீலிக்கும்போது உரிய தூரத்தை (சென்று வருவதற்குப் பயணிக்க வேண்டிய தூரத்தை) விட அதிகமான தூர அளவுகளுக்காக ரூபா.849,850 மேலதிகமாகக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

**(ள)** களுத்துறை மாவட்டத்தில் சனாதிபதித் தேர்தல் பணிகளில் ஈடுபட்ட ஊழியர்களுக்காக, உடனடி நூட்லிஸ் பெட்டிகள் ரூபா. 200 வீதம் 5540 பெட்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 1,108,000 செலுத்தப்பட்டுள்ளதோடு பாராளுமன்றப் பொதுத் தேர்தலின் போது அதே அளவுடைய நூட்லிஸ் பெட்டிகள் ஒன்று ரூபா. 175 வீதம் 6326 பெட்டிகள் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 1,107,050 தொகை பிரீமா விற்பனை முகவர் ஒருவருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.

**(i)** சனாதிபதித் தேர்தலுக்காகத் தேவையான துரித நூட்லிஸ் கொள்வனவு செய்வதற்காக, பிரீமா நிறுவனம் உட்பட 04 வழங்குநர்களிடம் விலைத்தொகைகள் கோரப்பட்டிருந்தாக விலைத்தொகைகள் கோரப்பட்டோர் பட்டியலில் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், ஒரு வழங்குநரின் பெயர் பின்னர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. இங்கு பிரீமா நிறுவனத்திடம் இருந்து விலைத்தொகைகள் கோரப்பட்டிருந்தாலும், அவர்களிடமிருந்து விலைத்தொகைகள் கிடைக்கப்பெறவில்லை, மாறாக பிரீமா விற்பனை முகவர் ஒருவரிடமிருந்தும் மற்றுமொரு வழங்குநரிடமிருந்தும் மட்டுமே விலைத்தொகைகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

**(ii)** அந்த இரண்டு வழங்குநர்களிலிருந்து, தலா 180 கிராம் எடையுள்ள உடனடி நூட்லிஸ்பெட்டி ஒன்றினை ரூபா. 200 வீதம் கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரையின் பேரில் பெறுகைக் குழு தீர்மானித்திருந்தது. அந்தத் தீர்மானத்தின்படி 5,540 நூட்லிஸ் பெட்டிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், விலைத்தொகைகள் கோரும் போது 500 பெட்டிகள் அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கைக்குத் தேவைப்படலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறு தேவைக்கேற்பச் சரியாக அடையாளம் கண்டு விலைத்தொகைகள் கோரப்படாத காரணத்தால் விலைத்தொகைகள் கோரும்போது குறிப்பிடப்பட்டிருந்த அளவைவிட பத்து மடங்கு அதிகமான எண்ணிக்கையில் கொள்வனவு செய்யும் போது கிடைக்கக்கூடிய பொருளாதார நன்மைகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(iii)** இதன்படி, வழங்குநர்கள் விலைத் தொகைகளை சமர்ப்பிக்கும் போது, 500 பெட்டிகளுக்காக வழங்கமுடியுமான அலகு விலை ரூபா. 200 என விலைத்தொகை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், 5,000 அலகுகளுக்கு மேல் கொள்வனவு செய்யும் போதும் அதே விலையிலேயே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**(ற)** சனாதிபதித் தேர்தலுக்காக தண்ணீர் போத்தல்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா. 1,301,000 மற்றும் பாராளுமன்றத் தேர்தலுக்காக ரூபா. 1,284,750 செலவிடப்பட்டுள்ளது. சனாதிபதித் தேர்தலுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட 500 மில்லி லீட்டர் கொள்ளளவு கொண்ட 30,000 தண்ணீர் போத்தல்களில் 5,700 போத்தல்களும், 1 லீட்டர் கொள்ளளவு கொண்ட 3,020 தண்ணீர் போத்தல்களும் பயன்படுத்தப்படாமல் தேர்தல் பணிகள் முடிவடைந்த பின்னர் எஞ்சியிருந்தன. இருப்பினும், பாராளுமன்றத் தேர்தலுக்காக மீண்டும் 500 மில்லி லீட்டர் கொள்ளளவு கொண்ட 30,000 தண்ணீர் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை, தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒப்பிட்டுப் பார்க்கையில் அசாதாரணமான நிலை என அவதானிக்கப்பட்டது.

**(ன)** 2024 சனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் நலனோம்பல் செலவுகள் செய்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் PE/2024/15 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் உபசரணை செலவுகளைச் செய்தல் தொடர்பாக அடிக்கடி கணக்காய்வு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதால், நலனோம்பல் செலவுகள் தொடர்பான புள்ளிவிபரக் குறிப்புகள் மற்றும் தொடர்புடைய தரவுகளை முறையாக எழுத்து மூலம் பேணி கோப்பிட்டு வைத்திருத்தல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டிருந்தது.

இருப்பினும், குறித்த தரவுகளை முறையாகச் சேமித்து வைக்காத காரணத்தினால், 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற சனாதிபதித் தேர்தல் தொடர்பான நிதி மற்றும் செயலாற்றுகை கணக்காய்வின் போது, தகவல்கோரல் படிவம் (XVII) இன் பிரகாரம் நலனோம்பல் அடிப்படையில் வழங்கப்பட்ட உணவு வேளைகள் தொடர்பான முழுமையான தகவல்களை கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு களுத்துறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் தவறியிருந்தது.

**(அ.அ)** 2024 செப்தெம்பர் 22 ஆம் திகதி நாடு பூராகவும் நடைமுறையில் இருந்த ஊரடங்குச் சட்டம் காரணமாக, கடமைகளில் ஈடுபட்டிருந்த ஊழியர்களுக்குக் கட்டாயமாக காலை மற்றும் மதிய உணவுகளை வழங்க வேண்டியிருந்ததால், குழுவுக்கு இணைப்புச் செய்யப்பட்டிருந்த பொது சுகாதார அலுவலர்களின் உதவியுடன் சில உணவு விநியோக நிறுவனங்களிடமிருந்து காலை மற்றும் மதிய உணவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக நலனோம்பல் குழுவின் செயலாற்றுகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், அன்றைய தினம் 1650 காலை உணவுப் பொதிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தோடு, அன்றைய தினம் மதிய உணவிற்காக காலை உணவுப் பொதிகளை விட இரு மடங்கிற்கும் அதிகமான எண்ணிக்கையில் அதாவது 3485 உணவுப் பொதிகள் பெறுகை செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது சந்தேகத்தை ஏற்படுத்தும் காரணியாக அமைந்தது.

**(அ.ஆ)** மேலும், அன்றைய தினம் இரண்டாம் கட்ட விருப்புவாக்கு எண்ணும் பணிகளுக்காக, ஈடுபட்டிருந்த சிரேட்ட தலைமை தாங்கும் அலுவலர் பதவி வகித்த 1375 அலுவலர்கள், குழுக் கடமைப் பணிகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்கள் 615 பேரும் என மொத்தம் 1990 பேர் மாத்திரம் பணியில் ஈடுபட்டிருந்தனர் என்பது தகவல்களின் மூலம் தெரியவந்தது. இத்தகைய சூழ்நிலையில், 3485 உணவுப் பொதிகளுக்காகப் பணம் செலுத்தப்பட்டுள்ள காரணத்தால், மேலதிகமாக 1495 உணவுப் பொதிகளுக்காக ரூபா. 373,750 மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.

**(அ.இ)** பாராளுமன்றத் தேர்தலின் வாக்களிப்பு தினத்திற்கு அடுத்த நாள் காலை உணவுப் பொதிகள் 7,250 கொள்வனவு செய்வதற்காக ரூபா. 1,815,000 தொகை 08 வழங்குநர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. வாக்கெடுப்பு தினத்திற்கு மறுநாள் காலை உணவிற்காக வாக்கெண்ணல் பணியாட்குழுவினர் 5375 என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இருப்பினும், அதற்கு முன்னர் நடாத்தப்பட்ட சனாதிபதித் தேர்தலின் போது மொத்த வாக்கு எண்ணும் பணியாட்குழுவுக்கு 3,164 பேருக்கு மாத்திரம் நியமனம்

வழங்கப்பட்டிருந்தோடு, பாராளுமன்ற பொதுத் தேர்தலிலும் சனாதிபதித் தேர்தலின் அடிப்படையிலேயே உணவு வழங்கவேண்டிய பணியாட்குழுவினரை மதிப்பீடுசெய்வதற்கு முடிந்திருந்த போதிலும், அதைவிட 2,211 அதிகமாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கருத்துமுரண்பாட்டுக்கான காரணியாக அமைந்தது.

**(அ.ஈ)** அவ்வாறு, வாக்கெண்ணல் பணியாட் குழுவினர் 5375 ஆகவும், ஏனைய பணியாட்குழுவினர் 1886 ஆகவும் மதிப்பிடப்பட்டிருந்த காரணத்தால், வாக்களிப்பு தினத்திற்கு அடுத்தநாள் வழங்கப்பட வேண்டிய காலை உணவுப் பார்சல்கள் 7261 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததோடு, அதற்கேற்ப 7250 உணவுப் பார்சல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. ஆனால், கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, அன்றைய தினம் பணியில் ஈடுபட்ட மொத்தக் பணியாட் குழுவினர்களின் எண்ணிக்கை 4794 மாத்திரம் என்பதோடு, அதற்கமைய 2467 காலை உணவுப் பார்சல்களுக்காக ரூபா. 616,750 அண்மித்த தொகையொன்று மேலதிகமாகச் செலவிடப்பட்டிருந்தது.

**(அ.உ)** கண்டி மாவட்டத்தின் சனாதிபதித் தேர்தல் வாக்கெடுப்பு பணிகளில் ஈடுபட்ட பணியாட்குழுவினருக்கு பிஸ்கட் வழங்குவதற்காக ரூபா. 548,330 பெறுமதியான பிஸ்கட்டுக்களைத் தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து கொள்வனவு செய்து, 2024 செப்தெம்பர் 22 ஆம் திகதி 03 சந்தர்ப்பங்களில் பணியாட் குழுவினருக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கொள்வனவு செய்யப்பட்ட பிஸ்கட்டுகள் மற்றும் விநியோகம் செய்யப்பட்ட அளவைச் சரிபார்த்தபோது, ரூபா. 48,370 பெறுமதியான 3252 பிஸ்கட் பக்கெட்டுகள் குறைவாக இருந்தமை கண்டறியப்பட்டது.

**(அ.ஊ)** சனாதிபதித் தேர்தல் வாக்கெண்ணும் பணிகளில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்காக 2024 செப்தெம்பர் 20 மற்றும் 22 ஆகிய இரு திகதிகளில் 7319 பேருக்குப் பழச்சாறு பானம் , பட்டர் கேக் மற்றும் மீன் பெட்டீஸ் வழங்கப்பட்டிருந்த போதிலும், பழச்சாறு பானம் வழங்கும் பணிகளுக்காக 5850 பேருக்கு மட்டுமே பணம் செலுத்தப்பட்டிருந்தது. பதிவேடுகளின்படி வழங்கப்பட்ட அளவிற்கும், உண்மையாகப் பணம் செலுத்தப்பட்ட அளவிற்கும் இடையிலான வித்தியாசம், 1469 பழச்சாறு பெக்கெட்டுகள் தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியானவையல்ல என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ.எ)** புத்தளம் மாவட்டத்திற்குரிய பெறுகை விலைகள் மற்றும் ஒப்பீட்டின் போது உணவுப் பொதிகள் தொடர்பாக செலவிடப்பட்ட மொத்தச் செலவு ரூபா. 2,742,780 ஆக இருந்த போதிலும், 2025 மார்ச் 14 ஆம் திகதிய PUT/EO/ADM/03/22 இலக்கக் கடிதத்தின் பிரகாரம் மாவட்ட தேர்தல் அலுவலகம் வழங்கிய 05 (XVII) அட்டவணைப் படி, உணவுப் பொதிகளுக்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா. 4,037,960 ஆக இருந்தது. இதன் மூலம் ரூபா.1,295,180 மேலதிகமாகச் செலவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

**(அ.ஏ)** பெறுகை தீர்மானத்தின் படி 1,000 பொதிகள்/பார்சல்கள் வரை மட்டுமே கொள்வனவு செய்யப்படல் வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக 2,900 உணவுப் பார்சல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

**(அ.ஐ)** காலி மாவட்டத்திற்குரியதாக 2024 ஆம் ஆண்டினுள் நடாத்தப்பட்ட சனாதிபதி தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின் போது, மண்டபங்களை வேறு பிரிக்கும் கைத்தொழிலுக்காக, சனாதிபதித் தேர்தலின் போது 96F கந்தேவத்த கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ரூபா. 1,215,805 மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களுக்காக 96B கல்வடு கொட கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ரூபா. 1,625,545 தொகை மண்டபங்களைச் ஒழுங்கமைப்பதற்காக சனாதிபதித் தேர்தலின் போது அந்தச் சங்கங்களுக்கு முறையே ரூபா. 495,000 மற்றும் ரூபா. 858,000 வழங்கப்பட்டிருந்தது. 2024 சனாதிபதி தேர்தர்தல் நடாத்தப்பட்டு 01 மாதம் 23 நாட்கள் கழிந்த பின்னர் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது வாக்கெண்ணல் அலுவல்களுக்காக பயன்படுத்தப்படும் மண்டபங்களைப் வேறுபிரிக்கும் கைத்தொழில் தொடர்பாக, சனாதிபதித் தேர்தலை விட ஒப்பீட்டளவில் 04 வேலை விடயங்களுக்காக ரூபா. 793,580 மண்டபம் மற்றும் ஏனைய மண்டபங்களில் மேசை. கதிரை புனரமைப்புப் பணிகளுக்காக ரூபா. 183,150 மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**(அ.ஒ)** கொழும்பு மாவட்டத்திற்குரிய சனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட கொழும்பு பிரதான பாடசாலைகள் 3 இல் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்காக 3 சனசமூக அபிவிருத்திச் சங்கங்களுக்காக ரூபா. 7,135,020 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலைகளுக்குத் தேவையான அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக குறித்து மண்டப பொறுப்பு அலுவலர் அல்லது வேறு தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து எவ்வித கோரிக்கைகளும்

சமர்ப்பிக்கப்படாத நிலையில், அந்த மூன்று பாடசாலைகளின் கட்டட நிர்மாணம்/அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக மதிப்பீட்டுத் தொழில்நுட்ப உதவியாளர் தயாரித்த அடிப்படை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

**(அ.ஓ)** 2021 செப்தெம்பர் 29 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 2.1 பிரிவின்படி, திணைக்களத் தலைவர் மற்றும் பிராந்திய பிரதேச செயலாளர்கள் பெயர் குறித்து நியமிக்கும் இரு முகவர்கள் அடங்கிய மூவரைக் கொண்ட குழுவினால் தகுதிகள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னரே, பொருத்தமான சனசமூக அமைப்பிற்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பரிந்துரைக்க முடியும் என்றபோதிலும், அத்தகைய குழு ஒன்றை நியனனம் செய்யாமல், தகைமைகள் தொடர்பாக ஆராய்ந்து பார்க்காமல் சனசமூக அமைப்பின் கோரிக்கையின் அடிப்படையில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**(அ.ஔ)** ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்ட திகதி குறித்த ஆவணங்கள் எதிலும் குறிப்பிடப்படவில்லை என்பதோடு, குறிப்பிட்ட சனசமூக அமைப்பினால் திகதியிடப்படாத கடிதம் ஒன்றின் மூலம் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்காரணமாக, ஒப்பந்தம் குறித்த காலத்திற்குள் முடிக்கப்பட்டதா என்பதை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முடியவில்லை. மூன்று பாடசாலைகளிலும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் உரியவாறு ஆற்றப்பட்டுள்ளதென மண்டப பொறுப்பு அலுவலர்களிடமிருந்து உறுதிப்படுத்திக் கொள்ளாமல், அந்த சனசமூக அமைப்பிற்கு ரூபா.7,135,020 தொகை வழங்கப்பட்டிருந்தது.

ஆற்றப்பட்டவேலை அறிக்கைகளுக்குரிய பற்றுச்சீட்டுக்களில் தொழில்நுட்ப உதவி அலுவலரின் கையொப்பம் இருந்தபோதிலும், அந்தப் பணிகள் முறையாக நிறைவேற்றப்பட்டமை தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(அ.க)** திம்பிரிகஸ் வித்யாதிலக்க வித்தியாலய தேர்தல் பணிகளுக்காக 24 உருப்படிகளை பழுதுபார்ப்புச் செய்வதற்காக வட் இன்றி ரூபா. 650,031 செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததோடு இதில் 16 உருப்படிகளுக்கான பணிகள் மாத்திரம் ரூபா. 438,340 செலவில் மேற்கொள்ளப்பட்டதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய திட்டமிடப்பட்ட மீதமுள்ள 08 உருப்படிகளுக்கான பணிகளை ஆற்றுவதை ஒப்பந்தக்காரர் தவறவிட்டிருந்தார். மேலும், இந்த ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட வோட் பிளேஸ் சனசமூக கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் இந்தப் பாடசாலையில் ரூபா. 107,780

பெறுமதியான 22 மேலதிகப் பணிகளை மேற்கொண்டமைக்காக முன்னனுமதியின்றி அதற்கான கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது.

**(அ.ங)** கொழும்பு ரோயல் கல்லூரியின் தேர்தல் பணிகளுக்காக பயன்படுத்துவதற்காக கட்டடங்கள் மற்றும் 13 இடங்களில் 67 உருப்படிகளை பழுதுபார்ப்புச் செய்வதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டிருந்ததோடு இந்த 67 உருப்படிகளில் ரூபா 436,657 கொண்ட 15 உருப்படிகள் தொடர்பான பழுதுபார்த்தல் பணிகள் ஒப்பந்தக்காரால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதோடு அதற்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தத்தில் உள்ள 67 உருப்படிகளில் 17 உருப்படிகள் மதிப்பீட்டை விட அதிக வேலைகள் மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் ரூபா. 585,022 மேலதிகமாக செலவுசெய்யப்பட்டிருந்தோடு, 03 உருப்படிகள் மதிப்பீட்டை விடக் குறைவாகவே பழுதுபார்த்தல் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கான காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(அ.ச)** கொழும்பு 07, டி.எஸ். சேனாநாயக்க வித்தியாலயத்தில் தேர்தல் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காக துப்பரவேட்பாடு மற்றும் ஏனைய அத்தியாவசிய பழுதுபார்த்தல் பணிகளுக்காக ரூபா. 1,300,638 வும், தற்காலிகப் வேறுபிரிப்பு மற்றும் ஆரம்பப் பிரிவு நுழைவாயிலுக்கு தார் இடுவதற்காக ரூபா. 1,088,111 வும் என பழுதுபார்ப்புச் செய்வதற்காக சனசமூக அபிவிருத்தி சங்கத்திற்கு மொத்தமாக ரூபா. 2,388,749 கிராம அபிவிருத்திச் சங்கத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. தற்காலிக வேறுபிரிப்புப் பணிகளுக்கான மதிப்பிடப்பட்ட உருப்படிகளில் 03 இல் 02 அளவு குறைக்கப்பட்டிருந்ததோடு ஓர் உருப்படியின் அளவில் அதிகரிக்கப்பட்டிருந்தது. மதிப்பீட்டில் குறிப்பிடப்படாத கதவுகள் மற்றும் பூட்டுகளை அமைப்பதற்காக மேலதிகமாக ரூபா. 55,914 செலவு செய்யப்பட்டிருந்தது.

**(அ.ஞ)** துப்பரவேட்பாடு மற்றும் ஏனைய அத்தியாவசிய பழுதுபார்த்தல் கட்டிடம் மற்றும் சார்ந்த பிரதேசங்கள் 17 இன் 85 உருப்படிகளை பழுதுபார்ப்புச் செய்வதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா.680,092 கொண்ட 31 உருப்படிகளுக்கான பழுது பார்ப்புப்பணிகள் தவறவிடப்பட்டிருந்தன. தொழில்நுட்ப உதவி அலுவலரினால் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 18 உருப்படிகளின் அளவு மதிப்பீட்டை விட அதிகரிக்கப்பட்டிருந்ததோடு 16 உருப்படிகளின் அளவு மதிப்பீட்டை விடக் குறைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அளவுகளை அதிகரித்தல் அல்லது குறைத்தல் செய்தமைக்கான காரணங்கள் தெளிவாகவில்லை. பழுதுபார்ப்பு பணிகளை மேற்கொண்ட கட்டிடங்கள் மற்றும்17 இடங்களில் கட்டடங்களில் 12

இடங்களுக்கு 94 உருப்படிகளுக்காக ரூபா. 898,345 மேலதிகமாகச் செலவு செய்யப்பட்டிருந்தது.

**(அ.ட)** இந்த ஒப்பந்தத்திற்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை VAT இன்றி ரூபா. 2,250,189 ஆகுமென்பதோடு ஒப்பந்தக்காரர் 85 உருப்படிகளில் 31 உருப்படிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதோடு 34 உருப்படிகளின் அளவுகள் மாற்றியமைக்கப்பட்டிருந்தன. அதேபோன்று மேலதிகமாக 94 உருப்படிகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு ஒப்பந்தத்திற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா. 1,867,316 ஆகும். ஆரம்ப மதிப்பீட்டை விடக் குறைவான தொகையாகுமென்பதோடு, அதற்மைய இந்த மதிப்பீடு முறையான முறையில் தயாரிக்கப்படவில்லை என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டின் பண்டங்கள் கணக்கெடுப்பு அறிக்கையின் படி, 46 பண்ட உருப்படிகள் பற்றாக்குறையாகவும், 21 பண்ட உருப்படிகள் மிகையாகவும் இருந்தமை தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்க நிதி ஒழுங்கு விதி 756(6) இன் பிரகாரம், மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில் நடாத்தப்பட்ட பண்டங்கள் கணக்கெடுப்பின் பொது 47 ஆம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் தொடர்பில் 2026 ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரியவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2026 மே மாதம் 11 ஆம் திகதி வரையிலும் அவ்வாறு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2023 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டு தாபிக்கப்பட்டிருந்த ரூபா. 6,289,650 பெறுமதியான மேலதிக மின்பிறப்பாக்கி இயந்திரம் மற்றும் எரிபொருள் தாங்கி, அவை தாபிக்கப்பட்ட திகதி தொடக்கம் மீளாய்வு ஆண்டு முடியும் வரை எந்தவொரு பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் பயனற்றுக் காணப்பட்டன.

(ஈ) கண்டி தேர்தல்கள் அலுவலகத்தினால் கடந்த காலங்களில் நடாத்தப்பட்ட தேர்தல்களுக்காகப் பயன்படுத்துவதற்காகப் விநியோகிக்கப்பட்ட ஆனால் பயன்படுத்தப்படாத அச்சிடப்பட்ட நாடாக்கள் (Tapes) 1371 ரோல்கள் காணப்பட்டதோடு, அவை உரிய இருப்புப் புத்தக பதிவேடுகளில் மீதி பூச்சியமாக காட்டப்பட்டிருந்தது.

### 4.3 முகாமைத்துவக் குறைபாடுகள்

(அ) தொழில்நுட்ப அமைச்சினால் வெளியிடப்பட்ட 2023 மே 02 திகதிய MOT/DEV/POLICY/CYBERSEC ஆம் இலக்கச் சுற்றறிக்கையின் படி, ஆணைக்குழுவினால் தகவல் பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் தகவல் மற்றும் சைபர் பாதுகாப்புப் பொறுப்புகள் எழுத்து மூலம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, தகவல் மற்றும் சைபர் பாதுகாப்புக் கணக்காய்வு தொடர்பான பொறுப்புகள் பிரதான உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிடம் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சைபர் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை எடுப்பதற்காகக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, சைபர் பாதுகாப்பு ஆபத்து தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதற்காக இடர் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு, தகவல் சொத்துக்கள் ஆவணமொன்றில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் மூலம் அந்தப் பண்டங்கள் தீர்மானகரமான அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு உரித்துடையவர்கள் இனம் காணப்பட்டிருக்கவில்லை.

## 5. மனித வள முகாமைத்துவம்.

### 5.1 இணைப்புச் செய்யப்பட்டுள்ள பணியாட் குழுவினர் மற்றும் உண்மையான பணியாட் குழுவினர்

2025 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போது ஆணைக்குழுவின் மொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 107 ஆகும், இது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் நூற்றுக்கு 13 சதவீதமாகும். இந்த வெற்றிட எண்ணிக்கையினுள் சிரேட்ட மட்ட வெற்றிடங்கள் 10, மூன்றாம் மட்ட வெற்றிடங்கள் 05, இரண்டாம் மட்டவெற்றிடங்கள் 49 மற்றும் ஆரம்ப மட்ட வெற்றிடங்கள் 43 காணப்பட்டன. இந்த நிலை ஆணைக்குழுவின் செயலாற்றுகையில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**கே.கே.எஸ். ஜயகொடி**
பிரதி கணக்காய்வாளர் நாயகம்
கணக்காய்வாளர் நாயகத்திற்குப் பதிலாக

அத்தியாயம் 04 - செயலாற்றுகைக் குறிகாட்டிகள்

நிறுவனத்தின் செயலாற்றுகைக் குறிகாட்டிகள் (செயல் திட்டத்தின் அடிப்படையில்)

| சிறப்புக் குறிகாட்டி | எதிர்பார்த்த வெளியீட்டின் (%) ஆக உள்ளபடியான வெளியீடு | | |
|---|---|---|---|
| | **100%-90%** | **75%-89%** | **50%-74%** |
| | 95% | | |

**அத்தியாயம் 05 - பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்வதிலான செயலாற்றுகை**

| குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள்களும் இலக்குகளும் | இலக்குகள் | காலச் சட்டகம் | நிறுவனத்தின் தொழிற்பாட்டுக் குறிகாட்டி | முன்னேற்றம்/ தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 05. பால்நிலை சமத்துவம் அடைந்துகொண்டு அனைத்துப் பெண்களையும் சிறுவர்களையும் வலுப்படுத்தல . | 5.1. தேசிய மட்டத்தில்/ சட்டவாக்கத்துறையில் பெண்களின் பிரதிநிதித்து- வத்தை அடைந்து கொள்ளல் | 5.1.1. சம்பந்தப்பட்ட சட்டத் திருத்தங்கள | 2021 - 2025 | பெண் பிரதிநிதித்துவத்தை 25% என்ற மட்டத்திற்குக் கொண்டுவர நடவடிக்கை எடுத்தல் | சம்பந்தப்பட்ட பிரேரணைகளை தேர்தல் சட்டத் திருத்தத்திற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவுக்கு சமர்ப்பித்தல். |
| | 5.5 அரசியல், பொருளாதார மற்றும் வாழ்வின் பொதுவான எல்லா வேளைகளிலும் முடிவெடுக்கும் போது பெண் தலைமைத்து- வத்திற்கு சம வாய்ப்பளித்தலும் பயன்கூர் விதத்திலான பங்கேற்பை உறுதிப்படுத்தலும். | 5.5.1 அரசியல் கட்சிகளின் நிறைவேற்றுக் குழுவில் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு செயலாற்றுதல். | 2021 - 2025 | | பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள் ளன. |
| | | 5.5.2 தேர்தல் ஆணைக்குழுவில் நிறைவேற்று தரங்களில் பதவிவகிக்கும் பெண்களின் எண்ணிக்கையை அதிகரித்தல். | 2021 - 2025 | - | செயற்படுத்தப்பட்டு ள்ளது |
| 10. . நாடுகளுக்கு உள்ளும் அவற்றிற்கு இடையிலும் சமத்துவமின்மையைக் குறைத்தல | 10.2 2030 ஆம் ஆண்டளவில் பால், வயது, இனப் பிரிவு, வலதுகுறைவு, மதம்,இனம், பொருளாதார அல்லது வேறு நிலைமைகள் பற்றி பொருட்படுத்தாமல் அனைவரதும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான வலுவூட்டல், உள்ளடக்கம் மற்றும் விருத்தி செய்தல் . | அனைவரையும் உள்ளடக்கிய தேர்தல் செயன்முறையொன்றை அமுல்படுத்தல். | 2021 - 2025 | தகைமைபெற்ற அனைத்துப் பிரசைகளும் உள்ளடக்கப்பட்ட தேருநர் இடாப்பொன்றைத் தயாரித்தல | செயற்படுத்தப்பட்டு ள்ளது |
| 16. . பேண்தகு அபிவிருத்திக்கான அமைதியானதும் முழுமையானதுமான சமூகங்களை ஏற்படுத்தல், நியாயத்திற்காக அனைவருக்கும் வாய்ப்பளித்தல், எல்லா மட்டங்களின் பொறுப்புக்களும், பயனுள்ள முழுமையான நிறுவனங்களைக் கட்டியெழுப்புதல். | 16.7. அனைத்து மட்டங்களில் பதில்குறிப்புள்ள, அனைவரையும் உள்ளடக்கிய, பங்கேற்புடன்கூடிய பிரதிநிதித்துவம் அடங்கிய முடிவெடுக்கும் செயன்முறையொன்று காணப்படுவதை உறுதிப்படுத்தல | 16.7.2. பால்நிலை, வயது, வலதுகுறைவு, இனக் குழுக்களின்படி முடிவெடுக்கும் செயன்முறையில் தாமும் உள்ளடங்குவதாக தமது கருத்துக்களுக்கும் பதில்குறிப்பு காட்டும் நம்பிக்கையுள்ள சனத்தொகையின் அளவு | 2021 - 2025 | அனைத்துத் பங்குதாரத் தரப்பினர்களதும் பங்கேற்புடன் தேர்தல் ஆணைக்குழுவின் செயல் திட்டத்தைத் தயாரித்தல். | செயற்படுத்தப்பட்டு ள்ளது |

| குறிக்கோள் இலக்கம் | குறிக்கோள்களும் இலக்குகளும் | இலக்குகள் | காலச் சட்டகம் | நிறுவனத்தின் தொழிற்பாட்டுக் குறிகாட்டி | முன்னேற்றம்/ தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|
| 17. செயற்படுத்துவதற்கான முறைமைகளை பலப்படுத்துதலும் பேண்தகு அபிவிருத்திக்கான உலக பங்கேற்பின் புத்துயிர்ப்பும். | 17.8 2017 ஆம் ஆண்டளவில் குறைந்தபட்சம் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு தொழில்நுட்பத்தையும் புத்தாக்க இயல்திறன்களைக் கட்டியெழுப்பும் முழுமையாக இயங்கும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பத்திலும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலும் புதிய தொழில் நுட்பத்தை முன்னேற்றுதல்.. | தேர்தல் செயன்முறைக்கான நவீன தொழில்நுட்ப முறைமைகளைக் கையாளல். | 2021 - 2025 | – தேருநர் இடாப்பில் பதிவு செய்து கொள்ளல்.<br>– தேர்தல் செயன்முறைக்கு பங்களிப்பை வழங்கும் அனைத்து அரச அலுவலர்களின் தரவு முறைமையைத் தயாரித்தல்.<br>– அதன் அடிப்படையில் தேர்தல் கடமைகளுக்கு இணைத்தல்.<br>– தேருநர் இடாப்பைத் தயாரிக்கும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு நிலையத்தை தாபித்தல | செயற்படுத்தப்பட்டுள்ளது |
| | 17.16 குறிப்பாக வளர்முக நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளுக்கும் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பல்வேறு பங்குதாரத் தரப்பினர்களின் பங்காண்மையுடன் அறிவு,அனுபவம், தொழில்நுட்பம், நிதி வளங்கள் அசைவூட்டம் மற்றும் விநியோகத்தின் ஊடாக பேண்தகு அபிவிருத்திக்கான உலக பங்காண்மையை முன்னேற்றுதல். | அனைத்துப் பங்குதாரத் தரப்பினர்களும் உள்ளடங்கிய தரவுத் தளமொன்றைத் தயாரித்தல . | 2021 - 2025 | – தேர்தல் சட்டங்கள் பற்றி அலுவலர்கள், பாதுகாப்புப் பிரிவுகள் மற்றும் பொது மக்களை அறிவுறுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல். | அந்தந்த ஆண்டுடன் தொடர்பான செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டுள்ளன. |

**5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகளைக் குறிப்பிடவும்.**

| இலக்கு.˙.நோக்கம் | இலக்கு | வெற்றிக் குறிகாட்டி | இதுவரை வெற்றியீட்டலின் முன்னேற்றம் | | |
|---|---|---|---|---|---|
| | | | 0%-49% | 50%-74% | 75%-100% |
| அத்தியாயம் 05 ஐப் பார்க்கவும் | - | | | | 80% |

# அத்தியாயம் 06 – மனித வளம் பற்றிய விவரம்

## 6.1. பணியாட்குழு எண்ணிக்கை முகாமைத்துவம்.

| | அங்கீகரிக்கப்பட்ட பணியாட்குழு எண்ணிக்கை | தற்போதுள்ள பணியாட் குழு எண்ணிக்கை | பதவி வெற்றிடம் / (மிகை)** |
|---|---|---|---|
| சிரேட்ட | 56 | 46 | 10 |
| மூன்றாம் நிலை | 21 | 16 | 05 |
| இரண்டாம் நிலை | 524 | 475 | 49 |
| ஆரம்ப நிலை | 209 | 166 | 43 |

தேர்தல் ஆணைக்குழுவின் முழுமொத்தப் பணியாட்குழு, பின்வரும் பதவிகளை வகிக்கும் அலுவலர்களை உள்ளடக்கியுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட அதன் ஐந்து உறுப்பினர்கள் தவிர ஆணைக்குழுவுக்கு செயலாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். அது தவிர, தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம், இலங்கை நிருவாக சேவை (இ.நி.சே.) அலுவலர்களும், இலங்கை கணக்காளர் சேவை (இ.க.சே.) அலுவலர்களும், சட்ட அலுவலர்களும், இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப சேவை (இ.த.தொ.தொ.சே.) அலுவலர்களும், இலங்கை திட்டமிடல் சேவை (இ.தி.சே.) அலுவலர்களும், அரசாங்க மொழிபெயர்ப்பாளர் சேவை (அ.மொ.சே.) அலுவலர்களும், அரச முகாமைத்துவ சேவை (அ,மு.சே.) விசேட வகுப்பு அலுவலர்கள் மற்றும் பதவிநிலைத் தரமல்லாத பணியாட்குழுவில் அரச முகாமைத்துவ சேவை அலுவலர்களும், அபிவிருத்தி அலுவலர் சேவை அலுவலர்களும், தகவல் தொழில்நுட்ப உதவியாளர்களும், ஆவண உதவியாளர்களும், அலுவலகப் பணியாளர்களும் மற்றும் சாரதிகளும் அடங்குவர். அதன் அடிப்படையில், 2025.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான தேர்தல் ஆணைக்குழுவின் மொத்தப் பணியாட்குழுவின் உள்ளடக்கம் பின்வருமாறு:-

| | எண்ணிக்கை |
|---|---|
| பதவிநிலை தர அலுவலர்<br>(தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய பதவிநிலை தரத்தின் அலுவலர்கள் உட்பட) | 62 |
| முகாமைத்துவ சேவை அலுவலர் | 380 |
| அபிவிருத்தி அலுவலர் | 56 |
| தொழில்நுட்ப அலுவலர் (சிவில்) | - |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | 10 |
| ஆவண உதவியாளர் | 27 |
| வரவேற்பு அலுவலர் | 01 |
| அலுவலகப் பணி உதவியாளர் | 122 |
| சாரதி | 44 |
| வாகனம் துப்புரவாக்குநர் | - |

## 6.2. தேர்தல் ஆணைக்குழுவின் பணியாட்குழுவின் பதவிநிலை தர அலுவலர்களின் தாபன அலுவல்கள்

தேர்தல் ஆணைக்குழுவில் பணியில் ஈடுபட்டுள்ள பதவிநிலை தரத்தின் அலுவலர்கள் சம்பந்தமாக குறித்த காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு:.

### 6.2.1. புதிய நியமனங்கள்

தேர்தல் ஆணைக்குழுவில் பணிபுரிந்த பதவிநிலை அலுவலர்களின் பதவிகளில் நிலவிய வெற்றிடங்கள் மற்றும் இடமாற்றல்கள் காரணமாக ஏற்பட்ட பதவி வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரை தேர்தல் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :-

- **வெற்றிடமாகியிருந்த மாத்தறை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் மாத்தறை உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவி: -**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: 75/10/5808 மற்றும் 2025.01.06 ஆம் திகதிய கடிதத்தினூடாக இந்த ஆணைக்குழுவுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவை - தரம் II அலுவலர் திரு. பீ.எஸ். பத்திரண அவர்கள், 2025.01.07 திகதியிலிருந்து தேர்தல் ஆணைக்குழுவிற்கு இணைப்புச் செய்யப்பட்டதுடன் 2025.01.09 ஆம் திகதி தொடக்கம் மாத்தறை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

- **வெற்றிடமாகியிருந்த பொலன்னறுவை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவி:**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: SLAS/240715/6689 மற்றும் 2025.01.28 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவை - தரம் III அலுவலர் திருமதி. மனோஜி ரீ குருசிங்க அவர்கள், 2025.02.14 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

- **வெற்றிடமாகியிருந்த கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் நிருவாக அலுவலர் பதவி:**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: PA/MAS/SU/39830 மற்றும் 2025.02.10 திகதிய கடிதத்தினூடாக இடமாற்றப்பட்ட முகாமைத்துவ சேவையின் அதியுயர் தர அலுவலர் திரு. டப்ளிவ்..எம். ஆனந்த வனசிங்க அவர்கள், 2025.02.17 ஆம் திகதி முதல் கண்டி மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் நிருவாக அலுவலராக நியமிக்கப்பட்டார்.

- **வெற்றிடமாகியிருந்த திருகோணமலை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவி:**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: SLAS/240715/6712 மற்றும் 2025.02.13 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவை - தரம் ஐஐஐ அலுவலர் திரு. எஸ்.கே. தேவனெரன்ஜன் அவர்கள், 2025.02.27 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாகியிருந்த முல்லைத்தீவு மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவி:**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: SLAS/240715/6707 மற்றும் 2025.02.17 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவை - தரம் ஐஐஐ அலுவலர் திரு. எஸ்.கே. தேவனெரன்ஜன் அவர்கள், 2025.03.12 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாகியிருந்த தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் (தகவல் தொடர்பாடல்) பதவி:-**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: CS/ICTS/02/0014 மற்றும் 2025.03.26 ஆம் திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப சேவையின் - தரம் ஐ அலுவலர் திருமதி எச்.எச்.டி.ஏ.டப்ளிவ். தமயந்தி அவர்கள், 2025.04.07 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் பணிப்பாளராக -- பதில் கடமை (தகவல் தொழில்நுட்பம்) நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாகியிருந்த தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட அலுவலர் பதவி:-**

தேர்தல் ஆணைக்குழுவின் நிறைவேற்றுதர சேவை வகுதியின் III தரத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு செல்வி.எச்.எம்.எஸ்.எல். பிலபிட்டிய அவர்கள் 2025.06.02 முதல் நடைமுறைக்கு வரும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட அலுவலராக நியமனம் செய்யப்பட்டார்

❖ **வெற்றிடமாகியிருந்த் தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் நிருவாக அலுவலர் பதவி:**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: PA/MAS/SU/54651 மற்றும் 2025.06.19 திகதிய கடிதத்தினூடாக இடமாற்றப்பட்ட முகாமைத்துவ சேவையின் அதியுயர் தர அலுவலர் திருமதி மிரானி அத்தபத்து லியனகே அவர்கள், 2025.07.01 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் தலைமை அலுவலகத்தின் நிருவாக அலுவலராக நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாகியிருந்த் தேர்தல் ஆணைக்குழுவின் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பதவி:**

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் இலக்கம்: 75/10/5911 மற்றும் 2025.10.08 திகதிய கடிதத்தினூடாக இடமாற்றம் செய்யப்பட்ட இலங்கை நிருவாக சேவை - தரம் ஐஐ அலுவலர் திரு. பி.எம்.ஐ.எஸ்.எல்.பண்டார அவர்கள், 2025.10.10 ஆம் திகதியிலிருந்து அமுலுக்குவரும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் நிருவாக அலுவலராக நியமிக்கப்பட்டார்.

❖ **வெற்றிடமாக இருந்த தேர்தல் ஆணைக்குழுவின் தேர்தலகள் ஆணையாளர் நாயகம் பதவி:**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104 உ உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரின் EC/01/06 ஆம் இலக்க மற்றும் 2025.10.14 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 2025.11.14 மே் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ”தேர்தலகள் ஆணையாளர் நாயகம்” பதவிக்கு திரு. எச்.ஆர்.பீ. பீரிஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

### 6.2.2. விடுவிப்புக்கள்

தேர்தல் ஆணைக்குழுவில் சேவையாற்றி, தேர்தல் ஆணைக்குழுவின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் பின்வருமாறு:

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5823 ஆம் இலக்க மற்றும் 2025.05.02 ஆம் திகதிய் கடிதத்திற்கு இணங்க, உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஜே. ஜெனிற்றன் அவர்கள், இடமாற்றம் செய்யப்படமையிழனால் 2025.05.20 ஆம் திகதி கடமையின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5587 ஆம் இலக்க மற்றும் 2025.08.20 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க, பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே. காந்தீபன் அவர்கள், இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கு நியமிக்கப்பட்டமை காரணமாக 2025.08.29 ஆம் திகதி கடமையின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/6032 ஆம் இலக்க மற்றும் 2025.08.20 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க, மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தலகள் ஆணையாளர் திரு. எம்.பி. மொஹமட் சுபியான் அவர்கள், இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தால் 2025.09.04 ஆம் திகதி கடமை நேரத்தின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5745 ஆம் இலக்க மற்றும் 2025.10.29 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க, வவுனியா மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. ஆர்.சி. அமல்ராஜ் அவர்கள், இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தால் 2025.11.11 ஆம் திகதி கடமை நேரத்தின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5075 ஆம் இலக்க மற்றும் 2025.11.03 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க, இரத்தினபுரி மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர் திரு. சுரங்க அம்பகஹதென்ன அவர்கள், இடமாற்றம் செய்யப்பட்ட காரணத்தால் 2025.11.11 ஆம் திகதி கடமை நேரத்தின் பின்னர் தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் PA/MAS/SU/34947 ஆம் இலக்க மற்றும் 2025.01.21 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க, 60 வயது பூர்த்தியடைந்ததன் அடிப்படையில் ஓய்வூதியச் சட்டக்கோவையின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், 2025.03.29 ஆம் திகதி ஓய்வுபெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட முகாமைத்துவ சேவை அலுவலர் அதிவிசேட தரத்தைச் சேர்ந்த திருமதி. டி.எல்.எஸ். தீபிகா அவர்கள் தேர்தல் ஆணைக்குழு சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/3612 ஆம் இலக்க மற்றும் 2025.08.13 ஆம் திகதிய கடிதத்திற்கு இணங்க, 60 வயது பூர்த்தியடைந்ததன் அடிப்படையில் ஓய்வூதியச் சட்டக்கோவையின் 02 மற்றும் 17 ஆம் பிரிவுகளின் பிரகாரம், 2025.11.14 முதல் ஓய்வுபெறுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. எம்.கே.எஸ்.எஸ். ரத்நாயக்க அவர்கள் தேர்தல் ஆணைக்குழு சேவையிலிருந்து ஓய்வுபெற்றார்.

### 6.2..3. உள்ளக இடமாற்றங்கள்:

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. எம்.எம்.எஸ்.கே. பண்டார மாபா அவர்கள், 2025.01.06 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளூராட்சிப் பிரிவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. ஆர்.எம்.எஸ்.பீ. ரத்நாயக்க அவர்கள், 2025.01.20 ஆம் திகதி தொடக்கம் பதுளை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் கடமைகளுக்காக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் திருமதி. எச்.எல்.டி. சாரங்கா அவர்கள், 2025.01.20 ஆம் திகதி தொடக்கம் காலி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் கடமைகளுக்காக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக (நிர்வாகம்) பணியாற்றும் திரு. பீ. ரகுநாதன் அவர்கள், 2025.02.06 ஆம் திகதி தொடக்கம் கொழும்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராகவும், 2025.03.06 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கொழும்பு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளராகவும் முழுநேரமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளராக (தேர்தல்கள் பிணக்குத் தீர்வு) பணியாற்றும் செல்வி. ஏ.டி.பீ.என். ஆட்டிகல அவர்கள், 2025.02.13 ஆம் திகதி தொடக்கம் கொழும்பு நகர தேர்தல்கள் அலுவலகத்தின் பிரதித் தேர்தல்கள் ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் திருகோணமலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. ஆர். சசீலன் அவர்கள், 2025.02.24 ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாண தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் மன்னார் மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. வி. சிவராஜா அவர்கள், 2025.02.24 ஆம் திகதி தொடக்கம் கிளிநொச்சி தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. ஆர்.சி. அமல்ராஜ் அவர்கள், 2025.02.25 ஆம் திகதி தொடக்கம் வவுனியா தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் அனுராதபுர மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. கே. முகுந்தன் அவர்கள், 2025.03.06 ஆம் திகதி தொடக்கம் மன்னார் தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் பொலன்னறுவை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. என்.பீ.பீ.ஐ.ஆர். குணரத்ன அவர்கள், 2025.03.10 ஆம் திகதி தொடக்கம் அனுராதபுர தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் மொனராகலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. என். ரேகன் அவர்கள், 2025.09.04 ஆம் திகதி தொடக்கம் மட்டக்களப்பு தேர்தல்கள் அலுவலகத்தின் உதவித் தேர்தல்கள் ஆணையாளராக முழுநேரமாக இணைக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளராகப் பணியாற்றும் திரு. எம்.எம்.எஸ்.கே. பண்டார மாபா அவர்கள், 2025.11.25 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் தேசிய தேர்தல்கள் பிரிவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### 6.2.4. பதில் கடமையாற்றுதல் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கான நியமனங்கள்:

- ❖ வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஆர்.சி. அமல்ராஜ் அவர்கள், முல்லைத்தீவு மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, 2025.02.28 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.

- ❖ கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. வி. சிவராஜா அவர்கள், மன்னார் மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, 2025.02.28 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டார்.

- ❖ தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்கள் 2025.05.09 ஆம் திகதி தொடக்கம் வெளிநாடு செல்லவுள்ளதால், அந்த காலப்பகுதியில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்கள்) திரு. எச்.ஆர்.பீ. பீரிஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ கொழும்பு நகர பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் செல்வி. ஏ.டி.பீ.என். ஆட்டிகல அவர்கள் மருத்துவ விடுப்பில் உள்ளமையினால், 2025.07.28 ஆம் திகதி தொடக்கம் கடமைகளை நிறைவேற்றுவதற்காக பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (கொழும்பு மாவட்டம்) திரு. பீ. ரகுநாதன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ பதுளை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே. காந்தீபன் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளமையினால், பதுளை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, 2025.09.02 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்காக நுவரெலியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே.ஏ.எல்.எஸ். கலுக்கம்பிட்டிய அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ மொனராகலை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. என். ரேகன் அவர்கள் உள்ளக இடமாற்றம் பெற்றுள்ளமையினால், மொனராகலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, 2025.09.04 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்காக அம்பாந்தோட்டை மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. வி.டி.ஜே. லக்மால் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்கள், 21 வது சர்வதேச தேர்தல்கள் விருது விழா மற்றும் ஆராய்ச்சி அமர்வில் பங்கேற்பதற்காக 2025.09.30 ஆம் திகதி தொடக்கம் 2025.10.05 வரை வெளிநாடு செல்லவுள்ளதால், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்காக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (தேசிய தேர்தல்கள்கள்) திரு. எச்.ஆர்.பீ. பீரிஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (கொழும்பு மாவட்டம்) திரு. பீ. ரகுநாதன் அவர்கள், இந்தியாவில் நடைபெறும் பயிற்சிநிகழ்ச்சித் திட்டமொன்றில் பங்கேற்பதற்காக 2025.10.22 ஆம் திகதி தொடக்கம் 2025.12.04 வரை வெளிநாடு செல்லவுள்ளதால், அக்காலப்பகுதியில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக கொழும்பு நகர பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் செல்வி. ஏ.டி.பீ.என். ஆட்டிகல அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ இரத்தினபுரி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. சுரங்க அம்பகஹதென்ன அவர்கள் இடமாற்றம் பெற்றுள்ளமையினால், இரத்தினபுரி மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, 2025.11.11 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்காக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே.எச்.எம்.எஸ்.பீ. கஸ்தூரிசிங்க அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. ஆர்.சி. அமல்ராஜ் அவர்கள் இடமாற்றம் பெற்றுள்ளமையினால், வவுனியா மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தின் வெற்றிடத்திற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, 2025.11.12 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்காக உதவித் தேர்தல்கள் ஆணையாளர் திரு. கே. முகுந்தன் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ தேர்தல் ஆணைக்குழுவின் 2025.11.17 ஆம் திகதி நடைபெற்ற 117 வது கூட்டத் தீர்மானத்தின்படி, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கடமை நிமித்தம் அல்லது தனிப்பட்ட விடுப்பில் இருக்கும் சந்தர்ப்பங்களில், தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு / கடமைகளை நிறைவேற்றுவதற்கு மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் திரு. பி.பீ.சி. குலரத்ன அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) திரு. ஜே.ஏ.எஸ்.பீ. ஜயசிங்க அவர்கள், மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (உள்ளூராட்சி) பதவியின் வெற்றிடத்திற்கு பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, 2025.11.25 ஆம் திகதி தொடக்கம் பதில் கடமையாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளார்.

### 6.2.5 பதவி உயர்வுகள்:

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5592 ஆம் இலக்க மற்றும் 2025.02.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. பீ. ரகுநாதன் அவர்கள் 2025.12.03 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளமையால், அன்றைய தினத்திலிருந்து கொழும்பு மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5617 ஆம் இலக்க மற்றும் 2025.04.11 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. ஆர். சசீலன் அவர்கள் 2024.12.03 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளமையால், அன்றைய தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் பிரதித் தேர்தல் ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 76/1/15/tpNrl XXII தொகுதி - I மற்றும் 2025.06.06 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் திரு. எஸ். அச்சுதன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளமையால், 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

- ❖ அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் PSC/PRO/6/1190/2024 ஆம் இலக்க மற்றும் 2025.06.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், திரு. கே. காந்தீபன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையின் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்ட திகதி 2019.02.26 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 75/10/5587 ஆம் இலக்க மற்றும் 2025.07.17 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக் குறிப்பின் 13.2 ஆம் பிரிவு மற்றும் அதன் திருத்தப்பட்ட விதிகளின் பிரகாரம், 2024.12.03 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் திரு. கே. காந்தீபன் அவர்கள் இலங்கை நிர்வாக சேவையின் தரம் I இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

- ❖ பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் MPubAd/AcSD/3291 ஆம் இலக்க மற்றும் 2025.10.08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம், இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 10.1.1 ஆம் பிரிவு மற்றும் அதன் திருத்தப்பட்ட விதிகளின் பிரகாரம், 2025.02.05 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் திருமதி. வை.டி. கமகே அவர்கள் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் II இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

### 6.3. நிர்வாகப் பிரிவின் செயற்பாடுகள்

### 6.3.1. நிர்வாகப் பிரிவு

### 6.3.1.1. நிருமாணம் மற்றும் திருத்த வேலைகள்

**செலவு விடயடம் - 2001**

தேர்தல்கள் செயலகத்தின் மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிர்வாகம்) அலுவலக அறை நவீனமயமாக்கல், வடக்கு முனையக் கட்டிடத்தின் இரண்டாவது மாடியில் உள்ள உணவருந்தும் அறையைத் திருத்துதல் உள்ளிட்ட ஏனைய அவசர திருத்த வேலைகள், தேர்தல்கள் செயலகத்தின் கழிவுநீர் அகற்றும் தொகுதியைத் திருத்துதல், தரைத்தளத்தைப் பிரித்து வேறாக்கல், தேர்தல் செயலகத்தின் தீயணைப்புத் தொகுதியைச் சீரமைத்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய புதிய நீர் இறைக்கும் நிலையமொன்றை நிறுவுதல், வடக்கு முனையக் கட்டிடத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ள பதவிநிலை உத்தியோகத்தர் தங்குமிட அறையைத் திருத்துதல், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களின் அலுவலக அறைகளைத் திருத்துதல், நிர்வாக உத்தியோகத்தர் அலுவலக அறையை மீளமைத்தல், மின்பிறப்பாக்கிகள் வைக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு பாதுகாப்பு வலைகளை இடுதல், தேர்தல் செயலகத்திற்கு வருகை தரும் மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகளை வழங்குவதற்காக இடமொன்றை அமைத்தல் மற்றும் பத்தரமுல்ல ரஜமல்வத்தையில் அமைந்துள்ள தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணியைச் சுற்றிப் பாதுகாப்பு வேலி அமைத்தல் உள்ளிட்ட திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் கொழும்பு (நகரம்), கம்பஹா, நுவரெலியா, காலி, மாத்தறை, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், புத்தளம், கேகாலை ஆகிய மாவட்ட தேர்தல் அலுவலகக் கட்டிடங்களின் திருத்த வேலைகளும், களுத்துறை, கண்டி ஆகிய மாவட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் நுவரெலியா, மாத்தறை, மட்டக்களப்பு, அனுராதபுரம், பொலன்னறுவை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் தேர்தல் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களின் திருத்த வேலைகளும், நுவரெலியா மற்றும் திருகோணமலை சுற்றுலா விடுதிகளின் அவசர திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**செலவு விடயம் - 2104**

04 மாடிகளைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் அலுவலகக் கட்டிட நிர்மாணத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டப் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், யாழ்ப்பாண மாவட்ட தேர்தல் அலுவலகம் அப்புதிய கட்டிடத்தின் தரைத்தளத்திலும் முதலாம் மாடியிலும் நிறுவப்பட்டுள்ளது.

### 6.3.1.2. உள்நாட்டுப் பயிற்சிகள்

2025 சனவரி மாதம் 08 ஆம் திகதி அத்துருகிரிய தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் 43 உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ”பொருட்கள் கணக்கெடுப்பு” தொடர்பான பயிற்சியொன்று சிங்கள மொழியில் நடாத்தப்பட்டுள்ளது.

2025 சனவரி மாதம் 18 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலுடன் ”பொருட்கள் கணக்கெடுப்பு” தொடர்பான பயிற்சியொன்று தமிழ் மொழியில் நடாத்தப்பட்டுள்ளது.

2025 பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் எழுத்துக்கோப்பிடல் தொடர்பான பயிற்சிச் செயலமர்வுக்காக 06 முகாமைத்து சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதிய தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் செயலமர்வுக்காக இரண்டு முகாமைத்து சேவை உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியன்று தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் நிதி ஒழுங்குவிதி 104 இன் கீழான இழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்த விசாரணைகள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வுக்காக, தேர்தல் செயலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் பெறுகை விடயங்களைக் கையாளும் 04 முகாமைத்து சேவை உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 மே மாதம் 28 மற்றும் 29 ஆகிய இரு தினங்களில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சிப் செயலமர்வுக்காக தேர்தல் செயலகம் மற்றும் அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தளை மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 09 முகாமைத்து சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 யூன் மாதம் 04 ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் தயாரித்தல் தொடர்பான பயிற்சிப் செயலமர்வுக்காக தேர்தல் செயலகம் மற்றும் அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தளை மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 04 முகாமைத்து சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

2025 யூன் மாதம் 04 ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் செயலமர்வுக்காக அம்பாறை, மாத்தளை, பொலன்னறுவை, இரத்தினபுரி மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 05 முகாமைத்து சேவை உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 யூன் மாதம் 13 மற்றும் 14 ஆகிய இரு தினங்களில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில அலுவலக நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப் செயலமர்வுக்காக அம்பாறை, அம்பாந்தோட்டை, மாத்தளை, மட்டக்களப்பு, இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த முகாமைத்து சேவை, அபிவிருத்தி மற்றும் ஆவண உதவியாளர் உத்தியோகத்தர்கள் 08 கலந்துகொண்டனர்.

2025 யூன் மாதம் 19 ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில நிதி ஒழுங்குவிதி 104 இன் கீழான இழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்த விசாரணை தொடர்பான நிகழ்சித்திட்டத்திற்காக தேர்தல் செயலகம் மற்றும் மாத்தளை மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 06 முகாமைத்து சேவை மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 யூன் மாதம் 12 ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில வாகனப் பராமரிப்பு தொடர்பான பயிற்சிக்காக களுத்துறை 01, வவுனியா 01, பொலன்னறுவை 01, மாத்தளை 01 மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 04 சாரதிகள் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2025 யூன் மாதம் 19 ஆம் திகதி வ.்.ப திறன் விருத்தி நிதியத்தில் (ஞனுகுடு) நடைபெற்ற அரச உத்தியோகத்தர்களின் முற்பண "B" கணக்குகளைத் தயாரித்தல் தொடர்பான பயிற்சிப் செயலமர்வுயில் தேர்தல் செயலகத்தைச் சேர்ந்த இரண்டு உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்

2025 ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி Metropolitan Campus KDU ஆங்கில மொழியில் கடிதம் எழுதுதுல் தொடர்பான செயலமர்வில் தேர்தல்கள் செயலகத்தின் 04 அலுவுலர்களை கலந்து கொள்ளச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 யூன் மாதம் 14 மற்றும் 15 ஆகிய இரு தினங்களில் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் அலுவலக முகாமைத்துவம் மற்றும் நிதி ஒழுங்குவிதிகள் தொடர்பான பயிற்சிப் செயலமரவியில் தேர்தல் செயலகம் மற்றும் களுத்துறை, குருநாகல், இரத்தினபுரி, நுவரெலியா, வவுனியா, பொலன்னறுவை மற்றும் கேகாலை மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களைச் சேர்ந்த 12 முகாமைத்து சேவை உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 செப்தெம்பர் மாதம் 10 ஆம் திகதி தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் தனிப்பட்ட பெர்வழிக்கோப்புகளைப் பராமரித்தல் தொடர்பான அடிப்படை பயிற்சிப் செயலமர்வியில் தேர்தல் ஆணைக்குழுவின் 04 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

2025 செப்தெம்பர் மாதம் 02 ஆம் திகதி தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் அலுவலக பணி உதவியாளர்கள் மற்றும் சாரதிகளின் மனப்பாங்கு மற்றும் தொழில்சார் அறிவை மேம்படுத்துதல் தொடர்பான அடிப்படை பயிற்சிப் செயலமர்வியில் தேர்தல் ஆணைக்குழுவின் 05 அலுவலக பணி உதவியாளர்கள் மற்றும் 02 சாரதிகளைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 ஆகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் நிதி ஒழுங்குவிதி 104 இன் கீழான இழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்த விசாரணை தொடர்பான பயிற்சிப் செயலமர்வியில் தேர்தல் ஆணைக்குழுவின் 02 உத்தியோகத்தர்களையும் களுத்துறை மற்றும் கேகாலை மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் 02 உத்தியோகத்தர்களையும் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதியன்று தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் அலுவலக நடைமுறைகள் தொடர்பான பயிற்சிப் செயலமர்வியில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் களுத்துறை, மாத்தளை, நுவரெலியா, குருநாகல், இரத்தினபுரி மற்றும் பொலன்னறுவை மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 13 உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் இரண்டாம் மொழி (தமிழ்) 200 மணித்தியாலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் 04 உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இரண்டாம் மொழி (தமிழ்) 150 மணித்தியாலப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் தேர்தல் ஆணைக்குழுவின் 02 உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களினதும் 25 பிரதான முகாமைத்து சேவை உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன், நிதி ஒழுங்குவிதி 135 இன் கீழான பரீட்சித்தல் மற்றும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் (Vouchers) தொடர்பான ஒரு நாள் பயிற்சித் நிகழ்ச்சித்திட்டம் தேர்தல் ஆணைக்குழுவில் நடாத்தப்பட்டது.

2025 யூலை மாதம் 29 ஆம் திகதி தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் அரச உத்தியோகத்தர்களின் சம்பள ஏற்பாடுகள் தொடர்பான அடிப்படை பயிற்சிப் செயலமர்வியில் தேர்தல் ஆணைக்குழுவின் நிர்வாக உத்தியோகத்தரைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தினால் (SLIDA) நடாத்தப்படும் Researcher Development Program எனும் பாடநெறியில் 02 உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தேசிய பெறுகைக் ஆணைக்குழுவினால் நடாத்தப்படும் Electronic Procurement Monitoring System தொடர்பான அறிமுக பயிற்சிப் செயலமர்வியில் தேர்தல் ஆணைக்குழுவின் 03 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மூலோபாயத் திட்டத்தின்படி தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான பயிற்சிநிகழ்ச்சித் திட்டம், தேர்தல் ஆணைக்குழுவின் 56 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025.09.09 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது.

2025 செபதெம்பர் மாதம் 16, 23 மற்றும் 30 ஆகிய மூன்று தினங்களில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் நிர்வாக உத்தியோகத்தர்களின் அபிவிருத்தி திறன் விருத்தி தொடர்பான பயிற்சிப் செயலமர்வுயில் 02 உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 செபதெம்பர் மாதம் 17, 26 மற்றும் ஒகதோபர் மாதம் 01 ஆகிய மூன்று தினங்களில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் பெறுகைச் செயன்முறை மற்றும் நடைமுறைப் பயன்பாடு தொடர்பான பயிற்சிப் செயலமர்வில் ஓர் உத்தியோகத்தரைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மூலோபாயத் திட்டத்தின்படி தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் 13 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025.09.26 ஆம் திகதி பதுளை, பிந்துனுவெவ சேவைக்காலப் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

மூலோபாயத் திட்டத்தின்படி தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் 20 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025.10.13 ஆம் திகதி அனுராதபுரம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மூலோபாயத் திட்டத்தின்படி தேருநர் இடாப்பு மீளாய்வு பயிற்சி நிகழ்ச்சித் திட்டம், மாவட்ட தேர்தல் அலுவலகங்களின் 20 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025.10.14 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

2025 செபதெம்பர் மாதம் 23ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் அரச வாகனங்களின் பராமரிப்பு தொடர்பான பயிற்சிச் செயலமர்வில் கொழும்பு (நகரம்), கம்பஹா, காலி மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களில் வாகனப் விடயத்திற்கு பொறுப்பான 04 உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 ஒக்தோபர் மாதம் 03 ஆம் திகதியன்று தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் களஞ்சிய முகாமைத்துவம் தொடர்பாக நடைபெற்ற பயிற்சிப் செயலமர்வில், தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு, கண்டி, திருகோணமலை, மொனராகலை ஆகிய மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலிருந்து தலா 05 பேர் வீதம் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 ஒக்தோாபர் மாதம் 14 மற்றும் 15 ஆகிய இரு தினங்களில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் கணக்கியல் பொறுப்புகள் மற்றும் நடைமுறைப் பயன்பாடு தொடர்பான பயிற்சிப் செயலமர்வில் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த 04 உத்தியோகத்தர்களும், கொழும்பு (நகரம்) 01, கண்டி 02, மாத்தளை/ நுவரெலியா/ மாத்தறை மாவட்டங்களிலிருந்து தலா ஓர் உத்தியோகத்தர் வீதமும், குருநாகல் மாவட்டத்திலிருந்து 02 உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

2025 ஒக்தோபர் மாதம் 15 மற்றும் 16 ஆகிய இரு தினங்களில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமைத்து சேவை உத்தியோகத்தர்களின் திறன் மேம்பாடு தொடர்பான பயிற்சிப் செயலமர்வில் கொழும்பு (நகரம்), களுத்துறை, மாத்தளை, நுவரெலியா, காலி, பதுளை, மொனராகலை மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 07 உத்தியோகத்தர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டனர்.

2025 ஒக்தோபர் மாதம் 16 ஆம் திகதி சம்பள மாற்றம் தொடர்பான திறந்த மற்றும் தொலைக்கல்வி மத்திய நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி பாடநெறியில் தேர்தல் செயலகத்தின் 05 உத்தியோகத்தர்களைப் பங்கேற்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2025 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தில் நடைபெற்ற ஆரம்பகட்ட விசாரணைகள் தொடர்பான பயிற்சிப் செயலமர்வில் கம்பஹா, மாத்தளை, மாத்தறை மற்றும் புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த 04 உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு இடமாற்றம் பெற்று வந்த மற்றும் புதிய நியமனங்கள் பெற்று வந்த 39 உத்தியோகத்தர்களுக்காக, தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்த அடிப்படை அறிமுக நிகழ்ச்சித்திட்டம் 2025.12.18 மற்றும் 19 ஆகிய இரு தினங்களில் தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது.

#### 6.3.1.3. தேர்தல் செயன்முறைகளுக்கான சர்வதேச அமைப்பு (IFES) ஊடாக நடாத்தப்பட்ட பயிற்சிகள்

2024 ஜனாதிபதித் தேர்தல் மற்றும் 2024 பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஆகியவற்றின் மூலம் கற்றுக்கொண்ட பாடங்கள் குறித்த கலந்துரையாடலும், உள்ளூராட்சி நிறுவனங்கள் தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்த பயிற்சிப் செயலமர்வும் 55 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025 சனவரி 09 மற்றும் 10 ஆகிய திகதிகளில் நீர்கொழும்பு, அமகி அரியாவில் நடைபெற்றது.

தேர்தல் செயல்முறை தொடர்பான தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவது குறித்த பயிற்சிப் செயலமர்வு 47 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025 சனவரி 26 மற்றும் 27 ஆகிய திகதிகளில் தம்புள்ளை, அவுடங்காவ கொவென்ரோ சீகிரியவில் நடைபெற்றது.

2025 உள்ளூராட்சி நிறுவனங்கள் தேர்தல் தொடர்பான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் எதிர்கால மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல் குறித்த பயிற்சிச் செயலமர்வு 38

உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025 மே 27 மற்றும் 28 ஆகிய திகதிகளில் சிலாபம், பங்கதெனிய அனன்யா ரிசோர்ட்டில் நடைபெற்றது.

பெறுகைச் செயல்முறைகள் தொடர்பான பயிற்சிச் செயலமர்வு 30 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025 யூன் 23 மற்றும் 24 ஆகிய திகதிகளில் நடைபெற்றது. இதில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலகங்களிலும் பெறுகைச் விடயங்களைக் கையாளும் முகாமைத்து மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்காக ஆடிஅம்பலம, டமரிண்ட் ட்ரீ கார்டனில் இப் பயிற்சி நடாத்தப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் 2026 - 2029 காலப்பகுதிக்கான மூலோபாயத் திட்டத்தைத் தயாரித்தல் குறித்த பயிற்சிப் செயலமர்வு 45 உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன் 2025 செபதெம்பர் 18 மற்றும் 19 ஆகிய திகதிகளில் சீதுவை, விவந்தா கலம்போவில் நடைபெற்றது. அந்த நிகழ்வின் சில புகைப்படங்கள் கீழே காணலாம்.












தேர்தல் செயல்பாட்டுத் திட்டம் மற்றும் அதனை நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக மாவட்ட தெரித்தாட்சி உத்தியோகத்தர்கள் / அரசாங்க அதிபர்கள் / மாவட்ட செயலாளர்கள் மற்றும் தேர்தல்களின் ஆரம்ப கட்ட பணிகளை மேற்கொள்ளும் அந்தந்த மாவட்டங்களின் பதவிநிலை உத்தியோகத்தர்கள் / குழுக்களின் தலைவர்கள் மற்றும் முக்கிய உத்தியோகத்தர்களுக்காக பின்வரும் மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாத்தறை, அம்பாந்தோட்டை, புத்தளம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார், அனுராதபுரம் மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் உத்தியோகத்தர்களுக்கு இப்பயிற்சிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### 6.3.1.4. கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனம் (KOICA) ஊடாக நடாத்தப்பட்ட பயிற்சிகள்

செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட டிஜிட்டல் புத்தாக்கம் தொடர்பான பயிற்சிப் செயலமர்வொன்று தேர்தல் ஆணைக்குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேச செயலகம் மற்றும் அரச கரும மொழிகள் திணைக்களம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களின் பங்கேற்புடன், KOICA நிறுவனத்தின் அனுசரணையில் 2025.08.14 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவின் பிரதான கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டதுடன், இது மிகவும் வெற்றிகரமான ஒரு பயிற்சிப் செயலமர்வாக அமைந்தது



**6.3.1.5. Factum நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சிகள்**

Training on Social Media Monitoring தொடர்பான பயிற்சிச் செயலமர்வு தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் தேர்தல்களின் போது சமூக ஊடகங்கள் தொடர்பாகச் செயற்படுகின்ற ஏனைய சில அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன், 2025.03.05 ஆம் திகதி தொடக்கம் 2025.03.07 ஆம் திகதி வரை தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது.

Training on Social Media Monitoring தொடர்பான மேலதிக பயிற்சிக்கான செயலமர்வு தேர்தல் ஆணைக்குழுவின் 13 உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் 2025.09.11 ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது. அந்த நிகழ்வின் போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்களைக் கீழே காணலாம். இது மாவட்ட மட்டத்தில் சமூக ஊடகங்களுடன் பணியாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது



Training on Social Media Monitoring தொடர்பான செயலமர்வொன்று தேர்தல் ஆணைக்குழு மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களைச் சேர்ந்த 28 உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் 2025.09.24 மற்றும் 25 ஆகிய இரு தினங்கள் தேர்தல் ஆணைக்குழுவில் நடைபெற்றது. அந்நிகழ்வின் போது பிடிக்கப்பட்ட சில புகைப்படங்களை கீழே காணலாம்












### 6.3.2. தாபனப் பிரிவு

தாபனப் பிரிவு மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) பிரதி தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் உதவித் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படுகின்றது. அதற்கிணங்க தேர்தல் ஆணைக்குழு அலுவலகத்தின் நிருவாக அலுவலரின் வழிகாட்டலின் கீழ் மற்றும் 02 தலைமை முகாமைத்துவ சேவை அலுவலர்களின் மற்றும் ஒன்பது முகாமைத்துவ சேவை அலுவலர்கள் ஆகியோரைக் கொண்டு செயற்படுகின்றது. மேலுமஇ நிருவாக அலுவலரின் வழிகாட்டல் மற்றும் தலைமை முகாமைத்துவ சேவை அலுவலரின் மேற்பார்வையின் கீழ் வரவேற்பு கருமபீடமொன்றும் இயங்குகின்றது. நாட்டில் அமையப் பெற்றுள்ள 27 மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் மற்றும் தேர்தல்கள் செயலகத்தின் பதவிநிலை அல்லாத அலுவலர்களின் அனைத்து தாபன நடவடிக்கைகள், தேர்தல் ஆணைக்குழுவின் தாபன நிருவாக அலுவல்கள், சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் தொடர்பான மேற்பார்வையும் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

#### 6.3.2.1. பணியாட்குழு அலுவல்கள்

தாபன பிரிவில் இணைக்கப்பட்டு பணியாற்றும் முகாமைத்துவ சேவை அலுவலர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பணிகள் தொடர்பாக 2025 ஆம் ஆண்டில் அலுவலர்களுக்கான செயலாற்றுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டதோடு, 03 மாதங்களுக்கொரு முறை அதன் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

#### 6.3.2.2. முகாமைத்துவ சேவை அலுவலர் சேவை

2025 வருடாந்த இடமாற்றங்களின் கீழ், 04 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வெளியில் இடமாற்றம் பெற்று வெளியேறியதோடு, அவ்வாறு இடமாற்றல் பெற்றுச் சென்ற 04 அலுவலர்களின் பதில் அலுவலர்களும் சேவைக்கு அறிக்கையிட்டனர்.

திணைக்களங்களுக்கு இடையிலான இடமாற்றத்தின் கீழ் இந்த ஆணைக்குழுவிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்த 15 முகாமைத்துவ சேவை அலுவலர்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவிற்கு வெளியே பதிலாட்கள் இன்றி 06 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட 51 ஆவண உதவியாளர் பதவிகளில் 23 பதவிகளை ஒடுக்கி, அதற்குப் பதிலாக 23 புதிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகளை நிதி ஒழுங்குவிதி 71 இன் கீழ் உருவாக்குவதற்கான பரிந்துரைகள் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதோடு முன்வைக்கப்பட்ட விடயங்கள் மற்றும் சேவைத் தேவைப்பாடுகளைக் கருத்திற் கொண்டு, இந்த ஆணைக்குழுவிற்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள 23 ஆவண உதவியாளர் பதவிகளை ஒடுக்கி, அதற்குப் பதிலாக 23 புதிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகளை உருவாக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அனுமதி வழங்கியது. இதற்கமைய, புதிதாக உருவாக்கப்பட்ட பதவிகள் மற்றும் அன்றைய திகதியில் நிலவிய வெற்றிடங்களுடன் சேர்த்து மொத்த முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களின் எண்ணிக்கை 46 ஆகக் காணப்பட்டது. குறித்த வெற்றிடங்களுக்காக எதிர்வரும் ஆட்சேர்ப்புகளின் போது உத்தியோகத்தர்களை வழங்குமாறு செயலாளர் (பொது நிர்வாக மாகாண சபைகளட, உள்ளூராட்சி அமைச்சு) அவர்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

### 6.3.2.3. அபிவிருத்தி அலுவலர் சேவை

திணைக்களங்களுக்கிடையிலான இடமாற்றத்தின் கீழ் இந்த ஆணைக்குழுவிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்த 6 அபிவிருத்தி அலுவலர் சேவை உத்தியோகத்தர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இடமாற்றம் செய்து கொள்ளப்பட்டனர்.

அதேவேளை, தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து பதிலீட்டாளர்கள் இன்றி வெளியே செல்லும் 06 அபிவிருத்தி சேவை உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் வழஙகப்பட்டது.

### 6.3.2.4. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை

திணைக்களங்களுக்கிடையிலான இடமாற்றத்தின் கீழ் இந்த ஆணைக்குழுவிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்த 01 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தர், தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இடமாற்றம் செய்து கொள்ளப்பட்டார்.

தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து பதிலீட்டாளர்கள் இன்றி வெளியே செல்லும் 01 தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவி உத்தியோகத்தருக்கு இடமாற்றம் வழஙகப்பட்டது.

### 6.3.2.5. அலுவலக பணியாளர் சேவை (அலுவக கனிட்ட ஊழியர் சேவை)

திணைக்களங்களுக்கிடையிலான இடமாற்றத்தின் கீழ் இந்த ஆணைக்குழுவிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்த அலுவலக பணியாளர் சேவையைச் சேர்ந்த 03 பணியாளர்கள், தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இடமாற்றம் செய்து கொள்ளப்பட்டனர்.

அதேவேளை, தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து பதிலீட்டாளர் இன்றி வெளியே செல்லும் 01 அலுவலகப் பணியாளர் சேவை பணியாளருக்கு இடமாற்றம் வழஙகப்பட்டது.

#### 6.3.2.6. சாரதி சேவை

திணைக்களங்களுக்கிடையிலான இடமாற்றத்தின் கீழ் இந்த ஆணைக்குழுவிற்கு வருவதற்கு விருப்பம் தெரிவித்த 01 சாரதி, தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியுடன் இடமாற்றம் செய்து கொள்ளப்பட்டார்.

தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து பதிலீட்டாளர் இன்றி வெளியே செல்லும் 03 சாரதிகளுக்கு இடமாற்றம் வழஙகப்பட்டது.

#### 6.3.2.7. புதிய ஆட்சேர்ப்புகள்

##### 6.3.2.7.1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

தேர்தல் ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள இப்பதவிக்கு புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக, அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்கும் மற்றும் பணியாட்குழு முகாமைத்துவத்திற்கும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவிடம் அனுமதி கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதற்கமைய, தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்குரிய சேவைப்பிரமாணக்குறிப்பு.். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் விதிகளுக்கு இணங்க ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு மேற்கூறிய குழுவினால் அனுமதி வழங்கப்பட்டது. இதன்படி, இதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறையை வரைபு செய்து அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

##### 6.3.2.7.2. மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்

தேர்தல் ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு புதிய ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்காக, அரச சேவையின் ஆட்சேர்ப்பு செயல்முறையை மீளாய்வு செய்வதற்கும் பணியாட்குழு முகாமைத்துவத்திற்கும் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழுவிடம் அனுமதி கோரி கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதற்கமைய, மின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்குரிய சேவைப்பிரமாணக்குறிப்பு.். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் விதிகளுக்கு இணங்க ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கு குறித்த குழுவின் அனுமதி கிடைத்தது. இதன்படி, இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை வரைபு செய்யப்பட்டு, அங்கீகாரம் பெறுவதற்காக தாபனப் பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

#### 6.3.2.8. பதவி வெறிதாக்கல் அறிவித்தல்களை வெளியிடுதல்.்.வழங்குதல்

தேர்தல் ஆணைக்குழுவில் கடமையாற்றிய பின்வரும் உத்தியோகத்தர்கள், முறையான விடுமுறை அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் கடமைக்குச் சமூகமளிக்காத காரணத்தினால், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் 1 ஆம் தொகுதியின் XV ஆம் அத்தியாயத்தின் 214 ஆம் பிரிவின் பிரகாரம் தானாகவே தனது பதவியைக் வெறிதாக்கியவர்களாக கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| தொ.இ | பெயர் | பதவி | நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|---|
| 01 | திரு. கே.ஜி.சி.ஜே. கப்புகம | முகாமைத்துவ சேவை அலுவலர் II | 2019.03.30 இருந்து |
| 02 | திரு. எம்.எச்.எம். ஹஸ்மத் | அலுவலகப் பணியாளர் சேவை III | 2022.02.09 இருந்து |
| 03 | திரு. ஜி.கே. கயந்த | அலுவலகப் பணியாளர் சேவை III | 2024.10.28 இருந்து |
| 04 | திருமதி. என். லலிதா சக்தி | முகாமைத்துவ சேவை அலுவலர் III | 2024.01.01 இருந்து |
| 05 | திரு. எம்.ஏ.டி. வீரசேக்கர | அலுவலகப் பணியாளர் சேவை II | 2024.02.01 இருந்து |
| 06 | செல்வி. எஸ். கிருஷ்ணநர்மதா | முகாமைத்துவ சேவை அலுவலர் III | 2023.11.24 இருந்து |
| 07 | திரு. என். தினேஷ் | அலுவலகப் பணியாளர் சேவை III | 2022.11.07 இருந்து |

### 6.3.2.9. இறப்பெய்தல்

மட்டக்களப்பு மாவட்ட தேர்தலகள் அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டு கடமையாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III ஐச் சேர்ந்த திரு. எம். பிரசாந்தன் அவர்கள் 2025.10.30 ஆம் திகதி தற்கொலை செய்துகொண்டார்.

### 6.3.2.10. ஓய்வுறுத்தல்கள

தேர்தல் ஆணைக்குழுவின் இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த 01 உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் அதிவிசேட தரத்தைச் சேர்ந்த 01 உத்தியோகத்தர், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் 15 உத்தியோகத்தர்கள், அலுவலக பணியாளர் சேவையின் 02 பணியாளர்கள் மற்றும் சாரதி சேவையின் 01 ஊழியர் ஆகியவர்கள் 2025 ஆம் ஆண்டில் சேவையிலிருந்து இளைப்பாறினர்.∴ஓய்வு பெற்றனர். இவ்வாறு ஓய்வுபெற்ற 20 பேரில் 19 பேருக்கான ஓய்வூதியக் கோப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. 2025 ஆம் அண்டு திசெம்பர் மாதம் ஓய்வுபெற்ற ஓர் உத்தியோகத்தரின் ஓய்வூதியக் கோப்பு நடவடிக்கைகள் இறுதிப் கட்டத்தில் உள்ளன. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் தொடர்பான விரிவான அறிக்கை அட்டவணை 31 ஆக இணைக்கப்பட்டுள்ளது.

பிரதி தேர்தல் ஆணையாளர் (கொழும்பு மாவட்ட) பதவியில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது 2024.12.08 ஆம் திகதி காலமான இலங்கை நிர்வாக சேவை தரம் I ஐச் சேர்ந்த திரு. ஆர்.எஸ். வெதகே அவர்களின் மரணப் பணிக்கொடையை அவரது வாழ்க்கைத்துணை மற்றும் பிள்ளைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டன.

### 6.3.2.11. பதவியிலிருந்து விடுவித்தல்

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III ஐச் சேர்ந்த திருமதி கே.ஏ.டி. சமந்திகா அவர்கள், இலங்கை அரச கணக்காய்வாளர் சேவை தரம் III, வகுப்பு II இன் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ளதால், அந்த நியமனத்தை கையேற்கும் வகையில் அவர் வகித்த பதவியிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III க்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த தேர்தல் ஆணைக்குழுவில் இணைக்கப்பட்டு கடமையாற்றிய 11 ஆவண உதவியாளர்களும் 05 அலுவலக பணியாளர்களும் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III நியமனங்களைப் பெற்றுள்ள காரணத்தால் அந்த நியமனங்களை கையேற்கும் வகையில் அவர்கள் வகித்த பதவிகளிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III ஐச் சேர்ந்த திருமதி ஏ.டி.எல். டி அல்விஸ் அவர்கள், விஞ்ஞான சேவையின் தரம் III இன் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ளதால், அந்த நியமனத்தை கையேற்கும் வகையில் அவர் வகித்த பதவியிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III ஐச் சேர்ந்த திரு. டி. ஜனார்த்தன் அவர்கள், குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் களப்பணி/அலுவலகப்பணி - தொகுதி 2 சேவைப் பிரிவின் தரம் II அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்றுள்ளதால், அந்த நியமனத்தை கையேற்கும் வகையில் அவர் வகித்த பதவியிலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 6.3.2.12. புதிய நியமனங்கள்

தேர்தல் ஆணைக்குழுவின் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் நிலவிய வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புவதற்காக, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III க்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2025.03.03 ஆம் திகதி தொடக்கம் நியமனம் பெற்ற 11 புதிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது..

மேலும், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையில் நிலவிய எஞ்சிய வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புவதற்காக, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவை தரம் III க்கான திறந்த போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2025.10.01 ஆம் திகதி தொடக்கம் நியமனம் பெற்ற 16 புதிய முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை வழங்குவதற்கு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

### 6.3.2.13. உள்நாட்டு/ வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறைகளை அங்கீகரித்தல்

அரச நிர்வாகச் சுற்றறிக்கை 14/2022, 14/2022(I), 14/2022(II) மற்றும் 14/2022(III) ஆகியவற்றிற்கு அமைவாக, உள்நாட்டு/ வெளிநாட்டு சம்பளமற்ற விடுமுறைக்கு விண்ணப்பித்த தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு பின்வருமாறு விடுமுறைகள் அங்கீகரிக்கப்பட்டன.

| பதவி | சம்பளமற்ற உள்நாட்டு | சம்பளமற்ற வெளிநாட்டு |
|---|---|---|
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர | - | 02 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் III | 01 | - |
| சாரதிகள் சேவை | - | 02 |
| அலுவலக கனிட்ட ஊழியர் சேவை | - | 01 |

### 6.3.2.14. விடுமுறை முகாமைத்துவ முறைமையை பேணிவருதல்

2021 ஆம் ஆண்டு தொடக்கம் தலைமை அலுவலகத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட விடுமுறை முகாமைத்துவ முறைமை (Leave Management System) தற்போது செயற்பாட்டில் உள்ளதோடு விடுமுறை எடுக்கின்ற உத்தியோகத்தர்கள் அந்த விடுமுறை முறைமையின் மூலம் விடுமுறைக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கின்றனர்.

### 6.3.2.15. வருடாந்த சம்பளவேற்றத்தை செலுத்தல்

2025 ஆம் ஆண்டில், தேர்தல் ஆணைக்குழுவிற்கு இணைப்புச் செய்யப்பட்ட பின்வரும் பதவிகளில் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு கீழுள்ளவாறு 652 வருடாந்த சம்பள உயர்வுகள் வழங்கப்பட வேண்டியிருந்ததோடு அவற்றில் 536 சம்பள உயர்வுகளை உரிய திகதியில் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| பதவி | வருடாந்த சம்பளவேற்றம் செலுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை (அ) | வருடாந்த சம்பளவேற்றம் செலுத்தப்படாத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை (ஆ) |
|---|---|---|
| முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 316 | 74 |
| அபிவிருத்தி உத்தியோகத்தர் | 31 | 26 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் III | 06 | 04 |
| ஆவண உதவியாளர் | 24 | 03 |
| அலு.ஊழி.சேவை | 114 | 08 |
9.2 இறுதியாக தேருநர் ஒருவராக பதிவு தொடர்பான விபரங்களடங்கிய கடிதமொன்றை வழங்குமாறு தேருநர் ஒருவர் கோருவாராயின் மாதிரி படிவம் - 01 இனைப் பயன்படுத்தி முன்னைய பதிவுடன் தொடர்பான அவ்வாறான கடிதமொன்றை வழங்குமாறு கணக்கெடுப்பு அலுவல்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள். புதிதாக கிராம அலுவலர் பிரிவுக்கு வசிப்பதற்கு வந்துள்ள நபரொருவர் அவ்வாறான கடிதமொன்றை சமர்ப்பிப்பாராயின் அதனைக் கையேற்று ER படிவத்துடன் இணைத்து தேர்தல்கள் அலுவலகத்திற்கு கையளிக்குமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள். முன்னைய பதிவுடன் தொடர்புடைய தகவல்கள் 9.1 பந்திக்கமைய உரிய முறையில் வழங்கப்பட்டிருப்பின் கடிதமொன்று தேவையில்லையெனவும் கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வேண்டும். வதிவிடத்தை விட்டுச் செல்வதற்கான கடிதமொன்று இணைக்கப்பட்டிருந்தாலும் இல்லாவிட்டாலும் முன்னைய வதிவிடத்திலிருந்து நீங்கியிருக்கின்றனரா என்பது பற்றி வாக்கெடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான அலுவலர் பரீட்சித்து திருப்தியடைதல் வேண்டும்.

## 10. களக் கணக்கெடுப்பின்போது போதுமானளவு தகவல்களை வழங்குவதற்கு தவறிய நபர்களை தேருநர்களாகப் பதிவுசெய்தல்.

நீண்ட காலமாக குறித்த முகவரியில் சாதாரணமாக வசித்தாலும் முன்னைய வதிவு தொடர்பான விபரங்களை உறுதிப்படுத்திக்கொள்வதற்கான தகவல்களை சமர்ப்பிப்பதற்கு தவறியமையின் காரணமாக தேருநர் ஒருவராக பதிவு செய்வதற்கான தடைகள் ஏற்பட்டால் அவரிடமிருந்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் (மாதிரிக் கடிதம் - 2) வெளிப்படுத்துகையொன்றைப் பெற்று அல்லது அவர்கள் நீண்டகாலமாக குறித்த இடத்தில் வசித்ததாக கணக்கெடுப்பு அலுவலர் குறித்த வீட்டுடன் தொடர்பான ER படிவத்தில் குறிப்புடன் கையொப்பமிடப்பட்டிருப்பின் தேருநர்களாக ஏற்றுக்கொள்ள முடியும்.

10.1 தேசிய அடையாள அட்டை அல்லது பிறப்புச் சான்றிதழை சமர்ப்பிப்பதற்கு தவறியமையின் அடிப்படையில் வயதை தீர்மானித்துக்கொள்ளல் பற்றிய சிக்கல்கள், பிரஜாவுரிமையைத் தீர்மானித்துக்கொள்வதுடன் தொடர்பான சிக்கல்கள் காரணமாக தேருநர் ஒருவரை பதிவு செய்வதற்கு தடைகள் ஏற்படுமிடத்து குறித்த படிவத்திற்கமைய வெளிப்படுத்தலொன்றை கட்டாயம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். களக் கணக்கெடுப்பின்போது

அந்த வெளிப்படுத்துகையைப் பெற்று உதவி பதிவு செய்யும் அலுவலரிடம் சமர்ப்பிக்குமாறு கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குதல் அல்லது அந்த வெளிப்படுத்துகையின் பிரதியொன்றுடன் மேன்முறையீட்டுக் காலப் பகுதியினுள் உரிமைக் கோரிக்கை விண்ணப்பமொன்றை சமர்ப்பிக்குமாறு தேருநர்களை அறிவுறுத்துமாறு கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கவும். களக் கணக்கெடுப்பின்போது கணக்கெடுக்கும் அலுவலர்கள் வாக்காளர்களிடமிருந்து குறித்த வெளிப்படுத்துகைகளைப் பெற்று சமர்ப்பித்திருக்கும் சந்தர்ப்பங்களில் தேவையெனக் கருதினால் தேருநரை அழைத்து, விசாரணைக்குட்படுத்தி அவரது பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் அல்லது மேன்முறையீட்டுக் காலப் பகுதியினுள் கிடைக்கப்பெற்ற உரிமைக் கோரிக்கையெனக் கருதி மேலும் பரீட்சித்து முடிவெடுப்பதனை உதவி பதிவு அலுவலரால் மேற்கொள்ள முடியும்.

**10.2 ஆயினும் வேறொரு இடமொன்றில் வசித்திருந்து பல்வேறுபட்ட தேவைகளுக்காக மற்றுமொரு இடத்தில் பதிவு செய்வதற்கு முயற்சி செய்யும் நபர்கள் சம்பந்தமாக இந்த வெளிப்படுத்துகை அல்லது சத்தியப் பிரமாணத்தை (சத்தியக் கடதாசி) சமர்ப்பித்தல் சம்பந்தமாக கவனத்திற்கொள்ளாமல் முறையான விசாரணையொன்றை மற்றும் தேவையென உணர்ந்தால் களச் சோதனையொன்றை மேற்கொண்டு முடிவெடுத்தல் வேண்டும்.**

## 11. சாதாரண வதிவு

### 11.1 குறித்த வீட்டில் சாதாரண வதிவு இருப்பதற்கான தேவைப்பாடு

வாக்காளர்களைப் பதிவு செய்யும்போது நபர்களின் பெயர்கள், குடும்பங்களாக அவர்கள் வசிக்கும் முகவரியின் கீழ் பதிவு செய்தல் வேண்டும். ஒருவரின் சாதாரண வதிவு முகவரியாக அவர் தனது குடும்ப அங்கத்தவர்களுடன் வசிக்கும் மற்றும் தனது அன்றாட அலுவல்களை மேற்கொள்ளும் இடத்தை ஏற்றுக்கொள்ள முடியும். (குடும்ப அலகொன்றை ஒரே முகவரியில் பதிவு செய்வதன் முக்கிய நோக்கம் இரட்டை மற்றும் பன்மைப் பதிவுகளைக் குறைப்பதாகும். எவரேனுமொரு தேருநர் ஒருவருக்கு இரண்டு அல்லது அதனிலும் அதிக எண்ணிக்கையிலான சாதாரண வதிவிட முகவரிகள் உண்மையிலேயே இருப்பின் அதில் ஒரு முகவரியில் குடும்ப அலகிலிருந்து தவிர்ந்து பதிவு செய்துகொள்வதற்கு சட்ட ரீதியான உரிமை உண்டென வலியுறுத்த விரும்புகின்றேன். முடியுமான வரை குடும்ப அலகை ஒரு முகவரியில் பதிவு செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும்.) முக்கியமாக ஒருவர் தனது கடமைசார் அலுவல் காரணமாக சாதாரண வதிவிடத்திலிருந்து வெளியேறிச் சென்றிருப்பின், அது சம்பந்தமாக கவனத்தைச் செலுத்த வேண்டுமென குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மேலும், தற்காலிகமாக ஏதேனுமொரு வீட்டிற்கு எந்தவொரு அலுவலுக்காகவும் குடும்ப அங்கத்தவர் அல்லாத நபரொருவர் வந்திருப்பின் அவ்வாறானவர்களின் பெயர்களை பிரதான குடியிருப்பாளர் ER படிவத்திற்குள் உட்சேர்க்க கூடாதென்பதனால் அது சம்பந்தமாகவும் கணக்கெடுப்பு அலுவலர் கவனத்தைச் செலுத்தல் வேண்டும். சட்டத்தின் 4(3) உப பிரிவின் கீழ் கீழே குறிப்பிடப்படும் விடயங்களைக் கவனத்திற்கொண்டு,

- வதிவிடமல்லாத அல்லது வீடொன்று அல்லாத எந்தவொரு இடத்திற்கும் பெயர்களை உள்ளடக்கக் கூடாதென்ற விடயம்.
- வீடொன்று இருந்தாலும், அதன் உரித்துடைமை இருந்த போதிலும், சாதாரண வதிவு இல்லையெனில் பதிவு செய்யக் கூடாதென்ற விடயம்.
- காணி உரிமையை உறுதி செய்துகொள்வதற்காக வதிவு இல்லாமல் தேருநர் இடாப்பில் பெயர்களை உட்சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும் சந்தர்ப்பங்கள்.
- பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுமதித்துக்கொள்ளல், பல்கலைக்கழக அனுமதி மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்காக வதிவை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு மற்றும் அரசியல்வாதிகளின் தேவைப்பாட்டின் அடிப்படையில் சில வீடுகளுக்கு வதிவு இன்றி பெயர்களை உட்சேர்த்துக்கொள்வதற்கு முயற்சிக்கும் சந்தர்ப்பங்கள்.

என்பவற்றுக்கான வாய்ப்புக்களை வழங்காமல் சாதாரண வதிவு மீது கவனத்தைச் செலுத்தி தீர்மானித்தல் வேண்டுமென கணக்கெடுப்பு அலுவலர்களை அறிவுறுத்தவும்.

### 11.2 பல இடங்களில் சாதாரண வதிவிடத்தைக் கொண்டுள்ள நபர்கள்

சில சந்தர்ப்பங்களில் உத்தியோகபூர்வ இல்லங்களில் வசிக்கும் குடும்பங்கள் அவற்றின் கீழ் பதிவு செய்யாமல் அவர்களுக்குரிய தனிப்பட்ட வீடுகளின் கீழ் பதிவு செய்வதற்கான கோரிக்கையை முன்வைக்க முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கப்படும் விடயங்கள் சரியாயின் அந்த பிரதான குடியிருப்பாளரின் விருப்பத்திற்கு இடமளிக்க முடியும். சட்டத்தின் 4(3) உப பிரிவின் மீது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றேன்.

### 11.3 வர்த்தக நிலையங்களின் கீழ் வசிக்கும் நபர்கள்

சில பிரஜைகள் தமக்குரிய வர்த்தகங்களை நடாத்தும் இடங்களில் வாக்காளர்களாக பதிவு செய்துகொள்வதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தக் குடும்ப அங்கத்தவர்கள் உண்மையிலேயே அந்த இடத்தில் வசிக்கின்றனரா என்பது சம்பந்தமாக கண்டறிதல் வேண்டும். அவ்வாறான நபர்கள் அந்த இடத்தில் வசிப்பார்களாயின் அவர்களுக்கு அங்கு பதிவு செய்துகொள்வதற்கு இடமளிக்க முடியும். ஆனாலும் அவர்களுடைய ஏனைய சாதாரண வதிவிட முகவரியொன்று இருப்பின் அது தொடர்பாக விடயங்களைக் கண்டறிவதற்கு முடியுமான வகையில் அந்த விபரங்களை கணக்கெடுப்பு அலுவலர்கள் குறித்துக்கொள்ளுதல் வேண்டும்.

### 11.4 முதியோர் இல்லங்கள்

அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களினால் நடாத்தப்பட்டு வரும் முதியோர் இல்லங்களில் வசிப்பவர்களின் பெயர்களை குறித்த இடங்களின் பொறுப்பாளர்களால் தேருநர் இடாப்பில் உட்சேர்ப்பதற்காக கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பங்கள் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது குறித்த நபர்களின் முன்னைய பதிவு தொடர்பான விபரங்களைக் குறித்துக்கொள்ளுதல் அவசியமாகும். தகைமைகளை பூர்த்தி செய்தால் அவ்வாறானவர்களின் பெயர்களை குறித்த இடங்களின் கீழ் பதிவு செய்ய முடியும்.

### 11.5 தேருநராகப் பதிவு செய்துகொள்வதற்கு சொத்துரிமை அவசியமில்லை.

11.5.1 தேருநரொருவராகப் பதிவுசெய்துகொள்வதற்கு 2025 பெப்புருவரி மாதம் 01 ஆம் திகதியன்று சாதாரண வதிவு மாத்திரம் போதுமானதாக இருப்பதுடன் சொத்துரிமை அவசியமில்லை. வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வசிப்பவர்களைப் போன்றே அனுமதியற்ற விதத்தில் வசிப்பவர்கள் ஏனைய தகைமைகளை பூர்த்திசெய்திருப்பின் தாம் சாதாரணமாக வசிக்கும் முகவரியில் தேருநரொருவராக பதிவுசெய்துகொள்ள முடியும். இதற்காக சொத்துரிமையாளரின் விருப்பமோ இணக்கப்பாடோ அவசியமில்லை.

11.5.2 பிரஜையொருவரின் கைவிடப்பட முடியாத இறைமை அதிகாரத்தில் வாக்குரிமையும் உள்ளடக்கப்படுவதுடன், வாக்குரிமையை நடைமுறைப்படுத்துவதற்காக தேருநர் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். தேருநரொருவராக பதிவுசெய்துகொள்வதற்கு பிரஜைகளுக்கு இடையூறு விளைவித்தல் நீதிமன்றமொன்றினால் தண்டப்பணம் அல்லது சிறையில் அடைப்பதற்கு அல்லது இவை இரண்டிற்கும் உட்படும் தவறாகும்.

11.5.3 வாடகை அல்லது குத்தகை அல்லது அனுமதியற்ற விதத்தில் வசிப்பவர்களை தேருநர்களாகப் பதிவுசெய்தலானது பிரஜைகளின் வாக்குரிமையை உறுதிப்படுத்துவதற்கு மாத்திரமாகும் என்பதோடு, அந்த பதவிவானது சொத்துரிமை அல்லது நிரந்தர பதிவை உறுதிசெய்துகொள்வதற்காக அல்ல எனவும் வலியுறுத்தல் வேண்டும்.

11.5.4 இந்த சிக்கல் காரணமாக இதுவரை வாக்காளராக பதிவுசெய்துகொள்வதற்கு முடியாத நபர்கள் இருப்பின் 2025 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்படல் வேண்டுமென அறியத் தருகின்றேன்.

11.5.5 ஆனாலும் நீதிமன்றமொன்றினூடாக வெளியேற்றுவதற்கான ஆணையொன்று பிறப்பிக்கப்பட்டிருக்கும்போது பதிவுசெய்யக் கூடாதென்பதோடு, அறிவுறுத்தல்களைப்

பெற்றுக்கொள்வதற்காக விபரங்களுடன் தலைமை அலுவலகத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

## 11.6 அனுமதியற்ற மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்களைப் பதிவுசெய்தல்.

அனுமதியற்ற அல்லது பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் வசிப்பவர்களின் பெயர்களை மேலே 11.5.5 அங்கீகாரத்தின் கீழ் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் அந்த நபர்களின் பெயர்களுக்கு "RE" எனும் குறியீட்டையிட்டு (உதாரணம் : வீட்டிலக்கம் 110 RE என) இந்த இலக்கத்தின் கீழ் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

## 11.7 குறவர்களை (நாடோடிகளை) தேருநர்களாக பதிவுசெய்தல்

நாட்டில் அநேகமான நகர்புறங்கள் / பகுதியளவு நகர்புறங்களைப் போன்றே சில கிராமங்களிலும் தற்காலிகமாக வசிக்கும் குறவர்களை (நாடோடிகளை) மக்களை தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்கு தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்பாக ஆண்டொன்றில் அதிக காலப்பகுதி வசிக்கும் பிரதேசம் தொடர்பான தகவல்களை குறித்த பிரிவின் கிராம அலுவலர் ஊடாகப் பெற்று சாதாரண வதிவிடம் மற்றும் வாக்களிப்பதற்கு முடியுமான வாக்களிப்பு நிலையங்கள் போன்ற விடயங்களை கண்டறிந்து அந்த மக்கள் பற்றிய தகவல்களை ER படிவத்தினூடாகப் பெற்று பொருத்தமான வீட்டிலக்கமொன்றை வழங்கி அவர்களின் பெயர்களை பதிவுசெய்தல் வேண்டும் (குறித்த கிராம அலுவலர்கள் ஊடாக இவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.) அத்தோடு புத்தளம் பிரதேசத்தில் ஆபிரிக்க பரம்பரையைக் கொண்ட இலங்கையர்கள் மற்றும் மட்டக்களப்பில் வசிக்கும் போர்த்துகேய பரம்பரையைக் கொண்ட இலங்கையர்கள் இவ்வாறான செயற்பாடுகளினூடாக ஏற்கனவே தேருநர் இடாப்பில் முழுமையாக உள்ளடக்கப்பட்டுள்ளார்கள் என நம்பப்படுகின்றது.

## 11.8 தோட்டங்களை அண்டிய பிரதேசங்களில் வசிப்பவர்களை பதிவுசெய்வதில் நிலவும் சிக்கல்கள்

தோட்ட வீடுகளில் வசிக்கும் ஆனாலும் குறித்த தோட்டத்தில் பணியாற்றாத மலையக தமிழ் மக்களிடையே தொழில் நடவடிக்கைககளில் ஈடுபடுவதற்காக கொழும்பு அல்லது ஏனைய நகர்புற பிரதேசங்களில் தங்காலிகமாக வசிக்கும் நபர்கள் திருமணமாகாதவர்களாயின் அவர்களுடைய பெற்றோர்களுடனும் திருமணமானவராயின் வாழ்க்கை துணையுடன் சாதாரணமாக வசிக்கும் தோட்ட வீடுகளில் பதிவுசெய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும். ஆயினும் இவ்வாறான நபர்களை தேருநர்களாகப் பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் முகவரியில் சாதாரண வதிவிடத்தை கொண்டுள்ளவராக உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே இவ்வாறு மேற்கொள்ளப்படுமென வலியுறுத்துகின்றேன்.

## 11.9 தடுப்பு முகாம்களில் வாழும் நபர்கள்

தேருநர் இடாப்பில் பதிவுசெய்வதற்காக ஏனைய தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள நன்நடத்தை இல்லங்களில் மற்றும் தடுப்பு முகாம்களில் வாழும் நபர்கள் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டு அரசியல் அமைப்பின் 89 (ஈ) உறுப்புரையின் கீழ் வாக்குரிமையை இழக்கச்செய்யப்படும் சிறைத்தண்டனைகளுக்கு ஆளாக்கப்படாதிருப்பின், திருமணமாகாத பிரஜைகளுக்கு தமது பெற்றோர்களுடனும் திருமணமான நபர்களுக்கு தமது வாழ்க்கை துணையுடனும் முன்னரைப் போன்று பதிவு செய்வதற்கு தடைகள் இல்லை.

## 11.10 தொழிலுக்காக தாம் வசிக்கும் பிரதேசங்களுக்கு வெளியே இருக்கும் நபர்கள், கைத்தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களை பதிவுசெய்தல்.

மேலே குறிப்பிடப்பட்ட 11.8 விடயத்துடன் தொடர்புடையவாறே தமது தொழில் தேவைகளுக்காக நிரந்தர வசிப்பிடத்திலிருந்து தற்காலிகமாக வெளியேறியிருக்கும் நபர்களின் பெயர்களை அவர்கள் சாதாரணமாக வசிக்கும் முகவரியில் (உதாரணம் : ஆடைத் தொழிற்சாலைகளில் பணிப்புரிபவர்கள்) தேருநர்களாகப் பதிவுசெய்வதற்கு நடவடிக்கையெடுத்தல் வேண்டும். திருமணமானவர்கள் இந்த விதமாக தொழில் தேவைகளுக்காக நிரந்தர வசிப்பிடத்திற்கு வெளியே தற்காலிகமாக வசிப்பார்களாயின்

அவர்களுடைய சாதாரண வதிவிடத்தை உறுதி செய்ய முடியுமான முகவரியில் பதிவு செய்ய முடியும்.

**11.11** மேலே குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் சாதாரண வதிவிடமொன்று இருக்கின்றதா இல்லையான என்பதனை கணக்கெடுக்கும் அலுவலர் / கிராம அலுவலரின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். சிக்கல் நிலைமையொன்று ஏற்படும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் களச் சோதனையை மேற்கொண்டு தீர்மானத்தை எடுத்தல் வேண்டுமென்பதோடு, இது சம்பந்தமாக மேலும் தெளிவுபடுத்தல்கள் அவசியமாயின் தேர்தல் ஆணைக்குழுவிடமிருந்து அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**12. நடப்பு தேருநர் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தேருநர்களின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் மற்றும் ஏனைய தகவல்களின் பிழையற்ற தன்மை**

12.1 பிரதான குடியிருப்பாளரால் பூரணப்படுத்தப்பட்ட ER படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் சரியான முறையில் உட்சேர்க்கப்பட்டுள்ளதாவென ER படிவங்களை சேகரிக்கும் சந்தர்ப்பத்தில் கணக்கெடுக்கும் அலுவலர் பரிசீலித்தல் வேண்டும். முடியுமானவரை அவ்வாறான சந்தர்ப்பங்களில் அந்தத் தகவல்களின் பிழையற்ற தன்மையை குறித்த தேசிய அடையாள அட்டைகளை பரிசீலிப்பதனூடாகவே உறுதி செய்துகொள்ளல் அவசியமாகும்.

12.2 வாக்காளர்களை கணக்கெடுக்கும் சந்தர்ப்பத்தில் வாக்காளர் ஒருவரின் பெயரில், தேசிய அடையாள அட்டை இலக்கமொன்றில், வீட்டு இலக்கம் அல்லது பாலினத்துடன் (ஆண்/பெண்) தொடர்பாக நடப்பு தேருநர் இடாப்பில் பிழையான முறையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் அவை சரி செய்யப்பட வேண்டிய விதத்தை தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள **4 ஆம் இலக்க படிவத்தினூடாக** கணக்கெடுப்பு அலுவலர்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும்.

12.3 நபரொருவரின் தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பெயர் சரியானதென உறுதிப்படுத்திக்கொள்வதற்காக அடையாள அட்டையின் பிரதியொன்று அவசியமில்லையென்பதுடன், இலக்கம் சரியானதென கிராம அலுவலர் குறிப்பிட்டு கையொப்பமிட்டிருந்தல் போதுமானதாகும்.

12.4 தேருநர் இடாப்பு - 2024 இனை அத்தாட்சிப்படுத்தியதன் பின்னர் அதன் தகவல்களின் பிழைகள் சம்பந்தமாக கடிதங்கள் மூலம் அறிவித்துள்ள வாக்காளர்களின் கோரிக்கைகளுக்கமைய தேவையான சரிசெய்தல்களை மேற்கொள்ளுமாறு வாக்கெடுப்புப் பிரிவுக்குப் பொறுப்பான அலுவலர்களுக்கு அறிவுறுத்துதல் வேண்டும்.

**13. வெளிநாடுகளில் வாழும் தேருநர்கள்**

தொழில் அல்லது கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள இந்த நாட்டுப் பிரஜைகளின் அல்லது இரட்டைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக்கொண்டுள்ள பிரஜைகள் பற்றிய விபரங்களை இந்த நாட்டில் சாதாரணமாக வசிக்கும் முகவரியின் கீழ் பிரதான குடியிருப்பாளர் ஒருவர் சமர்ப்பிப்பாராயின் மற்றும் அந்த தொடர்புடைய விடயங்கள் சரியாயின் தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள அவ்வாறான நபர்கள், அவர்களுடைய இந்த நாட்டு சாதாரணமாக வசிக்கும் முகவரியின் கீழ் பதிவு செய்வதனை பரிந்துரை செய்ய முடியும்.

**14. கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் முக்கிய நபர்களின் பெயர்களைக் கணக்கிடுதல்.**

கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் தற்போதைய / முன்னாள் பாராளுமன்ற மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களைப் போன்றே தொடர்புடைய தேர்தல்களின்போது போட்டியிட்ட வேட்பாளர்களின் பெயர்கள் உள்ளிட்ட ஏனைய முன்னணிப் பிரஜைகளின் பெயர்கள் (விஹாரைகளின் அதிபதித் தேரர்கள் உட்பட்ட பூசாரிகள் / மதகுருமார்கள், நீதிமன்ற சேவையில் பணியாற்றும் நீதிபதிகள், சிரேட்ட அரச உத்தியோகத்தர்கள், பிரதேசத்தின் சங்கங்களின் உத்தியோகத்தர்கள்) தேருநர்

இடாப்பில் உட்சேர்க்கப்பட்டிருக்கின்றதா என்பது சம்பந்தமாக உறுதி செய்து கொள்ளுதல் வேண்டுமென கணக்கெடுப்பு அலுவர்களுக்கு அறிவுறுத்துதல் வேண்டும். அவ்வாறான சிறப்பு நபரொருவரின் பெயரை உட்சேர்ப்பதற்கு முடியாத நிலைமையொன்று ஏற்பட்டிருப்பின் அல்லது தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியாதெனில் அல்லது மீளாய்வு ஆவணங்களை மீண்டும் தேர்தல் அலுவலகத்திற்கு கையளிப்பதற்கு வந்ததன் பின்னர் தங்களை சந்தித்து எழுத்து மூலமாக அவ்வாறான தகவல்களை பெற்றுத்தரல் வேண்டுமென கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு அறிவுறுத்துங்கள்.

**15. குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களை தயாரித்தல்.**

2025 மற்றும் 2026 ஆம் ஆண்டுகளுக்காக தயாரிக்க வேண்டிய 06 குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்கான தகவல்களைச் சேகரித்தல் வேண்டும்.

15.1 2025(1), 2025(2) மற்றும் 2025(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் காலப் பகுதி மற்றும் வயதுகள் பிரிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயதைப் பூர்த்தி செய்யும் காலப் பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2025 (1) | 2025.02.01 முதல் 2025.05.31 வரை | 2007.02.01 முதல் 2007.05.31 வரை |
| 2025 (2) | 2025.06.01 முதல் 2025.09.30 வரை | 2007.06.01 முதல் 2007.09.30 வரை |
| 2025 (3) | 2025.10.01 முதல் 2026.01.31 வரை | 2007.10.01 முதல் 2008.01.31 வரை |

15.2. 2026(1),2026(2), மற்றும் 2026(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் காலப் பகுதி மற்றும் வயதுகள் பிரிவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| குறைநிரப்பு தேருநர் இடாப்பு | 18 வயதைப் பூர்த்தி செய்யும் காலப் பகுதி | பிறந்த திகதி |
|---|---|---|
| 2026 (1) | 2026.02.01 முதல் 2026.05.31 வரை | 2008.02.01 முதல் 2008.05.31 வரை |
| 2026 (2) | 2026.06.01 முதல் 2026.09.30 வரை | 2008.06.01 முதல் 2008.09.30 வரை |
| 2026 (3) | 2026.10.01 முதல் 2027.01.31 வரை | 2008.10.01 முதல் 2009.01.31 வரை |

15.3. குறைநிரப்பு தேருநர் இடாப்புக்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் நபர்கள், தமது பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை அல்லது தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்றை பதிவு அலுவலருக்குப் பதிலாக கணக்கெடுப்பு அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

15.4 குறைநிரப்பு தேருநர் இடாப்புக்காக கணக்கெடுப்பதற்காக YC படிவத்தைப் பயன்படுத்தல் வேண்டும். YC படிவத்தின் 2 ஆம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மீது கணக்கெடுப்பு அலுவலர்களின் கவனத்தை ஈர்த்து அதற்கு அதற்கு இயைந்தவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கவும்.

15.5 2024 மீளாய்வின்போது 2025(1), 2025(2) மற்றும் 2025(3) குறைநிரப்பு தேருநர் இடாப்புக்களுக்காக தகைமைகளைப் பெற்றுக்கொள்ளும் நபர்கள் பற்றிய விபரங்கள் YC படிவத்தினூடாகப் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், அந்தக் குறைநிரப்பு இடாப்புக்களுக்காக கிடைக்கப்பெற்றுள்ள அனைத்து விண்ணப்பங்களினதும் விபரங்களை கணனிமயப்படுத்தி அதன் பட்டியலொன்றை கணக்கெடுப்பு அலுவலருக்குப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும். அந்தப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் 2025.02.01 ஆம் திகதிக்கு முன்னர்

முன்னைய முகவரியிலேயே வசிப்பின் 2025 ஆம் ஆண்டிற்காக மீண்டும் YC படிவத்தைப் பூரணப்படுத்த வேண்டியதில்லை.

**16. கடந்த மீளாய்வு நடவடிக்கைகளின்போது தனது பெயர் பதிவு செய்யப்படவில்லையென முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல்**

2024 தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்படாமை சம்பந்தமாக முறைப்பாடுகளைச் செய்த அனைத்து நபர்கள் சம்பந்தமான தகவல்களை கணக்கெடுப்பு அலுவலர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்பதோடு அந்த நபர்கள் வாக்காளர்களாகப் பதிவு செய்துகொள்ளப்படுவதற்கான தகைமைகளைப் பெற்றிருப்பின் கட்டாயம் அவர்களின் பெயர்களை பதிவு செய்துகொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள். அத்தோடு 2025 பெப்ருவரி 01 ஆம் திகதியன்று சாதாரண வதிவு இல்லாமையினால் பதிவு செய்யப்படாத ஆனாலும் அதன் பின்னர் கிராம அலுவலர் பிரிவில் சாதாரண வதிவைக் கொண்டுள்ள 2025 உரிமைக் கோரிக்கையாளர்கள் சம்பந்தமாக விசேட கவனத்தைச் செலுத்தவும்.

**17. 2024 BC டொக்கட்டை (Docket) இனை 2025 இற்காக இற்றைப்படுத்தல்.**

17.1 2025 ஆம் ஆண்டில் அனைத்து வீடுகளுக்கும் **BC** படிவமொன்று வழங்கப்படுவதில்லையென்பதனால் 2024 தேருநர் இடாப்புக்குப் பொருந்தும் வகையில் இற்றைப்படுத்தல் வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங்களை எதிர்வரும் காலத்தில் அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

**18. மீளாய்வு கால அட்டவணை**

மீளாய்வுக் கால அட்டவணை (எதிர்கால வேலைத் திட்டம்) குறைநிரப்பு இடாப்பை தயாரிப்பதற்கும் ஏற்புடைய பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதற்கு ஏற்ற வகையில் அலுவல்களை ஏற்பாடு செய்தல் வேண்டும். அறிவுறுத்தல்கள் மற்றும் படிவங்களின் அச்சிடல் தொடர்பான தாமதங்களைக் கவனத்திற்கொண்டு கால அட்டவணை 1 இன் 2 பிரதான செயற்பாடுகள் சுமார் 10 நாட்கள் தாமதமடையலாம்.

**19. 2025/ ER படிவத்தை விநியோகித்தல் மற்றும் சேகரித்தல்.**

19.1 தங்களுடைய மாவட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ள 2025/ ER படிவம் இதற்கு முந்திய கிராம அலுவலர் பிரிவின் A மற்றும் B பெயர்களை கவனத்திற்கொண்டு கணக்கெடுப்பு அலுவலர்களுக்குப் பெற்றுக்கொடுக்கவும். பொது மக்கள் கோரும் சந்தர்ப்பங்களில் படிவங்களை வழங்குமாறு அறிவிக்கவும். தொலைபேசி அழைப்புக்கள் ஊடாக அல்லது வேறு தொடர்பாடல் ஊடகமொன்றின் ஊடாக ER படிவங்களைக் கோரும்போது குறித்த வீட்டிற்கு அதனை கிடைக்கப்பெறச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களை அறிவுறுத்தவும். அத்தோடு பிரிவிற்கு / வாக்கெடுப்பு மாவட்டத்திற்கு புதிதாக வதிவுக்காக வந்துள்ள நபர்கள் சம்பந்தமாக கண்டறிந்து அவர்களுக்கு ER படிவங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

18.2 பொது மக்கள் கோரும்போது பெற்றுக் கொடுப்பதற்காக பிரதேச செயலகங்களுக்கு ER படிவங்களைப் பெற்றுக்கொடுக்கவும்.

19.3 தேர்தல் ஆணைக்குழுவினது இணையத்தளத்தின் ஊடாக இந்தப் படிவத்தை பதிவிறக்கம் செய்துகொள்வதற்கான வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தரவுகளைச் சேகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று தகவல் தொழில்நுட்பப் பிரிவினால் தயாரிக்கப்படுகின்றது.

19.4. தனது கிராம அலுவலர் பிரிவில் சாதாரணமாக வசிக்கும் தகைமைகளைப் பெற்றுக்கொண்டுள்ள அனைத்து தேருநர்களையும் கணக்கிடுதல் கணக்கெடுப்பு அலுவலர்களின் பொறுப்பாகுமென வலியுறுத்துகின்றேன்.

**20. அரச நிறுவனங்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.**

20.1 வாக்காளர்களை (தேருநர்களை) கணக்கெடுத்தலுடன் தொடர்பாக கீழ் குறிப்பிடப்படும் நிறுவனங்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்படும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

19.1.1. ஆட்பதிவுத் திணைக்களத்திடமிருந்து 18 வயது பூர்த்தியானவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

19.1.2. பதிவாளர் நாயகத்திடமிருந்து மரணித்தவர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளல்.

20.2 இது தவிர பாடசாலைகள், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், ஊழியர் சேமலாப நிதிய அலுவலகம் ஆகிய நிறுவனங்களின் ஊடாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் கலந்துரையாடல்களை நடாத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

20.3 இதனூடாக குறித்த நிறுவனங்களில் காணப்படும் தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்துகொள்ளாத வாக்காளர்கள் (தேருநர்கள்) பற்றிய தகவல்களை கிராம அலுவலர் பிரிவுகளுக்கமைய கணக்கெடுக்கும் அலுவலர்களுக்கு அனுப்பி அது சம்பந்தமாக அவர்களுடைய கவனத்தை ஈர்க்கச்செய்து ER படிவங்களை பூரணப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

20.4 அந்தத் தகவல்கள் கிடைக்கப்பெற்றவுடன் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும். அந்தத் தரவுகளை கணக்கெடுப்பு அலுவலர்களுக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப அனுப்புமாறு அறியத் தருகின்றேன்.

21. மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து மூலங்களினூடாகவும் கிடைக்கப்பெறும் தரவுகளின் அடிப்படையில் (உதவியுடன்) ER படிவங்களை பூரணப்படுத்திக்கொள்ளுவதனையும் 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.02.28 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் தொடர்புடைய பிரதிகள் மற்றும் பதிவுக்காக கோரிக்கை விடுத்துள்ள நபர்கள் தொடர்பான பரிந்துரைகளை குறித்துக்கொள்ளும் அலுவலை மேற்கொள்ள வேண்டும். நீக்கப்படும் மற்றும் சேர்த்துக்கொள்ளப்படும் அனைத்து பெயர்கள் சம்பந்தமாகவும் கணக்கெடுப்பு அலுவலர்கள் வீட்டிற்குச் சென்று பரிசீலித்து அவரது பரிந்துரையை வழங்குதல் கட்டாயமாகும்.

22. கணக்கெடுப்புப் படிவங்களை 2025.03.03 ஆம் திகதி முதல் 2025.03.28 ஆம் திகதி வரையான காலப் பகுதியினுள் கையேற்பதற்கான வேலைத் திட்டமொன்றை தயாரித்தல் வேண்டுமென்பதோடு அவற்றை முறையாகவும் சரியாகவும் தேர்தல் அலுவலகத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

23. 2024 ஆம் ஆண்டின் இடாப்பில் குறிப்பிடப்பட்டுள்ள 2025 ஆம் ஆண்டிற்காக B இல் உள்ளடக்கப்படும் அனைத்துப் பெயர்களும் 2025 ஆம் ஆண்டில் குறித்த இடத்தில் A பட்டியலில் உள்ளடக்கப்படல் வேண்டும்.

23.1. இந்த சோதனையை மேற்கொள்வதற்காக கணனி நிகழ்ச்சித் திட்டத்தை இற்றைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

24. 2024.03.03 முதல் 28 வரையான காலப் பகுதியினுள் கணக்கெடுப்பு அலுவலர்களிடமிருந்து கீழ் குறிப்பிடப்படும் படிவங்களை பூரணப்படுத்தி அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

- அ / A படிவம்
- ஆ / B படிவம்
- “அ” மற்றும் “ஆ” பெயர்கள் பற்றிய திருத்தங்கள்
- இலக்கம்: 1 – 6 வரையான படிவங்கள்

25. வாக்கெடுப்புப் பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலர்களால் முறையான A மற்றும் B பட்டியல்களை தயாரித்தலை 2025.03.15 முதல் 2025.04.25 வரையான காலப் பகுதியினுள் மேற்கொள்ளல் வேண்டும்.

26. கணக்கெடுப்புப் படிவங்களை மீளப் பெற்றுக்கொள்ளும் வேலைத் திட்டம் சம்பந்தமாக குறித்த பிரதேச செயலாளர்களுக்கு அறிவூட்டுதல் வேண்டும். அந்த ஆவணங்களை ஒப்படைத்தலை அனுமதியின்றி தாமதப்படுத்தும் அலுவலர்கள் சம்பந்தமாக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்ட பதிவு செய்யும் அலுவலர்களுக்கு அறிக்கைப்படுத்துதல் வேண்டும். கணக்கெடுப்பு அலுவலர் மீளாய்வு அவணங்களை தேர்தல் அலுவலகத்திற்கு ஒப்படைப்பதனை தாமதிக்கும் காரணத்தினால் கிராம அலுவலர் பிரிவொன்றுக்குரிய "அ" மற்றும் "ஆ" பட்டியல்களை உரிய திகதியன்று காட்சிப்படுத்த முடியவில்லையாயின் அவ்வாறான அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக எனக்குப் பிரதியுடன் மாவட்ட பதிவு அலுவலருக்கு அறிக்கைப்படுத்துதல் வேண்டும். ***தேருநர்களை கணக்கெடுக்கும் அலுவலைப் போன்றே கணக்கெடுக்கும் படிவங்களை உரிய திகதிக்குப் பின்னர் கையேற்கும் அலுவலை முறையாக நிறைவேற்றுவதற்காக பிரதேச செயலாளர்களுக்கு முன்னேற்றத்தை அறிவிக்கவும்.***

27. **கணக்கெடுப்புப் படிவங்களை தேர்தல் அலுவலகத்திற்கு கையளித்ததன் பின்னர் கிராம அலுவலரின் பரிந்துரையுடன் தேர்தல் அலுவலகங்களுக்குக் கிடைக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல்.**

ER படிவங்களை கணக்கெடுப்பு அலுவலர்களிடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்டதன் பின்னரும், சில நபர்கள் தேர்தல் அலுவலகத்திற்கு வருகைதந்து அல்லது தபால் மூலமாக கணக்கெடுப்புப் படிவங்களை அனுப்பும் சந்தர்ப்பங்களை அநேகமாக நகரப் பகுதிகளில் காண முடியும். அவ்வாறு கையளிக்கும் ER படிவங்களை கணக்கெடுப்பு அலுவலர்கள் பரிந்துரை செய்திருப்பின் மற்றும் "அ" மற்றும் "ஆ" நிரல்களை காட்சிப்படுத்துவதற்கு முன்னர் அனுப்பியிருப்பின் அவற்றை உரிய பிரகாரம் "அ" மற்றும் "ஆ" நிரலில் உட்சேர்த்தல் மற்றும் டொக்கட்டை உரிய வீட்டு இலக்கத்தின் கீழ் கட்டிவைத்தல் வேண்டும். "அ" மற்றும் "ஆ" நிரல்களை காட்சிப்படுத்தியதன் பின்னர் கிடைக்கப் பெற்றுள்ள அவ்வாறான கோரிக்கைகளை உரிமைக் கோரிக்கைகள் எனக் கருதி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். இந்த உரிமைக் கோரிக்கைகளை சந்தர்ப்பத்திற்கேற்ப உரிமைக்கான கோரிக்கை விசாரணை இன்றி ஏற்றுக்கொள்ள முடியும்.

**28. பிரதான குடியிருப்பாளரால் ER படிவத்தில் உட்சேர்ப்பதற்காக குறிப்பிடப்பட்டுள்ள ஆனாலும் கணக்கெடுப்பு அலுவலர்களால் பரிந்துரை செய்யப்படாத பெயர்கள் மற்றும் ஏதேனுமொரு வீட்டில் நடப்பு தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அனைவரையும் "அ " நிரற்படுத்தல் சம்பந்தமாக நடவடிக்கை மேற்கொள்ளல்.**

**28.1. இது மிகவும் முக்கியமானதும் அத்தியாவசிமானதுமான அலுவலொன்று என இத்தால் வலியுறுத்தப்படுகின்றது.**

2025 ஆம் ஆண்டில் ER படிவத்தில் பிரதான குடியிருப்பாளர் கணக்கெடுப்புக்காக உள்ளடக்கியிருந்தாலும் கிராம அலுவலர் / கணக்கெடுப்பு அலுவலரால் பரிந்துரை செய்யாதிருப்பின் அல்லது வீடொன்றின் கீழ் நடப்பு இடாப்பில் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள அனைவரையும் கணக்கெடுப்புக்குரிய ஆண்டில் நீக்கி "அ" பட்டியல்படுத்தப்பட்டிருப்பின் **அது சம்பந்தமாக தாமதமின்றி பிரதான குடியிருப்பாளரை அறிவுறுத்துதல் வேண்டும்.** தேருநர்களைக் கணக்கெடுக்கும் அலுவல்கள் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் கணக்கெடுக்கும் அலுவலர்கள் 3 _படிவத்தினூடாக அந்தத் தகவல்களை அறிக்கைப்படுத்தல் வேண்டுமென்பதோடு 'பிசீ' படிவங்களை பரிசீலிக்கும் சந்தர்ப்பத்திலேயே அந்தத் தகவல்கள் கணக்கெடுப்பு அலுவலர்களால் சரியான முறையில் குறித்துக்கொள்ளப்பட்டுள்ளதனை உறுதிப்படுத்திக்கொண்டு அந்த ஆவணத்திற்கமைய பிரதான குடியிருப்பாளர்களுக்கு கடிதங்களை அனுப்புதல் வேண்டும். **அது சம்பந்தமாக பிரதான குடியிருப்பாளர்களுக்கு அனுப்ப வேண்டிய கடிதத்தின் மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டிய தகவல்கள் பற்றிய அறிக்கையின் மாதிரியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.** அது சம்பந்தமாக பிரதான

குடியிருப்பாளரிடமிருந்து கிடைக்கும் பதிலுக்கமைய தேவையான சந்தர்ப்பங்களின்போது கிராம அலுவலர்களிடமும் வினவி பிரச்சினைக்குரிய பெயர்களை உட்சேர்த்தல் அல்லது சேர்க்காதிருத்தல் சம்பந்தமான தீர்மானத்தை உதவிப் பதிவு அலுவலர்கள் எடுத்தல் வேண்டும். ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்களை காட்சிப்படுத்துவதற்கு முன்னர் பெயரொன்றை உட்சேர்ப்பதற்கு தீர்மானிப்பதாயின் தொடர்புடைய பிரகாரம் அந்தப் பெயர்களை ‘‘அ’’ பட்டியலிலிருந்து நீக்குதல் அல்லது ‘‘ஆ’’ நிரற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். ‘‘அ’’ மற்றும் ‘‘ஆ’’ பட்டியல்களை காட்சிப்படுத்தியதன் பின்னர் ஏற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கப்படும் அனைத்துப் பெயர்களையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைக் கோரிக்கையாகக் கருதி நடவடிக்கை மேற்கொள்ள முடியும். எவ்வாறாயினும் உட்சேர்க்காதிருப்பதற்கு தீர்மானிக்கப்படும் பெயர்கள் இருப்பின் அவற்றை கட்டாயம் உரிமைக்கான கோரிக்கைகளாகக் கருதி உரிமைக் கோரிக்கைகள் தொடர்பான விசாரணைகளின்போது அழைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**28.2 பிரதான குடியிருப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதில் கிடைத்திராத சந்தர்ப்பங்களில் இதற்கு முன்னைய சந்தர்ப்பமொன்றின்போது தொடர்புடைய விடயம் சம்பந்தமாக அறிவிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு உரிமைக் கோரிக்கைகள் / ஆட்சேபனைகள் காலப் பகுதியினுள் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்குமாறும் உரிமைக்கான கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டிய விதத்தையும் அறிவித்தனுப்பவும். அறிவுறுத்தல்களுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் 2025 ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பில் பெயர் உட்சேர்க்கப்பட மாட்டாதெனவும் கடிதத்தில் குறிப்பிட்டு அனுப்பவும்.**

29. தேருநர்களைப் பதிவு செய்தலுடன் தொடர்புடைய தகவல்களை வேண்டுமென்றே மறைக்கும் அல்லது நீக்குகின்ற அல்லது பொய்யான தகவல்களை வழங்கும் அலுவலர்களுக்கான தண்டனை.

29.1 தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 12 (5) உப பிரிவிலுள்ள விடயங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

“12(5) பதிவு அலுவலரால் நியமிக்கப்பட்டுள்ளவரும்.-

(அ) தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கான எவரேனும் ஆளின் தகைமைகள் தொடர்பான ஏதேனும் தகவலை அல்லது எவரேனும் ஆளின் பெயர் இடாப்பில் பதியப்பட வேண்டுமொ அல்லது பதியப்படக் கூடாதா அல்லது தொடர்ந்து வைத்திருக்கப்படக்கூடாதா என்பதைத் தீர்மானிப்பதற்கு இயைபான ஏதேனும் தகவலை அத்தகைய தகவல் அவருக்கு கொடுத்துதவப்பட்ட பின்னர் அல்லது அத்தகைய தகவல் அவரால் சேகரிக்கப்பட்ட பின்னர் வேண்டுமென்றே வெளிவிடாது மறைப்பவருதம் அல்லது அத்தகைய தகவல் பொய்யானது எனத் தெரிந்துகொண்டே மேற்சொல்லப்பட்ட நோக்கத்திற்கியைபான ஏதேனும் தகவலைக் கொடுப்பவருமான; அல்லது

(ஆ) தேருநர் ஒருவராகப் பதிவு செய்யப்படுவதற்கு உரித்துடையவராயுள்ள எவரேனும் ஆளின் பெயரை, வேண்டுமென்றும், நியாயமான காரணமின்றியும் இடாப்பிலிருந்து நீக்கும் அல்லது நீக்கப்படச் செய்யும் அல்லது வேண்டுமென்றும், நியாயமான காரணமின்றியும் இடாப்பில் பதியத் தவறுபவருமான அல்லது தொடர்ந்து வைத்திருக்கத் தவறுபவருமான,
ஒவ்வோர் அலுவலரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்நூறு ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு அல்லது ஒரு மாத காலத்துக்கு மேற்படாத ஒரு காலத்துக்கான இரு வகையில் ஒரு வகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.’’

29.2. அரசியலமைப்பின் 89 ஆவது உறுப்புரையில் தகைமையீனத்திற்குட்படாத மற்றும் கணக்கெடுப்பு தினமன்று சாதாரண வதிவிடத்தைக் கொண்டுள்ள அனைத்து நபர்களையும் கணக்கெடுக்காதிருத்தல் சட்டத்தின் 12 (5) உப பிரிவை மீறுவதாக கவனத்திற்கொள்ளப்பட முடியும்.

30. இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக மாவட்ட பிரதி / உதவித் தேர்தல்கள் ஆணையாளர்கள் தனது மாவட்டத்தின் பதிவு அலுவலரான மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபருடன் கலந்துரையாடுதல் அவசியமாகுமென்பதோடு, அவ்வாறு கலந்துரையாடியதாகவும் இந்த சுற்றறிக்கை கிடைக்கப் பெற்றதாகவும் அறிவிக்கும் எழுத்து மூலமான அறிக்கையில் குறிப்பிட்டிருத்தல் அத்தியாவசியமென தயவாய் அறியத் தருகின்றேன்.

**தேர்தல் ஆணைக்குழுவின் பணிப்பின் பிரகாரம்,**



**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

**குறிப்பு -** இந்த சுற்றறிக்கை மீது அனைத்து மாவட்ட அலுவலகங்களினதும் அனைத்து வாக்கெடுப்பு பிரிவுகளுக்குப் பொறுப்பான அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய அலுவலர்களின் கவனத்தினை ஈர்க்கச் செய்ய வேண்டுமென்பதோடு இது சம்பந்தமாக தேவையான குறிப்புக்களை குறித்துக்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்துதல் வேண்டும். மீளாய்வுப் பணிகளுக்காக ஓய்வு பெற்ற அல்லது ஏனைய அலுவலர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளும்போது அவர்களையும் அறிவுறுத்துதல் அத்தியாவசியமாகும்.

**பிரதிகள் -**

1. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு - தயவுடன் தகவலுக்காக
2. தலைமை அலுவலகத்தின் பதவிநிலை அலுவலர்கள் - தகவலுக்காக மற்றும் தொடர்புடைய ஏனைய அலுவலர்களை அறிவுறுத்துவதற்காக.

**இணைப்பு 03**

**பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு. உள்நாட்டலுவல்கள் பிரிவு**

**நில மேதுர, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.** **தொலைபேசி:** +94 11 2050 450 | **பெக்ஸ்:** +94 112 369971

**மின்னஞ்சல்:**nfo@moha.gov.lk|**இணையம்:** www.moha.gov.lk

**எனது இலக்கம்:** HA/3/7/29-2 **திகதி:** 2025.01.07

---

**அனைத்து மாவட்ட செயலாளர்கள் / அரசாங்க அதிபர்களுக்கு, அனைத்து பிரதேச செயலாளர்களுக்கு,**

**தேருநர் இடாப்பு மீளாய்வு - 2025 களக் கணக்கெடுப்பு காலப்பகுதியில் சம்பந்தப்பட்ட கிராம அலுவலர் இடமாற்றங்களை இடைநிறுத்துதல் மற்றும் அக்காலப்பகுதியில் கிராம அலுவலர்களின் அலுவலக நாட்களைக் வரையறுத்தல்.**

மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பப்பட்டுள்ள NE1/64(2025) ஆம் இலக்கம் மற்றும் 2024.12.30 ஆம் திகதிய கடிதம் தொடர்பானது.

2. அதற்கமைய, 2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்கள் பதிவு செய்தல் சட்டத்தின் விதிகளுக்கமைய, 2025 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பு மீளாய்வு மேற்கொள்ளப்படல் வேண்டும்.
3. சட்டத்தின் 12 ஆம் பிரிவின் படி, தேருநர் கணக்கெடுப்பு அலுவலராக கிராம அலுவலர் செயற்படுகின்றார். தேருநர் கணக்கெடுப்பு என்பது ஒவ்வொரு கிராம அலுவலரின் முதன்மையான, தவிர்க்க முடியாத, நியதிச்சட்டரீதியான பணிப்பொறுப்பாகும்.
4. நடைமுறையிலுள்ள சட்டத்தின் படி, ஒவ்வொரு வருடமும் பிரதான தேருநர் இடாப்பைத் தயாரிப்பதற்கு மேலதிகமாக; பெப்ரவரி 01 முதல் மே 31 வரையும்; யூன் 01 முதல் செப்டம்பர் 30 வரையும்; மற்றும் ஒக்தோபர் 01 முதல் சனவரி 31 வரையும் உள்ள 04 மாத காலப்பகுதிகளில் 18 வயது பூர்த்தியடையும் இளம் பிரஜைகளை உள்ளடக்கிய குறைநிரப்பி தேருநர் இடாப்புகளையும் தயாரிக்க வேண்டுமென்பதோடு, இதற்குரிய களக் கணக்கெடுப்பு மற்றும் பரிந்துரைகளை வழங்கும் பணிகளை கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
5. 2025 ஆம் ஆண்டில் பின்வரும் முறையில் தேருநர் கணக்கெடுப்பை நடாத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளது:

**5.1.** பிரதான தேருநர் இடாப்புக்குரிய தகவல்களை ER படிவம் மூலமும்; குறைநிரப்பி தேருநர் இடாப்புக்குரிய தகவல்களை YC படிவம் மூலமும் பெற்றுக்கொள்ளுதல்.

**5.2.** ER/YC படிவங்களுக்குரிய வீடுகளுக்கு மாத்திரம் கிராம அலுவலர் நேரில் சென்று தனிப்பட்ட ரீதியில் பரிசீலித்துப் பார்த்து தேருநர் கணக்கெடுப்பை மேற்கொள்ள வேண்டும்.

**5.3.** 2024 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் உள்ளக்கப்படாத நபர்கள்; 18 வயது பூர்த்தியானவர்கள்; புதிதாக வதிவதற்கு வந்தவர்கள் தொடர்பாக ER படிவத்தைப் பூர்த்தி செய்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

**5.4.** 2024 ஆம் ஆண்டு தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும், மரணம் அல்லது வசிப்பிடத்தை விட்டுச் செல்லுதல் போன்ற காரணங்களால் பதிவு செய்யத் தகுதியற்ற நபர்கள் தொடர்பாக ER படிவம் மூலம் அறிக்கை பெறுதல்.

**5.5.** 16 வயது பூர்த்தியடைந்த இளம் பிரஜைகளின் தகவல்களை YC படிவங்கள் மூலம் பெற்றுக்கொள்ளுதல்.

**5.6.** பன்மைப் பதிவுகள், அடையாள அட்டை இல்லாதவர்கள் மற்றும் விசேட தேவையுடைய நபர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.

6. உரிய வீட்டிற்குச் சென்று தேருநர் கணக்கெடுப்பை நடத்திய பின்னர், கிராம அலுவலர் படிவங்களைப் பூர்த்தி செய்து கணக்கெடுப்பு ஆவணங்களை மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் ஒப்படைத்தல் வேண்டும்.

7. அதன் பின்னர், மாவட்ட தேர்தல்கள் அலுவலக ஊழியர்கள் "அ" மற்றும் "ஆ" பட்டியல்களைத் தயாரித்து அவற்றை 28 நாட்களுக்கு காட்சிப்படுத்த நடவடிக்கை எடுப்பதோடு அக்காப்பகுதியில் உரிமைகோரல்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்கப்படும். அதனைத் தொடர்ந்து நடத்தப்படும் உரிமைகோரல் மற்றும் ஆட்சேபனை விசாரணைகளுக்கு கிராம அலுவலர்களின் ஒத்துழைப்பு அவசியமாகும்.

8. அந்த விசாரணைகளின் முடிவில் தேருநர் இடாப்புக்கள் அத்தாட்சிப்படுத்தப்படும்.

9. ஒரு மீளாய்வு வருடத்தில் 03 குறைநிரப்பி தேருநர் இடாப்புக்களைத் தயாரிக்கும் போதும் இந்த நடவடிக்கைகள் பின்பற்றப்படும்.

10. தேருநர் கணக்கெடுப்பு காலப்பகுதியில் கிராம அலுவலர்களின் இடமாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால், அது இந்த மீளாய்வு பணியை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் பாதகமாக அமையலாம். எனவே, ஒழுக்காற்று நடவடிக்கைகள் அல்லது அத்தியாவசியமான மற்றும் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் மற்றும் 2025 ஆண்டுக்கான இடமாற்றக் கட்டளைகள் தவிர, 2025 சனவரி 01 முதல் 2025 மார்ச் 31 வரையான காலப்பகுதியில் கிராம அலுவலர் இடமாற்றங்களை மேற்கொள்ளாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

11. பல்வேறு விடயங்களின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகப்படியான வேலைப்பளு காரணமாக, சில கிராம அலுவலர்களிடமிருந்து தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான கடமைகள் உரிய முறையில் தாமதமின்றியும் சரியாகவும் நடைபெறாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் உரிய காலப்பகுதிக்குள் நடைபெறாவிடின், சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி குறித்த காலப்பகுதிக்குள் தேருநர் இடாப்பின் வேலைகளை முடிக்க முடியாமல் போகும். எனவே, கிராம அலுவலர்கள் தேருநர் இடாப்பு மீளாய்வு தொடர்பான களக் கணக்கெடுப்பு பணிகளை மேற்கொள்ளும் காலப்பகுதியினுள், அதாவது 2025 சனவரி 01 முதல் 2025 மார்ச் 31 வரை அல்லது அந்த அலுவலர்கள் தேருநர் கணக்கெடுப்புப் பணியை முடிக்கும் திகதி ஆகிய இரண்டு தினங்களில் முதலில் வருகின்ற தினம் வரை, கிராம அலுவலர்கள் தமது அலுவலகத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய நாட்களாக செவ்வாய், வியாழன் மற்றும் சனிக்கிழமை முற்பகல் என வரையறுக்குமாறும், சேவையின் அவசரத் தேவைகளுக்கு உட்பட்டு ஏனைய நாட்களை களக் கணக்கெடுப்பிற்காக விடுவிக்குமாறும் அறியத்தருகின்றேன்.

மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக உங்கள் மேலான கவனத்தைச் செலுத்தி, கிராம அலுவலர்களை அறிவுறுத்தி தேருநர் இடாப்பு மீளாய்வுப் பணியை வெற்றிகரமாக முடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இத்தால் தயவன்புடன் அறியத்தருகின்றேன்.

*(ஒப்பம்)* ஏ.ஜி. நிஷாந்த
மேலதிக செயலாளர் (உள்நாட்டலுவல்கள்)

**ஒப்பம்:** எஸ். ஆலோக்க பண்டார
செயலாளர்,பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு .

**பிரதி:**

1. தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் - உங்களது NE1/64(2025) இலக்க மற்றும் 2024.12.30 திகதிய கடிதத்திற்கமைய – தயவன்புடன் தகவலுக்காக

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2444/61 - 2025 ජූලි මස 11 වැනි සිකුරාදා - 2025.07.11

2444/61 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

இந்த QR குறியீட்டை Scan செய்து பதிவு விபரங்களைப் பார்வையிட முடியும். அல்லது ec.lk/vrd எமது இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

**தேருநர் இடாப்பு மீளாய்வு - 2025**

"அ", "ஆ" பட்டியல்களைக் காட்சிப்படுத்தல், உரிமைக் கோரிக்கைகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைத்தல் தொடர்பாக தேர்தல் ஆணைக்குழுவின் அறிவித்தல்

**வரைவிலக்கணம்**

*01.* "சட்டம்" - *2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுச் செய்தல் (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம்.*

*02.* செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு - *2024 ஆம் ஆண்டின் பிரதான இடாப்பு மற்றும் 2024(1), 2024(2) மற்றும் 2024(3) ஆகிய குறைநிரப்பு தேருநர் இடாப்புக்கள் எனக் கருதப்படுகின்றது.*

*03.* " 'அ' பட்டியல்" - செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களில் இறப்பெய்தியுள்ள அல்லது வதிவிடத்தை விட்டுச்சென்றுள்ள அல்லது வேறு காரணத்தின் அடிப்படையில் தகைமையீனத்திற்குட்பட்ட ஆட்களின் அதாவது, செல்லுபடியாகும் தேருநர் இடாப்பிலிருந்து நீக்குவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியல்.

*04.* " 'ஆ' பட்டியல்" - செல்லுபடியாகும் தேருநர் இடாப்பில் பெயர்கள் உள்ளடக்கப்படாத ஆனாலும் 18 வயது பூர்த்தியடைதல் அல்லது வசிப்பதற்கு வருகைதரல் அல்லது வேறு காரணத்தின் அடிப்படையில் 2025 ஆம் ஆண்டின் தேருநர் இடாப்பில் புதிதாக பெயர்களை உள்ளடக்குவதற்கு தகைமையைப் பெற்றுக்கொள்ளும் நபர்களின் பெயர்கள் உள்ளடங்கிய பட்டியல்.

1A - G 44809 — 19 (2025/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**செல்லுபடியாகும் இடாப்பு (அல்லது ஒரு பகுதி) மற்றும் ''அ'' பட்டியல் மற்றும் ''ஆ'' பட்டியல் காட்சிப்படுத்தப்படும் இடங்கள்**

| காட்சிப்படுத்தப்படும் இடம் | காட்சிப்படுத்துவதற்காக வைக்கப்பட்டிருக்கும் தேருநர் இடாப்பு மற்றும் பட்டியல்கள் அல்லது அவற்றின் பகுதிகள் |
|---|---|
| 01. மாவட்ட செயலகங்கள்/தேர்தல்கள் | குறித்த தேர்தல் மாவட்டத்தின் (மாவட்டத்தின்) செல்லுபடியாகும் தேருநர் இடாப்பின் மொத்தப் பிரதி மற்றும் அலுவலகங்கள் அதனோடு தொடர்பான ''அ'' மற்றும் ''ஆ'' பட்டியல்களின் பிரதிகள் |
| 02. ஒவ்வொரு பிரதேச செயலகம் | குறித்த பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்பு பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனோடு தொடர்பான ''அ'' மற்றும் ''ஆ'' பட்டியல்களின் பிரதிகள். |
| 03. ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவனம் | குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களின் அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்கள் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்பினது பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனோடு தொடர்பான ''அ'' மற்றும் ''ஆ'' பட்டியல்களின் பிரதிகள். |
| 04. ஒவ்வொரு கிராம அலுவலர் அலுவலகம் | குறித்த கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அனைத்து வாக்கெடுப்பு மாவட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேருநர் இடாப்பினது பகுதியின் பிரதியொன்று மற்றும் அதனுடன் தொடர்பான ''அ'' மற்றும் ''ஆ'' பட்டியல்களின் பிரதிகள். |

**அறிவுறுத்தல்கள்**

01. ''அ'' மற்றும் ''ஆ'' பட்டியல் தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அப்பட்டியல்கள் அல்லது அதன் பிரிவுகள் அலுவலக நேரத்தினுள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள காட்சிப்படுத்தப்பட்டுள்ள இடங்களில் பொதுமக்கள் பரிசீலனைக்காக வைக்கப்பட்டுள்ளதாகவும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அங்கு II ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் 2025.07.11 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ளதாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 13 ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் பதிவு செய்யும் அலுவலருக்காக அறிவுறுத்தல் வழங்கப்படுகின்றது.

02. தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் 14 ஆம் பிரிவிற்கமைய ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுடன் தொடர்பான தேருநர் இடாப்பில் தனது பெயர் அல்லது வேறு நபரொருவரின் பெயரை உட்சேர்த்துக் கொள்வதற்கு தகைமையைப் பெற்றுள்ள ஆனாலும் தனது பெயர் தேருநர் இடாப்பிலிருந்து மற்றும் ''ஆ'' பட்டியலில் உட்சேர்க்கப்பட்டுள்ள அல்லது எவரேனுமொருவர் தனது பெயர் பெயரை இடாப்பில் உட்சேர்த்துக் கொள்வதற்கு அல்லது வைத்துக் கொள்வதற்கு அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப தான் அல்லது தனக்கு பதிலாக வேறொருவரால் உரிமைக் கோரிக்கையை முன்வைக்க முடியும். அவ்வாறு உரிமை கோருபவர்களால் அது பற்றி மேற்குறிப்பிடப்பட்ட தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ''அ'' மற்றும் ''ஆ'' படிவத்திற்கமைய இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் 2025 யூலை மாதம் 11 ஆம் திகதி பிரசுரிக்கப்படுவதுடன், அன்றைய திகதி முதல் 04 வாரங்களுக்குள் அதாவது 2025 ஓகத்து மாதம் 07 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இதற்கான அனைத்து விண்ணப்பங்களும் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலருக்கு (மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்) கிடைத்தல் வேண்டும்.

03. தேர்தல் மாவட்டத்துடன் தொடர்பான தேருநர் இடாப்பில் அல்லது ''ஆ'' பட்டியலில் தனது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ள ஒருவருக்கு தனது பெயர் அல்லது அந்த இடாப்பில் அல்லது ''ஆ'' பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வேறு ஒருவரின் பெயர் அந்த இடாப்பில் உள்ளடக்கப்பட்டிருத்தல் தொடர்பாக அல்லது வைத்துக் கொள்ளுதல் சம்பந்தமாக ஆட்சேபனையைத் தெரிவிப்பதற்கு முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படும் ஆட்சேபனைகள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ''இ'' படிவத்திற்கமைய இரு பிரதிகளில் தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இடாப்பில் பெயர் உள்ளடக்கப்படுதல் தொடர்பாக குறிப்பிடப்படும் அனைத்து ஆட்சேபனைகளும் இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் திகதி முதல் அதாவது 2025 யூலை மாதம் 11 ஆம் திகதி முதல் நான்கு வாரங்களுக்குள் அதாவது 2025 ஆகஸ்ட் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட தேர்தல் அலுவலகத்தின் பதிவு அலுவலருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

04. உரிமைக் கோரிக்கையைக் கோரும் நபரின் பெயரை தேருநர் இடாப்பில் உட்சேர்த்தல் தொடர்பாக தெரிவிக்கப்படும் அனைத்து ஆட்சேபனைகள், உரிமைக் கோரிக்கையை முன்வைப்பவர்களின் பெயர்ப் பட்டியலொன்றுடனான அறிவித்தலொன்றுடன் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்பட்ட திகதி முதல் 14 நாட்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட சட்டத்தின் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், ''ஈ'' படிவத்திற்கமைய இருபிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவு

அலுவலருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். இந்த அறிவித்தல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்களில் 2025, யூலை மாதம் 25 ஆம் திகதி மற்றும் 2025, ஒகத்து மாதம் 11 ஆம் திகதிகளில் பிரசித்தப்படுத்தப்படும்.

05. உரிமைக் கோரிக்கைகளை முன்வைப்பதற்குத் தேவையான "அ", "ஆ" படிவங்கள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்குத் தேவையான "இ", "ஈ" படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகங்கள் அல்லது பிரதேச செயலகங்கள் அல்லது உள்ளூராட்சி நிறுவன அலுவலகங்கள் அல்லது கிராம அலுவலர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க,**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு.

தேர்தல்கள் செயலகம்,
*2025, யூலை 11.*

**அட்டவணை**

| *I ஆம் நிரல்*<br>*தேர்தல் மாவட்டம்* | *II ஆம் நிரல்*<br>*2025 "அ" மற்றும் "ஆ" பட்டியலை தயாரித்த உதவிப் பதிவு அலுவலர்* | *I ஆம் நிரல்*<br>*தேர்தல் மாவட்டம்* | *II ஆம் நிரல்*<br>*2025 "அ" மற்றும் "ஆ" பட்டியலை தயாரித்த உதவிப் பதிவு அலுவலர்* |
|---|---|---|---|
| 01. கொழும்பு | பியுமி ஆட்டிகல | 12. மட்டக்களப்பு | எம். பி. எம். சுபியான் |
| 02. கம்பஹா | டப்ளியு. ஏ. ரவீந்திர விக்கிரமசிங்ஹ | 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து | 14. திருகோணமலை | எஸ். கே. தேவநிரஞ்சன் |
| 04. கண்டி | எச். டீ. என். சம்பத் பெர்னாந்து | 15. குருநாகல் | ஆர். எம். எச். பி. ரத்னாயக்க |
| 05. மாத்தளை | எச். ஏ. ஈ. புஷ்பகுமார | 16. புத்தளம் | எஸ். எல். ஆர். ஜயநாயக்க |
| 06. நுவரெலியா | கே. ஏ. எல். எஸ். கலுகம்பிட்டிய | 17. அநுராதபுரம் | என். பீ. பீ. ஐ. ஆர். குணரத்ன |
| 07. காலி | டப்ளிவ். எச். ஆர். விஜய குமார | 18. பொலன்னறுவை | மனோஜி ரீ. குருசிங்க |
| 08. மாத்தறை | பீ. எஸ். பத்திரண | 19. பதுளை | கே. காந்தீபன் |
| 09. அம்பாந்தோட்டை | வீ. டீ. ஜே. லக்மால் | 20. மொணராகலை | என். ரேகன் |
| 10. யாழ்ப்பாணம் | ஆர். சசீலன் | 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ |
| 11. வன்னி | ஆர். சீ. அமல்ராஜ் | 22. கேகாலை | சஜித் பீ. கஸ்தூரிசிங்க |

EOG 07-0131

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.